இறக்கை: 13 இறகு: 6

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

ஜூன் 2024 | விலை ₹50



எங்கே நம் நடுத்தர வர்க்கம்?
- க. பழனித்துரை

தேர்தல்... வெல்லும் ஜனநாயகம்.. சவால்கள்..
- தி.சிகாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: மாதவன்



# குறைத்து மதிப்பிடாதீர்கள்!

ஏறக்குறைய மூன்று மாதங்கள் இந்தியாவில் தேர்தல் திருவிழா நடந்தேறிவிட்டது. அரசியல்வாதிகள் வாக்காளர்களைக் கவர, சாத்தியமில்லாத வாக்குறுதிகளை அள்ளித் தெளித்து ஆட்சியைப் பிடிக்க எத்தனித்ததை தேர்தல் கூட்டங்களில் பார்க்க முடிந்தது. இந்த பொதுத்தேர்தலில் 97 கோடி மக்கள் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ளனர். தங்களுக்கு ஏதாவது நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்பில் மக்கள் வாக்களித்துள்ளனர். இந்த முறையும் பொதுத்தேர்தல் அப்படியான எதிர்பார்ப்புகளை முன்னிறுத்தியே முடிந்திருக்கிறது.

ஆனால் அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பு காத்திருக்கிறது. முன்னெப்போதைக் காட்டிலும் வெயிலின் உக்கிரம் அதிகரித்தது ஏன்? பருவ மழை இல்லாத காலத்திலும், கன மழை கொட்டித் தீர்த்தது ஏன்? இதையெல்லாம் வெறுமனே பருவ நிலை மாற்றம், எல்நினோ தாக்கம் என்று கூறி கடந்து சென்று விட முடியாது. உலகையே அச்சுறுத்தும் இந்தப் பருவநிலை மாறுபாடு குறித்து இந்திய அரசியல்வாதிகள் எவரும் தங்களது தேர்தல் அறிக்கையில் மூச்சு கூட விடவில்லை. காரணம் அதன் தீவிரத்தை அவர்கள் உணராததுதான். மக்களுக்காவது அதன் தீவிரம் புரிகிறதா என்றால் நமக்கு ஏமாற்றம்தான் மிஞ்சும்.

மழை பெய்து பாதிக்கப்பட்டால் அரசாங்கம் அறிவிக்கும் இலவசச் சலுகைகள் எப்போது கிடைக்கும் என்று எதிர்பார்த்து காத்திருப்பது.விவசாயிகளோ ஏக்கருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது அல்லது கிடைக்காமல் போனால் போராட்டக் களத்தில் குதிப்பது என்பதுதான் கடந்த கால நிகழ்வுகள். ஆனால் இனி வரும் காலங்களில் பருவ நிலை பாதிப்புகள் இப்படி இருக்கப் போவதில்லை. உயிரிழப்புகள் அதிகரிக்கும், மக்கள் தங்கள் வசிப்பிடங்களிலிருந்து கட்டாயமாக புலம் பெயரும் நிலை உருவாகும். உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். இவை எல்லாம் வெறும் ஜோதிட கணிப்பு அல்ல. நடக்காமல் போவதற்கு வாய்ப்பு என்று நினைத்தால் நாம்தான் அறிவிலிகளாகி விடுவோம். இயற்கையின் சீற்றம் மக்கள் நினைப்பது போல் இருக்காது. இந்தியாவை மூன்று புறமும் கடல் சூழ்ந்துள்ளது. இமயமலையில் பனிப் பாறைகள் கடுமையான வெப்பத்தால் உருகத் தொடங்கியுள்ளன. இதனால் வட மாநிலங்களில் கடல் நீர் மட்டம் உயரும். கடுமையான சூறாவளி வீசும். பனிப்பாறை உருகுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படும். இது ஒருபுறம் என்றால் வெப்ப நிலை அதிகரிப்பால் நாட்டின் பல பகுதிகளில் கடுமையான வறட்சி உருவாகும். கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 90 சதவீத அளவுக்கு கூடுதலாக வறட்சி ஏற்படும் என வானிலை எச்சரித்துள்ளது. நாட்டின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் இப்போதே கடும் வறட்சி தாண்டவமாடுகிறது. 600 அடி ஆழத்துக்கு ஆழ்துளை கிணறு போட்டும் தண்ணீர் கிடைக்காத நிலை உருவாகிவிட்டது. இது மகாராஷ்டிர மாநிலத்தின் நிலை. காவிரி கரை புரண்டு ஓடும் கர்நாடகாவிலும் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. காவிரி தண்ணீரை நம்பியுள்ள தமிழ்நாடு விவசாயிகளுக்கும் இந்த பிரச்சினையின் தாக்கம் நிச்சயம் நீடிக்கும்.

2019-ம் ஆண்டிலிருந்து இதுவரை 10 கோடி விவசாயிகளுக்கு இழப்பீடாக ரூ. 5,600 தொகையை மத்திய அரசு வழங்கியுள்ளது. ஆனால் விவசாயிகள் மாதத்திற்கு செலவிடும் தொகை ரூ. 15,300. இழப்பீடு என்பது ஒருபோதும் சரியான விகிதத்தில் இருக்காது என்பதே நிதர்சனமான உண்மை. இதேபோல இந்தியாவின் கிழக்கு பிராந்தியத்தில் அதிக அளவிலான சூறாவளி தாக்கம் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் இப்பிராந்தியத்தில் 523 பேர் உயிரிழந்துள்ளனர். சேத மதிப்பு ரூ. 22 ஆயிரம் கோடிக்கும் அதிகம்.

1980-ம் ஆண்டுக்குப் பிறகு இப்போது வீசும் புயல்களின் எண்ணிக்கை 3 மடங்கு அதிகரித்துள்ளது. இது இன்னமும் அதிகரிக்கும் என்றே வானிலை நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

மிசாங் புயலால் பாதிக்கப்பட்ட எண்ணூர் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை இதனால் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக எச்சரித்தனர். கடைசி நேரத்தில் அரசியல்வாதிகள் சமாதானம் செய்து மக்களை வாக்களிக்கச் செய்துள்ளனர்.இந்த நிகழ்வு ஒரு சிறு உதாரணம். தேர்தல் முடிந்துவிட்டது. ஆட்சியைப் பிடித்துவிட்டோம் என்று அரசியல் கட்சிகள் இருமாந்திருந்தால், இயற்கையின் சீற்றத்துக்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளது. மக்களைக் காக்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. இதை உணர வேண்டும்? இயற்கையின் சீற்றத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்.

●

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை: 13

இறகு: 6

திருவள்ளுவராண்டு 2055

வைகாசி - ஆனி

ஜூன் 2024

ஆசிரியர்

வி. முத்தையா

9841457503

ஆசிரியர் குழு

முகிலன்

இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்

கி. பி. அரவிந்தன்

வீர. சந்தானம்

உலகளாவிய தொடர்பாளர்:

க. முகுந்தன்

K. Mukunthan

kmukunthan@gmail. com

முகப்பு ஓவியம்:

நன்றி:

Brown Button Private Limited

*brownbutton.io*

உள் ஓவியங்கள்:

லெசி

தொடர்பு முகவரி:

காக்கை, 22, MJB தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை- 600 005.

செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்: kaakkaicirakinile@gmail.com

இணைய முகவரி: kaakkai.in

www.facebook.com/kaakkai.cirakinile


## தேர்தல் பரப்புரைகளில் பரவும் விஷம்; நாட்டின் பன்மைத்துவத்திற்கு ஆபத்து

ஜனநாயகக்காலத்தில் அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரங்கள் பொதுவாக தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளபடி, அடுத்த ஐந்தாண்டுக்கான செயல் திட்டமாகவே இருக்கும். ஆனால் தற்போதைய வலதுசாரி பி.ஜே.பியின் தேர்தல் அறிக்கையினைப் பார்த்தோமேயானால், மக்கள் நலனை மறந்து, மத வெறுப்பிற்கும், கார்ப்பரேட் நலனுக்கும் முக்கியத்துவம் அளித்திருப்பதைக் கவனித்திருக்கமுடியும். வலதுசாரிகளின், தேர்தல் பிரச்சாரங்களைக் கவனிக்கும்போதுகூட வாக்காளர்களிடையே சிறுபான்மையின இஸ்லாமியர் மீதான வெறுப்பினையூட்டி, இந்துபெரும்பான்மையைக் கட்டமைப்பதாக இருப்பது கண்கூடாகத்தெரிகிறது. அதுவும், சமத்துவம்- சுதந்திரம்- சகோதரத்துவத்தினை அடிப்படையாகக்கொண்ட அரசியல் அமைப்புச்சட்டத்தின்படி நடந்துகொள்வதாக உறுதியேற்றுக்கொண்ட நாட்டின் பிரதமரே இதுபோன்ற பிரச்சாரத்தில் ஈடுபடுவதென்பது ஜனநாயகத்தின் மீது பற்றுகொண்ட அனைவரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

நாட்டின் பன்மைத்துவத்திற்கு எதிரான பிரதமரின் வெறுப்பெனும் விஷம் கலந்த தேர்தல் பரப்புரையானது, மூன்று முக்கிய விடயங்களில் வெளிப்படுவதைக் கவனிக்கமுடிகிறது. 1. இஸ்லாமியர்கள் மீதான வெறுப்பு. 2. இஸ்லாமியர்கள் மீது அவதூறு பரப்புவது. 3. எதிர்க்கட்சியான காங்கிரசுடன் இஸ்லாமியர்களை இணைத்து பொய்பேசுவது என்பதாக இருக்கின்றது. அவற்றினில் சிலவற்றினை பட்டியலிடும்போது, எதிர்க்கட்சியினர் ஆட்சிக்குவந்தால் ராமர்கோவில் இடிக்கப்படும்; ராமர் பிரதிஷ்டை விழாவில் எதிர்கட்சியினர் கலந்துகொள்ளவில்லை; காங்கிரஸ் பெண்களின் தாலியைப்பிடுங்கி இஸ்லாமியர்களுக்குக்கொடுத்துவிடும்; உங்களிடம் இரண்டு எருமைகள் இருந்தால் அதில் ஒன்றினைப் பறித்துக்கொள்ளும்; இந்தியக்கிரிக்கெட் அணியை இஸ்லாமியர்களால் நிரப்பும்; அரசியல் சட்டத்தை மாற்றி இட ஒதுக்கீட்டினை இஸ்லாமியர்களுக்குக் கொடுத்துவிடும்; காங்கிரசுக்கு வாக்களித்தால் இந்துக்கள் இரண்டாம் தர குடிமக்களாகிவிடுவர்; எதிர்கட்சித்தலைவர்கள் மீன், இறைச்சி சமைப்பதால் எங்களுக்கு வாக்களியுங்கள்; காங்கிரஸ் கட்சியினர் மோடிக்கு எதிராக 'ஓட்டு ஜிகாத்' செய்யவேண்டும் என அறிவித்துள்ளனர்; எஸ்.சி/எஸ்.டி, ஓ.பி.சி இடஒதுக்கீட்டினைத் திருடி இஸ்லாமியர்களிடம் ஒப்படைக்க காங்கிரஸ் விரும்புகிறது (ஆதாரம் : The Wire dated 10.05.24 &11.05.2024)

பிரதமரின் இவ்வாறான தேர்தல் விதிமீறல் பேச்சுக்களின்மீது நடவடிக்கைக்கோரி, அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், உள்ளிட்டவைகள் தேர்தல் ஆணையத்திடம் முறையீடு செய்துள்ளது மட்டுமல்லாது, நீதிமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருக்கின்றன. இந்துக்களை துருவப்படுத்தும் நோக்கில், தேர்தல் பிரச்சாரத்தின்போது இவ்வாறான இஸ்லாமியர் வெறுப்பு, அவதூறு, பொய்பேசுவது, காங்கிரஸின் மீது பழிபோடுவதை ஒரு நாட்டின் பிரதமரே செய்யும்போது, அவ்வுரைகள் சாதாரண குடிமக்களிடம் என்னென்ன மாதிரியான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் எனச்சொல்லவேண்டியதில்லை. இப்போதே, வலதுசாரிகள் ஆளும் உத்திரப்பிரதேசம், திரிபுரா, அசாம் போன்ற மாநிலங்களில் வாக்குகளை அதிக எண்ணிக்கையில் பதிவு செய்துள்ளது; இஸ்லாமியர், தலித்துகளை ஓட்டுப்போடவிடாமல் தடுத்திடும் சம்பவங்கள் நடந்துள்ளன. தேர்தல் முடிந்தபின் என்னாகுமோ தெரியவில்லை. வாக்களிப்போம்; ஜனநாயகம் காப்போம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலைரூ. 50.00
ஆண்டு சந்தாரூ. 500.00
இரண்டாண்டு சந்தாரூ. 750.00
ஐந்தாண்டு சந்தாரூ. 2000.00
வெளிநாடு
ஆண்டு சந்தா$ 50.00

வங்கி விவரம்
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:
A/C Name: kaakkai
A/C No: 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE: CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்
பின் அட்டை வண்ணம்ரூ.15000
உள் அட்டை வண்ணம்ரூ.10000
உள்பக்கம் கருப்பு - வெள்ளைரூ.5000

காக்கையில் வெளியாகும்
கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின்
கருத்துகள், எழுத்தாளர்களின்
கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

சிறகுக்குள்ளே...


தேர்தல்... வெல்லும் ஜனநாயகம்.. சவால்கள்..
● தி.சிகாமணி ........ 05

சாதிப் பெருந்தேசியத்தின் அரசியல்!
● இரா.மோகன்ராஜன் ........ 08

பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலியத் தாக்குதலும் உலகளாவிய போராட்டங்களும்
● ஜமாலன் ........ 13

இட ஒதுக்கீடு என்றால் சிலருக்கு ஏன் எரிகிறது?
● செல்லப்பா ........ 17

கலைஞர் 100: ஆட்சியின் மாட்சிமை
● செ.இளவேனில் ........ 21

பலி கேட்கும் ஐபிஎல் போட்டியின் இன்னோர் முகம்
● ஜி.ஏ. கௌதம் ........ 23

'நீட் தேர்வு' முறைகேடுகளால் கலைந்துபோகும் மருத்துவக் கனவு
● வெ. மதியரசன் ........ 27

தேர்தலும் சமூக ஊடகங்களும்
● வல்லபாய் ........ 30

"தமிழ்ச் சமூகத்தின் சமூக பொருளாதார உருவாக்கம்" என்கிற நூலின் உள்ளடக்கம்
● ஆ. சிவசுப்பிரமணியன் ........ 34

காலநிலை மாற்றம்
அதிகரிக்கும் கோடை வெயிலின் தாக்கம்!
● துருவன் ........ 36

சொல்லாமல் இருப்பதும் குற்றம்தான்
● இரா. எட்வின் ........ 39

எங்கே நம் நடுத்தர வர்க்கம்?
● க. பழனித்துரை ........ 42

கோடியர், உமணர் வண்டிப்பயணம்
● சு.இராமசுப்பிரமணியன் ........ 45

நாஞ்சில் வெண்பா
● அ.கா.பெருமாள் ........ 49

ராஜ் தாத்தா
● இடலாக்குடி அசன் ........ 54

உன்மத்தத்தின் சூரியகாந்திகள்
● யூமா வாசுகி ........ 60

பாலஸ்தீனத்தின் கதைசொல்லி: ரெஃபாத் அல் அராரீர்
● நிழல்வண்ணன் ........ 63

இலக்கியக் குத்தல்
● சச்சிதானந்தன் சுகிர்தராஜா ........ 66

என்சிஇஆர்டி (NCERT) புத்தகங்களில்
ராக்கிகர்ஹி அகழ்விடக் கண்டுபிடிப்புகள்:
நர்மதா அணைக் குறிப்புகள் நீக்கப்பட்டுள்ளது.
● அக்களூர் ரவி ........ 70

பண்டைய மருங்கையும் மருங்கூர் கிழார்
பெருங்கண்ணனார் பாடபேதமும் - சில விவாதக்குறிப்புகள்
● மு. கலையரசன் ........ 72

ரொக்வூட்: வெள்ளாளரல்லாத முதல் தமிழ் பிரதிநிதி
● என்.சரவணன் ........ 79





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: தி.சிகாமணி

# தேர்தல்... வெல்லும் ஜனநாயகம்.. சவால்கள்..



மக்களவைத் தேர்தலில் பாசிச பாரதிய ஜனதா கட்சியை தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது என்று சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். ஒவ்வொரு கட்டத் தேர்தலுக்குப் பின்பும் இந்த நம்பிக்கை உறுதிப்பட்டு வந்தது. தோல்வி முகத்தில் உள்ள பிரதமர் நரேந்திர மோடி முஸ்லிம் மத வெறுப்பு பேச்சுகளை வேகப்படுத்தி தனது பதற்றத்தை.. தோல்வி பயத்தை வெளிப்படுத்தினார். சமநிலையை இழந்து உளறுவது, பின்னர் தான் அப்படி பேசவில்லை என்று விளக்கம் தருவது, அந்தப் பேச்சு செய்தியாவதற்கு முன்பே மீண்டும் வெறுப்பை க்க்கும் அதே பாணியில் பேசுவது என்பது அடுத்தடுத்து நடந்தது. இந்து- முஸ்லிம் பிரிவினைப் பேச்சை நான் பேசவில்லை.. அப்படிப் பேசினால் நான் பொதுவாழ்வுக்கு தகுதியற்றவனாகி விடுவேன் என்று ஓர் ஆங்கிலப் பத்திரிக்கைக்கு பேட்டி அளித்தார். அதை வைத்து மனிதன் மாறிவிட்டான் என்பது போன்ற வகையில் ஊடகங்கள் விவாதம் நடத்தின. ஆனால் அதன்பின் சில மணி நேரங்களிலேயே அவரது கபட வேடம் கலைந்து விட்டது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் ராமர் கோயிலை புல்டோசர் வைத்து இடித்து விடுவார்கள். ராமர் கோயிலுக்கு பாப்ரி பூட்டு போட்டு விடுவார்கள். பலராமரை முன்பு போல் கூடாரத்திற்கு அனுப்பி விடுவார்கள் என்று பேசினார்.

ஆட்சியில் இருந்த 10 ஆண்டுகளில் மக்களுக்கு என்ன செய்தோம் என்பதைச் சொல்ல முடியாமல் மீண்டும் மீண்டும் இந்து- முஸ்லீம் மக்களை பிளவுபடுத்தும் பேச்சைத்தான் மோடி முன்னிலைப்படுத்தினார். சாதி வாரி கணக்கெடுப்பை நடத்துவோம். இட ஒதுக்கீட்டு உச்சவரம்பு 50 சதவீதம் என்ற நிபந்தனையை நீக்குவோம். அதன் மூலம் சமூக நீதியை உறுதிப்படுத்துவோம் என்று திமுக மற்றும் காங்கிரஸ், கூறியதை திசை திருப்பும் வேலையை மோடி செய்தார். பட்டியலின, பழங்குடி மற்றும் பிற்பட்டவர்களின் இட ஒதுக்கீட்டை பறித்து முஸ்லிம்களுக்கு காங்கிரஸ் கட்சி வழங்கிவிடும். உழைத்து சம்பாதித்த உங்கள் சொத்துக்களை பறித்து முஸ்லிம்களுக்கு கொடுத்து விடுவார்கள். இது மட்டுமன்றி பெண்களின் தங்கத் தாலியை கூட பறித்து முஸ்லிம்களிடம் கொடுத்து விடுவார்கள். இரண்டு மாடுகள் இருந்தால் ஒன்றை எடுத்து முஸ்லிம்களுக்கு தந்து விடுவார்கள் என்று அடுக்கடுக்காக மோடி தேர்தல் பரப்புரையில் பொய்களை கட்டவிழ்த்தார். முஸ்லிம்களுக்கு முதல் உரிமை என்று மன்மோகன் சிங் பேசியதாக இட்டுக்கட்டி, திரித்து கருத்தை வெளியிட்டார். இந்துக்களின் சொத்துக்களை பிரித்து ஊடுருவல் காரர்கள், அதிகம் குழந்தைகளை பெறுபவர்களுக்கு காங்கிரஸ் கொடுத்து விடும் என்று மீண்டும் மீண்டும் பேசினார்

## பொய் மூட்டை மோடி.. கண்டித்த ஸ்டாலின்

திமுகழக ஆட்சி குறித்தும் பிரதமர் மோடி தவறான தகவல்களை அளித்துள்ளார். இதற்கு பதில் அளிக்கும் வகையில் முதல்வர் மு .க ஸ்டாலின் பொய் மூட்டைகளை அவிழ்த்து விடும் மோடி என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

"மத வெறுப்பு பரப்புரை கை கொடுக்காதால் அடுத்ததாக மாநிலங்களுக்கு இடையே மோதலை தூண்டும் மலிவான உத்தியை பிரதமர் மோடி கையில் எடுத்திருக்கிறார் உத்தரப்பிரதேச மக்களை தமிழ்நாடு மற்றும் தென் மாநிலத் தலைவர்கள் கொச்சையாக விமர்சிப்பதாக தன்னுடைய கற்பனைக் கதைகளை பொய் மூட்டைகளை கட்டவிழ்த்து விடத் தொடங்கியுள்ளார். உண்மையில் வெறுப்பு பரப்புரைகளை மேற்கொள்ளவும் சமூகத்தில் பிளவுகளை உண்டாக்கவும் செயலாற்றும் மணிஷ் கஷ்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற யூடியூபர்களைக் கொண்டு புலம்பெயர் தொழிலாளர்கள் தாக்கப்படுவது போன்று உருவாக்கப்பட்ட போலிச் செய்திகளை ஆதரிப்பதும் ஊக்குவிப்பதும் பா.ஜ.க.தான்.

கோடிக்கணக்கான பெண்களுக்கு நாள்தோறும் நன்மை தந்து வரும் விடியல் பயணத் திட்டத்தை பகிரங்கமாக எதிர்க்கத் துணிந்து இருக்கிறார் மோடி. பேருந்துகளில் கட்டணமில்லா பயணத்தால் மெட்ரோ ரயில்களில் கூட்டம் இல்லை என்று புதுப் புரளி கிளப்பி இருக்கிறார். பிரதமர் பேசுவதைக் கவனித்தால் உண்மை கிலோ என்ன விலை ?என்று கேட்பார் என்று தோன்றுகிறது ஏனென்றால் 2019 ல் மூணு கோடியே 28 இலட்சம் பயணங்கள் என்றிருந்த சென்னை மெட்ரோ பயணங்கள் 2023 ல் 9 கோடியே 11 லட்சம் உயர்ந்திருக்கிறதே தவிர குறையவில்லை. சென்னை மெட்ரோ இரண்டாம் கட்ட விரிவாக்கத்திற்கு ஒப்புக் கொண்டபடி நிதி தராமல் அந்தத் திட்டத்தையே முடக்கிய பிரதமர் மோடி இந்த உண்மையை மறைத்து விடியல் பயணத் திட்டத்தின் மீது வீண்பழி சுமத்தி இருக்கிறார். பிற்போக்குத்தனமான வலதுசாரி சிந்தனைகள் கொண்ட ஆர்எஸ்எஸ் பின்புலத்தில் இருந்து வந்தவர் என்பதால் பெண்களின் முன்னேற்றத்தைக் கண்டு அஞ்சுகிறார் என்ற ஐயம் தோன்றுகிறது. பாஜகவின் பிளவுவாதக் கனவுகள் ஒருபோதும் பலிக்காது. பொய்மை உடைபட்டு வெறுப்பு அகலும். இந்தியா வெல்லும் என்றும் முதல்வர் மு. க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

முஸ்லிம் எதிர்ப்பு வெறுப்பு பரப்பரைக்கு ஆதரவாக பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு மூலம் முஸ்லிம்களின் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது என்ற ஆதாரம் அற்ற நிரூபிக்க முடியாத தகவலை வெளியிடச் செய்தார். தான் குஜராத் முதல்வராக இருந்தபோது 15 சதவீத நிதியை முஸ்லிம்களுக்கு ஒதுக்க காங்கிரஸ் முயற்சித்தது. அதை நான் எதிர்த்தேன் என்றும் பேசினார். இதற்கு முன்பு எந்தப் பிரதமரும் தனது பதவிக்குரிய கண்ணியத்தை இழந்து தரம் தாழ்ந்து இவ்வளவு பொய்களை அவதூறுகளைச் சொல்லியது கிடையாது.

அதானிக்கு அள்ளி அள்ளி சலுகைகள் அளித்த கூட்டு களவாணி முதலாளித்துவம் ,பி. எம் கேர்எஸ் நிதி, ரஃபேல் ஊழல், பெகாசஸ் உளவு முறைகேடு, தேர்தல் பத்திர ஊழல் போன்ற பிரச்சனைகள் குறித்து இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் விசாரிக்கும் என்ற அச்சம் மோடிக்கு வந்துள்ளது. புனிதர் வேடம், உத்தமர் வேடம் கலைந்து வருகிறது. தான் நேர்மையற்றவன் என்று நிரூபித்துக் காட்டினால் தன்னை தூக்கிலிடுங்கள் என்று பேசி இரக்கத்தை வர வைக்கப் பார்த்தார் மூர்க்கத்தனமாக பேசுவது, பின்னர் கண்ணீர் சிந்தி ஏமாற்றுவது என்பது ஒரு கலையாகவே மோடிக்கு வந்துள்ளது.

## பொம்மை தேர்தல் கமிஷன்

தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளை சற்றும் மதிக்காமல் மோடியும் அமித் ஷாவும் கட்சியினரும் அதிதீவிர வெறுப்பு அரசியல் பேச்சுகளை பேசி வருகின்றனர். இந்த வெறிப் பேச்சுகள் குறித்து தேர்தல் கமிஷனிடம் எதிர்க்கட்சிகள் சார்பில் புகார்கள் கூறப்பட்டன ஆனால் தேர்தல் கமிஷன் கண்டுகொள்ளவே இல்லை. தொடர்ந்து வேடிக்கை பார்த்தது. இந்தப் போக்கு குறித்து விமர்சனம் எழுந்த பிறகு வெறிப் பேச்சு பேசியவருக்கு நோட்டீஸ் அனுப்பும் நடைமுறையில் இருந்து விலகி பாஜக கட்சியின் தலைவர் நட்டாவுக்கு தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பியது. அப்பட்டமான பொய்கள், அபாண்டம், அச்சத்தை விளைவித்தல் ஆகிய விதிமீறல்களில் ஈடுபட்ட பாஜக மீது நடவடிக்கை எடுக்காததன் மூலம் தேர்தல் கமிஷன் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி உள்ளது. தேர்தல் கமிஷனின் வீழ்ச்சி என்று பிரண்ட்லைன் பத்திரிகை தலையங்கமே எழுதி இருக்கிறது. தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் எந்த விமர்சனத்தையும் பொருட்படுத்தாத பொம்மையாக இருக்கிறார். இதன் விளைவு சுதந்திரமான ஜனநாயக அமைப்பு சீரழிந்து விடும். தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதத்தை வெளியிடுவதில் தாமதம் செய்தது தேர்தல் கமிஷன் மீதான சந்தேகம் தொடர வாய்ப்பு அளித்துள்ளது. வாக்குப்பதிவு இயந்திரத்தில் மோசடி செய்யும் வாய்ப்பு குறித்து எதிர்க்கட்சிகள் அச்சம் எழுப்பி வந்த நிலையில் உத்திரப் பிரதேசம் பருக்காபாத்தில் 17 வயது இளைஞர் 8 முறை தாமரைக்கு ஓட்டு போட்ட வீடியோ வெளியாகி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அமைதியாக வெளியேறுவாரா மோடி?

நானூறு இடங்களில் வெற்றி என்று மார்தட்டி வந்த பாஜகவுக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் எதிர்ப்பு ஏற்பட்டு வருகிறது. உள்ளூர் பிரச்சனைகளே தேர்தலை தீர்மானிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது . விலைவாசி உயர்வு வேலையின்மை குறிப்பாக அக்னி வீர் திட்டத்திற்கு எதிர்ப்பு போன்றவை உத்தரப் பிரதேசத்திலேயே பாஜகவின் வெற்றியை குறைத்து விடும் என்று தகவல்கள் வருகின்றன. ராமர் கோயில், உ.பி யில் தேர்தல் பலனை தராது என்பது ஆறுதலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி. 2019-ல் இங்கு எண்பதில் 70 இடங்களில் பாஜக வென்றது. இப்போது 50 இடங்களில் கூட வெல்வது கடினம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. மகாராஷ்டத்தில் 48 இடங்களில் 42 இடங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றது. இங்கு குறைந்தபட்சம் 30 இடங்களிலாவது வெல்வோம் என்ற நம்பிக்கை காங்கிரஸ் அணிக்கு ஏற்பட்டுள்ளது. பீகாரிலும் வெகுவாக பாஜக இடங்கள் குறையும். கர்நாடகத்தில் முன்பு போல் 28 ல் 25 இடங்களை பாஜக வெல்ல முடியாது. பாதி இடங்களாவது காங்கிரஸ் அணிக்கு கிடைத்து விடும். இது மட்டுமின்றி ராஜஸ்தான், ஹரியானா, குஜராத், டெல்லி, இமாச்சலப் பிரதேசம் ஜார்க்கண்ட் அஸ்ஸாம் மாநிலங்களிலும் பா்ஜக இடங்கள் ஓரளவு குறையும். மொத்தத்தில் 70 இடங்களையாவது பாரதிய ஜனதா இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒடிஷா, மேற்குவங்கத்தில் சில இடங்களை கூடுதலாக பிடிக்கும் என்ற நம்பிக்கையில் பாரதிய ஜனதா இருக்கிறது. பொதுவாக ஆங்காங்கு ஒரு சில இடங்கள் கூடினாலும் பல மாநிலங்களில் கணிசமாகக் குறைவதால் பாரதிய ஜனதா ஆட்சி அமைக்க முடியாது. இதனால்தான் பிரதமர் மோடி வெளியேறும் பிரதமர் என்று ராகுல் காந்தி அழைக்க ஆரம்பித்துள்ளார்.

இந்நிலையில் தேர்தல் தோல்வியை மோடி எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று பல்வேறு தரப்பில் இருந்து சந்தேகம் எழுப்பப்படுகிறது. கலவரங்கள் திட்டமிடப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் பின்னணியில் பொருளாதார அறிஞரும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவருமான பரக்கல பிரபாகர் பொது சமூகத்தை விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். தற்போது நடந்து வரும் ஆட்சியில் ஒரு பெரிய ஆபத்து உள்ளது .அது என்னவென்றால் இந்த பாஜக ஆட்சி தோற்கடிக்கப்படும் போது அமைதியாக ஆட்சியை விட்டு வெளியேற வாய்ப்பு இல்லை. இப்போதே தனது தோல்வியை தடுப்பதற்கான அனைத்தையும் பாஜக செய்து வருவதை நாம் பார்க்கிறோம். தேர்தல் ஆணையர் தேர்வுக் குழுவில் உச்ச நீதிமன்ற நீதிபதியை தவிர்த்தது, போட்டியாக உள்ள காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கை முடக்கியது, வரலாற்றிலேயே முதல்முறையாக ஆட்சியில் உள்ள முதல்வர்களை கைது செய்து தேர்தல் ,பிரச்சாரத்தில் அவர்கள் ஈடுபடுவதை தடுத்து எதிர்க்கட்சிகளை பலவீனமாக்க முயற்சித்தது போன்ற சம்பவங்களை சொல்லலாம். "ஜூன் 1 ம் தேதியோடு இறுதி வாக்கு பதிவு முடிவடைந்து விடும். நான்காம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியாகும் என்று நாம் எதிர்பார்க்கிறோம் ஆனால் தேர்தல் முடிவு உடனடியாக வெளியாகும் என்று எதிர்பார்க்க முடியாது. வாக்கு எண்ணிக்கை நாள் நெருங்க நெருங்க பாரதிய ஜனதா கட்சி கொடூரமானதாக மாறும். மிக மோசமான கலவரங்களை எதிர் கொள்ளக்கூடிய நாட்களை இந்தியா சந்திக்க வேண்டி இருக்கும் என்று 'தி வயர்' இணையதளத்துக்கு அளித்த பேட்டியில் பரக்கல பிரபாகர் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் 2020- ல் டொனால்ட் ட்ரம்ப் தோற்ற பிறகும் அவர் தோல்வியை ஏற்றுக் கொள்ளவில்லை. சர்வாதிகார மனப்பான்மை உள்ளவர்கள் தோல்விகளை எளிதில் ஏற்க முன்வர மாட்டார்கள் என்று உளவியலாளர்கள் அப்போது கருத்து தெரிவித்தனர். டிரம்ப்பின் குடியரசு கட்சியினர் கலவரம் நடத்தி தேர்தல் முடிவை மாற்றப் பார்த்தார்கள். மோடியும் சங்கப் பரிவார் அமைப்பினரும் அது போன்று செயல்பட வாய்ப்புள்ளது. காங்கிரஸ் கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றாலும் அடுத்து ஆட்சி அமைக்கும் போது ஏராளமான சவால்களை அது சந்திக்க வேண்டி இருக்கும். அரசாங்க நிர்வாகத்தில் சங்கப் பரிவார் அமைப்பைச் சேர்ந்தவர்களை பாரதிய ஜனதா ஆட்சி அதிக அளவில் திணித்துள்ளது. ராகுல் காந்தி ஒரு பதிவில் குறிப்பிட்டது போல் ஒன்றிய அரசுத்துறை செயலாளர்கள் 90 பேரில் மூன்று பேர் தான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மற்றவர்கள் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவையெல்லாம் சமூக நீதியை நிலைநாட்ட.. ஏழை ஆதரவு திட்டங்களை நிறைவேற்ற விரும்பும் ஆட்சிக்கு சவாலாக இருக்கும். இந்தியாவில் உள்ள பல கட்சி ஜனநாயக முறையை மாற்றி ஒற்றையாட்சியை நிறுவ இந்துத்துவ ஆட்சியை உருவாக்க சங்கப் பரிவாரம் அமைப்பினர் நாள்தோறும் உழைக்கின்றனர் பதவி வாய்ப்பு, ஆதாயங்களை எதிர்பார்க்காதவர்கள் அந்த அமைப்பில் உள்ளனர் ஆனால் மற்ற கட்சிகள் தேர்தலின் போது தான் மக்களை சந்திக்க.. செயல்பட முன் வருகின்றனர் குறிப்பாக சங்கப் பரிவாரை கொள்கை ரீதியாக எதிர்க்கும் பலமும் காங்கிரஸ் கட்சிக்கு குறைவாகவே உள்ளது .அதனால் இந்தத் தேர்தல் முடிவோடு ஜனநாயகத்தை மீட்கும் போராட்டம் முடிவடைந்து விடாது. நீண்ட பயணம் காத்திருக்கிறது. •

**கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: இரா.மோகன்ராஜன்

# சாதிப் பெருந்தேசியத்தின் அரசியல்!



'இந்தியாவை சாதிகளின் தொகுப்பு' என்று தனது சாதிகளை ஒழித்தல் நூலில் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் சாதிகளை முன்வைத்தும், சாதிகளைப் பின்வைத்தும், தேர்தல் அரசியல் கட்சிகள் தேர்தலைச் சந்தித்தன. சாதிகள் இல்லாமல் ஓட்டுக்களை பெறுவது என்பது கட்சிகளைப் பொருத்தவரை முடியாத காரியமாகவே இருக்கிறது. சாதிகளும் தமக்கான பேரத்தை கட்சிகளிடம் வைப்பதுடன், நேரடியாகவோ, மறைமுகமாகவோ தேர்தலில் பங்கேற்கின்றன. சாதிகளின் பங்கை, பங்களிப்பை தவிர்த்துவிட்டு எந்த ஒன்றையும் இங்கு தனித்துப் பார்த்துவிட முடியாது. தேர்தல் அரசியலும் அதற்கு விலக்கல்ல.

சாதிக் கட்சிகள் தனியாக தம்மை சாதிக் கட்சிகள் என்று அடையாளம் காட்டிக் கொள்வதில் நிறைய தடைகள் இருக்கின்றன. அதற்கு சமூக வெளியிலும், அரசியல், தேர்தல் அரசியல் வெளியிலும் தயக்கங்கள் இருக்கின்றன. காரணம் தமிழகத்தைப் பொறுத்தவரை நீதி கட்சித் தொடங்கி, திராவிட இயக்கங்கள், பெரியார், அண்ணா போன்றவர்கள் தாம் சார்ந்த சாதியை பொதுவெளியில் அடையாளப்படுத்துவது வெட்கக்கேடானது, சமூக நீதிக்கு எதிரானது என்றவாறு அவர்கள் அதை பொருட்படுத்தியிருந்தார்கள். சாதி காட்சிகள் அப்படி பொது வெளியில் தமது சாதிக்கான நீதியை கோருவது, (அதாவது சாதியே நீதி இல்லை என்ற திராவிடப் பார்வைக் காரணமாக) இட ஒதுக்கீட்டில் தமக்கான இடத்தைப் பெறுவதற்கு தேர்தல் அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை வைப்பது அல்லது தாமே தேர்தல் அரசியலில் தமது சமூக மக்களிடம் வாக்குறுதி அளித்து தேர்தலில் நிற்பது என்பதுவரை சாதிகள் நேரடியாக பொது வெளியில் கோரிக்கை வைப்பதில்லை. அப்படி வைக்கும் போது அவை ஒட்டுமொத்த சமூகத்தால் தனிமைப் பட்டு போய்விடுகின்றன. கடந்த காலங்களில் அப்படித்தான் நடந்தன.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் போன்றோருக் கான கோரிக்கைகள் கடந்தகால திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் அந்த அந்த சாதிக் கட்சிகளின் கோரிக்கையை ஏற்றோ அல்லது அதற்கான கோரிக்கை சரியாக இருக்கும் பட்சத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டோ வந்துள்ளன. சாதிகளும் தமக்கான இருப்பை இப்படித்தான் பொது வெளியில் வெளிப்படுத்தியும், தமக்கானப் பங்கை பெற்றும் வந்துள்ளன. தமது சொந்த சாதியின் பெயரில் கட்சி தொடங்கவே கூச்சப்படும் தமிழக திராவிட அரசியல் களத்தில் பாட்டாளி மக்கள் கட்சி கூட வன்னியருக்கான இட ஒதுக்கீடு உள்ளிட்டக் கோரிக்கைகளை பாட்டாளி மக்கள் கட்சி என்கிற பெயரில்தான் வைக்க வேண்டியிருக்கிறது. அதுதான் சாதி மீது திராவிடக் கட்சிகள் செலுத்திய, செலுத்திக் கொண்டிருக்கும் அசைக்க முடியாத தாக்கமாகும். இன்றுவரை அது அப்படித்தான் இருக்கிறது.

தேர்தல் அரசியலில் சாதிகள் தம்மை திராவிடக் கட்சிக்குள்ளாக அடையாளம் காண்பித்துக் கொள்ள வழியில்லாமல் இருந்தது. தேர்தல் பெருங்கட்சிகளும் காங்கிரஸ் கட்சி உட்பட அவை சாதிகளைச் சமாளிக்க சாதிகளின் ஏக் பிரதிநிதிகளை சட்டசபை, நாடாளுமன்ற உறுப்பினர்களாக்குவதன் வழி அவற்றை சமாளித்து வந்தனர். இது ஒருவகையில் சாதியை ஏற்பதுதான் என்றாலும் சாதிகளின் நேரடி அதிகாரத்தை அவர்கள் சாதிகளிடம் முற்றாகக் கொடுத்துவிடவில்லை. பெரியாரின் தாக்கம் சாதிகளின் கட்சியாக இருக்கும் தேர்தல் கட்சிகளை முற்று முழுதாக மாற்றிவிடவில்லை. விடாது. எனினும் பெரியாரை அந்த கட்சிகள் எவ்வளவு ஏற்கின்றனவோ, தள்ளுகின்றனவோ அவ்வளவுக்கு சாதிகளின் ஆதிக்கம் கட்சிகளுக்குள் கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சாதிகள் தேர்தல் அரசியல் வழி நாடாளுமன்ற அரசியல் வழி மக்கள் மீது நேரடி செல்வாக்குச் செலுத்த முடிவதில்லை. மேலும் இந்த சாதிகளின் குறிப்பாக ஆதிக்க சாதிச் சக்திகள் தங்களுக்குள் யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான இடத்தை முதலமைச்சர் போன்ற இடத்தைப் பிடிப்பது என்ற போட்டியே இருந்ததில்லை. எம்.ஜி.ஆர். கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதாவுடன் போன்ற ஆளுமைகளின் தனிநபர் ஒளி வெள்ளத்தில் அவர்களால் அந்த பதவிக்கு சாதி வழியில் நேரடியாகப் போட்டியிட இடமில்லாமல் இருந்தது. மேலும் ஆதிக்கச் சாதி கட்சிகள் ஒன்றை ஒன்று கீழே இழுத்துவிட்டுக் கொண்டு முதலமைச்சர் நாற்காலியை நோக்கி நகர வழியில்லாமல் செய்து கொண்டன. மேலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எந்த ஒரு சாதியின் பெயராலும், சாதிப் பிரதிநிதியாக முதலமைச்சர் நாற்காலியைப் பிடித்தெடுப்பதோ, பிடிக்க முயற்சிப்பதே நடக்க வாய்ப்பில்லை. பொதுமக்களும் சாதிகள், சாதிகளாக தம்மை ஆளுவதை ஒருபோதும் விரும்பியதில்லை.

ஆதிக்கச் சாதிகளும் தமக்குள்ள போட்டி, பொறாமை காரணமாகத் தமது கட்சிக்குள் ஒரு சிறுபான்மை சமூக உறுப்பினரையே முதலமைச்சராக்கிவிடும் வழியை நேர்கின்றனர். அது இரண்டு வகையில் அவர்களுக்கு எளிதாகிவிடுகிறது. ஒன்று சிறுபான்மை இன முதலமைச்சர் ஆதிக்கச் சாதிகளின் பேச்சைக் கேட்டு நடக்க வைக்க இயலும். பிறிதொன்று சிறுபான்மை சமூகத்தின் ஆதிக்கம், பொது வெளியிலும், அரசியல் வெளியிலும் பரவலாக இருப்பதில்லை. அவர்கள் ஆதிக்கச் சாதிகளின் வரம்பை மீறவும்போவதில்லை.

அதனால்தாம் சாதிக் கட்சிகள் நேரடியாகத் தம்மை சாதியின் பெயரால் முன்நிறுத்தி ஓட்டுக் கேட்கவோ, முதலமைச்சர் தாம்தான் என்றோ அறிவித்துக் கொள்வதில்லை. எனினும் பிறிதொருவகையில் ஆதிக்க சாதிகள் தமது எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளவே செய்கின்றன. ஒளிபொருந்திய தலைமைகளின் பின்னால் நின்று மறைமுகமாக ஆட்சியை நடத்துவதுதான் அது. அது ஒருவகையில் தமது ஆட்சிதான் என்ற நிறைவு அவர்களிடம் இருந்துவிடுகிறது. எதிர்கட்சியாக இருந்தாலும்; ஆளும் கட்சியாக இருந்தாலும் கேள்வி கேட்பதும், பதில் சொல்வதும் தாமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையை அவர்கள் வலுவாக நிறுவிக்கொள்ள விரும்புகின்றனர்.

திராடவிக் கட்சி அல்லது காங்கிரஸ் பேராயக் கட்சி, பாஜக போன்ற தேசியக் கட்சிகள் அல்லது ஏதோ ஒரு கட்சி ஒரு போராட்டத்தை வலுவாக முன்னெடுப்பதிலும், வலுவடையச் செய்வதிலும் அதை வலுவிழக்கச் செய்வதிலும் அதில் கோலோச்சும் ஆதிக்க சாதிகளின் கைகளில்தாம் இருக்கிறது. கொள்கை, கோட்பாடு என்பனவெல்லாம் சாதியை மீறிச் சென்றுவிடுவதில்லை. போராட்டமும், எழுச்சியும், புரட்சியும் அப்படித்தான் இங்கு. இதில் இடதுசாரிகள் மட்டுமே விலக்கு. ஆதிக்கச் சாதிகளின் அரசுதான் இந்தியா என்றால் மிகை இல்லை. அதில் படிநிலை சார்ந்த அதிகாரமே கோலோச்சுகிறது. மாநில எல்லை, ஒன்றிய எல்லை என்பதெல்லாம் சாதிகளின் எல்லைதான். ஆதிக்கச் சாதிகளின் அதிகார எல்லைகள்தாம்.

90களில் அம்பேத்கர் நூற்றாண்டு, தலித் அரசியல் முன்னுக்கு வருகிறது. கட்சிகளில் தலித்துகளின் இடம் என்ன என்ற கேள்வி முக்கியமானதாகிறது. ஆளும் கட்சி, ஆண்ட கட்சி என்பவற்றில் தலித்துகளின் இடம், உறுப்பினர் எண்ணிக்கை என்பன கேள்விக்கு உள்ளாக்கப்பட்டது. இந்த கேள்வியும், அரசியல் சூழலும் தலித்துகளின் மாற்று அரசியலை நோக்கி நகர்த்தியது. அந்த வகையில்தாம் தலித்துகளுக்கு என்று தலைமை, அரசியல் கட்சி, இயக்கம் என்ற புதிய போக்கு எழுந்தது.

தமிழக தேர்தல் கட்சிகளில் தலித் குறித்த போதாமைகளே தலித்துகள் தனி இயக்கமும், அரசியல் கட்சியும் தனக்கென தலைமையும் தேடிக் கொள்ளும் அவசியத்தை ஏற்படுத்திற்று. தலித்துகள், அல்லது ஒடுக்கப்பட்டவர்கள் பற்றிய பார்வை, போதாமை திராவிட மற்றும் காங்கிரஸ் போன்ற கட்சிகள் எங்கு தோல்வி அடைந்ததோ அங்கிருந்தே தலித்துகளுக்கான விடுதலை அரசியலும், தேர்தல் அரசியலும் தொடங்கிற்று. இங்கு தலித் இயக்கங்கள், தலித் தேர்தல் கட்சிகளை சாதியாக, சாதிக் கட்சிகளாக மதிப்பிட்டுவிட முடியாது. கூடாது. அம்பேத்கரின் வழியில் திரண்ட கற்பி, கற்றுக்கொள், புரட்சி செய் என்ற அடிப்படையில் அவை சமூக விடுதலையையும், சாதியற்ற சமூக இலக்கையுமே தம்முள் ஒருசேரக் கொண்டிருந்தன. எனவே தலித்துகள் தமது பங்கை தேர்தல் அரசியலுக்குள் கோருவது ஆதிக்கம்மற்றும் எதேச்சதிகார அடிப்படையில் அல்ல அது விடுதலை நோக்கிய அரசியலின் தேர்தல் அரசியலின் பகுதியாகும்.

ஆனால் சாதியாக இயங்கும் தேர்தல் அரசியல் கட்சிகளில் தலித்துகளுக்கான இடம் குறிப்பிட்ட அளவில் கூட இருக்கவில்லை. மக்கள் தொகையில் தலித்துகளின் எண்ணிக்கை அதிகம் என்றாலும் அதற்கான அரசியல், நாடாளுமன்ற அரசியலில் உறுப்பினர் எண்ணிக்கை என்று பார்க்கும் போது இரண்டு மிக குறைந்த சதவீதமே இருக்கிறது. அதற்கு காரணம் தலித்துகள் ஓர் அதிகார, ஆதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாக திரண்டிருக்கவில்லை. திரள்வது மறுக்கப்பட்டிருந்தது. போலவே அவர்கள் உதிரிகளாக வைக்கப்பட்டிருக்கும் சமூக, அரசியல், பொருளியல் காரணங்களாகும். மேலும் பல கட்சிகளில் சிதறிகிடக்கும் தலித்துகளுக்கு எந்த தேர்தல் கட்சிகளும் நியாயம் செய்திருக்கவில்லை என்பது பிறிதொன்று.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் சாதிகள் அணிகளாகப் பிரிந்தும் சேர்ந்தும் இயங்குவதை தேர்தல் கட்சிகளைப் பார்த்தாலே விளங்கும். அத்துடன் தனிநபராக செல்வாக்குப் பெற்றவர்கள், திரைக்கலைஞர்கள் போன்றவர்கள் தத்தமது சாதி செல்வாக்குக்கு உட்பட்ட தொகுதிகளில் நிற்பதை பார்க்க முடிகிறது. பாஜகவில் தம்மை கரைத்துக் கொண்ட சரத்குமார் தான் சார்ந்த சாதி பெரும்பான்மைப் பகுதியில்தான் போட்டியிட வேண்டியிருக்கிறது. இதில் திராவிடக் கட்சிகளும் விலக்கல்ல குறிப்பாக கனிமொழி தனது தாயின் சாதி செல்வாக்குப் பெற்ற பகுதியில்தான் போட்டியிட்டிருக்கிறார்.

கட்சிகளின் செல்வாக்கு சாதிகளை கட்டுப்படுத்துகிறதா அல்லது சாதிகள் கட்சிகளைக் கட்டுப்படுத்துகிறதா என்ற கேள்விக்கு இரண்டும்தான் ஒன்றின் மீது ஒன்று செல்வாக்கு செலுத்தத்தான் செய்கிறது. அப்படியென்றால் கட்சிகளின் கொள்கைகளை சாதிக் கட்சிகள் ஏற்கின்றனவா அதனடிப்படையில் தேர்தல்கட்சிகளுடன் கூட்டணி கொள்கின்றவா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். சாதிகளைப் பொறுத்தவரை தமது சாதிக்கு ஒரு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் வேண்டும். அவ்வளவுதான் அது பெரியார் வழி வந்த கட்சியாக இருக்கலாம், மாநில, தேசிய கட்சியாகவும் இருக்கலாம். தேவை பதவியும், அதிகாரமும் மட்டுமே.

இந்த அளவில் சாதிக் கட்சிகளுக்கு பெரிய சமூக பார்வை எதுவும் இருந்துவிடவில்லை என்பது தெளிவு. தமது சாதிக்கான பங்கு, சலுகை இவற்றை ஒட்டியே தேர்தல் கட்சிகளை அவை அணுகுகின்றன. இதில், சாதி, சாதி சார்ந்த தனிநபர் மீது செல்வாக்கு செலுத்துமானால் அவர் சாதிக்கு கட்டுப்பட்டவராகவும், தனிநபர் தான் சார்ந்த சாதி மீது செல்வாக்கு செலுத்துபவரானால் தனது நலன் சார்ந்தும் இயங்குபவராகவும், தேர்தல் கட்சிகளை அந்த அடிப்படையில் அணுகுபவராகவுமே இருப்பார்கள். முக்குலத்தோர் முன்னணி என்ற கருணாசின் கட்சி தனிநபர் சார்ந்து செல்வாக்கு செலுத்துவதை நினைவுபடுத்திக் கொள்ளலாம். கோவை ஈஸ்வரின் கொங்கு தேசிய கட்சி போன்றவை தமது சாதிக்கான நலனை முன்னிட்டு இடம் மாறிக் கொள்ளக்கூடியவை.

ஆக பெரும் தேசியக் கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டின் மீது சாதிக் கட்சிகளுக்கு எதுவிதமான மரியாதையும் கிடையாது. அவை சொந்த நலனை பேணிக் கொள்ள மட்டுமே பெருங்கட்சிகளை அணுகுகின்றன. ஒரு குறுகிய நலனை மட்டுமே அவை முன்னிறுத்தி செயல்படுகின்றன. ஈழ போராட்டம், மீனவர் மீதான துப்பாக்கிச் சூடு, பெரியார் குறித்த அவதூறுகளில் அவர்களது நிலைப்பாடுகள், நீட் தேர்வு என்பவை குறித்து அவற்றிற்கு எதுவித கரிசனமோ, கருத்துக்களோ இருப்பதில்லை.

பெருங்கட்சிகள் ஆட்சியைப் பிடிக்கும்போது அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் சாதியை அடையாளப்படுத்திக் கொண்ட தனிநபர்கள், சாதிக் கட்சிகள், இயக்கங்கள் தமக்கான பேரத்தையும், பதவியையும் பெற்றுக் கொள்கின்றன. ஆனால் இப்படியான கட்சிகள் தொடர்ந்து பெருங்கட்சிகளை ஆட்டுவித்தும், தனிநபர்களாக சாதியாட்கள் பெருங்கட்சியில் இருந்தும், தனிநபர்களாக சாதிகுழுமத்தை முன்வைத்து பெருங்கட்சிகளோடு இணைந்தவர்கள், கரைந்தவர்கள், அல்லது சாதியின் பெயரில் பெருங்கட்சியின் துணையோடு பதவிக்கு வந்தவர்கள் யாருக்கு சேவகம் செய்கிறார்கள் என்று பார்த்தால் அந்த அந்த சாதிகளில் உள்ள பெரும்முதலாளிகளுக்கும், நிலபிரபுக்களுக்குமாகவே இருக்கிறார்கள் மறந்தும் தனது சொந்த சாதி ஏழைகளுக்கு அவர்கள் உதவுவதுமில்லை. தமது பதவியை பயன்படுத்தி அவர்களுக்காக வாதிடுவதுமில்லை. சாதியின் பெயரால் அந்த ஏழைகள் தொடர்ந்து வர்க்க ஏழைகளாகவே நீடிக்கிறார்கள், வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் மெய் நிலையாகும்.

தனது சாதிக்காரர் பெரும் பதவியில் இருக்கிறார்.. பெரும் பணக்காரராக இருக்கிறார், முதலாளியாக இருக்கிறார். அது ஒன்று போதும் என்ற பெருமிதம் அல்லது தமது சமூக, பொருளாதார, அரசியல் நிலைக்கு விதியே காரணம் என்ற மதம் சார் மனநிறைவு போன்றவையே இங்கு ஒரு வர்க்கப்புரட்சி நிகழாமலே பேய்விட்ட சாதி அரசியலின் ஆகப்பெரிய துயரமாகும்.

சாதிகளின் அணி சேர்க்கையை கொள்கையாக கொண்ட கட்சி என்றால் அது பாஜகதான். சாதிகள் தமது மதத்திற்கு சொந்தம், மதம் சாதிகளுக்கு சொந்தம் என்ற நோக்கு, இலக்குடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாதியை மத அரசியலும், சாதி, மத அரசியலையும் ஒன்றையொன்று பயன்படுத்திக் கொள்கின்றன. மொத்தத்தில் சாதி தேசியமே இந்து தேசியமாக, இந்திய தேசியமாக இருக்கிறது.**

அது சாதிகளை அணிதிரட்டுகிறது. சாதிப் பிரதிநிதிகளின் கூடாரமாக இருந்த அதிமுக வை தனித்தனியாக உடைத்தும், சேர்த்தும், பிரித்ததன் வழி அதிமுகவின் சாதி சார்பற்ற உருவை கலைத்துப்போட்டது. அதிமுக உடைந்ததும் அதன் பொது உரு கலைந்து அதன் தலைமைகள் சாதி தலைமைகளாக எஞ்சியது. அதுதான் பாஜகவுக்கு தேவைப்படுவதாக இருந்தது. அந்த சாதித் தலைமைகளை சாதிப் பிரதிநிதியாக ஏற்று அவர்களை தமது அணியில் சேர்த்துக் கொண்டது. தற்போது பாஜகவின் கூட்டணி என்பது சாதிகள் அடங்கிய கூட்டணி. அதிமுகவாக பாஜகவுக்குள் செல்ல முடியாத நிலையில் சாதி அணியாக பாஜகவுக்குள் அய்க்கியமாகிக் கொண்டிருக்கிறது சிதறிய அதிமுக அல்லது சிதறிப்போன சாதித் தலைமைகள்.

ஓபிஎஸ், தினகரன், சரத்குமார். ராதிகா சரத்குமார், போன்ற தனிநபர்கள், பாமக போன்ற கட்சிகள் இவர்கள் எல்லாம் தனிநபராக சாதிகளை பிரதிநிதப்படுத்துபவர்களாக பாஜகவில் இணைந்து கொண்டுள்ளனர். வடக்கே சாதிக் குழுமங்களை, பழங்குடி இனப் பிரிவுகளை பாஜக நேரடியாக அதன் தலைமைகளுடன் பேசி தமது கட்சிக்குள் கொண்டு வந்தது போல, கொண்டு வருவது போல தமிழ்நாட்டில் அப்படி நேரடியாக முடியாவிட்டாலும் கட்சிகளுக்குள்ளும் அதற்கு வெளியேயும் இருக்கும் சாதிகள், சாதித் தலைமைகளை இனம் கண்டு இழுத்துப் போட்டுக் கொள்வதைச் செய்திருக்கிறது.

பாஜகவுடன் தலித் தலைமைகள், கட்சிகள் தலித் விடுதலை கோருபவர்களாக, சாதிகளை ஒழிப்பவர்களாக ஒன்று சேராமல் தமது சாதிப் பெருமைகளுடன், சாதி அடையாளங்களுடனே பாஜகவுக்குள் சேர்ந்திருக்கிறார்கள். ஜான்பாண்டியன், கிருஷ்ணசாமி போன்றவர்கள் சாதிப் பெருமையின் பெயரில் ஆண்ட சாதிப் பெருமையுடன் பாஜகவில் கூட்டணி சேர்க்கின்றனர். கிருஷ்ணசாமி இட ஒதுக்கீட்டை அந்த வழியில்தான் மறுப்பவராக இருக்கிறார். ஆக மதத்தின் பெயரில் பிளவு இனத்தின், மொழியின் பெயரில், சாதிகளின் பெயரில் பிளவு. ஒட்டுமொத்தத்தில் பிளவு வழி தன்னை பாஜக இப்படித்தான் நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறது. நாடாளுமன்ற தேர்தலை அது சாதிகளின் தொகுப்பாகவே அம்பேத்கர் குறிப்பிட்ட வழியிலேயே சென்று அதற்கொரு வடிவம் கொடுத்து அது தேர்தலைச் சந்திக்கிறது. சாதிகள் ஒவ்வொன்றும் தன்னளவில் தனிதனியாக இயங்குகின்றன ஓட்டு மொத்தமாக இந்து என்று சாதிகள் தம்மை கருதிக்கொள்ள பொது அம்சம் ஏதுமில்லை என்பார் அம்பேத்கர். இந்து என்று ஒருமைப்பட சாதி ஒரு தடையாகவே இருக்கிறது. ஒரு இந்து முதலில் தான் சார்ந்த சாதிக்காரன் அப்புறம்தான் இந்து. பிறகு தமிழன், இந்தியன் என்ற அடையாள அரசியல் சொல்லுக்குள் வருகிறான். நடைமுறைக்கு வருகிறான். இதையே பாஜக பயன்படுத்திக் கொள்கிறது.

இந்து என்றோ, தமிழன், மலையாளி என்றோ ஒன்று சேர்வது, சேர்ப்பது உடனடி பலனை அளிக்காது என்பதால்தாம் பாஜக சாதிகளை ஒருங்கிணைக்கிறது. இந்திய தேசியம், இந்து தேசியம் பேசும் பாஜக பரிவரங்கள் இப்படி சாதித் தேசியத்தைதான் உருவாக்கியிருக்கிறது. ஒரு இந்தியனாக, ஒரு இந்துவாக, தமிழனாக, திமுகவாக, அதிமுகவாக, ஓட்டுப்போடுவதைவிட ஒரு சாதிக்காரனாகவே ஒருவன் ஓட்டுப்போடுவான், போட வேண்டும் அது உறுதியான, கட்டுக்கோப்பான ஓட்டாக விழும் என்பது பாஜக வின் சாதி அரசியலாகும். இஸ்லாமியர்கள், கிருத்துவர்கள் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் விழுவது போல இந்துக்கள் ஓட்டுக்கள் விழாததால் சாதியாக இணைத்தும் பிரித்தும் ஒன்று சேர்க்கும் வாக்குகள் சிதறாது என்பது பாஜகவின் சாதி அரசியல் தேர்தல் கணக்காகும். அதனால்தாம் சாதிப் பிரதிநிதி என்று சொல்லும் தனிநபர்களையும், தலைமைகளையும், கட்சிகளையும் அது அரவணைத்து செல்கிறது. ஒருவகை திருதராஷ்டிர அரவணைப்பு.

"அவர் செய்தது தப்போ, சரியோ, அவர் என் சாதிக்காரர். நல்லவரோ கெட்டவரோ அவர் என் சாதிக்காரர் என்ற மனப்பான்மைதான் காணப்படுகிறது. நல்லதை ஆதரிப்பது, தீயதை ஆதரிக்க மறுப்பது என்ற பிரச்சனையே இல்லை. சுயசாதிக்காரருக்கு ஆதரவா? ஆதரவு இல்லையா என்பதே பிரச்சனையாகிறது. இந்துக்கள் தமது சாதி நலன்களைக் கருதி நாட்டுக்குத் துரோகம் செய்யவில்லையா?" என்று கேட்கிறார் அம்பேத்கர்(சாதியை அழித்தொழித்தல் பக்கம்-46) தேசபக்தி, நாட்டுபற்று, இந்து தேசியம் என்றெல்லாம் பேசும் பாஜக சாதி பக்தியையும், சாதிப் பற்றையும், சாதி தேசியத்தையுமே உருவாக்கி நாட்டுக்குத் துரோகம் செய்வதாக மறுதலையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ள முடியும்.

இந்த சாதி தேசியத்தை மத தேசியமாக, தேசிய மதமாக, தேசப்பற்றாக மாற்றுவதற்கு பாஜகவுக்கு எதிரிகள் தேவைப்படுகிறார்கள் பொது எதிரி என்று ஒன்று இல்லையென்றால் இந்த சாதிகளை தேசியவாதிகளாக உணர வைக்க முடியாது என்பது அதற்குதெரியும். அதுவும் தற்காலிக உணர்வுதான். அதைத் தொடர்ந்து தக்க வைக்க அதற்கு எதிரிகள் இருந்து கொண்டே இருக்க வேண்டும். அதற்குத்தான் சிறுபான்மையினர், தலித்துகள், பழங்குடிகள் தேவைபடுகிறார்கள்.

ஒரு சாதிக்காரன் சாதியாகவே, தன் சாதிக்குள்ளாகவே சிந்திக்கிறான். சாதிநலனுக்குள் வைத்து தனது நலனை சிந்திக்கிறான். சாதிநலன் என்பது தனது நலன் மட்டுமே. இவனை அந்த குறுகின எல்லையை விட்டு சற்றே பரந்த எல்லைக்கு மத அரசியலும், தேசப்பற்று அரசியலும் இழுக்க முயல்கிறது. ஒரு சாதிக்காரன் தன்னை இந்துவாகவும், தேசியவாதிகவும் சிந்திப்பதும், செயல்படுவதும் தற்காலிகமானதே இந்த தற்காலிக ஏற்பாட்டையே பாஜக தனது மத, தேசிய அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்கிறது. நிரந்தர அரசியலுக்குப் பயன்படுத்தப் பார்க்கிறது.

சாதிகளே இந்துவாக ஒன்று சேர்வதைத் தடுப்பதாக அம்பேத்கர் சுட்டிக்காட்டுகிறார். அப்படி ஒன்று சேரவிடாமல் பிளவுப்படுத்தி வைத்துக் கொள்ளும் அரசியலையே பாஜகவும் கையிலெடுக்கிறது. இந்துக்களாக ஒன்று சேரும் தற்காலிக ஏற்பாடு அதற்கு போதுமானதாக இருக்கிறது. ராமர் கோவில், இந்துக்களின் சொத்துக்கள் பறிக்கப்பட்டு முஸ்லிம்களிடம் கொடுக்கப்பட்டுவிடும், இந்துக்களின் தாலி கூட பறிக்கப்பட்டு முஸ்லிம்களிடம் கொடுக்கப்பட்டுவிடும், இரண்டு எருமை மாடுகள் வைத்திருந்தால் ஒரு எருமைமாட்டை காங்கிரஸ் எடுத்துக் கொள்ளும் என்பது போன்ற பொறுப்பற்ற வாய் சவடால்கள் மோடியின் தேர்தல்கால பேச்சுக்கள் பிதற்றல்களாக மேலோட்டமாகத் தோன்றினாலும் இந்த பேச்சுக்களே தற்காலிக, இந்து உணர்வெழுச்சிக்குப் போதுமானதாக இருக்கிறது. ஆழமானதாக இருக்கிறது.

"சாதி ஓர் தீமை பயக்கும் நிறுவனம்" என்று அம்பேத்கர் கூறுகிறார். அந்த தீமை பயக்கும் நிறுவனத்தை தனக்கு நன்மை பயக்கும் நிறுவனமாக பாஜக தனக்கேயுரிய வழியில் பயன்படுத்திக் கொள்கிறது. பெருந் தீ(மை)யை தேவைப்பட்டால் சிறு தீயாகவும், சிறு தீ(மை)யை பெருந்தீயாகவும் மாற்றி பயன்படுத்தவே அதற்கு சாதி அரசியல் தேவைப்படுகிறது. சாதியை இணைக்க முடியாது ஒன்றுக்குள் ஒன்று கரைக்க முடியாது கரையாமல் இருப்பதும் பாஜகவைப் பொறுத்தவரை தேவைப்படும் ஒன்றுதான். தனித்தனி சாதிப் பூக்களை ஒரே இந்து நாரில் அது தொடுத்து வைத்துக் கொண்டு அழகு பார்க்கிறது. ஒரு பொது எதிரி இல்லையென்றால் அந்த பூக்கள் உதிர்ந்து விழுந்துவிடும். சட்டென்று கருகிப் போய்விடும். பாஜக பரிவாரங்கள் சாதியையும், மதத்தையும் இப்படித்தான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. கொண்டிருக்கும்.

சாதிகளின் படிநிலையானது மேலிருக்கும் சாதியினது, உயர்சாதியினது மத பண்பாடுகளை போல செய்வதால் சாதிகளின் வர்க்க பிரிவின் மேல் தட்டினர் இந்துத்துவப் பண்பாட்டை தமது சாதியின் பண்பாட்டு அரசியலாக தற்போது முன்வைக்கத் தொடங்கியுள்ளனர். ஏற்கின்றனர். நிலபிரபுத்துவத்தின் எச்சமாக இருந்த சாதி மரபு பெருமை தற்போது இந்துத்துவ பெருமையாக மாறியிருக்கிறது.

"எங்கெல்லாம் ஒரு கூட்டம் தம் சொந்த நலன்களை காத்துக் கொண்டுள்ளதோ அங்கெல்லாம் இந்த சமூக விரோத வெறுப்பு மனப்பான்மை காணப்படும். இந்த சமூகவிரோத மனப்பான்மையே இந்த கூட்டத்தார் மற்ற கூட்டத்தாருடன் முழுமையாகக் கலந்துறவாடுவதை தடுக்கிறது இதன் வழி அந்தக் கூட்டத்தார் தன் பெற்றுள்ள சொந்த நலன்களை காத்துக்கொள்ள முடிகிறது. இதுவே அதன் முதன்மையான நோக்கமுமாகும். நாடுகள் எவ்வாறு தன்னலம் கருதித் தனித்திருக்க முற்படுகின்றனவோ அவ்வாறே பல்வேறு சாதிகளும் தன்னலம் கருதி பிறரோடு உறவின்றிதனித்து வாழ முற்படுகின்றன. இந்த தன்மைதான் சாதிகளிடம் உள்ள சமூக விரோத மனப்பான்மையாக வெளிப்படுகிறது!" (அம்பேத்கர் சாதி ஒழிப்பு பக்-7) அம்பேத்கர் குறிப்பிடும் இத்தகை மனப்பான்மையே பாஜக பரிவாரங்களிடமும், அவர்களது மத அரசியலிலும், சாதி அரசியலிலும் தெளிவாக வெளிப்படுகிறது ஆனால் அவர்ளோ மற்றமையை தேசவிரோதிகள் என்று எளிதாகச் சொல்லிவிடுகிறார்கள். மெய்யாகவே அமைப்பு வழியில் அவர்கள் யார் என்பதை சாதி தேசியம் தெளிவுபடுத்திபடுத்திவிடவே செய்கிறது.

சாதியை மத அரசியலும், சாதி, மத அரசியலையும் ஒன்றையொன்று பயன்படுத்திக் கொள்கின்றன. மொத்தத்தில் சாதி தேசியமே இந்து தேசியமாக, இந்திய தேசியமாக இருக்கிறது.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: ஜமாலன்

# பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலியத் தாக்குதலும் உலகளாவிய போராட்டங்களும்



மே 15 பாலஸ்தீனியர்களால் "நக்பா நாள்" (Nakba Day) என்ற பெயரில் நினைவு கூறப்பட்டு பல எதிர்ப்பு போராட்டங்கள் நிகழ்த்தப்படுகின்றது. நம் காலத்தில் நிகழ்ந்த இரண்டு மாபெரும் அவலங்கள்; ஒன்று மே 18, 2009ல் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழர் பேரழிவு. மற்றது மே 15, 1948ல் துவங்கி இன்றும் நிகழ்ந்து கொண்டிருக்கிற பாலஸ்தீனியர்களின் பேரழிவு. இவ்விரண்டு போராட்டங்களும் பல ஒற்றுமைகளைக் கொண்டவை. அவற்றின் அழிவுகளின் நாட்களிலும் அவ்வொற்றுமை காணப்படுவதே இன்றைய அரசியல் யதார்த்தம். இவ்விரு இனப் பேரழிவுகளில் பின்னணியில் இருப்பது இலங்கை திரிகோணமலை கடற்படைத்தளமும், இஸ்ரேல் என்கிற நாட்டின் புவிசார் அரசியல் முக்கியத்துவமும். இரண்டின் பின்னுள்ளது அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் பொருளியல் லாபங்களும், போர்வெறி ஆயுத விற்பனையும்.

1948ல் துவங்கி சரியாக 75 வருடங்கள் தொடர்ந்து பாலஸ்தீனியர்கள் போர்ச் சூழலில் வாழ்ந்து வருகின்றனர். சென்ற ஆண்டு, அதாவது 2023 நவம்பரில் இஸ்ரேலிய இராணுவத்தால் மீண்டும் துவங்கியது பாலஸ்தீனத்தில் நடைபெற்றுவரும் இன அழித்தொழிப்பு தாக்குதல். அதற்கு காரணமாகச் சொல்லப்பட்டது, ஹமாஸ் என்ற தீவிரவாத அமைப்பாக உருவாகி பாலஸ்தீனிய காஸாப் பகுதியின் ஆட்சியை ஜனநாயகத் தேர்தல் மூலம் கைப்பற்றி ஆண்டு கொண்டிருந்த அவ்வமைப்பின் தாக்குதல். ஹமாஸ் என்ற அமைப்பு பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு (PLO) மாற்றாக உருவான மற்றும் உருவாக்கப்பட்ட ஒரு தீவிரவாத அமைப்பு. இந்த அமைப்பின் தீவிரவாதச் செயல்பாடுகள் குறித்து சர்வதேச அளவில் பல விமர்சனங்கள், கண்டனங்கள் உண்டு. என்றாலும், இவ்வமைப்பு இஸ்ரேல் அரசு உருவாக்கி வைத்திருந்த, உலகில் எந்த அரசிடமும் இல்லாத மிக உயர்ந்த பாதுகாப்பு அமைப்பான "இரும்புக் குவிமாட"த்தை (Iron Dom) ஊடுறுவி நடத்திய தாக்குதல்தான் முக்கியமானது.

இஸ்ரேலிய அரசின் எல்லைகளைப் பாதுகாக்கும் இந்த "இரும்புக் குவிமாடம்" பல மில்லியன் டாலர் செலவு செய்து, அமெரிக்க அரசின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டது. இஸ்ரேலை நோக்கி ஏவப்படும் ராக்கெட்டுகளைக் கண்காணித்து, கணித்து வானிலேயே அதனை சுட்டு வீழ்த்தும் ஒரு அமைப்பு. இது இஸ்ரேலை நோக்கி வரும் ராக்கெட்டுகளை இடைவிடாது கண்காணித்து அவை வருவதை ரேடார்கள் மூலம் கண்காணித்து, அதன் குறி இலக்கையும் வரும் வேகம், தாக்கும் காலம் ஆகியவற்றைக் கணித்து, அதற்கு எதிரான ஒரு ராக்கெட்டை ஏவி வானிலேயே அழித்துவிடும் ஒரு புதியவகை பாதுகாப்பு அமைப்பு. இஸ்ரேலிய எல்லைகளைச் சுற்றி உருவாக்கப்பட்டுள்ள இரும்பு வளையத்தைப் போன்றது. இதனால் இஸ்ரேலிய எல்லைகளைச் சுற்றி உள்ள அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளிடமிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்கான அமைப்பு. இதற்கான பெரும்பாலான நிதி உதவியைச் செய்தது அமெரிக்க மற்றும் இங்கிலாந்து அரசுகளே. இந்த இரும்புக் குவிமாடப் பாதுகாப்பை ஊடுறுவி ஹமாஸ் இயக்கம் தாக்குதல் நிகழ்த்தி இஸ்ரேலிய பொதுமக்கள் அதில் கொல்லப்பட்டனர். இதில் பலர் படுகாயமும் அடைந்தனர். இஸ்ரேலின் இந்த பாதுகாப்பு அமைப்பு சிதைக்கப்பட்டது அதன் ஆயுத அதிகாரத்தை கேள்விக்குறியாக்கி விட்டது. இதுவே, இன்று இவர்கள் "போர்" என்றுக் கூறும், பாலஸ்தீனியர்கள் மீதான இனவழிப்பு தாக்குதலுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

இந்த இரும்புக் குவிமாடம் முழுக்க உயர் தொழில்நுட்பத்தால், வயர்லஸ் நுட்பத்துடன் 24 மணிநேரமும் திறன்வாய்ந்த பேட்டரிகளால் (சேமக்கலங்களால்) இயக்கப்படுகிறது. இதில் பயன்படுத்தும் பேட்டரிகளால் ஏறத்தாழ 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்ரேலின் பாலஸ்தீனியர்கள் மீதான இந்த இனவழிப்பு தாக்குதலை வெறுமனே போர் என்ற சொல்லாடலுக்குள் மேற்குலகம் குறியீடு செய்ய முயல்கிறது. போர் என்பது இரண்டு படைகள் நேருக்கு நேர் மோதிக் கொள்வதே. ஆனால், இங்கோ, அப்பாவி பாலஸ்தீனியப் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள்.**

சதுரக் கி.மீ. உள்ள ஒரு நகரத்திற்கு தேவையான மின்சக்தியைப் பெறலாம் என்கிறார்கள். இத்தனை சக்தி வாய்ந்த பேட்டரியை 24X7 என்ற அளவில் இடைவிடாது இஸ்ரேல் பயன்படுத்தி வருகிறது. உலகின் சக்தி வாய்ந்த அதிக பணம் செலவுடன் கூடிய ஒரு பாதுகாப்பு தொழில் நுட்பம். இந்த அமைப்பு 70 கிலோமீட்டர்கள் வரை வரக்கூடிய ராக்கெட்டுகள், பீரங்கிகளை எதிர்கொள்ளும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் உற்பத்தியாளரின் கூற்றுப்படி, இது எத்தகைய வானிலையிலும் இரவும் பகலும் செயல்படும். பல்வேறு எல்லை நாடுகளின் அச்சுறுத்தலுக்கு பதிலடித் தரக்கூடியதாகவும் அமைந்துள்ளது. 2011-2021வரை, அதாவது 2021 நடந்த காசா மீதான இஸ்ரேலிய தாக்குதல் வரை, இதற்கான அமெரிக்க அரசின் நிதியுதவி 1.6 பில்லியன் அமெரிக்க டாலர். அதன்பின் 2022ல் மற்றொரு 1 பில்லியன் டாலர் அமெரிக்க அரசால் நிதி உதவி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆக, இந்த இரும்புக் குவிமாடம் என்பது உலகளாவிய 3 பெரிய ஆயுத உற்பத்தி நிறுவனங்களினால் உருவாக்கப்பட்டு இஸ்ரேலில் நிறுவப்பட்டுள்ளது. அதில் ஒரு நிறுவனம் இந்தியாவிற்கு போர் விமானம் வழங்கிய மோடி அரசின்மீது ஊழல் எனக் கூறப்பட்டு, பிறகு இரவோடு இரவாக 'பைல்' காணவில்லை என்று கூறி அரசு தப்பித்த புகழ்பெற்ற ரஃபேல் நிறுவனமாகும்.

இந்தக் குவிமாடத்தின் பாதுகாப்புத் திறனை உலகளவில் நிரூபித்துக் காட்டுவதற்கான ஒரு செயல்திட்டமும் இந்த் ஹமாஸ் தாக்குதலின் பின்னணியில் உள்ளது. இது உலக ஆயுத வியாபாரிகளுக்கான ஒரு சோதனை ஓட்டக் களமாகவும் மாறியுள்ளது என்ற அய்யத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இந்த இரும்பு குவிமாடத்தை உலக அளவில் உள்ள பல நாடுகளும் வாங்க இஸ்ரேல் அரசுடன் ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றன. சிங்கப்பூர், அசர்பைஜான், இந்தியா, ரொமேனியா, அமெரிக்கா, சைப்ரஸ், தென்கொரியா, சவுதி அரேபியா மற்றும் நேட்டோ அமைப்புகள் வழியாக பல ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது இஸ்ரேல். குறிப்பாக, இந்திய பிரதமர் மோடி, இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகுவுடன் 2017ல் 2 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஒரு ஒப்பந்தம் போட்டார். அதில் இந்த இரும்பு குவிமாடமும் அடங்கும். மேலும், நவம்பர் 19, 2012 டைம் (Time) இதழில் மார்க் தாம்சன் என்பவர் ஒரு விரிவான கட்டுரை எழுதி உள்ளார். அதில் "நாங்கள் 90% வெற்றி விகிதத்தைப் பெற்றுள்ளோம்," என்று அவர் பெருமிதத்துடன் கூறுகிறார். "இது வரலாற்றில் முன்னோடியில்லாதது." இதை உறுதிப்படுத்துவதும் சாத்தியமற்றது, ஆனால் இஸ்ரேலிய உயிரிழப்புகள் இல்லாததால் அயர்ன் டோம் என்பது உலகம் இதுவரை கண்டிராத மிகவும் பயனுள்ள, மிகவும் சோதிக்கப்பட்ட ஏவுகணைக் கவசமாகும்" என்கிறார். இதன் பின் ஆயுதங்கள் தயாரிக்கும் முதல் 5 பெரு நிறுவனங்களைக் கொண்ட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நலன் உள்ளது. அத்துடன் இஸ்ரேல் இதனை உருவாக்கும் தொழில்நுட்பத்தை வைத்திருப்பதால் உலகில் ஒரு முக்கியமான ஆயுத வியபாரியாக மாறுவதற்கான முயற்சியும் உள்ளது. இத்தகைய தாக்குதல்களின் அரசியல் பொருளாதாரம் என்பது ஆயுத வியாபாரமும், தாக்கப்பட்ட நாட்டை மறு உருவாக்கம் செய்வதற்கான கட்டுமான ஒப்பந்தங்களுமே. இதுதான் உலக முதலாளியத்தின் போர் அரசியல் பொருளாதாரம்.

இந்த இரும்பு குவிமாடம் இஸ்ரேலிய அரசால் 2011ன் ஆரம்பத்தில் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. காஸா எல்லையில் இது நிறுவப்பட்டுள்ளது. இந்த குவிமாடத்தின் கண்காணிப்பு, திட்டமிடல் எதிர் தாக்குதல் நடத்துவதற்கான நேரத்தையும், எதிர் தாக்குதலுக்கு அனுப்பப்படும் ஏவுகணைகளின் சக்தியையும் கணக்கிட்டு, அதைவிட கூடுதலான பொழிவாக சுமார் 1000 ஏவுகணைகளை ஒரே நேரத்தில் அனுப்பி அந்த குவிமாடத்தை ஊடுறுவித் தாக்கிவிட்டது ஹமாஸ். இஸ்ரேல் மீதான ஹமாஸின் இத் தாக்குதல் அக்டோபர் 7ல் நிகழ்த்தப்பட்டது. இது ஏன் இந்த குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்தது? 2025ல் வரவுள்ள இஸ்ரேலிய தேர்தலில் சரிந்துவரும் நெத்தன்யாகுவின் ஆதரவை பெருக்கவும் தேசவெறியை ஊட்டவும் இந்த தாக்குதல் அவர்களுக்கு தேவைப்பட்டது. நெத்தன்யாகுவின் கூட்டணி அரசானது இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஸா தாக்குதலுக்குப்பின் சில எதிர் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுள்ளது என்பது கவனிக்க வேண்டிய ஒன்று. 2019 இந்திய பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பாக சரியாக நிகழ்ந்த புல்வாமா, பாலக்கோட் தாக்குதல் நினைவிற்கு வந்தால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட இஸ்ரேலியர்கள் தோராயமாக 1,139 பேர், காயமடைந்தவர்கள் 8,730 பேர். ஆனால், அதற்கு எதிராக இன்றுவரை கடும் தாக்குதலைத் தொடுத்து வருகிறது இஸ்ரேலிய இராணுவம். மே 17, 2024 வரை இஸ்ரேலிய ராணுவத் தாக்குதலால் கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்கள் காஸாவில் மட்டும் தோராயமாக 35,303 பேர். இதில் 15,000 குழந்தைகள் மற்றும் காணாமல் போனவர்கள் 10,000 பேர். காயம்பட்டவர்கள் 79,261 பேர். மேற்குகரையில் தோராயமாக 503 பேர் அதில் 125 குழந்தைகள். காயம்பட்டவர்கள் 4,950 பேர். இந்த கணக்கீடு வெறும் எண்கள் அல்ல. இரத்தமும் சதையுமான மனிதர்கள். இந்தக் கணக்கீடு காட்டுவது கொல்லப்பட்ட இஸ்ரேலியர்களைவிட 30 மடங்கு கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்கள் எண்ணிக்கை அதிகம். இது கூறுவது இந்த தாக்குதலுக்கு பின்னுள்ள மூன்று நோக்கத்தையே. ஒன்று, காஸாவில் கிடைக்கும் எண்ணை வளம் குறித்த உலக முதலாளியத்தின் குறிப்பாக அமெரிக்க - ஐரோப்பிய - பிரித்தானிய கார்ப்பரேட்டுகள் கைப்பற்றுவதற்கான கூட்டு எண்ணம். இரண்டு, உலக ஆயுத வியபாரிகளின் ஆயத விற்பனை. மூன்று, எண்ணை வளமிக்க மற்றும் பண்பாட்டில் வேறுபட்ட இஸ்லாமிய நாடுகள் மற்றும் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளுக்கான தங்களது அடியாட்படைத் தளமாக இஸ்ரேலை நீடிக்கச் செய்வது. அதாவது புவிசார் அரசியலில் இஸ்ரேலுக்கு உரிய முக்கியத்துவம். அங்கிருந்து ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை அமெரிக்க, ஐரோப்பிய வல்லரசுகளால் கட்டுப்படுத்த முடியும். அதனை ஒரு இராணுவத்தளமாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதே.

இஸ்ரேலின் பாலஸ்தீனியர்கள் மீதான இந்த இனவழிப்பு தாக்குதலை வெறுமனே போர் என்ற



சொல்லாடலுக்குள் மேற்குலகம் குறியீடு செய்ய முயல்கிறது. போர் என்பது இரண்டு படைகள் நேருக்கு நேர் மோதிக் கொள்வதே. ஆனால், இங்கோ, அப்பாவி பாலஸ்தீனியப் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள். ஹமாஸ் ஓடி ஒழிந்து கொண்டுவிட்டது. ஹமாஸின் தாக்குதலைக் காரணம்காட்டி ஒட்டு மொத்த பாலஸ்தீனியர்களை அழிப்பது அல்லது இடம்பெயரச் செய்து முகாம்களில் அடைப்பது என்பதே அதன் நோக்கமாகும். அதனால், நேரடியாக இஸ்ரேலிய இராணுவம் காசாவில் தாக்குதல் நடத்துகிறது. எந்த போர் அறத்தையும் பின்பற்றாமல் மனதாபிமானமற்ற முறையில் பள்ளிகள், மருத்துவமனைகள், முகாம்கள் என அனைத்தையும் தாக்கி அழிக்கிறது. சர்வதேச நீதிமன்றத்தில் தென் ஆப்பிரிக்க அரசு தொடுத்த வழக்கிற்கும் பெரிய ஆதரவு இல்லை. பெயருக்கு ஐக்கிய நாட்டு சபையானது இறந்தவர்களின் புள்ளி விபரங்களையும், கண்டன அறிக்கைகளையும் வெளியிடுவதுடன் கடமையை முடித்துக் கொண்டுவிட்டது. ஆனால், உலகளாவிய ஜனநாயக உணர்வுகொண்ட, மனிதேயமிக்க மக்கள் குறிப்பாக பல பல்கலைக்கழக மாணவர்கள் தெருவில் இறங்கி இஸ்ரேலின் இந்த அடாவடிச் செயலை எதிர்த்து மிகப்பெரும் போராட்டங்களை நிகழ்த்தி வருகின்றனர்.

தற்போது நடந்துவரும் பாலஸ்தீனிய ஆதரவுப்

**1947 இந்தியா, பாகிஸ்தான் இருநாட்டு உருவாக்கத்தில் நிகழ்ந்ததைப் போல வரலாறு காணாத பெரும் இடப்பெயர்வு நிகழ்ந்தது. ஆனால் பாகிஸ்தான் என்று ஒரு நாடாவது இந்திய இஸ்லாமியர்களுக்கு இருந்தது. ஆனால், பாலஸ்தீனியர்களுக்கு இருந்த நிலத்தில் முக்கால்வாசி நிலம் இஸ்ரேலாக மாறியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களில் பெரும்பாலும் மாணவர்கள், பல்கலைக்கழகங்களே முன்னணி வகிப்பதை பார்க்க முடிகிறது. ஏப்ரல், 17 அன்று கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஆக்ரமிப்பு போராட்டம் நடத்தினர். மே, 6ல் அமெரிக்காவில் உள்ள 50 மாகாணங்களில் 45ல் மாணவர் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. யு.கே., ஆஸ்த்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் பெரும் அளவில் மாணவர் போராட்டங்கள் நடந்து பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். நெதர்லாந்து ஆம்ஸ்டர்டாம் பல்கலைக்ககழகம், ஜெர்மனியின் லிப்சிக் பல்கலைக்கழகம், பிரான்சின் சயின்சஸ் போ, பெல்ஜியத்தின் ஜென்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. 25 நாடுகளில் இந்த போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மே 13 அன்று 1000 டச்சு மாணவர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். அந்தந்த நாடுகளின் அரசுகள் இஸ்ரேலுக்கு இராணுவ உதவி, பொருளாதார உதவி செய்வதற்கு எதிராக இந்த போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. ஆஸ்டிரியாவின் வியன்னா பல்கலைக்கழகம், பங்களாதேஷின் டாக்கா பல்கலைக்கழகம், பிரேசிலின் சா பாவ்லோ, மோன்டிரியல் மெக்-கில், கோஸ்டாரீக்கா பல்கலைக்கழகம், கியூபாவின் ஹவானா, டென்மார்க்கின் கோபன்ஹேகன், எகிப்தின் அமெரிக்கன் பல்கலைக்கழகம், பின்லாந்து ஹெல்ஸ்னிக், கிரிஸ் ஏதென்ஸ் பல்கலைக்கழகம், இந்தியாவில் ஏப்ரல் 30ல் ஜவர்கலால் நேரு பல்கலைக்கழகம், இந்தோனிஷியா பல்கலைக்கழகம், ஈராக்கின் பாக்தாத் பல்கலைக்கழகம், அயர்லாந்து டிரினிட்டி காலேஜ், இத்தாலியின் லா சாப்பின்ஷா, ஜப்பானின் டோக்யோ பல்கலைக்ககழகம், குவைத், லெபனான், மெக்சிகோ ஆகியவை போராட்டங்களில் ஈடுபட்ட நாடுகள் மற்றும் பல்கலைக்ககழகங்கள்.

மே 15, 2024 அன்று “நக்பா நாள்”. நக்பா என்றால் அரபியில் பேரழிவு என்று பொருள். பாலஸ்தீனியர்களின் அமைதியான வாழ்வில் முதல் பேரழிவு நிகழ்ந்தது 1948 ஆம் ஆண்டு. முதல் இன அழிப்பை நிகழ்த்தியது இஸ்ரேலிய இராணுவப் படை. பாலஸ்தீனியத்தின் பல கிராமங்கள் கூட்டம் கூட்டமாக வெளியேற்றப்பட்டு, யூதப்பெயர்கள் இடப்பட்டு யூத கிராமங்களாக மாற்றப்பட்டன. 15 ஆயிரத்திற்கும் மேலான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 78% பாலஸ்தீனிய நிலங்கள் யூத இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டது. பாலஸ்தீனியர்கள் சுற்றியுள்ள பல இஸ்லாமிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர். 1947 இந்தியா, பாகிஸ்தான் இருநாட்டு உருவாக்கத்தில் நிகழ்ந்ததைப் போல வரலாறு காணாத பெரும் இடப்பெயர்வு நிகழ்ந்தது. ஆனால் பாகிஸ்தான் என்று ஒரு நாடாவது இந்திய இஸ்லாமியர்களுக்கு இருந்தது. ஆனால், பாலஸ்தீனியர்களுக்கு இருந்த நிலத்தில் முக்கால்வாசி நிலம் இஸ்ரேலாக மாறியது. அந்த மாபெரும் இனப்பேரழிவை நினைவு படுத்தும் நாளே மே 15, 1948. இந்நாள் “நக்பா நாள்” என உலகளாவிய பாலஸ்தீனிய விடுதலை உணர்வு கொண்ட, ஜனநாயக உணர்வுகொண்ட மனிதநேயர்களால் நினைவு கூறப்படுகிறது. ஈழத் தமிழர்களின் பேரழிவு முள்ளிவாய்க்கால் எப்படி மே 17ஐ நினைவூட்டுகிறதோ அப்படியானதொரு நாள்தான் மே 15 பாலஸ்தீனியர்களுக்கு.

இந்த ஆண்டு மே 15 ‘பாலஸ்தீனிய சாலிடாரிட்டி இயக்கம்’ உலகளவில் பாலஸ்தீன ஆதரவிற்கான பலவித கூட்டு நடவடிக்கைளை செய்யும்படி அறிவித்துள்ளது. தற்போது நடப்பது பாலஸ்தீனத்தில் நடைபெறும் மற்றொரு நக்பா என்று அறிவித்துள்ளது. காரணம், காஸா என்ற பகுதியை உலக வரைபடத்திலிருந்து துடைத்தழித்துவிட்டு அதனை முழுக்க இஸ்ரேலிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதே நடைபெறும் தாக்குதலுக்கான அடிப்படை. அதன்பின் இருப்பது அமெரிக்க ஐரோப்பிய முதலாண்மைச் சக்திகள். இன்று இது உலகளாவிய பிரச்சினையாக மாறி உள்ளது. போரினால் மிக அதிகமாக ஆயுதங்களை வாங்கும் நாடாக உக்ரைன் மாறியுள்ளது. இத்தகைய தாக்குதல்கள், போர்களின் வழியாக உலக ஆயுத வியாபாரிகளின் நலன்களே அடங்கியுள்ளதைக் காட்டுகிறது. உலக மக்களை என்றும் பதற்றத்தில் வைத்திருப்பதும், அச்சத்தில் வைத்திருப்பதுமே இவர்களது பணியாக உள்ளது.


பயன்பட்ட இணைய தளங்கள்

1. https://www.aljazeera.com/news/liveblog/2024/5/18/israels-war-on-gaza-live-battles-in-jabalia-and-rafah-as-israel-advances

2. https://www.hrw.org/middle-east/north-africa/israel/palestine

3. https://nation.time.com/2012/11/19/iron-dome-a-missile-shield-that-works/

4. U.S. Foreign Aid to Israel by Jeremy M. Sharp -Congressional Research Service - www.crs.gov

5. https://en.wikipedia.org



கட்டுரையாளர்: எழுத்தாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: செல்லப்பா

# இட ஒதுக்கீடு என்றால் சிலருக்கு ஏன் எரிகிறது?



தேர்தல் பரப்புரைக்காகச் சென்றவிடங்களில் எல்லாம் பிரதமர் நரேந்திர மோடி திருவாய் மலர்ந்தார்; விஷச் சொற்களை வீசி எறிந்தார். அப்படி அவர் பேசிய சிலவிடங்களில் இடஒதுக்கீடு குறித்தும் அரிய கருத்துகளை அவர் பாணியில் உதிர்த்துச் சென்றிருக்கிறார். 2024 ஏப்ரல் 24 அன்று மத்தியப்பிரதேச மாநிலத்தில் பரப்புரையில் ஈடுபட்டபோது, கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் சட்டவிரோதமாக மத அடிப்படையில் இட ஒதுக்கீட்டை வழங்குகிறது என்று குறிப்பிட்டார். ஒரே அறிவிப்பில் இஸ்லாமிய சமுதாயத்தினர் அனைவரும் இதர பிற்படுத்தப்பட்டோர் என்னும் ஒதுக்கீட்டுக்குள் சேர்க்கப்பட்டுவிட்டனர்; ஓபிசி இட ஒதுக்கீட்டின் ஒரு பெரிய பகுதியைப் பறித்து மதத்தின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சி கொடுத்துவிட்டது என்று கூறினார். அன்புக்குரிய நம் பிரதமர் ஏப்ரல் 30 அன்று தெலங்கானாவில் பரப்புரையினபோது, நான் உயிருடன் இருக்கும்வரை எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. இட ஒதுக்கீட்டை முஸ்லிம்களுக்குப் பிரித்துக் கொடுக்க அனுமதிக்க மாட்டேன் என்று கூறினார்.

ஒரு நாட்டின் தலைமை அமைச்சர் அரசியல் வெற்றிக்காகப் பிரிவினையைத் தூண்டும்படி பேசுகிறாரே என சமூக ஆர்வலர்கள் அதிர்ச்சியை வெளிப்படுத்தினார்கள். ஆனால், நமது பிரதமரின் இத்தகைய வெறுப்பு பேச்சுகளோ பிரிவினைவாதக் கருத்துகளோ நமக்குப் புதிதல்ல. அவர் எல்லாவற்றையும் அறிந்துகொண்டுதான் பேசுகிறார். ஆகவே, அவர் கூறிய விஷயங்களை விவாதிப்பதற்குப் பதிலாக, இட ஒதுக்கீடு குறித்துப் பேசலாம். அது குறித்து மீண்டும் மீண்டும் பேசித்தான் தீர வேண்டியதிருக்கிறது.

இட ஒதுக்கீடு என்பதையே எதிர்த்தவர்களுக்கு இப்போது, பொருளாதார ரீதியில் என்னும் முத்திரை குத்தப்பட்டு அரசியல் அமைப்பில் பரிந்துரைக்கப்படாதபோதும், அவர்களுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை ஒன்றிய பாஜக அரசு அளித்து அழகுபார்க்கிறது. அதுவும், வருடத்திற்கு எட்டு லட்சம் ரூபாய்க்கு குறைவாக வருவாய் உடையவர்கள் பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்கள் என்று விதிவகுத்திருக்கிறார்கள். ஆண்டுக்கு எட்டு லட்சம் என்றால், மாதம் அறுபதாயிரத்திற்கு மேல் வருவாய் ஈட்டுபவர்கள். அவர்கள் எப்படி பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாவார்கள்? இது சிந்திக்க வேண்டிய செய்தியில்லையா?

அதிலும் அந்த இட ஒதுக்கீடானது, இது வரை எந்த ஒரு இட ஒதுக்கீட்டையும் பெறாதவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அதாவது, அவர்கள் சமூகரீதியான இட ஒதுக்கீட்டைப் பெற்றிருப்பின் அவர்கள் பொருளாதாரரீதியாக பின் தங்கிய நிலையில் இருந்தாலும் அவர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு கிடைக்காது. அதாவது, சமூகத்தில் பொருளாதாரரீதியாகப் பின் தங்கிய ஒரு பிரிவினரை ஒதுக்கிவைத்துவிட்டு பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. இது ஒருவகை அநீதி இல்லையா?

### இட ஒதுக்கீடு: இளந்தலைமுறை அறிவார்களா?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இட ஒதுக்கீடு என்பதன் வரலாறு நீதிக்கட்சி காலத்தில் தொடங்குகிறது. இட ஒதுக்கீடு என்பதை இளந்தலைமுறையினர் சாதி வேறுபாட்டை உருவாக்கும் ஒன்றாகப் பார்ப்பது துரதிர்ஷ்டவசமானது. கடந்த ஆண்டில் தமிழ்நாடு அரசு, கல்லூரி மாணவர்களுக்காக மாபெரும் தமிழ்க் கனவு என்னும் நிகழ்ச்சியை நடத்தியது. தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற வெவ்வேறு நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினர்கள் உரை நிகழ்த்திய பின்னர், அவர்களிடம் மாணவர்கள் கலந்துரையாடினார்கள். அந்தக் கலந்துரையாடலில் பெரும்பான்மையினர் இட ஒதுக்கீடு குறித்துக் கேள்வி எழுப்பினர். அந்தக் கேள்விகள் எல்லாமே இட ஒதுக்கீடு என்பது குறித்த அடிப்படையான புரிதல் அவர்களுக்கு இல்லை என்பதை எடுத்துச் சொல்வதாகவே அமைந்திருந்தன.

சாதியின் பெயரால் இங்கே சமுதாயம் பிளவுபட்டுக் கிடக்கிறது. இந்தச் சமுதாயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இட ஒதுக்கீடு என்பதையே எதிர்த்தவர்களுக்கு இப்போது, பொருளாதார ரீதியில் என்னும் முத்திரை குத்தப்பட்டு அரசியல் அமைப்பில் பரிந்துரைக்கப்படாதபோதும், அவர்களுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை ஒன்றிய பாஜக அரசு அளித்து அழகுபார்க்கிறது.**

சாதியின் பெயரால் சமூகரீதியில் முறையான அங்கீகாரம் கிடைக்காமல் அல்லல்படுவோருக்கு அந்தச் சாதியின் பெயராலேயே உரிய அங்கீகாரத்தை வழங்கும் ஓர் ஏற்பாடே இட ஒதுக்கீடு என்பது. இட ஒதுக்கீடு சலுகை அன்று; அது உரிமை. இந்த அடிப்படையே புரியாத ஒரு தலைமுறையினர் உருவாகியுள்ளார்கள் என்பது உண்மையிலேயே வருந்தத்தக்க ஒன்று.

நாம் நாட்டில் கல்வி கற்கும் உரிமையைப் பார்ப்பனர் மட்டுமே அனுபவித்துவந்தனர். நால் வர்ணமாக சமுதாயத்தைப் பிரித்துவைத்திருந்த அவர்கள் கல்வியைப் பிறர் பெறுவதைத் தடுத்துவைத்திருந்தனர். அதற்கு எதிராக நமது முன்னோர்கள் பெருமளவில் போராட்டங்களை நடத்திக் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றனர். கற்கவே வாய்ப்புக் கிடைக்காத சமுதாயத்தினர் வேலை வாய்ப்பில் எப்படி இடம்பிடிக்க இயலும்? அவர்களது பொருளாதார நிலை எப்படி மேம்படும்? ஒருவகையான தந்திரமான நடவடிக்கையைப் பார்ப்பனர்கள் மேற்கொண்டுவந்தனர். இந்தத் தந்திர வலையை அறுத்து எறிந்து அனைவரும் பள்ளி சென்று, கல்லூரி சென்று பயிலும் வாய்ப்பை நீதிக் கட்சி உருவாக்கித் தந்தது.

### இட ஒதுக்கீடு: கடந்துவந்த பாதை

மன்னராட்சிக் காலத்தில் கோவில்கள் வழியே ஆதிக்கம் செலுத்திவந்த பார்ப்பனர்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் போது, அரசுத் துறையின் பெரும்பான்மையான உயர்பதவிகளைப் ஆக்கிரமித்துக்கொண்டனர். பார்ப்பனர்களின் இந்தத் தந்திரத்தை முறியடிக்க ஆங்காங்கே சிறு சிறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது இரண்டு சிற்றரசுகள். ஒன்று மைசூர் அரசு, மற்றது சத்ரபதி சாகு மகராசாவின் கோல்காப்பூர் அரசு. பார்ப்பனரின் ஆதிக்கத்தை எதிர்த்து 1890இல் மைசூர் அரசுக்குட்பட்ட பார்ப்பனரல்லாதோர் குரல் கொடுத்தனர். இந்தக் கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்த மைசூர் அரசர், பார்ப்பனரல்லாதோருக்கு மைசூர் சமஸ்தான உத்தியோகங்களில் இட ஒதுக்கீடு அளித்து 1894-95இல் ஆணையைப் பிறப்பித்தார். ஆனால், உயர் பதவியில் பார்ப்பனர்கள் இருந்த காரணத்தால் இந்த ஆணையைச் செயல்படுத்தாமல் இழுத்தடித்தனர். ஆனாலும், பார்ப்பனரல்லாதோர் தொடர்ந்து போராடியதன் விளைவாக வகுப்புவாரி இட ஒதுக்கீடு தந்து 1921இல் மைசூர் அரசர் ஆணை ஒன்றைப் பிறப்பித்தார். 1921இலேயே இந்த ஆணை நடப்புக்கு வந்தது. இதற்கு முன்னதாகவே, 1902இல் கோல்காப்பூர் அரசுப்பணிகளில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்கான ஆணையைப் பிறப்பித்தார் சாகு மகராசா. இன்றைய இட ஒதுக்கீட்டின் விதையைப் போட்டவர் இந்த சாகு மகராசாவே.

1919ஆம் ஆண்டில் இந்தியச் சீர்திருத்தச் சட்டப்படி, மாநில மத்திய சட்டமன்றங்களுக்கான தேர்தல் 1920 நவம்பர் 30இல் நடைபெற்றது. சென்னை மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வென்று, 1920 டிசம்பர் 17 ஆட்சி அமைத்தது. முதல் முதலமைச்சரான சுப்பராயலு சில மாதங்களில் இயற்கை எய்தினார். அவரை அடுத்து முதலமைச்சரானார் பனகல் அரசர். இவரது ஆட்சியில்தான் கம்யூனல் ஜி.ஓ எனச் சொல்லப்படும் இட ஒதுக்கீட்டுக்கான முதல் அரசு ஆணை எண்:613, 1921 செப்டம்பர் 16 அன்று வெளியிடப்பட்டது. இதன்படி, மொத்த இடங்கள் 12 எனக் கணக்கில்கொண்டு, பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு 5 (44%), பார்ப்பனர்களுக்கு 2 (16%), முஸ்லிம்களுக்கு 2 (16%), ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர்களுக்கு 2 (16%), தாழ்த்தப்பட்டோருக்கு 1 (8%) எனப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த ஆணையைத் தொடர்ந்து 15.02.1922, 06.02.2024 ஆகிய நாள்களிட்ட வகுப்புரிமை ஆணைகளும் வெளிவந்தன. ஆயினும், இந்த அரசாணைகள் 1927 ஆம் ஆண்டுவரை நடைமுறைக்கு வராமல் பார்த்துக்கொண்டனர் பார்ப்பனர்கள்.

ஆனால், நீதிக்கட்சியின் ஆதரவில் முதலமைச்சர் சுப்பராயன் தலைமையில் அமைந்த ஆட்சியில் அமைச்சராகவிருந்த எஸ்.முத்தையா வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணையை முழுமையாக நடைமுறைப்படுத்த ஆணையிட்டார். இந்திய அளவில், வட்ட மேசை மாநாட்டில் உருவான சிறுபான்மைக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப, 04.07.1934 நாளிட்டு ஆங்கிலேய அரசின் உள்துறை அமைச்சகம் இட ஒதுக்கீட்டு ஆணையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டது. இதன்படி இஸ்லாமியருக்கு 25 விழுக்காடும், ஆங்கிலோ இந்தியர், பார்சி, இந்திய கிறிஸ்தவர், சீக்கியர் ஆகியோருக்கு 8.33 விழுக்காடும் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இந்த ஆணையை விடுதலை பெற்ற ஒரே மாதத்தில் இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பேற்ற காங்கிரஸ் அரசு நீக்கிவிட்டது.

அதன் பின்னர் இந்த இட ஒதுக்கீட்டுப் பயணத்தில், முதலமைச்சராக இருந்த பிரகாசம் இட ஒதுக்கீட்டுக்கு எதிரானவராக இருந்தார். இவர் 1946இல் மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கையின்போது, இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 20 விழுக்காடு மாணவர்களை மட்டும் சேர்க்க ஆணையிட்டார். இதனால் பார்ப்பன மாணவர்கள் 40 பேர் கூடுதலாக இடங்களைப் பெற்றனர். இதன் பின்னர் ஓமந்தூர் இராமசாமி ஆட்சியில், பிரகாசம் கொண்டுவந்த 20 விழுக்காடு இடங்களில் இட ஒதுக்கீடு என்னும் முறையை நீக்கினார். அதுமட்டுமின்றி, முன்னர் இருந்த இட ஒதுக்கீட்டு முறையில் சில மாற்றங்களைக் கொண்டுவந்தார். அதன்படி, மொத்தம் 12 இடங்கள் என்பதற்குப் பதிலாக 14 இடங்கள் எனக்கொண்டு, பார்ப்பனரல்லாதோருக்கு 6 (44%), பார்ப்பனருக்கு 2 (14%), பிற்பட்ட வகுப்பினருக்கு 2 (14%), தாழ்த்தப்பட்டோருக்கு 2 (14%) ஆங்கிலோ இந்தியருக்கு 1 (7%), முஸ்லிம்களுக்கு 1 (7%) என ஆணை பிறப்பித்தார். இட ஒதுக்கீட்டு வரலாற்றில் பிற்படுத்தப்பட்டோருக்கு எனத் தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது இதுவே முதன்முறை.

**மன்னராட்சிக் காலத்தில் கோவில்கள் வழியே ஆதிக்கம் செலுத்திவந்த பார்ப்பனர்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் போது, அரசுத் துறையின் பெரும்பான்மையான உயர்பதவிகளைப் ஆக்கிரமித்துக்கொண்டனர். பார்ப்பனர்களின் இந்தத் தந்திரத்தை முறியடிக்க ஆங்காங்கே சிறு சிறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது இரண்டு சிற்றரசுகள். ஒன்று மைசூர் அரசு, மற்றது சத்ரபதி சாகு மகராசாவின் கோல்காப்பூர் அரசு.**

## இட ஒதுக்கீடு: நீதிமன்ற வழக்கு

ஓமந்தூர் இராமசாமியின் இந்த ஆணையைப் பார்ப்பனர்கள் எதிர்த்தனர். இதற்கு எதிராக அப்போதைய காங்கிரஸ் அரசு ஓர் ஆணையை வெளியிட்டது. ஆனால், அவர் அந்த ஆணையையும் புறக்கணித்துவிட்டார். இதன் பின்னர், இட ஒதுக்கீட்டுக்கு எதிராக பார்ப்பனர்கள் செய்த சதி தான் திருமதி சண்பகம் துரைசாமி வழக்கு. அவர் பார்ப்பனர் என்பதால் இட ஒதுக்கீட்டு முறையால் தனக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் மனுவில் தெரிவித்திருந்தார். இதே போல் சீனிவாசன் என்னும் பார்ப்பன மாணவர் பொறியியல் படிப்பில் தனக்கு இட ஒதுக்கீடு காரணமாக இடம் கிடைக்கவில்லை என வழக்குத் தொடர்ந்திருந்தார். இவர்கள் இருவருமே தங்களுக்கு இடம் கிடைக்க வகுப்புவாரி உரிமை தடையாக இருக்கக் கூடாது என்று தெரிவித்திருந்தார்கள்.

சென்னை உயர்நீதிமன்றம் 27.07.1950 அன்று சண்பகம் துரைசாமி வழக்கின் தீர்ப்பில், கம்யூனல் ஜி.ஓ. இந்திய அரசியல் சட்டத்திற்கு [அடிப்படை உரிமை 29 (1)] முரண்பட்டது என்றும் விண்ணப்பதாரர்கள் அவர்கள் தகுதியின் பேரிலேயே பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. இதன் மூலம் விடுதலை இந்தியா குடியரசானவுடன் இட ஒதுக்கீடானது குழி தோண்டிப் புதைக்கப்பட்ட சூழல் உருவானது. தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கில் மேல் முறையீடு செய்தது. ஆனால், 09.04.1951 அன்று மேல் முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மருத்துவக் கல்லூரி சேர்க்கைக்கு சண்பகம் துரைசாமி விண்ணப்பிக்கவே இல்லையென்பதும், அவர் விண்ணப்பிக்கும் வயதைக் கடந்தவர் என்பதும் இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். இட ஒதுக்கீட்டுக்கு எதிராக அமைந்த இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டைக் கொந்தளிக்கச் செய்தது. திராவிட இயக்கத் தலைவர்களான தந்தை பெரியார், அண்ணா, எஸ். முத்தையா முதலியோர் தீவிரமான போராட்டத்தை முன்னெடுத்தனர். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகியிருந்தது. இந்தப் போராட்டத்தின் விளைவாக, இந்திய அரசியல் சட்டத்தின் முதலாவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அரசியல் சட்டப்பிரிவு 16(4) திருத்தப்பட்டது. 15 (4) என்னும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டு, கல்வியிலும் சமூக நிலையிலும் பின் தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீட்டுக்கு வழிசெய்தது. இட ஒதுக்கீட்டுக்கு வந்த ஆபத்து தவிர்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இட ஒதுக்கீட்டு உரிமைக்காகச் சமூகத்திலும் நீதிமன்றங்களிலும் நாடாளுமன்றங்களிலும் நமது முன்னோர்கள் போராடியுள்ளனர். அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் உள்ளிட்ட பெருந்தலைவர்கள் போராடித் தந்த இந்த உரிமையை நாம் இழந்துவிட்டால் மீண்டும் நூறாண்டுகளுக்கும் முன்னர் இருந்த நிலைமைக்குச் சென்றுவிடுவோம் என்பதையும் நமது கல்வி வாய்ப்பும் வேலைவாய்ப்பும் பறிபோய்விடும் என்பதையும் இளந்தலைமுறையினர் உணர்தல் வேண்டும்.**

### இட ஒதுக்கீடு: நேற்றும் இன்றும்

அடுத்ததாக, காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது, அம்பா சங்கர் குழுவின் பரிந்துரையின்படி, இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர் என அனைத்து மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோருக்கு 25 விழுக்காடும், தாழ்த்தப்பட்டோருக்கு 16 விழுக்காடும் எஞ்சிய 59 விழுக்காடு பொதுப் பிரிவினருக்கும் என ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த இட ஒதுக்கீடானது மு.கருணாநிதி ஆட்சிக் காலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக நியமிக்கப்பட்ட சட்டநாதன் குழு பரிந்துரையின்படி, பிற்படுத்தப்பட்டோருக்கு 31 விழுக்காடாகவும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டது. இதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இட ஒதுக்கீட்டில் பொருளாதார அளவுகோலைப் புகுத்தி 02.07.1979 அன்று ஆணை ஒன்றை வெளியிட்டார். அதன்படி பிற்படுத்தப்பட்டோரின் ஆண்டு வருமானம் 9,000 ரூபாய்க்கு மேல் இருந்தால் அவர்கள் முற்பட்ட வகுப்பினராகக் கருதப்படுவார்கள்.

இந்த ஆணையை எதிர்த்து திராவிடர் கழகமும், திமுகவும் கண்டனக் கூட்டங்களை நடத்தின. இதைத் தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர். அரசின் இந்த ஆணைக்கு எதிராக பரப்புரையை திமுக முன்னெடுத்தது. தேர்தலில் எம்.ஜி.ஆர். தலைமையிலான அதிமுக இரண்டு இடங்களில் மட்டுமே வென்றது. தோல்விக்குக் காரணம் தனது இட ஒதுக்கீட்டு விஷயத்தில் அரசு வெளியிட்ட ஆணை தான் என்பதை உணர்ந்த எம்.ஜி.ஆர் அந்த ஆணையை 01.02.1980 அன்று திரும்பப் பெற்றார். அது மாத்திரமல்ல பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 50 விழுக்காடாக உயர்த்தினார். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மு.கருணாநிதி, தமிழ்நாட்டில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கு தனி ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலித்து, பிற்பட்டோருக்கு 30 விழுக்காடு, மிகப் பிறபடுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி 28.03.1989 அன்று ஆணை வெளியிடப்பட்டது. பின்னர் 22.06.1990 அன்று பழங்குடியினருக்கு ஒரு விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கினார். தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டை இந்திய அரசமைப்புச் சட்டம் ஒன்பதாம் அட்டவணைப் பாதுகாப்பைப் பெற (76வது சட்டத்திருத்தம்) வழிவகைசெய்தார் அப்போதைய முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா.

2007இல் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 30 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் 3.5 விழுக்காட்டை இஸ்லாமியர்க்கான இட ஒதுக்கீடாக்கி ஆணை பிறப்பித்தார் மு.கருணாநிதி. 2009இல் பட்டியலினத்தவருக்கான இட ஒதுக்கீடான 18 விழுக்காட்டில் அருந்ததியர்களுக்கு 3 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்தார். தற்போது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இட ஒதுக்கீடானது, ஓபிசி பிரிவினருக்கு 20 விழுக்காடு, பிற்படுத்தப்பட்டோருக்கு 26.5 விழுக்காடு, இஸ்லாமியருக்கு 3.5 விழுக்காடு, பட்டியலினத்தவருக்கு 15 விழுக்காடு அருந்ததியருக்கு 3 விழுக்காடு, பழங்குடியிருனருக்கு 1 விழுக்காடு, எஞ்சிய 31 விழுக்காடு பொதுப் பிரிவினருக்கு என்ற அளவில் உள்ளது.

இட ஒதுக்கீட்டு உரிமைக்காகச் சமூகத்திலும் நீதிமன்றங்களிலும் நாடாளுமன்றங்களிலும் நமது முன்னோர்கள் போராடியுள்ளனர். அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் உள்ளிட்ட பெருந்தலைவர்கள் போராடித் தந்த இந்த உரிமையை நாம் இழந்துவிட்டால் மீண்டும் நூறாண்டுகளுக்கும் முன்னர் இருந்த நிலைமைக்குச் சென்றுவிடுவோம் என்பதையும் நமது கல்வி வாய்ப்பும் வேலைவாய்ப்பும் பறிபோய்விடும் என்பதையும் இளந்தலைமுறையினர் உணர்தல் வேண்டும்.

**உதவிய நூல்: பேராசிரியர்கள் முனைவர் க.நெடுஞ்செழியன், முனைவர் இரா.சக்குபாய் இருவரும் இணைந்து எழுதிய சமூக நீதி.**

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: செ.இளவேனில்



# கலைஞர் 100: ஆட்சியின் மாட்சிமை

உயிர் வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் இன்றியமையாத தேவைகளை அளிக்க வேண்டியது ஒரு மக்கள்நல அரசின் கடமை. திமுக 1967 தேர்தலைச் சந்தித்தபோது தமிழ்நாடு கடும் உணவு நெருக்கடியைச் சந்தித்திருந்த நேரம். உணவுப் பஞ்சத்தைப் போக்குவதும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் அக்கட்சியின் முக்கியத் தேர்தல் உறுதிமொழிகளாக இருந்தன.

இந்தியாவுக்கே முன்னோடியாக, பொது விநியோகத் திட்டத்தை உருவாக்கியது கலைஞர் மு.கருணாநிதி ஆட்சிக் காலத்தின் முக்கியமானதொரு சாதனை. கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகவும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வாயிலாகவும் இத்திட்டத்தைச் செயல்படுத்தியது இன்னும் முக்கியமானது. தனியார்கள் இந்தத் திட்டத்திலிருந்து மிகுந்த கவனத்துடன் விலக்கிவைக்கப்பட்டனர். இந்திய அளவில் பசுமைப் புரட்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டபோது அத்திட்டத்தால் பெரும் பயனடைந்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக இருந்தது. இதில், நீர்ப் பாசனத் திட்டங்களை மேம்படுத்துவதில் மு.கருணாநிதி தலைமையிலான ஆட்சி முன்னெடுத்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. உணவு உற்பத்தியைப் பெருக்கியதோடு அரசே நேரடியாகக் கொள்முதல் செய்து, கள்ளச் சந்தையின் கட்டற்ற வளர்ச்சியைத் தடுத்தாண்டது.

உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ததைப் போலவே, கண்ணியமான உறைவிடங்களை உருவாக்குவதற்கும் மு.கருணாநிதி முன்னெடுத்த திட்டங்கள் முன்னோடியானவை. அவற்றில் ஒன்று, குடிசை மாற்று வாரியம். அவ்வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட இராம.அரங்கண்ணல் தன்னுடைய நினைவுகள் நூலில் இளம் வயதில் கருணாநிதியுடனான நினைவுகளையும் பகிர்ந்துள்ளார். தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு மோசமான குடியிருப்புகளில் வாழ்கிறார்கள் என்பதைக் குறித்து, தனது இளமைக் காலத்திலேயே வருந்தினார் கலைஞர் என்பது அந்நினைவுகளில் ஒன்று. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது அவர் தன்னால் இயன்ற திட்டங்களைத் தீட்டி அக்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றார். கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட குடியிருப்புகளில் கான்கிரீட் வீடுகள் திட்டம் தொடங்கி சாதி பேதமற்ற சமத்துவபுரம் திட்டம் வரையில் அந்தத் திட்டங்களை முன்னோக்கி நகர்த்தினார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் தனி ஆர்வம் காட்டிய அவர் அதற்குத் தொழில் துறை வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதிலும் தனி அக்கறை செலுத்தினார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட டிட்கோ நிறுவனத்தைப் போல 1971-இல் அவரால் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தொடங்கப்பட்டது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்டதொரு பொது நிறுவனம். இது தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும் விரிவடைவதற்கும் மாநிலத்தில் உள்ள பகுதிகளை விரைந்து தொழில்மயமாக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டு இயங்கிவருகிறது.

சிட்கோ என்றழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் 1970-இல் தொடங்கப்பட்டு, 1971 முதல் பொதுத் துறை நிறுவனமாக இயங்கிவருகிறது. சின்னஞ்சிறு தொழில் துறைகளில் பரவலான, விரைவான வளர்ச்சி என்பது இந்நிறுவனத்தின் இலக்காகும். அரசு, தனியார், பொதுமக்கள் பங்கு என்ற கூட்டுத் துறை அடிப்படையில் (ஜாய்ண்ட் செக்டார்) புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்குத் தனி ஆர்வம் காட்டியவர் கலைஞர். அரசு 25%, தனியார் 26%, பொதுமக்கள் 49% என்ற வீதத்தில் தன்னுடைய 1969- 1976 ஆட்சிக் காலத்தில் அதைச் செயல்படுத்தினார்.

தொழில் வளர்ச்சிக்குத் தடையற்ற மின் விநியோகம் அத்தியாவசியமான ஒன்று. மின் உற்பத்தித் திட்டங்களிலும் அவரது ஆட்சிக் காலத்தில் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுவந்தது. நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் திட்டமும் மேட்டூர், தூத்துக்குடி அனல் மின் திட்டங்களும் 1976 வரையிலான திமுக ஆட்சிக் காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கப்பட்டவை. மின் உற்பத்தியை அதிகரித்த அதே நேரத்தில் சமூகத்தில் பின்தங்கிய பிரிவினரின் குடியிருப்புகளுக்கு மின்விளக்கு வசதி அளிப்பதிலும் கவனம்காட்டினார். 1967 வரையில் நான்காயிரம் காலனிகளுக்கு மின்விளக்கு வசதி அளிக்கப்பட்டிருந்த நிலையில் திமுக ஆட்சிக்கு வந்த ஐந்தாறு ஆண்டுகளில் புதிதாக இருபதாயிரம் மின்விளக்குகள் போடப்பட்டன. (சட்டமன்ற உரை 12.02.1973)

அரசுப் பணிகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு, குடும்பச் சொத்தில் பெண்களுக்கான உரிமை ஆகியவற்றை நடைமுறைப்படுத்திய முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. அதுபோலவே, காவல் துறைப் பணிகளில் பெண்கள் நியமிக்கப்பட்டதும் அவரது ஆட்சிக் காலத்தில்தான். குறிப்பாக, அவரால் நடைமுறைப்படுத்தப்பட்ட உள் இடஒதுக்கீடு முறையில் அருந்ததியர், இஸ்லாமியர் ஆகியோர் அரசு நிர்வாகத்தில் பங்கெடுக்கக் கிடைத்த வாய்ப்பு என்பது சமூக அளவில் ஒரு பெரும்புரட்சி என்றே சொல்ல வேண்டும். அதிலும் குறிப்பாக அப்பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள் இவ்வாய்ப்புகளைப் பெற்றுவருகிறார்கள்.

உலகமயத்தின் வருகைக்குப் பிறகு பொதுத் துறை, கலப்புப் பொருளாதாரம் என்ற பொருளாதாரக் கொள்கையெல்லாம் முடிவுக்கு வந்தன. அதன் பிறகு அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதன் வாயிலாக, புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதற்கும் புதிய வேலைவாய்ப்புகள் உருவாவதற்குமான முயற்சிகளை அவர் எடுத்தார். இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை வகுத்த அவர், சென்னையில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவைத் தொடங்கி வளர்ந்துவந்துகொண்டிருந்த அந்தப் புதிய துறையிலும் தமிழ்நாட்டு இளைஞர்கள் அளப்பரும் வாய்ப்புகளைப் பெறுவதற்கு அடித்தளம் அமைத்தார்.

இந்திய அரசமைப்பின்படி வரையறுக்கப்பட்ட மாநில உரிமைகள், கட்டுப்படுத்தப்பட்ட நிதி அதிகாரங்கள் இவற்றுக்கிடையில்தான் கல்வி, சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு, உறைவிடங்கள் மேம்பாடு, புதிய வேலைவாய்ப்புகள் என்று அவர் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். இந்திய அரசமைப்பால் மாநில அரசுகளுக்கு இழைக்கப்படும் அதிகார முடக்கங்களுக்கு எதிராக முழங்கியபடியே அதே அரசமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சமூகநீதி, சம வாய்ப்பு, மதச்சார்பின்மை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும் அவர் எழுதவும் பேசவும் வேண்டியிருந்தன.

பள்ளி மாணவப் பருவத்திலேயே மொழியுரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்ட மு.கருணாநிதி, தனது ஆட்சிக் காலத்தில் மொழி வளர்ச்சியில் தீவிரங்காட்டினார். அறிவாளர்களின் கருத்தரங்கக் கூடுகையாக இருந்த உலகத் தமிழ் மாநாட்டை, சென்னையில் மாபெரும் மக்கள் எழுச்சியமாக மாற்றிக்காட்டியதில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு. தமிழ்நாட்டில் அடுத்து நடத்தப்பட்ட உலகத் தமிழ் மாநாடுகளுக்கும் அது ஓர் உதாரணமாய் அமைந்தது. அரசமைப்பின்படி அட்டவணை மொழிகளில் ஒன்று என்ற நிலையைத் தாண்டி செம்மொழி என்ற அங்கீகாரத்தைத் தமிழ் பெற்றதிலும் அவருக்குப் பங்கு உண்டு. இலக்கியப் பழம்பெருமைகளைப் பேசுவதோடு நின்றுவிடாமல் கணினி யுகத்தில் தமிழ் பயணிக்க வேண்டிய பாதையைத் தீர்மானிப்பதிலும் அவர் பங்கெடுத்துக்கொண்டார்.

கணினித் தமிழ் மாநாட்டைக் கூட்டியதோடு, தமிழ் இணையக் கல்விக்கழகம் அமையவும் காரணமாக இருந்தார். இன்று உலகெங்கும் உள்ள தமிழர்களும் அல்லாதவர்களும் இணையம் வழி தமிழ் கற்கும் வாய்ப்பு இந்த நிறுவனத்தின் வாயிலாக உருவாகியிருக்கிறது. ஒரு லட்சம் மின்-நூல்களை நோக்கி அந்நிறுவனத்தின் மின்னூலகம் வளர்ந்துகொண்டுள்ளது. வகுப்புரிமை பேசும் அமைப்பாகத் தொடங்கி வளர்ந்த திராவிட இயக்கத்தை மொழியுரிமை பேசும் அமைப்பாகவும் அடையாளப்படுத்தியதிலும் அவருக்குப் பெரும் பங்கு உண்டு. அனைத்திற்கும் மேலாய், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பாடிய வள்ளுவருக்கு சென்னையில் அமைத்திட்ட வள்ளுவர் கோட்டம் மற்றும் இந்தியத் துணைக்கண்டத்தின் தென்முனையில் அவர் நிறுவிய பிரம்மாண்ட சிலையானது தமிழர்களின் தனித்த அரசியல், சமூக வாழ்நெறியை உலகுக்கு எடுத்துச்சொல்லிவருகிறது.

ஒரு தனிநபராக, அவரது வாழ்வு ஓய்வற்ற உழைப்பின் உயர்வைச் சொல்லும் முன்னுதாரணம். ஒரு அரசியல் தலைவராக, தோல்விகளால் துவண்டுவிடாத நீண்ட நெடும் பயணத்துக்கு முன்னுதாரணம். அறுபதாண்டு கால சட்டமன்றப் பயணத்தில், ஐந்து முறை அவர் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த காலகட்டங்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களுக்கு முன்னுதாரணம்.

●

**கட்டுரையாளர்: கவிஞர், எழுத்தாளர்**

**(கலைஞரின் நூற்றாண்டு நிறைவையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: ஜி.ஏ. கௌதம்

# பலி கேட்கும் ஐபிஎல் போட்டியின் இன்னோர் முகம்



இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் முழு ஆரவாரத்துடன் தொடங்கியதிலிருந்து, இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) எப்போதும் போல ஒட்டு மொத்த தேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்கு முன்பிருந்த கிரிக்கெட் எனும் விளையாட்டின் வடிவத்தை மாற்றி கிட்டத்தட்ட ஒருவித சர்க்கஸ் பார்ப்பதைப்போன்று மாற்றியமைத்த அதன் தனித்துவமான வடிவம், நகரங்களின் பெயர்களைக்கொண்ட அணிகள் அந்தந்த நகரத்தின் ரசிகர்களை கவர்ந்திழுத்துள்ளது. அந்தந்த நகரத்தாருக்கு ஏதோ அவர்கள் ஊர்க்காரர்களே விளையாடுவது போன்ற உள்ளுணர்வை பார்வையாளர்களிடம் வளர்த்துள்ளது. இருப்பினும், அதிக பணமும் புகழும் புழங்கும் ஐ.பி.எல் கிரிக்கெட்டில் ஊழல்கள், சர்ச்சைகள் மற்றும் சந்தேகத்திற்குரிய மேலாண்மை ஆகியவற்றின் மூலம் எழும் சிக்கல்களுக்கு பஞ்சமில்லை.

சர்ச்சைக்குரிய தொழிலதிபர் லலித் மோடியால் 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது ஐ.பி.எல். வீரர்கள் ஏலமுறை மற்றும் பாலிவுட் பிரபலங்களான ஷாரூக்கான் மற்றும் ப்ரீத்தி ஜிந்தா ஆகியோரை அணி உரிமையாளர்களாக அறிமுகப்படுத்துவதன் மூலம், முன்பு விளையாட்டில் ஆர்வம் காட்டாத பார்வையாளர்களை விளையாட்டு மைதானத்திற்கு அழைத்து வந்தது. ஆனால் மைதானத்தின் அடியில் இருந்த ஓர் இருண்ட உலகம் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தன் வேர்களை ஆழப்பதிந்துகொண்டிருந்தது. இது பல சமூக மற்றும் உளவியல் பிரச்சனைகளுக்கு காரணமாக மாறத்துவங்கியுள்ளது.

2010ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல் மீது தொடரப்பட்ட குற்றச்சாட்டுகளுக்காக போட்டிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. மேலும், ஏலம் மற்றும் ஒளிபரப்பு ஒப்பந்தங்களில் மோசடி செய்ததாக லலித் மோடி குற்றம் சாட்டப்பட்டார். இது, அரசியல் மற்றும் சட்ட அழுத்தத்துடன் சேர்ந்து, 2013 ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் வாரியத்தால் (பி.சி.சி.ஐ) தடை செய்யப்பட வழிவகுத்தது.

அதே ஆண்டு, ராஜஸ்தான் ராயல்ஸ் உரிமையாளர் ராஜ் குந்த்ராவை ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள் அசோக் பான் மற்றும் ஆர்.வி.ரவீந்திரன் ஆகியோர் அடங்கிய குழு சூதாட்டம் மற்றும் மேட்ச் பிக்ஸிங் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க நிர்பந்தித்தது.

மேலும், 2013ஆம் ஆண்டு ஐ.பி.எல் போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கீத் சவான் மற்றும் அஜித் சண்டிலா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அதற்கடுத்து, 2015ஆம் ஆண்டு சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணியின் முதன்மை அதிகாரி குருநாத் மெய்யப்பன் கைது செய்யப்பட்டார். இதனால் 2016, 2017 ஆகிய இரண்டு ஆண்டுகள் சென்னை அணி விளையாட தடை செய்தது உச்சநீதிமன்றம். இதன் மூலம் நிழல் உலகத்துடனான ஐ.பி.எல் தொடர்பு, அரசியல் தலையீடுகள் என அவற்றோடு தொடர்புடையவர்களை வெளி உலகிற்கு அம்பலப்படுத்தியது.

ஐ.பி.எல்லின் உலகளாவிய புகழ் சட்டவிரோத பந்தயங்களுக்கு ஏற்ற இடமாக மாற்றியது. பந்தய உலகின் கோடிக்கணக்கான ரூபாய்களின் பணயத்தில், புக்கீஸ்கள் மற்றும் நிழல் உலக சூதாட்ட சிலந்திகளின் வலைப்பின்னலில் இளைஞர்கள், (குறிப்பாக வேலையற்ற இளைஞர்கள்) சிக்கிக்கொள்கிறார்கள். விரைவான மற்றும் சுலபமான வருவாய்க்கு ஆசைப்பட்டு, பல இளைஞர்கள் தங்கள் நிதி சார்ந்த சூழலில் இருந்து தப்பிக்க பந்தயத்தை ஒரு கவர்ச்சியான மற்றும் எளிதான வாய்ப்பாக பார்க்கிறார்கள். இருப்பினும், வெளித்தோற்றத்தில் காண்கையில் பாதிப்பில்லாத ஒன்றாகத் துவங்கினாலும் விரைவில் ஒரு போதைப்பொருளாக மாறி அவர்களின் வாழ்க்கையை அரிக்கத்துவங்குகிறது.

பந்தயத்தில் முதலில் சேரும் பொழுது, 'வரவேற்புச்சலுகை' என ஒரு பெரும் தொகை உங்கள் செயலியின் கணக்கில் வரவு வைக்கப்படும். விளையாட்டு துவங்கும் முன்னரே 'எந்த அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐ.பி.எல்லின் உலகளாவிய புகழ் சட்டவிரோத பந்தயங்களுக்கு ஏற்ற இடமாக மாற்றியது. பந்தய உலகின் கோடிக்கணக்கான ரூபாய்களின் பணயத்தில், புக்கீஸ்கள் மற்றும் நிழல் உலக சூதாட்ட சிலந்திகளின் வலைப்பின்னலில் இளைஞர்கள், (குறிப்பாக வேலையற்ற இளைஞர்கள்) சிக்கிக்கொள்கிறார்கள்.**

வெல்லும்' என்பதில் தொடங்கி, 'குறிப்பிட்ட அணி இத்தனை ரன்கள் வரை எடுக்கும், எத்தனை பேர் 0/50/100 எடுப்பார்கள், இந்த ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்' போன்ற முன்னேற்பாடான ஒரு பட்டியல் அதில் இடம்பெற்றிருக்கும். அது போக, ஆட்டம் நடைபெறும் போது இந்த 'ஓவரில் எத்தனை அகலப்பந்து (Wide) வீசப்படும், இந்த ஓவரில் எத்தனை ரன்களுக்கு மேல்/கீழ் எடுப்பார்கள், இந்த ஓவரில் விக்கெட் விழும்' போன்ற பட்டியல்களின் வழியே ஆட்டத்தின் ஒவ்வொரு நகர்விலும் வைக்கப்படுகிறது பந்தயம்.

இலவசமாக வந்த தொகை தானே என நீங்களும் ஆர்வமாக பந்தயம் கட்டுவீர்கள். ஆனால், அதில் லாபம் கிடைக்கும் பட்சத்தில் உடனே அந்த தொகையை உங்களால் எடுக்க முடியாது. பெரும்தொகையொன்றை குறிப்பிட்டு அதுவரை நீங்கள் விளையாடினால் மட்டுமே லாபத்தை வெளியில் எடுக்க முடியும் என சொல்லி, எரிகின்ற உங்கள் ஆசையில் இன்னும் கொஞ்சம் எண்ணெய் ஊற்றும்.

ஏகப்பட்ட மரணங்களுக்கு பிறகு, இன்னும் அரசு தடுக்காமல் இருக்கும் ஆன்லைன் ரம்மி போல, சில அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் வெளிப்படையாகவே சூதாட்டம் நடத்துகிறது. ஆனால் அதில் உங்கள் நிரந்தர கணக்கு எண் (PAN number) மூலம் நீங்கள் பெருகின்ற லாபம் உங்கள் வருமான வரியின் கணக்கிற்குள் வருகிறது. அதனால், பெரும்பாலான பண பரிவர்த்தனைகள் ஹவாலா முறையில் நிகழ்த்தப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட கிரிக்கெட் சூதாட்டத்தில் அவர்கள் விதிக்கும் அதிகப்படியான வரிகளே மேலும் அவர்களை ஹவாலாவின் இயங்க வைக்க ஒரு புறம் மறைமுகமாக தூண்டுவதும் உண்மை. ஏனெனில், பிரபல சூதாட்ட நிறுவனமான Betway நிறுவனம் தனக்கு விதிக்கப்பட்ட அதிகப்படியான வரியால், "உனக்கு எதற்கு வரி, வட்டி, கிஸ்தி" என கட்டபொம்மன் பாணியில் தனது வியாபாரத்தை இந்தியாவில் நிறுத்திக்கொண்டது.

ஐபிஎல் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பானது தொலைக்காட்சிகளிலும், ஓடிடி தளங்களிலும் ஒளிபரப்ப குறைந்தது எட்டு முதல் பத்து வினாடிகள் தாமதமாகின்றன. இதன் மூலம் தொலைக்காட்சி வழியே பார்வையாளர்களை அடைவதற்கு முன்பு தெரிந்து கொள்ளும் புக்கிகளுக்கு இத்தகைய தாமதம் சாதகமாகி விடுகிறது. இதையறியாமல் பலர், குறிப்பாக சிறிய நகரங்களில், ஒழுங்கமைக்கப்பட்ட பந்தயங்களை நடத்தும் கூட்டமைப்புகளுக்கு பலியாகிறார்கள்.

ஐ.பி.எல் அதன் உச்சக்கட்டத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கையில், கிரிக்கெட் சூதாட்டத்தைச் சுற்றியுள்ள பரபரப்பான சூழல் மேலும்தீவிரமடையும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. விதர்பாவில் உள்ள புக்கிகள் மகாராஷ்டிராவுக்கு அப்பால் தங்கள் நடவடிக்கைகளை ஆந்திரா, சத்தீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசத்தை குறிவைத்து, சூதாட்ட நடவடிக்கைகளுக்கு விரிவுபடுத்தத் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.

அது ஒருபுறம் இருக்க, மழையில் முளைத்த காளான்கள் போல ஆன்லைனில் அதிக அளவில் மூன்றாம் தர சூதாட்ட செயலிகள் பெருகத்துவங்கியிருக்கின்றன. ஆன்லைன் ரம்மி விளம்பரத்தில் நடித்த 'நாட்டாமை' சரத்குமாரை நெட்டிசன்கள் வறுத்தெடுத்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். அதாவது பரவாயில்லை அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயலி.

ஆனால் எந்த ஒரு சரியான ஆவணங்களும் இல்லாத, அரசு அங்கீகரிக்காத மூன்றாம் தர செயலிகளுக்கு சமூக ஊடகப் பிரபலங்கள் விளம்பரம் செய்துகொண்டிருப்பதை நீங்களே பார்த்திருக்கலாம். "அந்த செயலியில் நான் பணம் கட்டினேன் இவ்வளவு சம்பாதித்தேன். நீங்களும் சம்பாதியுங்கள் என்று நாக்கில் தேன் ஊற்றும் ஆசை வார்த்தைகள் மூலம் உங்களை ஈர்க்க முயல்வதை நீங்கள் கவனிக்கலாம். இது போன்ற செயலிகளை நீங்கள் கூகிள் ப்ளே ஸ்டோரில் பதிவிறக்கம் செய்ய முடியாது. அவர்கள் சொல்லும் இணையதளத்தில் மட்டுமே பதிவிறக்கம் செய்ய முடியும்.

இதயம் நல்லெண்ணைக்கு ஜோதிகா விளம்பரம் செய்வதற்கும், ஒரு மூன்றாம் தர செயலியை தமன்னா போன்ற பிரபல நடிகை விளம்பரம் செய்வதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. இதயம் நல்லெண்ணைய் மூலம் உடலில் ஏதேனும் உபாதைகள் எனில் நீதிமன்றம் மூலம் அந்நிறுவனத்தின் மீது தகுந்த நடவடிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கலாம். ஆனால் பெயர் தெரியாத ஆன்லைன் செயலியை உலகின் ஏதோ ஒரு மூலையில் நடத்திக்கொண்டிருக்கும் நிறுவனர்களை எங்கே தேடுவீர்கள்!? நாளை அந்த இணையதளம் மூடப்பட்டால் என்ன ஆகும்? தெரியாது.

ஒருவேளை இது போன்ற சூதாட்ட செயலிகளை தடை செய்வதற்காக நீதிமன்றத்தை அணுகினாலும், எந்த பயனுமில்லை. ஏற்கனவே ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளை தமிழகத்தில் தடைசெய்யக் கோரிய வழக்கில் "இது தனிநபர் ஒழுக்கம் சார்ந்தது" எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்தது.

புனேவில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் இழந்த ஏழு லட்சத்தை செலுத்துவதற்கு வேறு வழியின்றி, 'சூது கவ்வும்' திரைப்படத்தைப்போல 'தன்னை யாரோ கடத்திவிட்டதாகவும் ஏழு லட்சம் பணம் கொடுத்தால் தான் விடுவார்கள்' என்றும் தனது குடும்பத்தினரிடம் தெரிவித்து காவல் துறையிடம் சிக்கியிருக்கிறார். இத்தனைக்கும் அவர் ஐ.ஐ.டி கான்பூரில் எம்.டெக் பட்டதாரி.

குடும்பங்களின் மீதான நிதிச்சுமை, உறவுகளுக்குள் பிரச்சனைகள் மற்றும் குடும்ப கட்டமைப்புகளில் முறிவுகளுக்கு கூட வழிவகுக்கின்றன. மேலும், பந்தய அடிமைத்தனத்தின் வலையில் சிக்கியவர்கள் மீதான உளவியல் தாக்கம் குறிப்பிடத்தக்கது. பெருகிவரும் கடன்களுடன் தொடர்புடைய மன அழுத்தம், பதட்டம் மற்றும் அடுத்த பெரிய வெற்றிக்கான நிலையான துரத்தல் ஆகியவை மன ஆரோக்கியம் மோசமடைய வழிவகுக்கும். தனிநபர்களை மனச்சோர்வு, கவலைக் கோளாறுகள் மற்றும் தற்கொலை பற்றிய எண்ணங்களை நோக்கித் தள்ளுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, வேலையற்ற இளைஞர்களிடையே பந்தய அடிமைத்தனத்தின் அதிகரிப்பு தற்கொலை வழக்குகளின் எண்ணிக்கைக்கு இணையாகிறது. செப்டம்பர் மாத இறுதியில், எட்டாவைச் சேர்ந்த விகாஸ் ஜெயின் என்ற சேலை வியாபாரி இதே சூழ்நிலையில் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது. அவர் தனது கடனை அடைப்பதற்காக அதிக மதிப்பு கொண்ட சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

2019ஆம் ஆண்டில், கிரிக்கெட் பந்தயத்தில் ஏற்பட்ட இழப்புகள் காரணமாக பதினான்கு பேர் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. ஆகஸ்ட் 2019இல், தமிழ்நாடு பிரீமியர் லீக்கில் விபி காஞ்சி வீரன்ஸ் உரிமையாளரான முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் வி.பி.சந்திரசேகர் தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை தொடர்பான குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை என்றாலும், இந்த வழக்கில் சூதாட்டம் நடந்ததாகக் கூறப்படும் கோணம் குறித்து சென்னை போலீசார் இன்னும் விசாரணை நடத்தி வருகின்றனர். சந்திரசேகருக்கு பெரும் நிதி இழப்பு ஏற்பட்டதாக தமிழக கிரிக்கெட் வட்டாரங்களில் யூகங்கள் பரவி வருகின்றன.

தெலுங்கானாவின் கரீம் நகரில் உள்ள ஜோதிஷ்மதி பொறியியல் கல்லூரியின் இறுதியாண்டு பி.டெக் மாணவர் நிதிஷ் (22), 2019 ஐ.பி.எல் சூதாட்டத்தில் கணிசமான தொகையை இழந்திருக்கிறார். 2019 ஜூலை மாதம் எலுருவைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஸ்ரீஹரி, ஐ.சி.சி கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகளின்

**ஐ.பி.எல் அதன் உச்சக்கட்டத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கையில், கிரிக்கெட் சூதாட்டத்தைச் சுற்றியுள்ள பரபரப்பான சூழல் மேலும் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விதர்பாவில் உள்ள புக்கிகள் மகாராஷ்டிராவுக்கு அப்பால் தங்கள் நடவடிக்கைகளை ஆந்திரா, சத்தீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசத்தை குறிவைத்து, சூதாட்ட நடவடிக்கைகளுக்கு விரிவுபடுத்தத் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.**

போது சூதாட்டத்தில் மூன்று லட்சம் ரூபாயை இழந்து தற்கொலை செய்து கொண்டார். புக்கிகள் தங்கள் பணத்தை திரும்ப கேட்டு அழுத்தம் கொடுத்ததாக கூறப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு வடகிழக்கு டெல்லியின் ஜாஃப்ராபாத் பகுதியில் 40 வயதான தொழிலதிபர் இஸ்ரார் அகமது தனது ஜீன்ஸ் வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்பு காரணமாக மனைவி பஹ்ரீனா பிரவீன் (35) மற்றும் இளைய மகள்கள் யஷ்பிகா (11) மற்றும் இனயாவிற்கு (9) போதை மருந்து கொடுத்து சுட்டுக் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது. ஐ.பி.எல் கிரிக்கெட் சூதாட்டத்தினால் அவர் கோடிக்கணக்கான ரூபாய் கடனில் இருந்ததாகவும், அவர் தனது சொத்துக்கள் சிலவற்றை விற்கவும் கட்டாயப்படுத்தப்பட்டார் என்று போலீசார் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை: கோசின்ரா

## கரப்பான் பூச்சி

கரப்பான் பூச்சிகளே
உங்களுக்கு எத்தனை முறைதான் சொல்வது
புரிந்துக்கொள்ளுங்கள்
உங்களுக்கென்று தனி நாடில்லை
உங்கள் தாய் மொழியை
நீங்கள் வாழும் நாடு அங்கீகரிக்கவில்லை
உங்களுக்கென்று ஒரு தலைவன் இல்லை
உங்கள் கோரிக்கைகளை எழுத
ஒரு கவிஞன் இல்லை
சிங்கமும் புலியும் வாழ
அரசாங்கம் முயற்சி எடுக்கிறது
அவர்களுக்கான புகலிடம் இருக்கிறது
வாழ்விடம் அமைத்து தரப்படுகிறது
நீங்கள் யார்
புறக்கணிக்கப்பட்டவர்கள்
நிராகரிக்கப்பட்டவர்கள்
உங்களை கொன்று விட
ஆய்வகங்களில் சோதனை நடத்தப்படுகிறது
உங்களை கொல்லும் தெளிப்பான்கள்
கடைகளில் விற்கப்படுகின்றன
உங்களுக்கான செய்தி தொடர்பாளர்கள்
யாரும் இல்லை
ஆனாலும் நீங்கள் வாழ்கிறீர்கள்
எல்லா எதிர்ப்புகளை மீறி
இந்த பூமியோடு
நீண்ட காலம் தொடர்பில் இருக்கிறீர்கள்
உங்களை முழுமையாக அழித்திட முடியாது



இவ்வாண்டின் ஐபிஎல் தொடங்குவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு, கர்நாடகாவின் சித்ரதுர்கா மாவட்டத்தில் 24 வயது பெண் ஒருவர் முந்தைய ஐபிஎல் சீசன்களின் போது சூதாட்டத்தால் தனது கணவர் செய்த ரூ 1.5 கோடி கடன் காரணமாக மன அழுத்தத்தில் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 17ஆம் தேதி டெல்லி கேபிடல் அணிக்கும் குஜராத் டைடன்ஸ் அணிக்கும் இடையே நடக்கும் ஐ.பி.எல் போட்டியின் போது, சூதாட்டத்தில் ஈடுபட்ட இருவரை புனேவில் ஒரு அடுக்குமாடிக்குடியிருப்பில் கைது செய்திருக்கிறது காவல்துறை.

சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகளுக்கிடையே நடந்த ஐபிஎல் போட்டியின் சூதாட்டத்தில் ஈடுபட்ட பதினாறு பேரை ஏப்ரல் 29ஆம் தேதி கோவா குற்றவியல் காவல்துறை கைது செய்திருக்கிறது. இப்படியாக இந்தியாவின் பல்வேறு முக்கிய நகரங்களில் இது போன்ற சூதாட்டங்கள் தொடர்ந்துகொண்டே தான் இருக்கின்றன.

ஐபிஎல்லின் இருண்ட பக்கத்தை வெளிக்கொணர, பந்தயத்தின் மூலமும் அதன் பின்னால் இருக்கும் பெரும் கூட்டத்தின் மூலம் வரப்போகும் ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அமைப்புகளை வழங்குவதிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சட்டவிரோத பந்தயத் தொடர்புகளை துண்டிப்பது மற்றும் பந்தயத்தில் ஈடுபடுபவர்களுக்கு அரசியல் தலையீடற்ற கடுமையான தண்டணைகள் உள்ளிட்ட அமலாக்க நடவடிக்கைகள் விளையாட்டின் ஒருமைப்பாட்டை மீட்டெடுக்க அவசியம் தேவைப்படுகிறது.

கூடுதலாக, தொழில் பயிற்சித் திட்டங்கள், இளைஞர்களுக்கு வேலை உருவாக்க முயற்சிகள் மற்றும் கல்வி வாய்ப்புகளில் முதலீடு செய்வது போன்றவை வேலையற்ற இளைஞர்களுக்கு சாத்தியமான மாற்றுகளை வழங்குவதற்கு வாய்ப்பாக அமையலாம் அல்லது பந்தயத்தின் மீது அவர்கள் எளிதில் ஈர்க்கப்படுவதை குறைக்கலாம். விளையாட்டை வெறும் விளையாட்டாகவும், பொழுதுபோக்காகவும் பார்வையாளர்கள் பார்க்கும் சூழல் அமையும் வரையில் இது போன்ற மக்களின் ஆர்வத்தில் முத்தெடுக்க முளைக்கும் பந்தயக்காரர்களின் எண்ணிக்கை குறையப்போவதில்லை.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: வெ. மதியரசன்

# 'நீட் தேர்வு' முறைகேடுகளால் கலைந்துபோகும் மருத்துவக் கனவு



இந்தியா முழுவதும் மருத்துவக்கல்லூரிகளுக்குத் தகுதியான மாணவர்களைத் தேர்வு செய்ய நீட் தேர்வு முறையைக் கொண்டு வர நடுவண் அரசு முடிவெடுத்தது. இதன் பின் 2013 - இல் இதற்கான சட்ட முன் வடிவினை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. திருத்தப்பட்ட நீட் சட்டம் 2016 இல் அமல்படுத்தப்பட்டது. அன்று முதல் இன்று வரை நீட் தேர்வு முறை குறித்த குழப்பங்களும் கேள்விகளும் சமூகத்தில் பெரும் விவாதத்தை எழுப்பி வருகின்றன. மேலும் இப் பிரச்சினை அரசியல் சார் பிரச்சினையாக மாறி வருகிறது. தமிழகத்தில் அனிதாவின் மரணத்திற்குப் பிறகு நீட் தேர்வு ஓர் எதிர்ப்பு இயக்கமாக வளர்ந்து இருக்கிறது.

உயர் கல்வியில் உயர் நிலை படிப்பு வரிசையில் மருத்துவம் உள்ளிட்ட தொழிற்சார் படிப்புகளுக்குப் பெரிய அளவில் வரவேற்பு இருக்கின்றன . சந்தை பொருளாதாரத்தில் மிகப் பெரிய வர்த்தகத்தைத் தீர்மானிக்கிறது. ஆண்டுக்கு எட்டு லட்சம் கோடிகளுக்கு மேல் லாபம் ஈட்டும் துறையாக உயர் கல்வி இருக்கின்றது. இதனைப் பயன்படுத்தித் தனியார் மருத்துவக் கல்லூரிகள் முறைகேடாக பணம் சம்பாதிக்க வாய்ப்புகள் இருப்பதினால், இத்தகு போக்குகளைக் கட்டுப்படுத்த நீட் போன்ற தேர்வு முறை அவசியம் என்றும், இதன் மூலம் தனியார் கல்லூரிகளின் ஊழல் கட்டுப்படுத்தப்படும் என்கிற கருத்தினை நடுவண் அரசு முன்வைக்கிறது. இத்தகைய கருத்து மேலோட்டமாகப் பார்க்கின்றபோது சரியாக இருப்பது போல் தோன்றும் , இதன் பின் ஒழிந்திருக்கிற திரைமறைவு அரசியல் மாநில உரிமையைப் பறித்தல், சமூகப் பொருளாதார மற்றும் சமூக நீதிக்கு எதிராக இருக்கிறது.

நீட் தேர்வு வருகைக்குப் பிறகு மாநில அரசின் பாடத்திட்டம் மத்திய கல்வி வாரியத்திற்கு இணையாக மாற்றப்பட்டிருக்கிறது. மருத்துவக் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை சேர்த்து வழங்கப்பட்ட 'பேக்கேஜ்' படிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன . அரசு பள்ளிகளில் கற்பித்தல் திறன் மேல்நிலைஅளவில் தனிக்கவனம் பெற்றிருக்கின்றன. தனியார் பள்ளிக்கூடங்களின் அதிகக் கட்டணம் வாங்கும் முறை கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ்வாறு கூறப்படும் நியாயங்கள் அனைத்தும் ஏற்புடையதுதான். ஆனால் நடுவண் அரசு நீட் என்னும் கட்டமைப்பில் உருவாக்கப்பட்ட மருத்துவப் படிப்புக்கான தகுதி, திறமை, சிறந்த மருத்துவர், பாரபட்சமற்ற மருத்துவக் கல்வி, நேர்மை, நம்பகத்தன்மை, ஊழல் ஒழிப்பு, தனியார் கல்லூரிகளின் வணிகக் கொள்ளை தடுப்பு உள்ளடங்கிய கருத்துரு பெரும் தோல்வியைச் சந்தித்திருக்கின்றது. நீட் தேர்வு வருகைக்குப் பிறகு கல்வி அமைப்பு மற்றும் சமூகத்தில் எதிர்மறை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

- கல்வியில் மாநில உரிமை நீர்த்துப்போதல்,
- மத்திய , மாநில கல்வி வாரியத்தின் அதிகாரம் கேள்விக்குள்ளாதல்.
- கிராமப் புற அரசு பள்ளிக் கூடங்கள், சிறப்பு நிலை பள்ளிகளின் இருப்பு*(special drive school)*
- நீட் தேர்வில் மறு தேர்வு மாணவர்கள் *(Re-peaters)* 60 சதவீதத்திற்கு மேல் பங்கேற்பதால், நடப்பு மாணவர்கள் *(+2 Current students )* மருத்துவக் கல்விக்கான வாய்ப்பினை இழத்தல்.
- உச்சபட்ச வயது வரம்பு இன்மை *(No age limit)*
- கற்றலின் இனிமை போய் இயந்திரத்தனமான கற்றலுக்கு மாறுதல்,
- பள்ளிக்கூடங்கள் அனைத்தும் அறிவுக் கூட்டுறவு மற்றும் கருத்துரு கற்பித்தல் முறை *(Concept Learning Method )* பின் தள்ளப்பட்டுத் தொழிற்சாலை கற்பித்தல் முறைக்கு மாறுதல் *( Factory learning Method )*
- பள்ளிக்கூடங்களைப் பயிற்சிக் கூடங்களாக நிர்வகித்தல்.
- பொருத்தமற்ற வயதில் பொருத்தமற்ற கல்வியை பெற பெற்றோர்கள் முனைதல், மாணவர்களின் தனிப்பட்ட மனித உரிமை மீறல்,
- மத்திய பாடத்திட்டத்திற்குக் குழந்தைகளை வலிந்து திணித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருத்துவர் கனவு சாமானியனுக்குப் பெரும் கனவாக மாறிவருகிறது. மக்கள் நல அரசின் நோக்கம் குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரமான சமவாய்ப்புக்களை வழங்குதல், சமூகக் குற்றத்தைக் கண்டறிதல், அதனைத் தானாக முன்வந்து சீர்படுத்த முனைதல் ஆகிய நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும்போதுதான் பன்மைத்துவம் மேம்படும். மாணவர்களுக்கு நம்பிக்கையும் ஏற்படும்.**

- பெற்றோர்கள் தங்கள் வருமானத்தில் பெரும் பகுதியைக் உயர்கல்விக்குச் செலவிடுதல்,இதனால் குடும்பத்தில் ஏற்படும் உளவியல் நெருக்கடி,
- சமூக ஏற்றத் தாழ்வு,
- பொருளியல் வலிமை உள்ளவர்களுக்கே உயர் தரக் கல்வி என்கிற எண்ணம்.
- பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் தற்கொலை விகிதம் அதிகரிப்பு

உள்ளிட்ட பிரச்சினைகள் சமூகத்தின் முன் நிற்கின்றன. இது குறித்து நடுவண் அரசு, தகுந்த ஆய்வு முறைக்கு உட்படுத்தி மாற்றத்திற்கான வழிகளைக் கண்டுஅடைய வேண்டும். அதற்கான எந்த அறிகுறியும் காணப்பட வில்லை.

அரசு ஒரு திட்டத்தைச் செயல்முறைப்படுத்தும் போது அதற்கான விளைவுகள் வேறு மாதிரியாக இருக்கும் என்பது நடைமுறை. எனவே, விளைவுகளுக்குத் தகுந்தபடி செயல்களை மாற்றுவதுதான் அறிவியல் அணுகுமுறை. அது ஜனநாயக அரசியல் அறிவியலுக்கும் பொருந்தும். நீட் உள்ளிட்ட போட்டித் தேர்வுகளில் ஒரு மாணவனின் தனிப்பட்ட தோல்வியை சமூக நீதி அமைப்போடு பொருத்திப் பார்க்க வேண்டும். ஆனால் வலதுசாரி கருத்தியல் கொண்டவர்கள் அதனை வழிமொழியும் அரசு எந்திரமும் மாணவர்களின் திறமையின்மையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறது.

நீட் தேர்வு குறித்து இத்தனை சிக்கல்கள் இருந்தாலும் பெற்றோர்களும் மாணவர்களும் பெரும் நம்பிக்கையோடு இன்றும் எதிர் கொள்கிறார்கள். ஆனால் தேர்வு குறித்த நம்பகத் தன்மை எளிய குடும்பத்தில் பிறந்த மாணவர்களுக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அண்மைக்காலமாக அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் வெளிவந்த நீட் தேர்வின்போது நடந்த வினாத்தாள் கசிவு மற்றும் ஒழுங்கீனச் செயல்கள் பற்றிய செய்திகள் தேர்வர்களிடமும், சமூக நீதி ஆர்வலர்களிடமும் கேள்விக்களமாக மாறியிருக்கிறது.

நீட் தேர்வின்போது, வட மாநிலங்களில் மிகுதியான மோசடிகள் நடைபெற்றிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பீகார் மாநிலம் பாட்னாவில் நீட் தேர்வின் போது ஆள் மாறாட்டம் மற்றும் வினாத்தாள் ரூ. 20 லட்சத்திற்கு விற்பனையானதாக செய்திகள் வெளியாயின. ஆனால் இந்த செய்தியை நீட் முகவாண்மை நிறுவனம் ( என். டி. ஏ) மறுத்திருந்தது. ஆயினும் 4 தேர்வர்கள், அவர்கள் குடும்பத்தினர் உள்ளிட்ட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாநிலக் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். இதுபோன்ற சம்பவங்கள் குஜராத், மகாராஷ்ட்ரா, இராஜஸ்தான் டெல்லி போன்ற மாநிலங்களிலும் நடைபெற்றிருக்கின்றன. நீட் தேர்வுக் களம் மனித உரிமைக்கு எதிராகவும் மாறிவருவதை ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன: தீ விபத்தில் சிக்கி சிறுநீரக பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவர் டயப்பர் அணிந்து தேர்வு எழுத உயர்நீதிமன்ற மதுரைக் கிளையை அணுகியுள்ளார். அனுமதி அளித்த நீதிபதி, நீட் தேர்வு எழுத வரும் மாணவிகளிடம் வரம்பு மீறிய சோதனை நடத்தப்படுவதாக தன் வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள தேர்வு மையத்தில் ஹிந்தி மொழித் தேர்வர்களுக்கு தேர்வு மைய அதிகாரி தவறுதலாக ஆங்கில மொழிக் கேள்வித்தாளை விநியோகம் செய்துள்ளார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சில மாணவர்கள், தேர்வு மையத்திலிருந்து விதிகளை மீறி வெளியேறியது மட்டுமின்றி, வினாத்தாளைப் புகைப்படம் எடுத்து சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளனர். இந்நிகழ்வு பற்றி காங்கிரஸ் எம்பி. ராகுல் காந்தி தனது "எக்ஸ்" வலைதளப் பக்கத்தில் பா.ஜ.க தலைமையிலான அரசை வன்மையாகக் கண்டித்து, இது ஒரு சாபக்கேடு எனப் பதிவிட்டுள்ளார். (தினமணி மே 06.2024)

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா என்னும் மாவட்டம் நீட் மற்றும் இதர போட்டித் தேர்வுகளுக்குப் புகழ்பெற்றது. இங்குள்ள பயிற்சி மையங்கள் தொழிற்சாலை போல் இயங்கி வருகின்றன. ஆண்டுக்கு 10,000 ஆயிரம் கோடி அளவுக்கு வருமானம் ஈட்டுவதாக "பிஸினஸ் ஸ்டாண்டர்டு" என்னும் நிதிப்பிரிவு செய்தித்தாள் கூறுகிறது. இத்தகைய பயிற்சி மையங்களில் சேருவதற்கு நாடு முழுவதும் உள்ள உயர் ரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இடை நிலை பிரிவு பெற்றோர்கள் படையெடுத்து வருகின்றனர். மேலும் இப் பயிற்சி மையங்களில் பயின்ற மாணவர்கள் மிகுதியாகத் தற்கொலை செய்து கொள்கின்றனர் என தனது புள்ளி விவர அறிக்கையை அந்தப் பத்திரிகை பதிவு செய்துள்ளது.

கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்ட பத்திரிகை செய்திகள் அனைத்தையும் வெறும் செய்தியாகப் பார்த்து நாம் கடந்துபோய் விட முடியாது. இயல்பாக அடையக்கூடிய இலக்கிற்கு பிம்பத்தை கட்டமைத்தல், எளிய மனிதர்களை ஏங்க வைத்தல் இவையாவும் நுண் அரசியலோடு தொடர்புடையது. இதற்கு நீட் தேர்வே சாட்சி.

மருத்துவர் கனவு சாமானியனுக்குப் பெரும் கனவாக மாறிவருகிறது. மக்கள் நல அரசின் நோக்கம் குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரமான சமவாய்ப்புக்களை வழங்குதல், சமூகக் குற்றத்தைக் கண்டறிதல், அதனைத் தானாக முன்வந்து சீர்படுத்த முனைதல் ஆகிய நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும்போதுதான் பன்மைத்துவம் மேம்படும். மாணவர்களுக்கு நம்பிக்கையும் ஏற்படும். இப்படியான நம்பிக்கைக்கு இங்கு வழிஇல்லை எனத்தோன்றுகிறது. வலதுசாரி கார்ப்பரேட் அரசில் வலிமை மிகுந்தவர்கள் யாருக்கு உயர்ரக உயர்கல்வி என்பதை தீர்மானிக்கும் இடத்தில் இருக்கிறார்கள். இதற்குப் பின்னால் மிகப்பெரிய முகவாண்மை நிறுவனங்கள் இருக்கின்றன. இவை தேர்தலில் அரசியல் ஆட்சியாளர்களுக்கு நிதியும் வழங்குகின்றன. நீட் மற்றும் இதர போட்டித் தேர்வுகளுக்கு நடத்தப்படும் "பயிற்சி வகுப்பு பண்பாடு' குறித்து டெல்லியிலுள்ள புகழ்பெற்றக் கல்லூரி முதல்வர் ஒருவர் கூறுகையில், நீட் மட்டும், ஜே.இ.இ. உள்ளிட்ட போட்டித் தேர்வுகள் எதிர்கால மாணவச் சமுதாயத்திற்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கானத் தீர்வைக் கூறுகையில், இதுபோன்ற தேசிய முகமைத் தேர்வுகளை கைவிட்டுவிட்டு +2 மதிப்பெண்கள் மற்றும் நேர்காணல் முறையை உள்ளடக்கி, மாணவர்களைத் தேர்வு செய்யலாம் என்கிறார்.

ஒவ்வொரு ஆண்டும் நீட்தேர்வு முடிவுகள் வெளிவரும்போது, இத்தேர்வில் தோல்வியடைந்தவர்களில் சிலர் தங்களது உயிரை மாய்த்துக்கொள்வதைப் பார்த்து வருகிறோம். இவ்வளவு உணர்ச்சிமிக்க பிரச்சினையை நடுவண் அரசு மிகுந்த கவனத்துடன் கையாண்டிருக்க வேண்டும். இதுபோன்ற ஒழுங்கீனச் செயல்கள் நடந்திருப்பதைக் கவனிக்கும்போது, மாணவர்களின் எதிர்காலத்தை நினைத்து கவலைகொள்ள வேண்டியுள்ளது. ●

கட்டுரையாளர்: எழுத்தாளர், கல்வியாளர்

கவிதை: மஞ்சுளா



## அறம் செய்

வானத்தில் பறக்கும் பறவைகளுக்கு
திசைகள் எத்தனையோ...

ஆனாலும்
வானத்தை அளக்கும் கோள்களை
வகை வகையாய் செய்து விட்டோம்

வானமும் பூமியும்
இப்போது
நம் வசத்தில்
இணைய தொடுதிரையில்
நாம் கைகள் தொட்டு
இணையத்தில் தேடுகிறோம்

இணையப் பறவைகள்
சிறகடிக்க
நாமோ முதுகொடிந்து
மூலையில் கிடக்கிறோம்

விஞ்ஞானச் சிறகுகள்
விரிய விரிய
அஞ்ஞானச் சிறையிலிருந்து
விடுபட்டோம்

ஆனாலும் என்ன?
மனிதன் தேடும்
அறிவிலெல்லாம்
புல் முனையளவு அறமுமிருந்தால்

பூமியில் நாமே
பறவைகள் போல்
வானமும் அளப்போம்
வண்ணத்துப் பூச்சிகளாய்
சிறகடித்து
வாழ்வை வசந்தமும் ஆக்குவோம்

பிறகென்ன?
பறவை பறவையாய் இருக்க
பூச்சி பூச்சியாய் இருக்க
மனிதர்கள் நாம்
அறமாய் நிற்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: வல்லபாய்

# தேர்தலும் சமூக ஊடகங்களும்

நமது அன்றாட வாழ்க்கையை, நீண்ட காலப் புழக்கத்திலிருக்கும் ஊடகங்களைக் காட்டிலும் சமூக ஊடகங்களின் மீதான பிடிப்பும் ஈர்ப்பும்தான் வெகுவாய் கவர்ந்திருக்கின்றன. அன்று நண்பகல் என்ன சாப்பிடுகிறோம் என்பதிலிருந்து தங்களின் உறவின் ஆழம், அர்த்தம் வரையிலும் பகிர்ந்து கொள்கிறத் தளமாக இந்த சமூக ஊடகங்கள் பயன்படுகின்றன. சராசரி குடிமகன்களைப் போலவே அரசியல்வாதிகளும் தங்கள் செய்தியை நேரடியாக மக்களுக்கு எடுத்துச் செல்ல சமூக ஊடகத்துடன் இணைந்து கொள்கின்றனர். துவக்கத்தில் நண்பர்களும் குடும்பங்களும் பரிமாறிக் கொள்கிற தளமாகவே சமூக உடகங்கள் அறிமுகமாயின; சம்பந்தப்பட்டவர்கள் தவிர மற்றவர்கள் கண்டுகொள்ளாத ஒரு காலவெளியின் விரையங்களாகவே இந்தப் பகிர்தல்கள் இடம் பெற்றன. அதிக அதிகமான பதிவுகள் மக்களின் நடவடிக்கைகளை ஆக்ரமிக்கின்றன. உணர்வுகளின் கிளர்ச்சியாக ஒருதலைப் பட்சமான, காரண காரியங்களுக்கு உட்படாத முடிவுகளை நோக்கி வெகு ஜனங்களை திசை திருப்பும் உந்துதலாய் சமூக ஊடகங்களின் செய்திகள்,பதிவுகள் இயங்குவதுதான் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விஷயம். இது வரையிலும் இந்த விபரீதத்தை ஒரு கட்டுக்குள் கொண்டுவருவதில் சமூக ஊடகத்தை வழி நடத்தும் முன்னணி பகாசுர நிறுவனங்களின் தோல்வி பரிதாபத்திற்குரியது.

## ஆய்வுக்குறிய விஷயங்கள்

சமூக ஊடகங்கள் வழியாக எழுச்சியான இயக்கங்கள் அரசியல் நடவடிக்கைகளில் வலுவான சக்தியாக உருப்பெற்று உலகெங்கிலும் தேர்தல்களில் ஒரு தனியான மடை மாற்றும் செல்வாக்காக வளர்ச்சியுறுகின்றன. 2010 அரபிய எழுச்சிக்கே,இணையத்தை உலுக்கிய துனீசியாவின் 26 வயது நடைபாதை சிறு வணிகன் முகம்மது பாஸியின் தீக் குளிப்பு ஒளிச்சுருள்தான் வித்திட்டது என்பது நாம் அறிந்ததே. ஆயினும் சமூக ஊடகங்களின் எழுச்சியுடன் கூடவே தவறும், குறைகளும், திருத்தப்பட்டதும், முற்றிலும் புனைவும், அந்நிய மற்றும் தேர்தல் தலையீடுகள் ,அரசியல் விளம்பரம், வாக்காளர் அழுத்தம் எனும் இத்யாதி எதிர்மறை செய்திகளும் தகவல்களும் பரவுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அரபிய எழுச்சிக்குப் பின்னான நாட்களில் மேற் சொல்லப்பட்ட சவால்கள் சமூக ஊடகத்தை ஆக்ரமித்ததை அமெரிக்க 2016, இந்திய மற்றும் பிரித்தானிய 2019 தேர்தல்கள் சந்திக்க நேர்ந்தன. இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் மேலும் சிக்கல் உண்டாக்கும் விதமாக செயற்கை நுண்ணறிவு உருவாக்கும் சுய அரசியல் செய்திகள், பதிவுகள் வலம் வருகின்றன.

செயற்கை நுண்ணறிவு வெகு சாதரணமாக உரையாடல்கள் என்ற முறையில் சமூக ஊடகங்களில் எதிர்வினைகளுக்கும், பதில்களுக்கும், அரசியல் பதிவுகளுக்கும் முன்னெடுக்கப்படுகின்றன. பயனாளிகளைப் போலல்லாமல் செயற்கை நுண்ணறிவு சமூக ஊடகங்களில் அரசியலை அடுத்த தளத்துக்கு எடுத்துச் சென்றுள்ளன. மார்ச் 2023ல் "ஜூலியானா ஏஐ ஆர்ட்" என்ற இன்ஸ்டாக்ராம் பக்கம் செயற்கை நுண்ணறிவில் வெளியிட்டிருந்த இரண்டு பிரபலமான அரசியல் தலைவர்கள் சம்பத்தப்பட்ட செய்தியை உதாரணமாகக் கொள்ளலாம். பாரக் ஒபாமாவும் ஏஞ்சலா மெர்க்கெலும் கடற்கரையில் ஒன்றாக ஓய்வெடுப்பது போன்றதான அந்தக் காட்சியில் செயற்கை நுண்ணறிவு உருவாக்கிய ஒரு கவிதைச் சாடலும் இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் காட்சி மிகத் தத்ரூபமாகவே இருந்தது. அரசியல் பரப்புரை எனும் விஷயத்தில் உருவாகும் மிகப் பெரிய மாற்றங்களுக்கு இது வழி வகுக்கின்றது. பயனாளிகளுக்குப் பகிரப்படும் தகவல்கள், செய்திகள் முற்றிலும் நூறு சதம் உண்மையாக இருக்கத் தேவையில்லை என்றாகிவிட்டது.

2024ல் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட உலகின் 49 சதம் மக்கள் தயாராகும் 64 நாடுகளின் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. இந்த வருடம் சமூக ஊடகங்களின் துடிப்பான பயனாளிகளின் எண்ணிக்கை 5 பில்லியனைத் தாண்டுவதாக "நாம் சமூகம்" *(We Are Social)* கணித்துள்ளது. தேர்தல் வருஷம் என்பதால் தேர்தல் தகவல்களின் உண்மையை உறுதிப்படுத்த இது போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.5 பில்லியன் பயனாளிகள் சமூக ஊடகத்தில் அரசியல் பதிவுகளில் ஈடுபடுகின்றனர். அதிக பயனாளிகளின் எண்ணிக்கை அதிக வருவாயை சமூக ஊடக நிறுவனங்களுக்கு உறுதி செய்கின்றது.**

நிறுவனங்கள் வெகுவான நிதியாதாரங்களை முதலீடு செய்திருக்கின்றன.

எதுவானாலும் முகநூல், யூ ட்யூப், ட்விட்டெர் போன்ற சமூக ஊடக ஜாம்பவான்கள் தேர்தல்களின் நேர்மையை உத்தரவாதமாக்கும் பொறுப்புகளிலிருந்து நழுவுவதாகத்தான் தெரிகின்றது. மிச்சமுள்ள வாட்ஸப், டெலிக்ராம், ஸ்னாப்சாட், லிங்க்டின் ஆகிய வலைதளங்களும் பகிரப்படும் தகவல்கள் குறித்த பொறுப்புணர்வோடோ, விழிப்பான கண்காணிப்புடனோ செயல்படுவதாகத் தெரியவில்லை. எனவே கட்டுகளுக்குட்பட்ட விதிகளுடனும், செயற்கை நுண்ணறிவு போன்ற முன்னெப்பொழுதும் இல்லாத புதிய இடர் மற்றும் சவால்களுடனும், தொழில்நுட்ப தளத்தில் ஒரு நேர்மையை உலகளவில் நடக்கவிருக்கும் தேர்தல்களில் உறுதி செய்வது மிகப் பெரிய சவாலாகவே இருக்கும்.

**சமூக ஊடகமும் நேர்மையான**
**தேர்தல் உத்தரவாதமும் :**

மேற்சொல்லப்பட்ட குறைகள் பிரச்சினைகளையெல்லாம் களைவதற்கு முக்கியமான பெரிய வலைதளங்கள் சில இணைய சமூக ஒழுங்குமுறைகளையும், வெளிப்படை அறிக்கை முறைகளையும் உத்தரவாதமாக்க வேண்டும். நிதானமான பதிவுகள், உண்மை உத்தரவாதம், விரைந்து பிரபலமாகும் பதிவுகளின் மீதான விசேஷ கவனம், செயற்கை நுண்ணறிவின் பதிவுகள் ஆகியவற்றையெல்லாம் சமூக ஊடகங்கள் உறுதி செய்வது அவசியம். ஓரளவு வலைதள நிறுவனங்கள் இவற்றிலெல்லாம் கவனம் செலுத்தினாலும் பிரச்னைகளை முழுவதுமாய் தீர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் போதுமானவைகளாய் இல்லை. "ஜனநாயக வடிவம்" *(Democracy By Design)* எனும் அமைப்பு அளித்துள்ள "ஆய்வுக்குட்பட்ட தொழில்நுட்பம்" எனும் அறிக்கையின் படி முகநூல், இன்ஸ்டாகிராம், த்ரெட்ஸ், யூடியூப், டிக்டாக், ஸ்னாப்சாட், டிஸ்கார்ட், லிங்க்டன், நெக்ஸ்ட் டோர், மற்றும் எக்ஸ் (முன்பு ட்விட்டெர்) ஆகிய பத்து பிரதான வலை தளங்களின் தேர்தல் தயாரிப்பிற்கான முன் நடவடிக்கைகளில் ஒன்று கூட, இந்த ஆய்வின் பரிந்துரைகளின் அடிப்படையில், நூற்றுக்கு 50 சதவீத மதிப்பெண்கள் கூடப் பெறவில்லை.

ஏனெனில் இந்த வலைதளங்களுக்கு தேர்தல் நிலவரங்கள் குறித்த எவ்வித முனைப்பான அக்கறையும் இல்லை. "ஜனநாயக-தொழில்நுட்ப மையம்" *(The Centre for Democracy & Technology – CDT)* கொடுத்துள்ள "அதிர்வலைகள்" எனும் அறிக்கை உண்மையற்ற அரை குறை பதிவுகளை அம்பலமாக்கிய தன்னார்வ ஆய்வாளர்கள் மற்றும் பணியாளர்கள் சந்திக்க நேர்ந்த உளைச்சல்கள், அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் பணி நீக்க பயமுறுத்தல்கள் குறித்துத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இந்த நிலவரங்களின் அடிப்படையில், காய்தல் உவத்தலற்ற சார்பின்மையுடன் "ஜனநாயக வடிவம்" *(Democracy by Design)* சமூக ஊடக பதிவுகளின் தேர்தல் நேர்மைக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் இடையிலான தார்மீக நியாயத்தை சமமான நிலவரத்தில் உறுதி செய்ய விழைகின்றது. பதிவுகளின் வடிவமைப்பு தன்னளவில் - அரை குறை தகவல்கள், பொய்ச் செய்திகள் மற்றும் செயற்கை நுண்ணறிவின் முழுப் புனைவுகள் ஆகியவற்றைத் தவிர்த்து - விமர்சனங்களை எதிர் கொள்ளும் வலிவுடன் அமைய வேண்டும் என்று வற்புறுத்துகின்றது.

தேர்தல் நேர்மைக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் இடையில் ஒரு உண்மையான, ஆரோக்யமான விவாத வெளியை உத்தரவாதம் செய்ய விமர்சனத் தெளிவு, தேர்தல் மீறல்களை அம்பலப்படுத்துவது மற்றும் ஆவண உத்தரவாதம் ஆகிய மூன்று அம்சங்களும் முக்கியமானவைகளாக வடிவமைக்கப் பட்டுள்ளன. வலைதள நிறுவனங்களுக்கு முழு உரிமையை அளிக்கும் அதே நேரத்தில் மேற்சொன்ன நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றது.

2.5 பில்லியன் பயனாளிகள் சமூக ஊடகத்தில் அரசியல் பதிவுகளில் ஈடுபடுகின்றனர். அதிக பயனாளிகளின் எண்ணிக்கை அதிக வருவாயை சமூக ஊடக நிறுவனங்களுக்கு உறுதி செய்கின்றது. 2020 லிருந்தும் 156 சதவீத வளர்ச்சியை கூகிளும் மெட்டா வலைதளங்களும் பெறவிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. "பிரச்சாரம், சார்பு குழுக்கள் என வலை தளங்களில் அதிகமான முதலீடுகள் வழியாக விளம்பரச் சந்தையில் மிகப் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் நடக்கின்றன" என்று "இன்சைடர் இன்டெலிஜென்ஸின்" இயக்குநர் பீட்டெர் நியூமென் கூறுகின்றார். வருவாயை மேம்படுத்த முன்னுரிமை தருவதினால் வலைதள நிறுவனங்கள் தங்களின் வணிக தார்மீகக் கொள்கைகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்தும் பிறழ்கின்றன.

## பொறுப்பு துறப்பு

உலகெங்கிலும் முன்னணி சமூக ஊடக நிறுவனங்கள் தங்களுடைய அடிப்படை தார்மீகக் கொள்கைகளை வலுவாகவும், சமமாகவும் பின்பற்றத் தவறியுள்ளன. ஆங்கிலம் தவிர மற்றமொழிப் பதிவுகளில் வெறுப்பு மற்றும் தவறான பதிவுகளைத் தடை செய்வதில் முகநூல் மெட்டா குறிப்பிடத்தக்க அளவில் செயல்படவில்லை. "யாபேஸ்டா" நடத்திய ஆய்வு ஆங்கிலம் தவிர மற்ற மொழிப் பதிவுகளில் அதனுடைய ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துவதில் முகநூல் தவறியிருப்பதை சுட்டிக் காட்டியிருக்கின்றது. எலான் மஸ்க் ட்விட்டெரின் முதன்மை நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்றுக் கொண்டது முதல் அரங்கேறிய, பொறுப்பு மற்றும் பாதுகாப்பு குழுக்களைக் கலைத்தது, தீவிரவாதக் குழுக்களின் கணக்குகளை நீக்க மறுத்தது, பயனாளிகளை எச்சரிக்கும் ப்ரத்யேகக் குறியீடுகளை அந்நியப் பதிவுகளினின்றும் நீக்கியது போன்ற நடவடிக்கைகளின் மூலமாக வெறுப்பும் பகையும், இணைய தொந்தரவுகளும் பயனாளிகளின் மன உளைச்சல்களும் ட்விட்டெரில் அதிகமாய்ப் பரவின.

யூட்யூபும் டிக்டாக்கும் அளித்திருக்கும், தவறான தகவல்களையும் அரசியல் விளம்பரங்களையும் தடை செய்வது குறித்த அவர்களுடைய அறிக்கைகளில் உண்மையிருப்பதாகத் தெரியவில்லை என்று "பொய் வாக்குறுதிகள்" என்ற தலைப்பில் 2022ல் வலைதளங்களின் நேர்மை குறித்து " ஃப்ரீ ப்ரெஸ் "(Free Press) நடத்திய ஆய்வறிக்கை கூறுகின்றது. நான்கு பெரிய சமூக ஊடகங்களின் நடப்புக் கொள்கைகளை இந்த அறிக்கை ஆய்வு செய்தது. இந்த நிறுவனங்கள், தொடர்பான இந்த பிரச்சினைகளையெல்லாம் கட்டுப்படுத்துவதில் காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. மெட்டா, ட்விட்டெர், யூட்யூப் ஆகிய நிறுவனங்கள் கொள்கை முடிவுகளை அமுல்படுத்தும் நேரத்தில் பின்வாங்கின. பொய்த் தகவல்கள், அரசியல் விளம்பரக் கொள்கைகள், செயற்கை நுண்ணறிவின் ரகசியக் காப்புரிமைகள், உண்மையான பயனாளிகளை உறுதி செய்வது, தளத்தின் விதிகளை மீறும் பயனாளிகள் மீதான நடவடிக்கைகள், பதிவுகளைக் கண்காணித்து ஒழுங்குபடுத்தும் பணியாளர் மற்றும் பாதுகாப்புக் குழுவை வழி நடத்துவது, அபாயமான தடை செய்யப்பட்ட கணக்குகளின் மறு நுழைவுத் தடை ஆகிய எல்லா நடவடிக்கைகள் குறித்த அவர்களது தீர்மானங்களிலிருந்து இந்த நிறுவனங்கள் பின்வாங்கின. அவைகளைக் குறித்து அவர்கள் அலட்டிக் கொள்ளவுமில்லை.

## அரசுகள் எதிர்கொள்ளும் சமூக ஊடக சவால்

உலகெங்கிலும் அரசாங்கங்கள் இந்தக் குறைகளையெல்லாம் களைய சமூக ஊடகம் பொறுப்பேற்க வேண்டுமென அழுத்தம் தருகின்றன. அமெரிக்க ஃபெடெரல் தேர்தல் ஆணையமும் அமெரிக்க காங்கிரஸும் அரசியல் விளம்பரங்களில் வரும் மலிவான போலிகளை நீக்குவதற்கு சில பரிந்துரைகளை முன் வைத்தன. ஆனாலும் இதற்கான சட்ட முன்வடிவை ஃபெடெரல் சட்டமன்றங்களில் நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் தென்படவில்லை. ஆசியாவிலேயே இந்தோனேஷியாவில்தான் சமூக ஊடகப் பயனாளிகள் அதிகம் உள்ளனர். முகநூல், இன்ஸ்டாக்ராம் மற்றும் டிக்டாக் பயனாளிகளின் முன்னணியில் இந்தோனேஷியா இடம் பெற்றுள்ளது. சமூக ஊடகங்களில் வெகு ஜன அபிப்ராயங்களைக் கட்டியெழுப்பும் முனைப்பான பயனாளிகள் தேர்தல்களில் அதிகம் சம்பாதிப்பதாக விற்பன்னர்கள் கூறுகின்றனர். வெறுப்புப் பேச்சு, கூர்மையாக்கும் சமூகப் பிளவு போன்ற விஷமான பரப்புரைகளின் மூலமாக சமூக ஊடகப் பயனாளிகளை வசப்படுத்தும் பல தொழில்முறை வல்லுநர்கள் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர். நடப்பிலிருக்கும் பலஹீனமான தரவுப் பரிமாற்ற சட்ட விதிகளால் இவர்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இந்தியாவும் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. தகவல்களைப் பரப்பும் சமூக ஊடக தொழில்முறை வல்லுநர்கள் எந்த விதிகளுக்குள்ளும் அடங்குவதில்லை. சமீபத்தில் இந்திய அரசு சில கணக்குகளை X தளத்திலிருந்தும் நீக்கக் கோரியபோது அந்த சமூக ஊடகத்திற்கும் இந்திய அரசுக்கும் இடையே நடந்த உரசல் இந்தப் பிரச்னையில் ஒரு முக்கியமான சம்பவம். தேர்தல் நடைமுறைகளின் நேர்மையை நிலைநிறுத்துவதற்கும் கருத்துச் சுதந்திரத்தின் பின்னணியில் தகவல் பரிமாற்றத்திற்கும் இடையிலான நியாயமான தார்மீகமான எல்லை எது என்பதை நிர்ணயிப்பதில் அரசுக்கும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகத்திற்கும் இடையில் அரங்கேறிய சமர் சுவராஸ்யமானது. இது விஷயத்தில் ஒரு புரிதலும் உடன்பாடும் எட்டப்படாத வரையிலும் அரசால் எதுவும் ஒழுங்கமைக்க முடியும் என்று சொல்ல முடியாது. டெலிக்ராம், ஸ்னாப்சாட் மற்றும் வாட்ஸப்களில் பரவும் விஷப் பொய்ப் பதிவுகளை கட்டுக்குள் கொண்டுவருவதற்காக இந்தியத் தேர்தல் ஆணையம் @ECISVEEP எனும் முயற்சியின் வழியாகப் போராடிக் கொண்டிருக்கிறது. மிகப் பெருவாரியான மக்களுடன் இந்த ஊடகங்கள் தகவல் பரிமாற்றத்தில் இயங்கிக் கொண்டிருந்தாலும் பல சர்ச்சைக்குரிய சந்தர்ப்பங்களில் இவைகள் எவ்விதக் கேள்விகளுக்குள்ளும் உட்படுத்தப்பட முடிவதில்லை. சமூக ஊடக முறை தவறிய தேர்தல் பரப்புரைகளைத் தடை செய்வதில் தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடத்தக்க வெற்றி பெற முடிவதில்லை என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். பிரித்தானிய அறிவியல், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப செயலாளர் மைக்கேல் டோனெலென் கூகிள், மெட்டா, எக்ஸ், டிக்டாக் மற்றும் ஸ்னாப்சாட் நிறுவனங்களின் பிரிட்டன் பொறுப்பாளர்களுடன், தளங்களில் பரவும் யூத எதிர்ப்பு, வன்முறை சார்ந்த குரூரப் பதிவுகள் மற்றும் தவறான தகவல்கள் குறித்து ஒரு கலந்தாலோசனை நடத்தினார்; இது விஷயத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து எதுவும் இன்னமும் பொதுச் சமூகத்திற்கு அறியத் தரப்படவில்லை. 70 சதமான சமூக ஊடகப் பயனாளிகள் விஷமான பதிவுகளால் சூழப் பட்டிருப்பதாக 2022ன் மத்தியில் பிரிட்டன் அரசு கண்டறிந்தது. எந்த நாடும் இந்தப் பிரச்னைகளைக் களைந்திட சட்டங்கள் இயற்ற வேண்டும்; ஆனால் பலஹீனமான நடைமுறையாக்கும் கொள்கைகளால் அவை பயனற்றுப் போவது பரிதாபகரமானது.

2024 உலகத் தேர்தல்களில் ஒரு யோக்யதையான நேர்மையான தகவல் பரிமாற்றத்தை உத்தரவாதமாக்க, முன்னெடுக்கப்படும் முயற்சிகள் உற்சாகமளிப்பதாயில்லை. இது தொடர்பான பிரச்னைகளை எதிர்கொள்வதற்கு சமூக ஊடகத் தளங்கள் இன்னமும் தயாராகவில்லை. நேர்மையான தேர்தல் நடவடிக்கைகள் உறுதி செய்யப்படுவது பின் தள்ளப்பட்டாலும், வருவாயைப் பெருக்கும் முயற்சிகள் முன்னிறுத்தப்பட்டாலும் இறுதியாக வீழ்ச்சியடைவது ஜனநாயக நடவடிக்கைகள்தான்.

*Translated Article from counter currents.org.*

*2024 Elections around the world and social Media's Blind Eye to Election integrity - by MD ANIS AKHTAR. dated : 22.4.2024*

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

கவிதை: ப்ரதிபா ஜெயச்சந்திரன்

## இணை கோடுகள்

சிதைந்த கூட்டின் சிதிலப் பறவையாய்
என்றோ விதைத்ததின்
விழுதுப் பிடிப்பில்
தன்னுயிர் பற்றி
சந்தடிமிக்க நகரத்தின்
ஒரு கூரையின் கீழ் நீ.

என்னவளின் பெயர் உன் நெஞ்சிலும்
உன்னவனின் பெயர் என் நெஞ்சிலும்
என்றோ மறுத்து மறந்து போன
மிச்ச சொச்சங்களை
சங்கடமின்றி நீட்டிய காலில்
அசை போட
குற்றம் சுமத்தாத மனசுகளின்
வேட்டைகள் தணியும்.
வீதிகள் தாண்டி
வண்டியில் ஏற்றி
மெலிதான புன்னகையில் கையசைக்க
காற்றாய்க் கரையும்
கனத்த சுமைகள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்: ஆ. சிவசுப்பிரமணியன்

# "தமிழ்ச் சமூகத்தின் சமூக பொருளாதார உருவாக்கம்" என்கிற நூலின் உள்ளடக்கம்

இன்றையத் தமிழ்ச் சமூகம் எந்திரத் தொழிலும் மின்னணுத் தொழிலும் வளர்ச்சியுற்ற சமூகமாகத் திகழ்கிறது. பொருளியல் மொழியில் கூறுவதானால் தொழில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவச் சமூகமாக விளங்குகிறது. இப்போதைய முதலாளித்துவப் பொருள் உற்பத்தி முறை அறிமுகமாகு முன்னர் வெவ்வேறு வகையான பொருள் உற்பத்தி முறைகள் தமிழ்நாட்டில் நிலவி வந்துள்ளன. இவை நிலவிய ஒவ்வொரு காலகட்டத்தையும் வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியாகக் கொள்ளமுடியும்.

பொருள் உற்பத்திமுறை எனும்போது அது முற்றிலும் பொருளியல் சார்ந்த ஒன்றல்ல. அது வரலாற்றுடனும் சமூகவியலுடனும் தொடர்புடைய ஒன்றாகும். ஒன்றுக்கொன்று வேறுபாடான சமூக அமைப்புகள் உருவாகி நிலை பெற்றிருப்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது அச்சமூகத்தில் அறிமுகமான பொருள் உற்பத்தி முறைதான். ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு ஓர் அடையாளத்தை உருவாக்குவதில் அங்கு நிகழும் பொருள் உற்பத்தி முறைக்கு முக்கிய பங்களிப்பு உண்டு. ஆயினும் இதுவே முற்றிலும் முடிந்த முடிவாக அமைவதில்லை. அங்கு காணப்படும் பண்பாட்டு விழுமியங்களுக்கும் இடமுண்டு.

உற்பத்தி இல்லாமல் வரலாறு இல்லை என்று டி.டி.கோசாம்பியும், பண்பாடு இல்லாமல் உற்பத்தி இல்லை என்று இ.பி.தாம்சனும் கூறியுள்ளமை இங்கு நினைவில் கொள்ளத் தக்கது. இவற்றில் ஒன்றைமட்டும் ஏற்றுக் கொண்டால் பொருளாதார நிர்ணயவாதத்திற்கோ பண்பாட்டு நிர்ணயவாதத்திற்கோ நாம் ஆளாகிவிடுவோம். ஒரு சமூகத்தில் நிலவும் பொருள் உற்பத்தி முறையும் பண்பாடும் அச்சமூகத்தின் வரலாற்று உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றுகின்றன என்பதுடன் ஒன்றுடன் ஒன்று எதிர்வினை புரிகின்றன என்பதுதான் நடப்பியல் உண்மையாகும்.

எனவே பொருள் உற்பத்திமுறை, பண்பாடு என்ற இரண்டும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வரலாற்றில் வகிக்கும் வகிபாகம் குறித்து ஆராய்வது தவிர்க்க இயலாத ஒன்றாகும். இந்நூலில் பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய பொருள் உற்பத்தி முறைகள் குறித்தும் அவை அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் சமூக வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் ஆராயப்படுகின்றன. இவ்வாய்வை மேற்கொள்ள கார்ல் மார்க்ஸ் எழுதியுள்ள ஒரு சிறுநூல் தூண்டுகோலாய் அமைந்துள்ளது.

அரசியல் பொருளாதாரம் குறித்த திறனாய்வு *(The Critique of Political Economy)*, மூலதனம் *(The Capital)* என்ற இருநூல்களையும் எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது அதற்குத் தேவையான குறிப்புகளை வெறும் குறிப்புகளாக அன்றி குறுநூல் வடிவிலான கையெழுத்துப் படிகளாக மார்க்ஸ் உருவாக்கி வைத்திருந்தார். இதுகுறித்து 'வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட இக்கையெழுத்துப் படிகள் என் சொந்தத் தேவைக்கானவை. வெளியிடுவதற்கல்ல' என்று மார்க்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு அவர் எழுதிய கையெழுத்துப் படிகளில் ஒன்று 'முதலாளித்துவத்திற்கு முந்தைய பொருளாதார உருவாக்கம்' *(Pre Capitalist Economic FORMATIONS)* என்ற தலைப்பிலானது.

*1857-1858* காலகட்டத்தில் இதை மார்க்ஸ் எழுதியுள்ளார். மார்க்ஸ் உயிரோடு இருந்த காலத்தில் இந்நூல் வெளியாகவில்லை. மாஸ்கோவில் *1939-41* காலத்திலும் பெர்லினில்*1952* இலும் இந்நூல் வெளியாகியுள்ளது. *1930* வரை ஆய்வாளர்களால் மட்டுமே இது வாசிக்கப்பட்டு வந்துள்ளது. ஜாக் கோஹன் *(Jack Cohen)* என்பவரால் இது ஜெர்மன் மொழியில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு எரிக். ஜே.ஹாப்ஸ்பாம் எழுதிய நீண்ட முன்னுரையுடன் (பக்கம்:*9-65*) *1964* இல் வெளியாகி உள்ளது. மூலதனம் நூலை எழுதுவதற்கான மார்க்சின் தொடக்கநிலை நூலாக இதைக் கொள்ளலாம் என்றும் அவரது முழுமையான வளர்ச்சிக்குப்பின் எழுதப்பட்ட இந்நூல் அவரது இறுதிப் படைப்புகளில் பொதுவெளியில் கிடைக்கும் இறுதியான நூல் என்றும் எரிக் ஹாப்ஸ்பாம் இந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் *(JACK COHEN 2018:9)*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவச் சமூகம் உருவாகும் முன்னர் இருந்த சமூக அமைப்புகளின் பொருள் உற்பத்தி முறையைக் குறிப்பிட ஃபோர்மென் (*Formen* ) என்ற ஜெர்மன் மொழிச் சொல்லை மார்க்ஸ் பயன்படுத்தி உள்ளார். இச்சொல்லின் பொருள் குறித்து அன்புத் தோழர் எஸ்.வி.ஆர். முதலாளித்துவப் பொருள் உற்பத்தி முறைக்கு முந்தைய பொருள் உற்பத்தி முறையைக் குறிப்பது என்று விளக்கமளித்தார்.

இன்று முதலாளித்துவப் பொருள் உற்பத்தியைப் பின்பற்றும் ஒவ்வொரு நாடும் முதலாளித்துவப் பொருளாதார முறைக்குள் நுழையும் முன்னர் வேறு ஏதோ ஒரு பொருள் உற்பத்தி முறையைப் பின்பற்றியிருக்கும். இது நாட்டுக்கு நாடு வேறுபட்டிருக்கும். அத்துடன் அவை நிகழ்ந்த காலமும் பொருள் உற்பத்தியும் கூட வேறுபட்டிருக்கும். ஒரே சீரான பொருள் உற்பத்தி முறையை அனைத்து நாடுகளும் பின்பற்றி இருக்காது. பொருள் உற்பத்திமுறையின் அடிப்படையில் உணவு தேடி வாழும் சமூகம், மேய்ச்சல் சமூகம், வேளாண் சமூகம், அடிமைச் சமூகம், முதலாளித்துவச் சமூகம் என மார்க்ஸ் இச்சமூகங்களைப் பகுத்துள்ளார். இப்பகுப்பில் இடம் பெற்றுள்ள சமூக அமைப்புகள் சிலவற்றுக்குள் நுழையாது கடந்து வந்த நாடுகளும் வரலாற்றில் உண்டு.

வேறுபாடான பொருள் உற்பத்திமுறையைக் கொண்ட சமூகங்கள் கடவுளாலோ மன்னர்களாலோ உருவாக்கப் படுவதில்லை. அச்சமூகத்தில் நிலவும் பொருள் உற்பத்தி முறைதான் அதை முடிவு செய்யும். ருசியப் புரட்சிக்குப் பின்னர் உருவான சோவியத் ஒன்றியத்தில் இணைந்த சில நிலப்பகுதிகள் அவ்வாறு இணையும் முன்னர் உணவுதேடி வாழும் வாழ்க்கையை மேற்கொண்ட மக்களைக் கொண்டிருந்தன (சுக்ஷிகள், கிர்கீசியர்கள்). அவர்களது மொழி எழுத்துவடிவம் பெறாது பேச்சு மொழியாக மட்டுமே வழக்கில் இருந்தது. ஆனால் ருசியப் புரட்சியை அடுத்து, அடிமைச் சமூகம், நிலமானியச் சமூகம், முதலாளித்துவச் சமூகம் என்ற சமூக அமைப்புகளுக்குள் புகாது நேரடியாக சோசலிச சமூக அமைப்பிற்குள் இவை நுழைந்தன. அதன் பின்னர் இவர்களது மொழியும் வரிவடிவம் பெற்றது. இம்மொழியிலேயே நவீன மருத்துவம், பொறியியல், விண்வெளி அறிவியல் என்பனவற்றைக் கற்றறிந்தனர்.

வரலாறு என்பது ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் இருந்து மற்றொரு சமூக அமைப்பிற்கு மாறுவது என்று வரலாற்றுக்கான வரையரையை ரொமிலா தாப்பர் வழங்கினார். எவ்வாறெனில் ஒரு குறிப்பிட்ட சமூகம் அடிமைகளின் துணையுடன் பொருள் உற்பத்தியை மேற்கொண்டிருந்தால் அச்சமூகம் அடிமைச் சமூகம் எனப்படுகிறது. ஆலைகளை நிறுவி கூலி உழைப்பின் துணையுடன் பொருள் உற்பத்தி மேற்கொண்டிருந்தால் முதலாளித்துவச் சமூகமாகிறது. ஒரு சமூகத்தின் பொருள் உற்பத்தி முறையானது மாறுதலுக்கும் வளர்ச்சிக்கும் ஆட்படாது இருப்பின் அச்சமூகம் தேக்க நிலைக்கு ஆட்பட்டுவிடும்.

தமிழ்நாட்டில் முதலாளித்துவப் பொருளாதாரம் அறிமுகமாகும் முன்னர் பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய பொருள் உற்பத்தி முறையை ஆராய்வதே இந்நூலின் நோக்கமாகும். இதைக் கண்டறிவதன் வழி தமிழ்ச் சமூகத்தின் உண்மையான சமூக வரலாற்றை அறிந்து கொள்ள இயலும். மன்னர்களுக் கிடையிலான போர்கள், அவர்களது கொடைச் சிறப்பு, தலைவன் தலைவியரின் காதல் என்பன மட்டுமே தமிழர்களின் வரலாற்று அடையாளமல்ல. காதலும் வீரமும் தமிழரின் இரு கண்கள் என்ற பெருமித உணர்வைக் கடந்து தமிழ்ச் சமூகம் பயணித்த வரலாற்றுப் பாதையைக் கண்டறிய வேண்டும். இம்முயற்சியானது மன்னர்களை மையமாகக் கொண்ட வரலாற்றில் இருந்து நம்மை விடுவித்து மக்களை மையமாகக் கொண்ட வரலாற்றிற்கு இட்டுச் செல்லும்.

எவ்வாறெனில் பொருள் உற்பத்தி முறையானது வர்க்கங்களைத் தோற்றுவிக்கும். வர்க்கங்களின் தோற்றம் அரசு, சமயம், பண்பாடு என்பனவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். இவையனைத்தும் வெகுமக்கள் திரளுடன் தொடர்புடையவை என்பதால் பொருள் உற்பத்தி முறையைக் கண்டறிவதென்பது ஆளுவோனையும் அவனைச் சார்ந்தோரையும் கடந்து சமூக நிகழ்வுகளைக் காணத் தூண்டும். கிராம்ஸ்கியின் சொற்களில் கூறுவதானால் மேட்டிமையோரை (*Elites*) மையமாகக் கொள்ளும் வரலாற்று வரைவில் இருந்து விடுபடச் செய்து சமூகத்தின் அடித்தள மக்களை (*Subaltern*) அடிப்படையாகக் கொண்ட வரலாற்று வரைவுக்கு இட்டுச் செல்லும். இவ்வரலாற்று வரைவு வெகுமக்கள் வரலாற்று வரைவாக மலர்ச்சியுறும்.

**(இக்கட்டுரையாசிரியர் எழுதி விரைவில் நூல்வடிவம் பெறவுள்ள "தமிழ்ச் சமூகத்தின் சமூக பொருளாதார உருவாக்கம்" என்கிற நூலின் அறிமுகவுரை இது)**

●

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியலாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: துருவன்

# காலநிலை மாற்றம் அதிகரிக்கும் கோடை வெயிலின் தாக்கம்!

கோடைக் காலத்தில் "தாங்க முடியல, பயங்கரமா சுடுது, அடுப்புல வச்சு வேக வைக்கிற மாதிரி இருக்கு" என்ற பல குரல்களை வழக்கமாக நாம் கேட்பதுதான், ஆனால் இந்த ஆண்டு அதிகம் பேர் கோடையின் வெப்ப அலையை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தக் கோடையில் மட்டும் ஏன் இவ்வளவு வெயில் தாக்கம் இருக்கிறது? என்ற கேள்வி எல்லோரும் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

பூமியின் வட கோளத்தில் கோடைக் காலமாக இருக்கும்போது தென் கோளத்தில் குளிர்காலமாக இருக்கும். சூரியனின் தோற்ற இயக்கம் (*apparent motion*) நிலநடுக்கோட்டில் இருந்து (மார்ச்சு 20 அல்லது 21) 23.5 டிகிரி வட அட்சரேகை வரை (ஜூலை மாதம்) பயணித்து மீண்டும் நிலநடுக்கோட்டிற்கு (செப்டம்பர் 21 அல்லது 22) வரும் காலம் பூமியின் வட அரைக்கோளத்திற்குக் கோடைக்காலமாகும். பின்னர் அது நிலநடுக்கோட்டில் இருந்து 23.5 டிகிரி தென் அட்சரேகை வரை செல்லும் காலம் தென் அரைக்கோளத்திற்குக் கோடைக் காலம்; அதேசமயம் வட அரைக்கோளத்திற்குக் குளிர்காலம். இந்த இடத்தில் சூரியன் நகர்வதில்லை, அது நகர்வது போல நமக்குத் தோன்றுகிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

கோடைக் காலத்திலிருந்து குளிர்காலத்திற்கு மாறும் சமயத்தில் ஒரு காலம். அது ஆங்கிலத்தில் 'ஆட்டம்' (*autumn*) எனவும் தமிழில் இலையுதிர்க் காலம் எனவும் அழைக்கப்படுகிறது. குளிர் காலத்திலிருந்து கோடைக் காலத்திற்கு மாறும் சமயத்தில் ஒரு காலம். அது ஆங்கிலத்தில் 'ஸ்பிரிங்' (*spring*) எனவும் தமிழில் வசந்த காலம் எனவும் அழைக்கப்படுகிறது.

**பூமியில் பருவகாலங்கள் ஏன் ஏற்படுகின்றன?**

பூமி கோள வடிவில் இருப்பதாலும், அது சூரியனைச் சுற்றிவருவதாலும். தன்னைத்தானே 23.5 டிகிரி சாய்ந்த ஓர் அச்சில் சுழல்வதாலும் இரவு, பகல் மற்றும் பருவகாலங்கள் ஏற்படுகின்றன.

கோடையில் பூமி சூரியனுக்கு நெருக்கமாகவும், குளிர்காலத்தில் சூரியனிலிருந்து வெகு தொலைவில் இருப்பதால் வெப்பநிலை மாறுகிறது என்று பலர் நம்புகிறார்கள். இது தவறு. உண்மையில், பூமி ஏப்ரல் - ஜூலை மாதத்தில் சூரியனிலிருந்து வெகு தொலைவில் உள்ளது மற்றும் ஜனவரியில் சூரியனுக்கு மிக அருகில் உள்ளது!

நீள் வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வரும் நம் பூமி (*aphelion and perihelion*) ஜனவரி மாதத்தில்தான் சூரியனுக்குச் சற்று அருகில் செல்கிறது. சுமார் 14.7 கோடி கிலோ மீட்டர். ஜூலையில்தான் அதிக தூரம் 15.2 கோடி கிலோ மீட்டர். இரண்டுக்கும் சுமார் 50 லட்சம் கிலோ மீட்டர் வேறுபாடு. அதாவது, ஜனவரியை விட, ஜூலையில், 5 லட்சம் கிலோ மீட்டர், பூமி சூரியனிலிருந்து விலகிப் பயணிக்கிறது. அப்படிப் பார்த்தால், ஜூலையில் வெப்பம் குறைவாகத்தானே இருக்க வேண்டும்?

ஏப்ரல் -ஜூலை மாதங்களில், முழு பூமியும் சூரியனுக்குச் சற்று அருகே சென்று விடுவதில்லை. அதன் சாய்வு நிலை காரணமாக (பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ளும் சுழல் அச்சு 23.5 டிகிரி சாய்ந்துள்ளது) பூமியின் வட பகுதி, அந்த மாதங்களில் சூரியனின் நேரடிப் பார்வையில் வருகின்றது. இந்தியா, பூமியின் வட பகுதியில் இருப்பதால், அதற்கும், அதைப் போன்று வட பகுதியில் இருக்கும் நாடுகளுக்கும், வெப்பம்

**உலக வெப்பமயமாதலுக்கு முக்கியக் காரணமாகப் பார்க்கப்படுவது பசுமையக வாயுக்களில் முக்கியமான கரியமில வாயுதான்.இது வளிமண்டலத்தில் எந்த அளவு அதிகரிக்கிறதோ அதே அளவு உலக சராசரி வெப்பமும் அதிகரிக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்ப அலை என்பது இயல்பு வெப்ப நிலையை விடக் கூடுதலாக 3oC வெப்ப உயர்வு தொடர்ச்சியாக 3 தினங்கள் அல்லது அதற்கு மேல் தொடர்வதைக் குறிக்கும். உலக வானிலை ஆய்வு அமைப்பானது தொடர்ச்சியாக 5 தினங்கள் அல்லது அதற்கு மேல் இயல்பு வெப்பநிலையை விட 5oC அதிகமாகும்போது வெப்ப அலை ஏற்படும் என வரையறை செய்துள்ளது.




அதிகமாகத் தெரிகிறது. வட அரைக்கோளத்தில் கோடைக் காலத்தில் சூரியனின் கதிர்கள் ஏறத்தாழ செங்குத்தான கோணத்தில் பூமியில் விழும். இதனால் சூரிய ஒளியின் ஆற்றலின் அளவு அதிகரிக்கிறது. மேலும், நீண்ட பகல் நேரங்கள் பூமிக்கு அதிக வெப்பநிலையை அடைய நிறைய நேரத்தை அனுமதிக்கின்றன.

குளிர்காலத்தில், சூரியனின் கதிர்கள் பூமியில் ஆழமற்ற சாய்வான கோணத்தில் விழுகின்றன. இந்தக் கதிர்கள் அதிகமாகப் பரவியிருக்கும், இது எந்த ஒரு இடத்தையும் தாக்கும் ஆற்றலின் அளவைக் குறைக்கிறது. மேலும், நீண்ட இரவுகள் மற்றும் குறுகிய நாட்கள் பூமி வெப்பமடைவதைத் தடுக்கிறது.

### அக்னி நட்சத்திரம்

பிரபஞ்சத்தில் கோடான கோடி நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றில் 'அக்னி நட்சத்திரம்' என்ற ஒன்று இல்லை. அதாவது "அக்னி நட்சத்திரம்" என்பது ஒரு நட்சத்திரத்தைக் குறிப்பது அல்ல. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைக் குறிப்பது. அக்னி நட்சத்திரம் என்ற வார்த்தையை, வானியலாளர்கள், அறிவியலாளர்கள், வானிலை ஆய்வு மைய விஞ்ஞானிகள் பயன்படுத்துவதில்லை. ஜோதிடம் கொடுத்த வார்த்தை இது. 'அக்னி நட்சத்திரம்' என்றோ கத்திரி வெயில் என்றோ வானிலையில் இல்லை.

ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் 21-ஆம் நாள் முதல் வைகாசி மாதம் 14-ஆம் நாள் வரை அக்னி நட்சத்திரக் காலம் ஆகும். இக்காலத்தில் சூரியன் பூமியின் வட அரைக்கோளத்திற்கு மேல் நகர்வதுபோலத் தோன்றுகிறது. இதனால் வெய்யிலின் தாக்கம் கடுமையாக இருக்கும். இந்தாண்டு அக்னி நட்சத்திரக் காலம் மொத்தம் 25 நாட்கள் ஆகும். சித்திரை 21 அதாவது மே 4ஆம் தேதி தொடங்கி, வைகாசி 15 அதாவது மே 28ஆம் தேதி முடிகிறது.

### கோடையில் ஏன் வெப்பம் அதிகரிக்கிறது?

சூரியன் அட்சரேகைக்கு மேல் வருகிறது. அதனால் சூரியனின் கதிர்கள் செங்குத்தாய் விழுகின்றன; எனவே தாக்கம் அதிகமாக உள்ளது. பொதுவாக, கோடைக் காலத்தில் மேக மூட்டம் குறைவு. வெளிர் நீல வானத்தை நாம் அதிகம் பார்க்க முடியும். எனவே சூரியனின் கதிர்கள் நம்மை எளிதில் தாக்குகின்றன. கோடைக் காலமான மார்ச்சு முதல் மே வரையிலான காலத்தில் நம்முடைய பகுதிகளில் தொடர் மழை ஏற்படுவதில்லை. சில நேரங்களில் கோடையில் வெப்பச் சலனம் காரணமாக மழை பெய்யவும் வாய்ப்பு உண்டு.

### கரியமில வாயு ஒரு காரணம்

தற்போது வரை உலக வெப்பமயமாதலுக்கு முக்கியக் காரணமாகப் பார்க்கப்படுவது பசுமையக வாயுக்களில் முக்கியமான கரியமில வாயுதான். இது வளிமண்டலத்தில் எந்த அளவு அதிகரிக்கிறதோ அதே அளவு உலக சராசரி வெப்பமும் அதிகரிக்கும். தொழிற்புரட்சிக்கு முன்புவரை வளிமண்டலத்தில் 280 அலகுகளாக இருந்த கரியமில வாயுவின் அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிடுகிடுவென உயர்ந்து, தற்போது 420-ஐக் கடந்து உச்சத்துக்கு நகர்ந்துகொண்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் எடுத்துக்கொண்டால், ஒவ்வோர் ஆண்டும் கரியமில வாயுவின் உமிழ்வு தொடர்ந்து அதிகரித்தபடியேதான் போகிறது. இந்தப் பின்னணியில்தான், காலநிலை மாற்றத்தின் தீவிர நிகழ்வுகளில் ஒன்றான வெப்ப அலைகளைத் தமிழகமும், இந்தியாவின் பல மாநிலங்களும் சந்தித்து வருகின்றன.

உலக சராசரி வெப்பம் அதிகரிப்பதனால் பருவநிலை மாற்றம் ஏற்பட்டுக் கனமழை, வெள்ளம், புயல் என இயற்கைச் சீற்றங்களைச் சந்திப்போம். வளிமண்டலத்தில் இந்தக் கரியமில வாயுவை முக்கியமாகக் கட்டுப்படுத்துவது பூமியில் இருக்கும் மரங்கள்தான். மரங்கள்தான் அறிவியல் ரீதியில் மிக முக்கியக் கரியமில வாயு உறிஞ்சிகள் (Carbon scavenger). மரங்கள் ஒளிச்சேர்க்கையின் (Photosynthesis) மூலம் கரியமில வாயுவை ஆக்ஸிஜனாகவும்(O2) ஆற்றலாகவும் (energy) மாற்றுகிறது. கரியமில வாயு உயர்வு, உலகவெப்ப மயமாதல், பருவநிலை மாற்றம், வெள்ளம், புயல், வெப்பக் காற்று, மரங்கள், உயிரினம் அழிவு என்று ஒரு தொடர் சங்கிலியாக மாறி வருகிறது. இந்தக் கொதிக்கும் வெய்யிலைத் தாங்கும்விதமாக நம்முடைய உடல் தகவமைந்திருக்கவில்லை. எனவே, அதிக வெப்பத்தால் ஏற்படும் 'வெப்ப வாத' (Heat Stroke) மரணங்கள் தமிழ்நாட்டிலும் நிகழத் தொடங்கி இருக்கின்றன

## வெப்ப அலை

வெப்ப அலை என்பது இயல்பு வெப்ப நிலையை விடக் கூடுதலாக 30C வெப்ப உயர்வு தொடர்ச்சியாக 3 தினங்கள் அல்லது அதற்கு மேல் தொடர்வதைக் குறிக்கும். உலக வானிலை ஆய்வு அமைப்பானது தொடர்ச்சியாக 5 தினங்கள் அல்லது அதற்கு மேல் இயல்பு வெப்பநிலையை விட 50C அதிகமாகும்போது வெப்ப அலை ஏற்படும் என வரையறை செய்துள்ளது. சமவெளிகளில் 40oC அளவிற்கும் மலைப் பிரதேசங்களில் 30oC அளவிற்கும் வெப்ப அலை உயர்வு ஏற்படும் பொழுதும் வெப்ப அலை தாக்க எச்சரிக்கை கவனத்தில் கொள்ளப்படுகிறது. அண்மைக் காலமாக வெப்பநிலையில் ஏற்படும் உயர்வால் கோடை மற்றும் பருவமழைக்கு முந்தைய மாதங்களில் வெப்ப அலை பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

தமிழகத்தில் நிலவி வரும் வெப்ப நிலை இதற்கு முன்னர் சில ஆண்டுகளிலும் பதிவாகியுள்ளது. ஆனால் தற்போதைய சூழலில் 38 - 40 டிகிரி செல்சியஸ் என்பது 50 - 53 டிகிரி செல்சியஸ் அளவிற்கான வெப்பம் போல் உணரப்படுவதற்குக் காரணம் காற்றில் ஈரப்பதம் குறைவு மற்றும் வெப்பமானது அலையாக 38-40 டிகிரி செல்சியஸ் அளவிலும் ஏற்படுவதால் தற்போது அதிக வெப்பம் காணப்படுகிறது என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கோடை மழை:

அதிக வெப்பம் தொடர்சியாக உள்ள நாட்களை பின் தொடர்ந்து வெப்பச் சலனம் காரணமாக மழை பெய்யும் வாய்ப்பு அதிகம் உள்ளது. இது ஒரு கால நிலை சுழற்சியாகும் வறுத்தெடுக்கும்வெயிலை அடுத்து மழை பெய்வதற்கான காரணிகள் சாதகமாக அமையும். மே மாத இரண்டாம் வாரத்திற்குப் பிறகு தமிழகத்தில் பரவலாக மழை பெய்தது இதன் அடிப்படையில் தான். இந்த ஆண்டு பருவ காலத்தில் இயல்பான மழை பெய்ய வாய்ப்பள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: இரா. எட்வின்

# சொல்லாமல் இருப்பதும் குற்றம்தான்

"இம்மைக்குச் செய்தது
மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன்
ஆ அய் அல்லன்;
பிறரும்
சான்றோர் சென்ற நெறியென,
ஆங்குப் பட்டன்று
அவன் கைவண்மையே."

என்கிறது ஏணிச்சேரி முடமோசியார் என்பவர் எழுதிய புறநானூற்றுப் பாடல்.

இப்பிறவியில் நல்லது செய்தால் தனது மரணத்திற்குப் பிறகு இறைவனது கருணை கிடைக்கும் என்பதற்காக எந்த நல்லதையும் செய்பவன் அல்ல ஆய் ஆண்டிரன். அந்தக் கணத்தில் அவனுக்கு எது நல்லது எனப் படுகிறதோ அதைச் செய்பவன் அவன் என்பது இதன் பொருள்.

இது எந்த அளவிற்கு ஆய் ஆண்டிரனுக்குப் பொருந்துகிறதோ இல்லையோ இந்திய இடதுசாரிகளுக்கு முற்றாக முழுதாகப் பொருந்துகிறது. எதையும் எதிர்பார்க்காமல் அந்தப் புள்ளியில் மக்களுக்கு எது அவசியமோ அதைச் செய்துவிட்டு கடந்து போய்விடுவதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள் அவர்கள்.

அந்த சங்க காலத்து தலைவன் ஆய் ஆண்டிரன் குறித்து நல்ல வாய்ப்பாக ஏணிச்சேரி முடமோசியார் ஆவணப்படுத்தி வைத்திருக்கிறார். இந்திய இடதுசாரிகள் செய்வதை பயனாளிகளுக்கே இவர்கள் கடத்தத் தவறுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உரையாளரான வெற்றிகொண்டான் அவர்கள் ஒருமுறை அவருக்கே உரிய நக்கலோடு இதுகுறித்து ஒரு கூட்டத்தில் பேசும்போது "ஊர்ல நாலே நாலு கம்யூனிஸ்ட் இருப்பான். பக்கத்து ஊர்ல இருக்குற அவங்க ஆளுங்க ஆறு பேரக் கூட்டிட்டு வந்து இந்த ஊர்ல தண்ணீர்க் குழாய் இல்லன்னு போராடுவான். குழாய் வந்துடும். நாங்கதான் கொண்டு வந்தோம்னு கூட்டம் போட்டு பேச மாட்டான். அடுத்த ஊர்ல ரோடு சரியில்லன்னு அவிங்களோடு சேர்ந்து போராடப் போயிடுவான்.

ஏண்டா இப்படின்னு கேட்டா, 'பெத்த தாய்க்கு சேலை எடுத்துக் கொடுத்துட்டு, அத போஸ்டர் அடிச்செல்லாம் ஒட்டக் கூடாது தோழர்னு நமக்கு க்ளாஸ் எடுக்க ஆரம்பிச்சுடுவான்' என்று கூறினார். பெரும்பாலும் அதுதான் உண்மை.

தேர்தல் களம் மோடியில் ஆரம்பித்து ஒரு புள்ளியில் சட்டென ராகுல் பக்கம் திரும்பி அப்படியும் இப்படியுமாக சூடேறி நகர்கிறதே. இதில் உங்களது கட்சியின் பங்கெதுவும் இருப்பதாகத் தெரியவில்லையேப்பா என்று கேட்கிறான் பிள்ளை ஒருவன். எப்போது களம் மாறி சூடு பிடித்துத் திரும்பியது என்று கேட்கிறேன்.

தேர்தல் நிதிப் பத்திரங்கள் குறித்து உச்ச நீதிமன்றம் தலையிட்ட பிறகுதான் தேர்தல் களம் மாறியது என்கிற புரிதல் அந்தப் பிள்ளைக்கு இருக்கிறது.

தேர்தல் நிதிப் பத்திரம் குறித்த மசோதா வந்தபோது அதை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மிகக் கடுமையாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது. 'நம்பர் சூத்திரம்' இந்தக் கண்டனக் குரலை நசுக்கி ஒன்றும் இல்லாததாக செய்து விட்டது. உடனே அந்தக் கட்சி தேர்தல் நிதிப் பத்திரங்கள் குறித்த கீழ்க்காணும் விவரங்களை பொதுவில் வைக்க உத்திரவிட வேண்டும் என்று வழக்குப் போடுகிறது. தேர்தல் பத்திரம் யாரால் வாங்கப்பட்டது? யாருக்கு வழங்கப்பட்டது? எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது? எப்போது வாங்கப்பட்டது?

இந்த வழக்கு கிணற்றில் போடப்பட்ட கல்லாகவே கிடந்தது. மிகச் சரியான நேரத்தில்

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் உரையாளரான வெற்றிகொண்டான் அவர்கள் ஒருமுறை அவருக்கே உரிய நக்கலோடு இதுகுறித்து ஒரு கூட்டத்தில் பேசும்போது "ஊர்ல நாலே நாலு கம்யூனிஸ்ட் இருப்பான். பக்கத்து ஊர்ல இருக்குற அவங்க ஆளுங்க ஆறு பேரக் கூட்டிட்டு வந்து இந்த ஊர்ல தண்ணீர்க் குழாய் இல்லன்னு போராடுவான். குழாய் வந்துடும். நாங்கதான் கொண்டு வந்தோம்னு கூட்டம் போட்டு பேச மாட்டான். அடுத்த ஊர்ல ரோடு சரியில்லன்னு அவிங்களோடு சேர்ந்து போராடப் போயிடுவான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை நீதியரசர் சந்திரசூட் தலைமையிலான பெஞ்ச் விசாரணைக்கு எடுக்கிறது. ஒன்றிய அரசும் பாரத ஸ்டேட் வங்கியும் முடிந்த வரைக்கும் நீர்த்துப் போக என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்து பார்த்தன.

இந்த விசாரணையும், ஒன்றிய அரசின் சால்ஜாப்புகளும், நீதிமன்றத்தின் கிடுக்கிப் பிடியும் மக்களின் கவனத்தை ஈர்க்கின்றன. அப்போதுதான் "தேர்தல் நிதிப் பத்திரம்" என்றால் என்ன என்பது மக்களுக்குப் புரிய ஆரம்பிக்கிறது.

ஒரு வழியாக, பாரத ஸ்டேட் வங்கி தேர்தல் நிதிப் பத்திரங்கள் குறித்த விவரங்களை தேர்தல் ஆணையத்திற்குத் தருகிறது. தேர்தல் ஆணையம் அதைத் தனது அதிகாரப்பூர்வ வலைதளத்தில் பதிவேற்றுகிறது. அதைப் பார்த்ததும் மக்கள் அதிர்ச்சி அடைகிறார்கள். தேர்தல் களம் சூடு பிடிக்கிறது.

இப்படியாக தேர்தல் களத்தை சூடுபடுத்தி அதன் திசையை மாற்றிய அந்த வழக்கைப் போட்டது இடது சாரிகள். அந்த வகையில் தேர்தல் களம் இப்படியாக தனது போக்கை மாற்றிக் கொண்டதற்கு காரணம் இடதுசாரிகள், அதிலும் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி.

ஆச்சரியத்தின் உச்சிக்குப் போன அந்தப் பிள்ளை, "இதை ஏன் ஒரு பாவ ரகசியத்தைப் போல யாருக்கும் தெரியாமல் பாதுகாக்கிறீர்கள்?" என்று கேட்கிறான். அந்தக் கேள்வி என்னை பளேரென்று கன்னத்தில் அறைகிறது.

இந்தத் தேர்தல் களத்தில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பேசுபொருளாக இருந்தவற்றுள் பில்கின்ஸ் பானு வழக்கும் ஒன்று. அந்த வழக்கிலும் இடதுசாரிகளின் பங்கு இருக்கிறது என்பது பெரும்பான்மை இடதுசாரிகளே அறிந்திராதது என்பதுதான் துயரம். பில்கின்ஸ் பானுவிற்கு நடந்த கொடுமை நமக்குத் தெரியும். அதற்கு எதிராக அந்தப் பெண் வழக்குத் தொடர கொடியவர்கள் அனைவரும் சிறைக்குப் போகிறார்கள். அவர்களை இந்திய சுதந்திரத்தின் எழுபத்தி ஐந்தாவது விடுதலை நாளின் பொருட்டு விடுதலை செய்கிறார்கள்.

அதற்கு எதிராக வழக்குத் தொடரப் படுகிறது. அவர்கள் மீண்டும் சிறைக்குப் போகிறார்கள். இதுவரை அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்தக் கொடியவர்களின் விடுதலையை எதிர்த்து நீதிமன்றத்தின் கதவைத் தட்டியது தோழர் சுபாஷினி அலி என்ற மார்க்சிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்பது நமக்கேத் தெரியாது.

அந்தக் கயவர்கள் விடுதலை செய்யப்பட்டது பில்கின்ஸ் பானுவை துயருறச் செய்கிறது. அதுவும் அவர்கள் உயர்குடியில் பிறந்தவர்கள். எனவே அந்தத் தவறை அவர்கள் செய்திருக்க வாய்ப்பில்லை என்று அதற்கான காரணம் சொல்லப்பட்டபோது அந்தப் பெண் நார் நாராகக் கிழிந்து போனாள்.

அவர்களது விடுதலைக்குப் பிறகு பத்திரிகையாளர்கள் பில்கின்ஸ் பானுவை சந்தித்து அவர்களது விடுதலைக்கு எதிராக நீதிமன்றம் போகவில்லையா என்று கேட்கிறார்கள். இல்லை என்கிறார். தனக்கு ஏற்பட்ட அநீதிக்கு எதிராகத் தானேதான் போராட வேண்டுமா. இந்த அநீதியைத் தங்களுக்கு ஏற்பட்ட அநீதியாக யாரும் உணரவே மாட்டார்களா என்று கேட்கிறாள். இதை அறிந்த தோழர் சுபாஷினி அலி அந்தக் கயவர்களின் விடுதலைக்கு எதிராக நீதிமன்றம் போகிறார். உடனே சுபாஷினி அலியின் வழக்கில் தன்னை இணைத்துக் கொள்கிறார் பில்கின்ஸ் பானு. அவர்களது விடுதலைக்கு எதிராக வழக்கெல்லாம் போட மாட்டேன் என்று கூறிய பானு எதற்காகத் தன்னை சுபாஷினி அலியின் வழக்கில் இணைத்துக் கொண்டார் என்பது புரியாமலே இருந்தது.

மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் கனகராஜ் ஒரு கூட்டத்தில் இதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தினார்.

சுபாஷினி அலி பிராதான வழக்கில் எந்த இடத்திலும் இல்லை என்பதைக் காரணம் காட்டி இந்த வழக்கைத் தள்ளுபடி செய்துவிடக் கூடாது என்பதற்காகத் தன்னை இந்த வழக்கில் இணைத்துக் கொண்டாராம் பில்கின்ஸ் பானு.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தத் தேர்தல் களத்தில் "கச்சத் தீவு" பிரச்சினையைக் கயில் எடுத்து விளையாட முயற்சி செய்தது பாரதிய ஜனதா கட்சி. கச்சத் தீவு குறித்து அண்ணாமலையோ அவரது ஏற்பாட்டின்படி யாரோ ஒருவரோ தகவல் அறியும் சட்டத்தின் வழியாகத் தகவல் கோரியதாகவும், கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது கலைஞரும் இந்திராவும்தான் என்றும் கூறி ஒரு நாடகத்தைத் தொடங்குகிறார்கள். அந்தத் தகவலே போலியானது என்பதை தகவல் அறியும் சட்டத்தின் வழியாகவே தகவலைப் பெற்று நிறுவுகிறார்கள் எதிர்க் கட்சியினர். அதுமட்டும் அல்ல, ஒன்றிய அரசின் பல முறைகேடுகளை தகவல் அறியும் சட்டத்தின் உதவி கொண்டுதான் நம்மால் அம்பலப் படுத்தவே முடிந்தது.

சமீபத்தில் உள்துறை அமைச்சகத்திலும் வருமானவரித் துறை அலுவலகத்திலும் கோப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்கைச் சிறகினிலே மே மாத திங்கள் இதழ் வெளியீடு**



**தி**ருச்சி மாவட்டம் திருவரங்கம் இராசவேலு செண்பகத் தமிழரங்கு சார்பில் 32 ஆம் ஆண்டு விழா திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்க மன்ற கட்டிடத்தில் 18.05.2024 காரி(சனி)க்கிழமை அன்று மாலை மிக சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் சென்னையிலிருந்து வெளிவரும் காக்கைச் சிறகினிலே மே மாத இதழை, தமிழ்நாட்டரசின் உதவி பெறும் அகவை முதிர்ந்த தமிழறிஞர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் இரா. துரைமுருகன் வெளியிட, பேராசிரியர் முனைவர் வெ. இன்சுவை பெற்றுக் கொண்டார். உடன் ரிஷிவந்தியம் தமிழ் சங்கத் தலைவர் வ.இராசகோபால், செண்பகத் தமிழரங்கின் பொறுப்பாளர் இராச. இளங்கோவன், முனைவர் ப. சுப்பிரமணியன், பணி நிறைவு பேராசிரியர் முனைவர் சு. செயலாபதி, தொழிலதிபர் எம் ஆர் எஸ் கேசவன், எழுத்தாளர் சகுந்தலா தங்கவேல் உள்ளிட்டோர் காக்கைச் சிறகினிலே இதழைப் பெற்றுக் கொண்டனர்.

– இரா. துரைமுருகன், தியாகதுருகம்

---

எரிந்தன. இத்தனைப் பாதுகாப்பான இந்த அலுவலகங்களில் தீ விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்கிறார்கள். பிறகு எப்படி இது நடந்தது. இந்த தீ விபத்து எப்படி நடந்தது என்பதற்கு பதில் ஏன் நடந்தது எனக் கேட்பது சரியாக இருக்கும்.

ஆட்சி மாற்றம் ஏற்படலாம் என்ற பயம் அவர்களுக்கு வந்திருக்கிறது. தகவல் அறியும் சட்டத்தின் வழி அப்போது தகவல்கள் கோரப்படலாம். அதன் மூலம் தங்களது ஊழல்களும் முறைகேடுகளும் வெளி வரலாம். அதன் மூலம் தாங்கள் சிறைக்குப் போக நேரிடலாம். இவற்றில் இருந்து சம்பந்தப்பட்டவர்கள் தப்பித்துக் கொள்வதற்காகக்கூட இந்த அலுவலகங்களுக்கு தீ வந்திருக்கலாம். இன்னும் சில அலுவலகங்களுக்கும் இந்த தீ விருந்து சாப்பிடப் போகலாம் என்கிறார்கள்.

இத்தகைய பலம் வாய்ந்த, மேட்டிமை வாய்ந்த அமித்ஷாவும் நிர்மலா மேடமுமே பயப்படக்கூடிய இந்தச் சட்டத்திற்காகப் போராடி அன்றைக்கு இருந்த தனது நம்பர் பலத்தின் காரணமாக அரசைக் கொண்டுவர வைத்தது இடதுசாரிகள்.

விவசாயிகளும் கூலித் தொழிலாளிகளும் லட்சக் கணக்கில் தற்கொலை செய்து கொண்டிருந்தபோது "இந்தியா ஒளிருகிறது" என்று கோடிக்கணக்கான செலவில் விளம்பரங்களைச் செய்து கொண்டிருந்தது *Right man in the wrong party* வாஜ்பாய் அரசு. அதன் பிறகும் அது தொடரவே அந்த எளிய மக்களை தற்கொலையில் இருந்து தடுக்க 100 நாள் வேலைத் திட்டத்தைக் கோருகிறது இடதுசாரி இயக்கம்.

மன்மோகன்சிங் அரசு தயங்குகிறது. விடாது போராடுகிறார்கள். சோனியா அவர்களுக்கு இந்த வலி புரிகிறது. தலையிட்டு நூறு நாள் வேலைத் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். சோனியா அவர்களின் தலையீடு இல்லாமல் இது நிகழ்ந்து இருக்காது. அவர் போற்றுதலுக்கு உரியவர். இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக காங்கிரஸ் கட்சியும் போற்றப்பட வேண்டியதே. ஆனால், இதைக் கொண்டு வருவதற்காகப் போராடிய இயக்கம் இடதுசாரி இயக்கம் என்பதை இடதுசாரித் தோழர்களிடமாவது குறைந்த பட்சம் கொண்டுபோய் சேர்க்க வேண்டாமா?

நூறுநாட்களுக்கு வேலை இல்லாவிட்டால் மக்கள் தற்கொலை செய்து கொள்வார்கள் என்ற அவல நிலையில் மக்களை காங்கிரஸ் ஆட்சி வைத்திருந்தது என்பதற்கான அடையாளம் இந்தத் திட்டம். ஆகவே இந்தத் திட்டத்தை எடுக்க மாட்டோம் என்று சொன்ன பாஜக அரசு இதை எடுக்க எத்தனையோ முறை முயற்சி செய்தது.

நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இந்தத் திட்டத்தைக் காப்பாற்றுவதற்காகப் போராடியவர்கள் இடதுசாரிகள். நூறு நாள் வேலைத் திட்டம் தற்கொலைகளைப் பெருமளவு குறைத்திருக்கிறது என்றால் அதில் இடதுசாரிகளுக்கான பங்கும் உண்டு.

ஒன்று சொல்லி முடிக்கலாம், செய்யாமல் இருப்பது மட்டுமல்ல; செய்ததை சொல்லாமல் இருப்பதும் குற்றம்தான்.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: க. பழனித்துரை

# எங்கே நம் நடுத்தர வர்க்கம்?

ஒரு சமூக நிகழ்வுக்காகச் சென்ற இடத்தில் என்னுடைய இரண்டு பழைய ஆசிரிய நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் இருவரும் மாலைவரை காத்திருந்து என் பணிகள் அந்த நிகழ்வில் முடிந்தவுடன் ஒரு தனி இடத்தில் அமர்ந்து உரையாடினோம். அப்பொழுது அதில் ஒரு நண்பர் கூறினார், "உங்களைப் பார்த்தால் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது" என்று. ஏன் என்றேன். "சமூகத்தில் புரட்சிகர மாற்றங்களை நாளைக்கே கொண்டுவரப் போகிறோம் என்ற நம்பிக்கையில் நீங்கள் எழுதுவதும் ஊர் ஊராகச் சென்று பேசுவதுமாக இருக்கின்றீர்கள். அதுவும் பணி ஓய்வுக்குப்பின் அதிக வேகமெடுத்து பணி செய்கிறீர்கள். மிகுந்த நம்பிக்கையுடன், அதைப் பார்த்துத்தான் நான் ஆச்சரியப்படுகிறேன்" என்றார். கூறியவர் ஆசிரியர் சங்கப் பொறுப்புக்களில் இருந்து பலமுறை சிறை சென்று வந்த ஒரு போராட்டக்காரர். அவர் அடுத்து ஒரு செய்தியைக் கூறினார். "எங்களைப் போன்றவர்கள் சலித்து விட்டோம், நாம் நம்பியது இந்த நடுத்தட்டு மக்களை, அவர்கள் இன்று எங்கு இருக்கின்றார்கள் என்றே தெரியவில்லை. சில நேரங்களில் எனக்கு விரக்திகூட வருவதுண்டு, ஏதோ நல்ல நண்பர்களுடன் பொழுதைப் போக்குகின்றோம். நாட்டில் நடக்கும் அரசியலைப் பார்க்கும்போது, வேதனையாக இருக்கிறது. நாம் எதிலும் கலந்து கொண்டு செயல்படும் சூழலும் இல்லை. நாம் நம் சுய மரியாதையை இழக்கவும் தயாராகவும் இல்லை, எனவே நாம் நல்ல நண்பர்களைக் கண்டுபிடித்து அவர்களுடன் பழகி வாழ்க்கையை கழித்துக் கொண்டே இருக்கிறோம்" என்றார்.

மற்றவர் இதனைக் கேட்டுக்கொண்டே இருந்தவர், "பழனித்துரை எப்படி இவ்வளவு நம்பிக்கையைப் பெற்றார். எங்கிருந்து பெற்றார் என்பதுதான் புதிராக இருக்கிறது. அது நமக்கும் தெரிந்தால் அவருடனேயே பயணிக்கலாமே என்று" கூறினார். நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டேயிருந்தேன். உடனே அடுத்தவர் "நாங்கள் அன்று ஆசிரியப்பணி செய்தபோது நம் நடுத்தர வர்க்கம் எவ்வளவு சமூகச் சிந்தனை கொண்டு சமூக அக்கறை கொண்டு செயல்பட்டது. அப்பொழுதெல்லாம் நம் நடுத்தர வர்க்கத்திற்கு அவ்வளவு வசதிகள் இல்லை. இருந்தபோதும் தன் ஊதியத்தில் சிறிது பொதுப்பணிகளுக்குத் தந்து உதவினர். மற்றவர்கள் துயரங்களில் பங்கு கொண்டனர். அந்தச் சமூகம் இன்று எங்கே போனது என்பதுதான் நமக்கு இன்று எழுகின்ற கேள்வி. அதே நேரத்தில் உங்களுக்கு மட்டும் சமூகச் செயல்பாட்டுக்கு எப்படி ஆட்கள் கிடைக்கின்றனர் என்பதை எங்களுக்கும் விளக்கினால் நாங்களும் புரிந்து கொண்டு எஞ்சிய காலத்தை பயனுள்ளதாகக் கழிக்கலாம்" என்றார்.

"நீங்கள் ஒரு இயக்கத்திற்குள் உங்களை ஐக்கியமாக்கிக் கொண்டு அதையே மையப்படுத்திச் செயல்பட்டீர்கள். நான் அப்படிச் செயல்படவில்லை. மக்களுடன் தொடர்பில் செயல்பட்டுக் கொண்டிருந்த அமைப்புக்களுடன் நிறுவனங்களுடன் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தேன் என்றேன். இன்றும் அப்படித்தான் செயல்படுகிறேன். அப்படிச் செயல்படும்போது நான் நிறுவனங்களைவிட குறிக்கோளுடன் செய்கின்ற பணிகளை மட்டும் நம்பினேன். அந்த அமைப்புக்களுடன் இணைந்து செயல்பட்டேன். என் பணிக்கு அந்த அமைப்புக்களைப் பயன்படுத்தினேன். நான் செயல்களில் மட்டும்தான் இணைந்தேன். அமைப்புக்களில் இணையவில்லை. நான் பணி செய்த பல்கலைக் கழகம் சமுதாயத்தில் பணி செய்ய எனக்கு முழுச் சுதந்திரத்தைத் தந்தது. எனவே என் களப்பணி என்பது ஒரு முப்பது ஆண்டு காலம் தொய்வின்றி நடந்தது. நான் எந்த இயக்கத்திற்குள்ளும் அமைப்பிற்குள்ளும் ஐக்கியப்படுத்திக் கொள்ளவில்லை. அமைப்பு சார்ந்து பணி செய்வது நன்மை பயக்கும்தான். எனவே என் பல்கலைக்கழகத்தை எனக்குப் பின்புலத்தில் வைத்துக்கொண்டே செயல்பட்டு வந்தேன். கால ஓட்டத்தில் மக்களுக்காக பணி செய்த பல நிறுவனங்கள் தேங்க ஆரம்பித்தன. இயக்கங்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள் தேங்கும்பொழுது அந்தத் தேக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள அவைகள் அனைத்தும் தங்களை அந்தக் காலத்திற்கேற்ப தங்களை வடிவமைத்துக் கொள்ளவில்லை. அந்த நிலையில் பல காந்திய இயக்கங்களையும், இடதுசாரி இயக்கங்களையும், குடிமைச் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களையும் நான் பார்த்து வருகிறேன். அதேநிலை அரசியல் கட்சிகளுக்கும் வந்துவிட்டன. ஆனால் தங்களை சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொண்டு குறிக்கோள் பிறழாமல் இயங்கும் அமைப்புக்களையும், நிறுவனங்களையும், இயக்கங்களையும் நான் பார்த்து வருகிறேன். சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றி அமைத்துக்கொண்ட அமைப்புக்கள், நிறுவனங்கள், இயக்கங்கள் அனைத்தும் தங்களை நிலை நிறுத்திக் கொண்டுவிட்டன. அந்த நிறுவனங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளன. இயக்கங்களுக்குள், நிறுவனங்களுக்குள் இயங்கியவர்கள் அவைகளின் தேக்கத்தில் தாக்கம் பெற்று மாற்றுத் தேட இயலவில்லை. ஆனால் களச் செயல்பாடுகளுக்கு வாய்ப்புக்கள் நம் முன் வந்து நிற்கின்றன. அவைகள் நமக்குத் தெரியவில்லை, தெரிந்தும் அவைகளை எடுக்க இயலவில்லை. காரணம் நமக்கு ஒரு உளவியல் இருக்கிறது. நம்மை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றிக்கொள்ள ஏதோ ஒருவிதத் தடை இருக்கிறது. அதை உடைக்க நாம் முயலவில்லை.

நாம் வாழும் காலம் சந்தை காலம். சந்தை என்பது மிகப்பெரிய திமிங்கிலம் போன்றது. எதையும் சாப்பிட்டு ஏப்பம் விடும் ஆற்றல் பெற்றது. இந்தச் சந்தை காலத்தில் நாம் வாழ்கின்றோம் என்ற சிந்தனையுடன் நம் செயல்பாடுகளை வடிவமைத்துக் கொண்டால் அமைதியாக நாம் எப்போதும்போல் சமூக மேம்பாட்டுச் செயல்பாடுகளில் நம்மை முழுமையாகக் கரைத்துக்கொண்டு நம்மை நாம் ஈடுபடுத்திக் கொண்டு செயல்படலாம். சந்தை அறிவியல் பூர்வமாக செயல்படுகிறது. அது இயற்கையைச் சுரண்டுகிறது, மானுடத்தைச் சுரண்டுகிறது. இவை இரண்டையும் சுரண்டி ஒரு சிறிய சமூகக் குழுவிற்கு சுகபோக வாழ்க்கைக்கு உதவுகிறது என்ற புரிதல் இல்லாமலேயே பெரும்பான்மை மக்கள் ஓர் வித்தியாசமான பார்வையையும் உணர்வையும் கொண்டு ஒரு மயக்க நிலையில் செயல்பட்டு வருகின்றனர். இந்த அறியாமைப் போக்கை நான் முப்பது ஆண்டுகளாக களத்தில் பார்க்கிறேன். இந்தச் சூழலை மாற்றுவதற்கு மக்களாட்சியில் இருக்கும் ஒரே வாய்ப்பு மக்களுடன் பணி செய்வதுதான். இன்று அந்தப் பணி செய்ய ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. களத்தில் செயல்பட்ட அரசியல் கட்சிகள் தொண்டனை வாடிக்கையாளனாக மாற்றிவிட்டது. களத்தில் குடிமைச் சமூகம் இல்லை. எனவே களம் காலியாக இருக்கிறது. நமக்குக் கட்டப்பாடு இருந்தால் களத்தில் இன்றும் நல்ல பணி ஆற்ற முடியும். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களை அதிகாரப்படுத்துவது ஒன்றுதான் தீர்வு என்று களப்பணி எந்தத் தொய்வும் இன்றி களப்பணி ஆற்றி வருகிறேன். இதைப் புரிந்து கொள்ள இரண்டு உலக வங்கி அறிக்கைகளை உங்களுக்கு இப்போது விளக்குகின்றேன்.

90களில் இரண்டு அறிக்கைகள் பொதுச் சிந்தனையாளர்கள் மத்தியில் விவாதத்திற்கு வந்தன. விவாதங்கள் நடைபெற்றன. ஆனால் மிகப்பெரும் அளவில் தாக்கத்தை சமூகத்தில் அந்த அறிக்கைகள் உருவாக்கவில்லை. மாறாக சந்தையின் செயல்பாட்டில் அந்த அறிக்கைகள் தலைகீழ் மாற்றத்தைக் கொண்டு வந்துவிட்டன. ஒரு அறிக்கை ஏழைகளின் நுகர்வு பற்றியது. அதாவது ஏழைகளின் நுகர்வுக்கலாச்சாரத்தில் நடைபெற வேண்டிய மாற்றங்களைப் பற்றி நடத்தையியல் பொருளாதார வல்லுனர்கள் உருவாக்கிய அறிக்கை. அடுத்த அறிக்கை நடுத்தர வர்க்கத்தின் சிந்தனைப் போக்கை மாற்றுவதற்கான அறிக்கை. இந்த இரண்டு அறிக்கைகளும் நிதி நல்கும் பெரும் பன்னாட்டு வங்கிகளுக்கு அறிவுரையாக வழங்கப்பட்டவைகள். புதிய பொருளாதாரக் கொள்கையினால் பெரும் செல்வம் ஈட்ட முதலில் இந்தியா போன்ற பெரும் மக்கள் தொகை கொண்ட நாடுகளில் ஏழைகளையும் நடுத்தர வர்க்கத்தையும் அதன் நுகர்வில் சிந்தனைப் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். குறிப்பாக ஏழைகளை பெரும் நுகர்வுக்குத் தூண்ட வேண்டும். அதற்கான கொள்கைகளை அரசாங்கங்கள் உருவாக்க நிதி நிறுவனங்கள் ஆலோசனை வழங்க வேண்டும் என அறிவுறுத்தியது. இரண்டாவது அறிக்கை நடுத்தர வர்க்கத்தின் வருமானத்தைக் கூட்டி அவர்களையும் வாழ்க்கைச் சுகங்களை அனுபவிக்க பழக்கப்படுத்த வேண்டும் என்பதை மையப்படுத்தியதாகும். நடுத்தட்டு மக்களை இனிமேல் சுயவளர்ச்சி, குடும்ப மேம்பாடு பற்றி சிந்திக்கத் தூண்ட வேண்டும். அவர்களின் இன்றைய சமூகச் சிந்தனைப் போக்கை மாற்றியமைக்க வேண்டும். இவர்களை வறுமை, பசி, ஏழ்மை, புறக்கணிப்பு, ஒதுக்குதல் என சமூகம் சார்ந்து சிந்திக்க செயல்பட வாய்ப்பைத் தரக்கூடாது. அதற்கு ஒரே வழி இந்த நடுத்தர வர்க்கத்தின் ஊதியத்தை உயர்த்த வேண்டும். ஊதியம் உயர்த்தப்பட்டால் அவர்கள் கையில் உபரி இருக்கும். அது அவர்களை வேறு ஒரு திசைக்கு இட்டுச் சென்றுவிடும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும். பொருளாதாரம் வளர்கின்றபோது அந்த சம்பள உயர்வை அரசாங்கங்கள் மிக எளிதாகச் செய்யலாம் என்ற அறிவுரையை வழங்கினர் அந்தப் பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லுனர்கள் தங்கள் அறிக்கைகள் மூலமாக. இந்த இரண்டு அறிக்கைகளும் பொருளாதார வளர்ச்சிக்கு நிதியளிக்கும் பன்னாட்டு நிதியங்களில் விவாதிக்கப்பட்டு அவைகளுக்கு ஏற்றாற்போல் முடிவுகளை எடுத்து அரசு செயல்பட அந்த நிதியங்கள் தங்களிடம் நிதி பெற வரும் நாடுகளிடம் பரிந்துரைகளைச் செய்து கொண்டே இருந்தன.

பன்னாட்டு நிதியத்தை நிதி உதவிக்காக நாடுகள் அணுகியபோது, அவைகளுக்குத் தரப்பட்ட செயல்பாட்டுத் திட்டம் நிர்வாகச் சீர்திருத்தம். அதன் விளைவுதான் சேமிப்பை ஊக்கப்படுத்தாமல் செலவை ஊக்கப்படுத்தும் திட்டங்கள். அதன் விளைவுதான் 6வது ஊதியக்குழுவின் பரிந்துரை நிறைவேற்றம். அதன் விளைவுதான் வீடுகட்ட, மகிழுந்து வாங்க, பைக் வாங்க, கட்டிய வீட்டில் மாடிகட்ட, மனை வாங்க என்று கடன் அள்ளி அள்ளிக் கொடுத்து நடுத்தர வர்க்கத்தை தவணை முறை வாழ்க்கை முறையை நோக்கி நகர்த்தியது. அதே நேரத்தில் தங்கு தடையின்றி நுகர்வுக்கான பொருள்களை சந்தைப்படுத்துவதில் இருந்த தடைகளை நீக்கி நியூயார்க் மென்காட்டன் பகுதியில் விற்கும் ஒரு பொருள் இந்தியாவில் கடைக்கோடி கிராம அங்காடியில் விற்கப்படும் அளவுக்கு வந்து சேர ஆவண செய்ய வேண்டும் என்பது தான் அந்தப் பரிந்துரை. இந்த இரண்டு நிகழ்வும் பெரும் வெள்ளம்போல் எங்கும் வந்து இறங்கியது. நுகர்வுப் பொருள்கள் சந்தைக்குள் வரும்பொழுது, ஏழைகளின் கைகளிலும் பணம் புழக்கத்தைக் கொண்டு வந்தனர். நடுத்தர வர்க்கத்தின் சம்பளம் கூடியது, வருமானமும் கூடியது. சந்தை இந்த இரு வர்க்கத்தையும் ஈர்த்துக் கொண்டது. இதன் விளைவு சமூகப்பார்வை கொண்ட ஏழைகளின் ஒரு பகுதியையும், ஒட்டுமொத்த நடுத்தர வர்க்கத்தையும் தன்வயப்படுத்திக் கொண்டு, சுயநலம் பேணும் மனிதர்களாக அவர்களை மாற்றிவிட்டது சந்தை. ஆசிரியரானாலும் சரி, மருத்துவரானாலும் சரி, வழக்கறிஞரானாலும் சரி அனைவரும் எனக்கு என்ன வரும் என்ற சிந்தனையில் செயல்பட வைத்து விட்டது. நுகர்வில் மயங்க வைத்துவிட்டது. ஏழைகளை நுகர்வு வெறியில் சிக்க வைத்துவிட்டது.

ஆறாவது சம்பளக் குழுவின் பரிந்துரை நிறைவேற்றம், நடுத்தட்டு மக்களின் பணப் புழக்கம் அதிகமாகி, அதிலிருந்து வருமானம் ஈட்டும் நிலைக்கு அவர்களை கடத்திச் சென்று விட்டது. இதன் விளைவு நடுத்தர வர்க்கத்திடம் ஒரு புதிய குணம், நடத்தை, பார்வை, செயல் அனைத்தும் வந்துவிட்டன. சமூகச் சிந்தனையற்று தன்னிடம் வரும் நபர்களுக்கு நாம் செய்யும் பணியை நிறைவாக முறையாகச் செய்வதுதான் தன் பொறுப்பு, கடமை என்ற நிலையிலிருந்து, தன் வருமானத்தை எப்படி உயர்த்திக் கொள்ளலாம் என்ற பார்வை வந்து, அனைத்து அறமிழந்த செயல்களிலும் ஈடுபடலாயினர். அனைத்து செயல்பாடுகளும் காசு பார்க்கும், லாபம் ஈட்டும் செயல்களாக மாற்றப்பட்டு, அறம் இழந்து செயல்படுவது மனச்சாட்சிக்கு விரோதமானது என்று எண்ணும் மன ஓட்டம் மறைந்தது.

இன்றைய நடுத்தர வர்க்கம் எந்த சமூகச் சிந்தனையும் அற்று சுயநலம் தேடும் கூட்டமாக மாறிவிட்டது. இதனை எப்படி மாற்றுவது என்று அனைவரும் பேசி வருகின்றனர். நீண்ட நாட்கள் சந்தையும் சமூகச் சிந்தனையற்றுத்தான் செயல்பட்டு வந்தது. அந்த சிந்தனையை மாற்றியமைக்க வந்ததுதான் கார்ப்பரேட்டின் சமூகப் பொறுப்பு என்ற சிந்தனையைக் கொண்டுவர கம்பெனிச் சட்டம் திருத்தயமைக்கப்பட்டது. நடுத்தர வர்க்கம் மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகத்தின் சிந்தனைப்போக்கை மாற்றியமைக்க எது சிறந்த கருவி என்று ஆய்வு செய்கையில் பலரால் பரிந்துரைக்கப்பட்டது கல்விதான். எனவே கல்வியின் மூலம் இந்த மாற்றத்தைச் செய்ய ஒரு வாய்ப்பு இருக்கின்றது என எண்ணி உயர் கல்வியில் ஒரு புதிய அணுகுமுறையைப் புகுத்தியுள்ளனர். சமூகத்திற்கும், உயர்கல்வி நிலையங்களுக்கும் ஓர் உயிரோட்டமான தொடர்பினை உருவாக்கி சமூகத்துடன் உயர்கல்வி நிறுவனங்களை செயல்பட வைத்துள்ளது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. அதற்கான பிரத்தியேகத் திட்டத்தையே உன்னத் பாரத் அபியான் என்ற பெயரில் உருவாக்கியுள்ளது. இன்றைய சூழலில் நம் நடுத்தர வர்க்கம் தன் வீடு, தன் குடும்பம், தன் குழந்தை, தன் வருமானம் இவைகளைத் தாண்டி செயல்பட இயலவில்லை. இந்தச் சூழல் மாற்றப்பட வேண்டிய சூழல். அதனை உருவாக்க நாம் எங்கெல்லாம் நல்ல பணிகள் நடக்கிறதோ அங்கெல்லாம் நாம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். நான் பணி செய்கின்ற காலத்தில் இருந்ததைவிட இன்று அதிகமான பணிகளில் என்னை ஈடுபடுத்திச் செயல்பட்டுக் கொண்டு வருகிறேன். அதுதான் இன்று நமக்குத் தேவை" என்று முடித்தேன். நல்ல வழிகாட்டுதல் நாங்களும் உங்களுடன் இணைகின்றோம் என்று கூறிவிட்டு என் நண்பர்கள் தங்கள் ஊருக்குச் செல்ல பேருந்து நிலையம் புறப்பட்டனர்.

●

**கட்டுரையாளர்: பேராசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: சு.இராமசுப்பிரமணியன்

# கோடியர், உமணர் வண்டிப்பயணம்



"கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியரும்" என்று தொடங்கும் தொல்காப்பியப்பாடல் (புறத்திணை-36) பண்டைத்தமிழகத்தில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த நால்வகைக் கலைஞர்கள்பற்றி குறிப்பிடுகிறது. கூத்தாடுவதில் வல்லவர் கூத்தர். இசைத்தமிழில் தேர்ச்சியும், இசைக்கருவிகளை மீட்டிக்கொண்டே பாடும் வல்லமையும் பெற்றவர்கள் பாணர். ஏர்க்களத்திலும், போர்க்களத்திலும் சென்று பாடும் வல்லமைபெற்றவர்கள் பொருநர். அகத்து உணர்ச்சிகளைப் புறத்தில் நடித்துக்காட்டும் திறன்கொண்டவர்கள் விறலியர். இந்த நால்வகைக் கலைஞருமே ஓரிடத்தில் நிலையாகத்தங்கி வாழாமல், நாடோடி வாழ்க்கை வாழ்பவர்கள்.

**கோடியர் கூத்து :**

கூத்தர்களில் ஒரு பிரிவினரான கோடியர்களைப்பற்றிய தகவல்கள் சங்க இலக்கியப்பாடல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

"அருவிலை நறும்பூ தூஉய்த் தெருவில்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் தீந்தொடை ஓர்க்கும்"
(பட்டினப்பாலை, வரிகள் 252 - 254)

கூத்தர் தங்கியிருந்த தெருவில் அரிய விலைகொடுத்து வாங்கிய நல்ல மணமுள்ள மலர்களைத் தூவினர். அறிவுசால் கூத்தர், முழவுகள் முழங்க யாழின் நரப்புகளிலிருந்து இசை ஒலிக்க, இனியப் பாடல்களைப்பாடி விழா கொண்டாடினர். அவர்கள் அவ்விடத்தைவிட்டு நீங்கியபிறகு அம்மன்றம் பொலிவிழந்துவிட்டது..

"கோடியர் தலைவ ! கொண்டது
அறிந"(பொருநராற்றுப்படை, வரி 57)

'கூத்தர்களின் தலைவனே, வருங்காலத்தைஅறிந்து சொல்பவனே கேள்' என்று பரிசுபெற்றவன், மற்றவனை மன்னனிடம் ஆற்றுப்படுத்துகிறான்.

"கோடியர் விழவின் முன்னர் ஆடல்"
(பதிற்றுப்பத்து, பாடல்-56)

மன்னன் சேரலாதன், சினம்கொண்டுப் போர்க்களத்தில் பகைவர்களொடு வாள்வீசி ஆடுவான். மாறாக பேரூர்களின் விழாக்களில் கோடியரின் முழவொலிக்கு இணங்க ஆடும் வல்லமை அவனுக்கில்லை. ஒருவிதத்தில் இது வஞ்சப்புகழ்ச்சிஆகும்.

"பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பிச்"
(குறுந்தொகை, பாடல் 23)

பெரியமலையின் உச்சியிலிருந்து பெருக்கெடுத்து வீழும் அருவி ஏற்படுத்தும் ஓசைக்கு அறிவுநிரம்பிய கோடியர் இசைக்கும் முழவின் ஒலி உவமை சொல்லப்பட்டிருக்கிறது.

"தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்"
(அகம். பாடல் 111)
கோடியர் இசைக்கும் 'தூம்பு' என்னும் இசைக்கருவி எழுப்பும் ஓசைபோல்.
"கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்"-
(மதுரைக்காஞ்சி, வரி - 523)
"கடும்பறைக் கோடியர் மகாஅர் அன்ன"-
(மலைபடுகடாம், வரி - 236)

ஊர்களில் தங்கியிருந்து, ஊர்மன்றங்களில் கோடியர் நிகழ்த்தும் கூத்தும், அவர்கள் இசைக்கும் முழவிலிருந்தும், யாழிலிருந்தும் எழும் ஒலியும், கூத்தரின் பாடலும், விறலியரின் ஆடலும் அம்மன்றங்களை விழாக்கோலம்கொண்டதாக மாற்றிவிடும். நாடோடிகளான கோடியர் ஓர் ஊரில் கூத்தை முடித்துக்கொண்டு, இன்னொரு ஊருக்குப் பயணம் புறப்பட்ட பிறகு, அவ்வூர் மன்றங்கள் பொலிவிழந்துவிடும்.நறுமணம்கொண்ட மலர்கள் தூவப்பட்ட தெருக்களில், அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றபிறகு நெருஞ்சி முளைத்துவிடுவதாகவும் பாடல்களிலிருந்து புரிந்துகொள்ளமுடிகிறது.

**கோடியரின் வண்டிப்பயணம்:**

தலைவன் பிரிவால் தலைவி வாடுகிறாள். அவளது வாட்டத்தைப் போக்க தோழி முயல்கிறாள். தோழிக்குத் தலைவி மறுமொழி சொல்வதுபோன்று அமைந்த அகநானூற்றுப்பாடலில் கோடியர் பெண்களையும், சிறுவர்களையும், இசைக்கருவிகளையும் வண்டியில் ஏற்றிவிட்டு, ஆண்கள் பாதுகாப்பாக நடந்துசென்ற காட்சி நம் கண்முன் விரிகிறது.

**"வறன்உறு செய்யின் வாடுபு வருந்தி**
**படர்மிகப் பிரிந்தோர் உள்ளுபு நினைத்தல்**
**சிறுநனி ஆன்றிகம் என்றி - தோழி**
**நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம்**
**ஒடிவை இன்றி ஓம்பாது உண்டு**
**நீர்வாழ் முதலை ஆவித் தன்ன**
**ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து**
**ஊர் இஃது என்னா, ஊறுஇல் வாழ்க்கை**
**- - - - - - - - - - - -**
**பல்ஊர் பெயர்வனர் ஆடி, ஒல்லென**
**தலைப்புணர்த்து அசைத்த பல்தொகைக்**
**கலப்பையர்**
**இரும்பேர் ஒக்கல் கோடியர் இறந்த**
**புந்தலை மன்றம் காணின், வழிநாள்**
**அழுங்கல் மூதூர்க்கு இன்னா தாகும் "**
**- (அகநானூறு, பாடல் 301)**

கோடியர் என்னும் இசைக்கலைஞர்கள் ஓர் ஊரில், பொதுமன்றத்தில் கூடாரம் அடித்துத் தங்குவார்கள். இசை, நாட்டியக் கலைகளால் அவ்வூர் மக்களை மகிழ்ச்சிக்குள்ளாக்குவர். அவர்களது கலைத்திறனுக்குப் பரிசிலாக ஊர்மக்கள்தரும் சிறிய உணவினை மறுநாள் வேண்டும் என்று வைத்துக்கொள்ளாமல் உண்டுமுடிக்கும் உயர்ந்த குணம்படைத்தவர்கள்.

அந்த ஊரில்கூத்துக்கலையை முடித்துக்கொண்டு அடுத்த ஊருக்குப் பயணம் செல்வர். நீர்வாழ்முதலை வாயைத்திறந்தாற்போல பாயால் வேயப்பெற்ற வண்டியில் பெண்களும், சிறுவர்களும் பயணம் செய்வர். ஆண்கள் நடந்தே செல்வர். ஊர்விட்டு ஊர்செல்லும்போது வெம்மை மிகுந்த பாலைவழியில் பயணம் செய்ததால் ஏற்பட்ட களைப்பைப் போக்கிக்கொள்ள மரங்களின் நிழலில் தங்குவர்.

அவர்களது கைகளில் தெள்ளிய கிணைப்பறை ஒலித்து இனிய ஓசையை எழுப்பும். எருக்கம்பூக்களால் ஆன கண்ணியை ஆண்களும், ஆவாரம்பூக் கண்ணியைப் பெண்களும் தலைகளில் அணிந்திருப்பர். சிறுவங்கியம், பெருவங்கியம் இணைந்து இசைக்கும்போது பெண்யானையின் மூச்சோடு ஆண்யானையின் மூச்சொலி சேர்ந்தாற்போல இருக்கும். இவற்றோடு முளவின் ஓசையும் சேர்ந்துகொள்வதால் எழும் இசையொலி மேகம் எழுப்பும் இடியோசைபோல இருக்கும். அதில் நீர்த்திவலைகள் எழுப்பும் ஒலிபோல ஒரு தாளம் அமைந்திருக்கும். சிறுசிறு பரல்கள் ஒலிக்கும் வேறுசில இசைக்கருவிகளும் இருக்கும். இவை அனைத்தையும் ஒன்றாகக்கட்டிவைத்திருப்பர். அந்தப்பொதி, 'கலப்பையர்' எனப்படும். அதனை வண்டியில் தொங்கவிட்டுக்கொண்டு அடுத்த ஊர்நோக்கிச் செல்வர்.

பெரும் சுற்றத்தை உடைய கோடியர் ஓர் ஊரில் கூத்தை முடித்துக்கொண்டு அடுத்த ஊருக்குச்சென்ற மறுநாள், அவ்வூர் மன்றம் பொலிவிழந்து காணப்படும். அதுபோன்றுதான் தலைவனைப் பிரிந்த தலைவிக்கு மாலைப்பொழுது தோன்றுகிறது. அகநானூறு *301*-வது பாடல் வரிகள் கோடியரின் இசை, கூத்து, வண்டிப்பயணம் ஆகியவற்றைக் காட்சிகளாக நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன.

**உமணர் :**

உமணர் நெய்தல் நிலத்தில் விளையும் வெண்கல் உப்பை மாட்டுவண்டிகளில் கொண்டுசென்று மருதநிலத்தில் உப்புக்கு-நெல் என்று பண்டமாற்று வணிகம் செய்தவர்கள். உப்பைவிற்றுப்பெற்ற நெல்லை அதே மாட்டுவண்டிகளில் மீண்டும் நெய்தல் நிலத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றனர். இப்படியாக உமணர்களால் உப்பானது சமவெளிக்கு வந்தது. சமவெளியிலிருந்து நெல் கடற்கரைக்கு வந்தது.

கோடியர்போலவே உமணரும் தம் சுற்றத்தினருடன் (ஒக்கலொடு) ஊர் ஊராகச் சென்று தங்கி உப்புவணிகம் செய்திருக்கின்றனர் என்பதை நற்றிணை *183*-வது பாடல் வெளிப்படுத்துகிறது.

**"தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி**
**நெடுநெறி ஒழுகை நிலவுமணல் நீந்தி**
**அவணுறை முனிந்த ஒக்கலொடு புலம்பெயர்ந்து**
**உமணர் போகலும் இன்னா தாகும்"**
**- (நற்றிணை , பாடல் 183)**

கோடியர் ஓர் ஊரைவிட்டு நீங்கும்போது அவ்வூர் மன்றம் எப்படிப் பொலிவிழக்குமோ அதுபோலவே உமணர் நீங்கியபிறகும் அந்த ஊர் பொலிவிழந்து காணப்பட்டதாக இப்பாடலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகள் காட்சிப்படுத்துகின்றன.

காட்டுவழிப்பயணத்தில் கள்வர்கள் இடையூறு இருந்த காரணத்தால், உப்புப்பாரம் ஏற்றிய பல உமணர் வண்டிகள் சேர்ந்து அணியாகச் சென்றிருக்கின்றனர்.

**"ஈத்திலைக் குப்பை ஏறி உமணர்**
**உப்பொய் ஒழுகை எண்ணுப மாதே"**
**(புறம். 116)**

வீட்டு முற்றத்தில் சேர்ந்திருக்கும் ஈந்த இலைக்குப்பைமேட்டின்மீது ஏறிநின்று உமணர் உப்பு வண்டிகளை எண்ணும் மகளிர்.

**"பல்வெறுத் துமணர் பதிபோகு நெடுநெறி**
**எல்லிடைக் கழியுநகர்க் கேம மாக"**
**(வரிகள், 65 – 66)**

உப்பு வணிகர் பயணிக்கும் பாதையில், அவர்களோடு சேர்ந்து பயணிப்பது பாதுகாப்பானது என்று ஆற்றுப்படுத்தும் பெரும்பாணன் அறிவுறுத்துகிறான்.

**" நீர்இல் அத்தத்து ஆர்இடை மடுத்த**
**கொடுங்கோல் உமணர், பகடுதெழி தெள்விளை"-**
**(அகம். 17)**

நீரின்றி வறண்ட காட்டுவழியில் வண்டிகள் ஓட்டும் உமணர்கள் தங்கள் மாடுகளை அதட்டும் ஒலி பக்கத்து மலைகளில்பட்டு எதிரொலிக்கும். அப்படிப்பட்டக் காட்டுவழியில் தலவன் பயணித்திருக்கிறான்.

**உமணர் உப்புவண்டி :**

கோடியரின் வண்டிகளை விடவும் உமணர்களின் வண்டிகள் உறுதியான மரங்களினால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. காரணம், கோடியர் வண்டிகளைவிட உமணர்களின் வண்டிகளில் ஏற்றப்படும் உப்பு, நெல்லின் பாரம் அதிகம்.

அவர்களது வண்டியின் அமைப்பானது, பெரும்பாணாற்றுப்படையில் விளக்கமாகச் சொல்லப்படுகிறது.

**"குழுஞ்சூட்டு அருந்திய திருந்துநிலை ஆரத்து**
**முழவின் அன்ன முழுமர உருளி**
**எழூஉப் புணர்ந்தன்ன பரூஉக்கை நோன்பார்**
**மாரிக் குன்றம் மழை சுமந் தன்ன**
**ஆரை வேய்ந்த அரைவாய்ச் சகடம்**
**-------------------------------------------**
**தளையறைச் சீறுரல் தூங்கத் தூக்கி**
**நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த**
**------------ ----------------------------**
**சில்பத உணவின் கொள்ளை சாற்றி**
**பலஎருத்து உமணர் பதிபோகு நெடுநெறி"**
**(பெரும்பாணாற்றுப்படை, வரிகள் 46 – 65)**

**வண்டியின் அமைப்பு:**

உப்புப் பாரத்தைத் தாங்கும் வகையில் உமணர் பயன்படுத்திய வண்டிகளின் சக்கரங்கள் வலுமிகுந்தவையாக இருந்தன. வட்ட வடிவம் பெறுவதற்காக, வண்டிச்சக்கரத்தின் விளிம்பு, வளைந்த மரச்சட்டங்களால் செய்யப்பட்டிருந்தன. ஒரே மரத்தில் குடம் செய்யப்பட்டிருந்தது. அது சக்கரத்தின் மையத்தில் இருந்தது. முழவு என்னும் இசைக்கருவியின் வடிவை ஒத்திருந்தது. வண்டியின் பாரத்தைத் தாங்கும் அச்சுக்கோல், இருபுறமும் இந்த குடங்களை ஊடுருவி வெளியேறியிருக்கும். குடத்திற்கு வெளிப்புறமாக சக்கரங்கள் நழுவிவிடாமல் தடுக்கும்வகையில் அச்சாணிகளைச் செருகியிருப்பார்கள். பழங்காலத்தில் குடத்திற்குக் 'குறடு' என்று பெயர்.

உறுதியான நீண்டமரச்சட்டம் *(pole)* நீளவாக்கில் கிடந்தது. அதன் இருபுறமும் வேறு இரண்டு மரச்சட்டங்கள் பக்கத்திற்கு ஒன்றாக வண்டியை நெடுஞ்சட்டத்தின் முனையில் இணைக்கப்பட்டிருந்தன. அங்குதான் நுகத்தடி பிணைக்கப்பட்டிருந்தது. அந்த நுகத்தடியில்தான், நெடுமரச்சட்டத்திற்கு இருபுறமும் இரண்டு மாடுகள் கட்டப்படும். வண்டி, மலைபோல் பெரிதாக இருந்தது. கூந்தல்பனையின் ஓலையிலிருந்து முடையப்பட்ட பாய், வண்டியின் மேற்கூரையாக விரித்துக்கட்டப்பட்டிருந்தது. அது மேகம்போல் காட்சியளித்தது.

கூறைவேய்ந்த வண்டியில் சிறு பரண் இருந்தது. அதில் கோழிக்கூடுகள் இருந்தன. துளையை உடைய கல்லுரல் வண்டியின் முன்புறம் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. வண்டியின் முன்பகுதியில், முழவு வடிவில் இருந்த உமணர் உணவுப் பொருட்களைக்கொண்ட பானை, நாடக மகளிர் பயன்படுத்தும் வார்களால் வண்டியோடுசேர்த்து இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட வண்டியை மடியில் குழந்தையுடன் உமணர் பெண் செலுத்திக்கொண்டிருந்தாள். மனக்கண்முன் இக்காட்சியைக் கொண்டுவரும்போது எத்தனை அழகாக இருக்கிறது.

சங்ககாலத்தமிழகத்தில், பெண்கள் ஆண்களுக்கு இணையாக வேலைசெய்திருக்கிறார்கள் என்பதற்கு, மடியில் கைக்குழந்தையோடு வண்டி ஓட்டிய உமணர் பெண்ணே சான்று.

உப்புக்கு விலைசொல்லி விற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்வலுமிகுந்த உமணர்கள், கைகளில் கோல்களுடன் , வண்டியின் இருமருங்கிலும் பாதுகாவலாக நடந்து செல்கிறார்கள். அவர்கள் இடையிடையே வேம்பின் தழைகளைக்கட்டிய ஆரம் தரித்திருந்தனர். அதற்கும் ஏதேனும் காரணம் இருந்திருக்கக்கூடும். நுகத்தடியில் கட்டப்பட்ட மாடுகள் விலகிச்செல்லாமல் சாலையில் பயணிக்க, அருகில் நடந்துவந்த மக்கள் கவனித்துக்கொண்டனர். வண்டியில் ஏற்றப்பட்டிருந்த உப்பை விற்று, தங்களுக்குத் தேவையான பொருட்களை பெற்றுக்கொண்டனர். இப்படியாக, உமணர் வண்டிப்பயணம் அமைந்தது.

**சேம அச்சு:**

உப்பு விற்கும் உமணர்கள், வண்டியில் பாரம் அதிகமாக ஏற்றியிருப்பார்கள். மேடுபள்ளத்தில் வண்டி ஏறி இறங்கும்போது மாட்டிற்குக் கழுத்துவலி வராமல் தடுக்க வண்டியின் பின்புறம் ஒருகட்டையைக்கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள். (சிறுவயதில் எங்கள் ஊர்களில் வயலுக்கு உரம் ஏற்றிச்செல்லும் வண்டிகளில் இதனை நான் பார்த்திருக்கிறேன்). அந்தக் கட்டையை, 'சேம அச்சு' என்று சங்க காலத்தில் அழைத்திருக்கின்றனர். இச்செய்தியை 112-வது புறநானூற்றுப்பாடலிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

**"எருதே இளைய, நுகம் உண ராவே**
**சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே**
**அவல் இழியினும், மிசை ஏறினும்,**
**அவனது அளியுநர் யார்? என, உமணர்**
**கீழ்மரத்து யாத்த சேம அச்சு அன்ன**
**இசை விளங்கு கவிகை நெடியோய்! திங்கள்**
**நாள்நிறை மதியத்து அணையை, இருள்**
**யாவண தோ, நின் நிழல்வாழ் வோர்க்கே?"**
**(புறம். 102)**

சேம அச்சு வண்டியிழுக்கும் மாடுகளைப் பாதுகாப்பதுபோல , மன்னன் அதியமான் நெடுமானஞ்சி மக்களையும், புலவர்களையும் காத்துவருவதாகப் பெருமைப்படுத்திப் பாடுகிறார் பெண்பாற்புலவர் ஔவையார்.

சங்க இலக்கியம் முழுவதும் பரவிக்கிடக்கும் அன்றையத் தமிழரின் தொழில்நுட்ப அறிவுக்கு இதுவும் ஓர் சான்றாகும்.

**உடைந்த உமணர் வண்டி:**

விற்பதற்காக உப்பு ஏற்றிச்செல்லும் உமணர் வண்டி, வழியில் உடைந்துவிடுவதும் நிகழ்ந்திருக்கிறது. அப்படி உடைந்த வண்டியைச் சரிசெய்யமுடியாது என்பதால் அங்கேயே விட்டுவிட்டுச் சென்றிருக்கின்றனர். அப்படி உமணர் விட்டுச்சென்ற உடைந்தவண்டியை, முட்டையிட்டுத் தன் குஞ்சுகளை வளர்ப்பதற்குப் பயன்படுத்தியிருக்கிறது நாரை.

**""கணங்கொள் உமணருயங் குவயின் ஒழித்த**
**பண்அழி பழம்பார் வெண்குருகு ஈனும்"-**
**(நற்றிணை, பாடல் 138)**

**மாட்டுவண்டியும், தொழில்நுட்பமும்:**

ஒரு மாட்டுவண்டி என்று வைத்துக்கொண்டால்கூட, அதனைக் கட்டமைப்பதற்கு எத்தனை அறிவியல் அறிவும், தொழில்நுட்ப அறிவும் தேவைப்படுகிறது. சக்கரங்களை உருவாக்க வட்டம்பற்றிய அறிவும் தெளிவும் வேண்டும். சக்கரங்கள் முழுமையான வட்டவடிவில் இருக்கவேண்டும் என்பதோடு, சிறிய அளவிலான வேறுபாடுகூட இல்லாமல் இரண்டு சக்கரங்களும் அளவிலும், எடையிலும் சமமாக இருக்கவேண்டும். இரண்டு சக்கரங்களும் (நெல்லையில் பைதா, குமரியில் பைசா) சம ஆரம்கொண்டவையாக இருக்கவேண்டும். இரண்டு சக்கரங்களும், வண்டியின் நெடுமரத்திலிருந்து இருபுறமும் சமதொலைவில் இருக்கவேண்டும். அவை உறுதியாகவும் இருக்கவேண்டும். குடம், ஆரக்கால்கள், ஆரக்கால்களைத்தாங்கும் விளிம்புமரச்சட்டங்கள் ஒவ்வொன்றும் நேர்த்தியாக, துல்லியமாக வடிவமைக்கப்படல் வேண்டும்.

மாட்டுவண்டியின் நெடுமரம் (pole), மாடுகளைப்பூட்டும் நுகத்தடி, குறுக்குச்சட்டங்கள், சக்கரம், ஆரக்கால், குடம் இப்படி வண்டியின் ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வொரு மரத்தினால் செய்யப்பட்டிருக்கிறது என்பது பழந்தமிழரின் தொழில்நுட்ப அறிவை நமக்குப் பறைசாற்றுகிறது. சங்க இலக்கியப் பாடல்களை வாசிக்கும்போது, அன்றைய தமிழர்கள் பயன்படுத்திய இதுபோன்ற பல அறிவியல், தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளமுடிகிறது. அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி என்பது ஒன்றிலிருந்து மற்றொன்று என்பதுதான். அந்தவகையில் இன்று என்னதான் நாம் முன்னேறியதாகச் சொல்லிக்கொண்டாலும், அனைத்துக்குமே அடித்தளமாக இருப்பது பண்டைய மனிதர்களின் அறிவுத்தொடர்ச்சியே ஆகும்.

●

*கட்டுரையாளர்: பேராசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: அ.கா.பெருமாள்

# நாஞ்சில் வெண்பா

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பு எழுத்தாளர் நாஞ்சில் நாடன் நாகர்கோவிலில் ஒரு மாதத்திற்கு மேல் அவரது தம்பி வீட்டில் இருந்தார். பெரும்பாலும் தினமும் அவரை நான் சந்தித்தேன். ஒவ்வொரு நாளும் இலக்கியம், பண்பாடு, நாட்டுப்புற இயல் என பல விஷயங்களைப் பேசினோம்.

ஒருமுறை தமிழ் அறிஞர் கே.என்.சிவராஜ பிள்ளை பற்றிப் பேச்சு வந்தது. நான் கே.என். எஸ். பற்றி (1879-1941) எழுத்தாளர் சுந்தரராமசாமி சொன்ன சில விஷயங்களைச் சொன்னேன். தென் திருவிதாங்கூரின் தொழிலதிபரான பயோனியர் குமாரசுவாமி சிவராஜ பிள்ளையைச் சந்திக்கப் போயிருக்கிறார். அவருக்குப் பிடித்தமான பரிசுப் பொருட்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார். இப்படி ஒரு செய்தி உண்டு என்று சொன்னேன்.

சிவராஜ பிள்ளை நாகர்கோவிலில் இருந்த காலகட்டத்தில் (1936-1941) கவிமணி நாகர்கோவிலை அடுத்த புத்தேரி என்ற ஊரில் வாழ்ந்திருக்கிறார். கவிமணியைச் சந்திக்க வந்த நடிகர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், அரசியல்வாதிகள், பெரிய பதவியில் இருந்தவர்கள்.

இத்தனைக்கும் கேஎன்எஸ் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் அருமையான நூல்களை எழுதி இருக்கிறார். அவரது ஆராய்ச்சிக்கு அந்தக் காலத்தில் எதிர்ப்பு இருந்தது. வையாபுரிப் பிள்ளையைப் போல் தமிழ் இலக்கியங்களின் காலத்தைப் பின்னே கொண்டு சென்றதும் தமிழ்ச் சங்கம் கிடையாது, அது கற்பனையானது என்று கூறியதும் அறிஞர்கள் அவரைச் சந்திக்காமல் போனதற்குக் காரணமாக இருக்கலாம்.

கேஎன்எஸ் தன் சமகாலத் தமிழ் இலக்கியங்கள் பற்றி அறிந்திருக்கிறார். அதைப் பிரக்ஞையோடு வெளிப்படுத்தி அணுகியிருக்கிறார். அகத்தியரைப் பற்றி ஆங்கிலத்தில் அவர் எழுதிய நூல் முக்கியமான ஒன்று. உலகம் முழுக்க இருந்த அகத்தியர் தொன்மத்தை அப்போது சேகரித்திருக்கிறார்.

இதை எல்லாம் நான் நாஞ்சில் நாடனிடம் சொல்லிவிட்டு சிவராஜ பிள்ளை எழுதிய 'நாஞ்சில் வெண்பா' என்ற சிறு கவிதை நூலைப் பற்றிச் சொன்னேன். அதைப் பற்றி அவருக்குத் தெரியவில்லை. வேறு பலரிடமும் நான் அதைப் பற்றி சொன்ன போதும் அது பலர் அறியாதது என்று தெரிந்தது.

சிவராஜ பிள்ளையின் நூற்றாண்டு விழா (1979) விடுதலைப் போராட்டத் தியாகியும் 'கன்னியாகுமரி' பத்திரிகையின் ஆசிரியருமான பி.எஸ்.மணியின் தலைமையில் நாகர்கோவில் கோட்டாறு தேசிக விநாயகம் தேவஸ்தானம் பள்ளியில் நடந்தது. நான் பார்வையாளனாக இருந்தேன்.

அப்போது சிவராஜ பிள்ளையைப் பற்றி நாகர்கோவில் சிதம்பரநகர் தெருவைச் சார்ந்த ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர் ஒருவர் பேசினார். அவர் வயது மிக முதிர்ந்தவர். அப்போது 85க்கு மேல் இருக்கலாம் சிவராஜ பிள்ளை கடைசிக் காலத்தில் குடியிருந்த சிதம்பரநகர் தெருவில் அவரும் இருந்தார். அதனால் சிவராஜ் பிள்ளையைப் பற்றிப் பல விஷயங்களை அவர் அன்று சொன்னார்.

அன்று கூட்டத்தில் பேசிய விஷயங்களில் சிவராஜ பிள்ளை 'நாஞ்சில் வெண்பா' என்ற நூலை 1930 இல் எழுதி 1935 இல் வெளியிட்டு இருக்கிறார். மிகக் குறைவான பிரதிகளை அப்போது அச்சடித்திருக்கிறார். அவர் இறந்த பிறகும் அந்தப் பிரதிகள் இருந்தன என்ற செய்தி பேசப்பட்டது. சிவராஜ பிள்ளை எழுதிய வெளிவராத 'தமிழ்ச் சொல் ஆராய்ச்சி' என்ற நூலும் அன்று வெளியிடப்பட்டது.

சிவராஜ பிள்ளையின் மருமகன் முறையினரான தியாகி பி.எஸ்.மணி என்னுடைய உறவினரும் கூட. அதனால் அவரிடம் நான் நாஞ்சில் வெண்பாவைப் பற்றிக் கேட்டேன். அவர் நாளைக்குக் காலையில் என் வீட்டுக்கு வா, தேடித் தருகிறேன் என்றார். அடுத்த நாள் போனேன் ரொம்ப நேரம் தேடினார். ஆனால் கிடைக்கவில்லை.

இந்த நிகழ்ச்சி முடிந்து இருபது வருடங்களுக்குப் பின் நாஞ்சில் வெண்பாவின் ஒரு பிரதியை பி. எஸ்.மணியின் மகன் எனக்குத் தந்தார். நான் அப்போது அந்த நூலை முழுதுமாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவராஜ பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறையில் இருந்த காலகட்டத்தில் (1926-1936) எழுதிய நூல் நாஞ்சில் வெண்பா. 43 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் 240 வெண்பாக்கள் உள்ளன. இந்த நூல் 1935ல் வெளிவந்திருக்கிறது. ஆசிரியரே வெளியிட்டிருக்கிறார். இதற்கு இரண்டு பக்க அரும்பத உரை மிகச் சுருக்கமாக உள்ளது. கவிமணியின் சாற்றுக்கவி உண்டு. காப்புச் செய்யுளுடன் நூல் ஆரம்பிக்கிறது.**

படிக்கவில்லை. ஏதோ காரணத்தால் ஒதுக்கி வைத்து விட்டேன்.

நாஞ்சில்நாடனிடம் சிவராஜ பிள்ளையின் நாஞ்சில் வெண்பா கிடைத்த நிகழ்ச்சி பற்றிப் பேச ஆரம்பித்தபோது அவர் நீங்கள் அதை வெளியிடலாம் அல்லது ஒரு கட்டுரையாக எழுதலாம் என்று சொன்னார். அப்போதும் நான் எழுதவில்லை. காலம் கடந்து கொண்டே இருந்தது.

அண்மையில் ஒரு நாள் மறுபடியும் நாஞ்சில்நாடன் நினைவுப் படுத்தினார். என்னை நாஞ்சில் வெண்பா பற்றி ஒரு கட்டுரையாவது எழுதுங்கள் என்றார். அவரின் தூண்டுதல் எனக்கு உத்வேகத்தைத் தந்தது.

சிவராஜ பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறையில் இருந்த காலகட்டத்தில் (1926-1936) எழுதிய நூல் நாஞ்சில் வெண்பா. 43 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் 240 வெண்பாக்கள் உள்ளன. இந்த நூல் 1935ல் வெளிவந்திருக்கிறது. ஆசிரியரே வெளியிட்டிருக்கிறார். இதற்கு இரண்டு பக்க அரும்பத உரை மிகச் சுருக்கமாக உள்ளது. கவிமணியின் சாற்றுக்கவி உண்டு. காப்புச் செய்யுளுடன் நூல் ஆரம்பிக்கிறது.

நாஞ்சில் நாட்டின் எல்லை, குறிஞ்சி முதலிய நானிலங்கள், மலை வளம், ஆற்றுவளம், குளங்கள், ஊர்கள், பழைய வரலாறு, வரிக் கொடுமை, நாஞ்சில் நாட்டு நிர்வாகம், நாஞ்சில் நாட்டு மக்கள், நாட்டார் தெய்வங்கள், வழிபாட்டு முறை, நாஞ்சில் நாட்டுக்கு வந்த யாசகர்கள், கலைஞர்கள் எனப் பல விஷயங்கள் பற்றியது இந்த நூல். முக்கியமாக, சமூகம் பற்றிய கரிசனையும் அறச்சீற்றமும் சிவராஜ பிள்ளைக்கு இருந்ததன் அடையாளம் நாஞ்சில் வெண்பா.

திருவிதாங்கூர் அரசருக்கு உதவியாக நாஞ்சில் நாட்டின் சட்டம் ஒழுங்கு முதலிய விஷயங்களைக் கவனித்த குடும்பம் ஒன்று இருந்தது. இந்தக் குடும்பத்தைப் பெரிய வீட்டு முதலியார் குடும்பம் என்று சொன்னார்கள். இவர்களின் வீட்டிலிருந்த 600 ஓலை ஆவணங்களைக் கவிமணி சேகரித்துத் திருவனந்தபுரம் ஆவணக் காப்பகத்திற்குக் கொடுத்திருக்கிறார். இந்த முதலியார் பற்றி சிவராஜ பிள்ளை நாசுக்காகப் பதிவு செய்திருக்கிறார். இப்பாடல் வருமாறு:

> **முதலிமார் அம்மா முழுப்பூ சணிக்காய்**
> **பதனமாய்ச் சோற்று மறைப் பான்மை – அதிசயமே**
> **கூட்டிப் பழவிறையுட் கொண்டேப்பம் விட்டிடுவார்**
> **ஏட்டினுள் ஏறா இவை.**

நாஞ்சில் நாட்டை நிர்வகித்த முதலியார் குடும்பம் ஊழல் செய்தது என்பதை முந்தைய திருவிதாங்கூர் வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்யவில்லை. அதோடு முதலியார் பரிசுத்தமானவர்கள், அரசுக்கு விசுவாசமானவர்கள் என்று காட்டி இருக்கின்றார்கள்.

முதலியார் வீட்டில் இருந்த ஆவணங்களை முதலில் எடுத்து (1905) ஆங்கிலத்தில் விரிவான கட்டுரை எழுதிய கவிமணி கூட முதலியார்களை ஊழல் பேர்வழிகள் என்று சொல்லவில்லை. சிவராஜ பிள்ளை இதில் எந்தத் தயக்கமும் காட்டாமல் அவர்களைப் பற்றிய சித்திரத்தைக் காட்டுகிறார் சிவராஜ பிள்ளைக்கு அறச்சீற்றம் இருந்தது.

நாஞ்சில் வெண்பாவின் முதல் பகுதியில் நாஞ்சில் நாட்டின் எல்லை, இயற்கை எழில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலங்களின் வளம், மலை வளம், ஆகியன பேசப்படுகின்றன. இவை முதல் 55 பாடல்களில் விவரிக்கப்படுகிறது.

பழைய கல்வெட்டுகளின் படி நாஞ்சில் நாட்டின் எல்லையானது மங்கலம் முதல் மணக்குடி வரையிலும் பன்றி வாய்க்கால் முதல் அசம்பு மலை வரையிலும் அமைந்துள்ளது. சிவராஜ பிள்ளை இதைச் சுவையாகச் சொல்லுகிறார். நால்வகை நில வர்ணனையில் மனோன்மணியம் நாடகத்தின் சாயல் உள்ளது. தொடர்ந்து நாஞ்சில் நாட்டு மழையின் சிறப்பு பற்றி இரண்டு பாடல்கள் வருகின்றன (54, 55).

அடுத்து ஆறு பாடல்களில் நாஞ்சில் நாட்டு நாட்டார் தெய்வங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். இது ஒரு வகை அறிமுகப்படுத்தல் போல் உள்ளது. அதோடு தாழக்குடி ஊர்ப் பக்கம் உள்ள தாடகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை என்னும் பெயர் உள்ள ஒரு மலையைப் பற்றிய வாய்மொழிக் கதையைக் கூறுகிறார். இராமன் தாடகையை வதம் புரிந்த இடம் தாழக்குடி.

தாடகை உடனே மலையாக மாறினாள் என்பது அந்தக் கதை. அதே ஊரில் தான் அவ்வையும் வீற்றிருக்கிறாள். பாடல் வருமாறு:

**சூடகக் கைச் சூலம் துரந்தே உயிர் துறந்த**
**தாடகையின் வேர்ப்புதவு தண் சலச - ஏடகத்து**
**தங்கும் கலைமகள் போல் அவ்வை அமர்ந்தினிவே**
**றெங்கேனும் உண்டோ இசை.**

திருவிதாங்கூர் அரசர் மூலம் திருநாளை நிறைவுடன் வாழ்த்துகிறார். தொடர்ந்து ஏரி, ஆறு, ஊர் பற்றிய வர்ணனை 27 பாடல்களில் வருகிறது.

நாஞ்சில் நாட்டின் வரலாறு 15 பாடல்களில் (91-105) சுருக்கமாகச் சொல்லப்படுகிறது தொல்காப்பியரின் சக மாணவரான அதங்கோட்டு ஆசானை நாஞ்சில் நாட்டுகாரர் என்கிறார் நூலாசிரியர். வையாபுரி பிள்ளை, அறவாணன் ஆகியோர் தொல்காப்பியரைக் கன்னியாகுமரி மாவட்டத்துக்காரர் என்று கூறுவதற்கு முன்பே இந்தக் கருத்தை கே.என்.எஸ். கூறுகிறார்.

நாஞ்சில் நாட்டின் மீது சோழர், பாண்டியர், நாயக்கர் போன்றோர் படையெடுத்ததனால் வந்த விளைவு, திருவிதாங்கூரின் உள்நாட்டுக் கலகம் ஆகியவற்றையும் வரிசைப் படுத்திக் கூறுகிறார்.

நாஞ்சில் நாட்டு மக்கள் அரசுக்குக் கொடுத்த வரிகள், வரிக் கொடுமை பற்றி வரலாற்று ஆசிரியர்கள் கூறியதை இன்னும் சற்றுக் கிண்டலான தொனியில் கேஎன்எஸ் கூறுகிறார். தன் சமகாலம், முந்திய காலம் இரண்டிலும் இருந்த வரிகள் சிலவற்றைப் பட்டியலிடுகிறார்.

காலளவு, பாட்டம், அப்புடை, வாரம், பனைமாட்டம், ஆற்றுவரி எனப் பல வரிகள் இருந்தன. அரசர் பதவி ஏற்கும் காலத்தில் நடக்கும் விழாவிற்குக் கொடுத்த வரி இரட்சபோகம். கோவில் விழாக்களில் பங்கு கொள்ள கொடுக்கப்பட்ட வரி அஞ்சாலி. ஏரிகளிலும் குளங்களிலும் நிறைந்து கிடக்கும் வண்டல் மண்ணை எடுப்பதற்கு விவசாயி, அரசாங்கத்திற்குக் கொடுத்த வரி ஊத்தைப் பாட்டம்.

இந்த மாதிரி வரிகளைச் சேகரிப்பதில் பொறுப்பில் இருந்த முதலியார் குடும்பமும் அவர்களைச் சார்ந்தவர்களும் அதிகாரிகளும் முதலைகளாக இருந்தார்கள். இவர்கள் முழு பூசணிக்காயைச் சோற்றிலே மறைத்தனர். நாஞ்சில் நாட்டில் கலியுக ராமன் பணம், அனந்தராமன் பணம், வராகன் பணம் என்ற நாணயங்கள் இருந்தன.

நாஞ்சில் நாட்டில் அப்போது நிர்வாகத்திற்காகப் பிரிக்கப்பட்டிருந்த 12 பிடாகைகள், அவற்றின் நிர்வாகம், நிர்வாகிகள் குறித்த செய்திகள் முதலியார் ஆவணங்களில் கொஞ்சமாகவே உள்ளன. திருவிதாங்கூர் வரலாற்று ஆசிரியர்களும் இது குறித்து மேம்போக்காகவே சொல்லிச் செல்கின்றனர்.

நாஞ்சில் நாட்டின் 12 பிடாகைகளையும் நாட்டுக் கூட்டம் நிர்வகித்தது. நாட்டுக் கூட்டத் தலைவர்கள் தறவாட்டுக் காரர்களாக (நில உடைமையாளர்) இருந்தனர். இது மரபு வழி வரும் பதவி. இதனால் 12 பிடாகைகள் அடங்கிய நாஞ்சில் நாடு 12 குடும்பங்களின் கைகளில் இருந்ததாகச் சொல்லலாம்.

எட்கார் தர்ஸ்டன் என்பவர் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் என்ற நூலில் நாஞ்சில் நாட்டு வேளாளர்களைப் பற்றிச் சொல்லும் போது நாட்டுக் கூட்ட அமைப்பு, நிர்வாகம் பற்றிச் சரியான தகவல்களைச் சொல்லவில்லை.

நாட்டுக் கூட்ட நிர்வாகத்தின் ஊழல் பற்றி கவிமணி 'மருமக்கள் வழிமான்மியம்' நூலிலோ ஆங்கிலத்தில் அவர் எழுதிய வேளாளர் பற்றிய தனிக் கட்டுரையிலோ சொல்லவில்லை: ஆனால் சிவராஜ பிள்ளை கொஞ்சமாகச் சொல்லுகிறார்.

நாஞ்சில் நாட்டு 12 பிடாகைகளின் தலைவராக இருந்த தறவாட்டுக்காரர்கள் அதாவது நில உடமையாளர்கள் தங்களைப் பெரும் அதிகாரங்கள் உடையவர்களாக சொல்லிக் கொண்டார்கள்.

இது மரபு வழி வரும் பதவி. இதனால் 12 பிடாகைகள் அடங்கிய நாஞ்சில் நாட்டை 12 குறிப்பிட்ட குடும்பங்களே நிர்வகித்தன. பிடாகைத் தலைவரான காரணவருக்குக் காரியஸ்தர் (*Assistant*), முதல் பிடி (*Treasurer*), கணக்கர் (*Accountant*), கரையாளர் (*Revenue Collector*), முறையான் பிள்ளை (*petty servant*), காவலர் (*Guard*), ஊர்க்காவலர் (*village Guard*) ஆகியோர் உதவினர்.

பிடாகைக்குக் கீழடங்கியது ஊர்ச் சபை. இது ஊர்க் கூட்டம் எனவும் பட்டது. ஊர்க் கூட்டத்தின் தலைவர் மூத்த பிள்ளை (இது ஒரு விருது). பிடாகைக்கு அடங்கிய ஊர்ச்சபை நாட்டுக் கூட்டத்துக்குக் கட்டுப்பட்டது.

மூத்த பிள்ளையின் பதவி நிரந்தரமானது அல்ல. ஊர்த் தலைவராக இருக்கும் மூத்த பிள்ளை நொடித்துப் போனால் அதே ஊரில் உள்ள தறவாட்டுக்காரரிடம் மூத்த பிள்ளை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாஞ்சில் நாட்டில் வேளாளர்களிடம் வழக்கில் இருந்த மருமக்கள் வழியைப் பற்றி ஏழு பாடல்களில் கூறுகிறார். இதனால் ஏற்பட்ட துயரத்தை விவரிக்கிறார். ஆனால் இந்த வழி சட்டப்படி 1926 இல் மறைந்து விட்டது. இதன் பிறகுதான் நாஞ்சில் வெண்பா வெளிவந்து இருக்கிறது. ஒருவேளை இந்தப் பாடல்களை 1926 க்கு முன் எழுதி இருக்கலாம். பின்னர் தன் நூலில் சேர்த்திருக்கலாம்.**

விருதை விலைக்குக் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்த ஒரு விருதின் விலை 140 பணம் என்று பழைய பாடல் கூறும். இன்றைக்கு இது 20 ரூபாய்.

மூத்த பிள்ளைக்கு ஊரில் இரட்டை வரி உண்டு. ஊர்க் கோவிலில் இருந்து இரண்டு பங்கு பிரசாதமும் வரும். சிவராஜ பிள்ளை மூத்த பிள்ளைகளைக் கிண்டலாகவே கூறுகிறார். இவர்கள் 32 அறங்கள் செய்பவர். இந்தப் பட்டம் கிடைப்பதற்காக ஏங்குகின்றவர், திட்டமிடுகின்றவர். இவர்கள் தங்களைக் கொடையாளிகளாகக் காட்டிக் கொள்வார்கள். தாங்கள் செய்யும் பாவத்தைத் தீர்ப்பதற்குத்தான் இவர்கள் தானம் கொடுக்கிறார்கள் என்பது சரியல்ல. உண்மையில் இவர்களுக்கு மாகாணி அளவு தான் கருணை, இரக்கம் இருக்கின்றன. இதை நாஞ்சில் வெண்பா,

> **மூத்த பிள்ளை யாரோ காண் முப்பத்திரெண்டு அறமும்**
> **காத்திருந்து செய்யும் கடமை உள்ளார் – ஆத்திரமாய்**
> **பட்டம் மகிழ்ந்தார் அப்பட்டத்தை பற்றி வரும்**
> **திட்டத்தை ஏனோ செய்யார்?**

என்று கூறும்.

நாஞ்சில் நாட்டில் திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தர்மபுரம் ஆகிய மூன்று சைவ மடங்கள் உள்ளன. மேலும் உமையொருபாகக் குருக்கள் மடமும் இருந்தது. இந்த மடம் பற்றி வேறு சான்றுகள் பெரிதும் கிடைக்கவில்லை. உமையொருபாகக் குருக்கள் நாஞ்சில் நாட்டு வேளாளர் சிலருக்குச் சிவ தீட்சை கொடுத்திருக்கிறார்.

இவரைப் பற்றி கவிமணியின் மருமக்கள் வழி மானியத்தில் யாத்திரைப் படலத்தில் ஒரு குறிப்பு வருகிறது. மான்மியத்தின் தலைவரான பஞ்ச கல்யாணிப் பிள்ளை இறந்த போது பாக்கியம் பிள்ளை என்பவர் திருவாசகம் படிக்கிறார். இவர் உலகெலாம் புகழும் உமையொருபாக தேசிகன் பால் சிவ தீட்சை பெற்றவர் என்று மான்மியம் கூறுகிறது.

உமையொருபாக குருக்களின் மடங்கள் நாஞ்சில் நாட்டில் தேரூர், இரணியல், கள்ளியங்காடு ஆகிய இடங்களில் இருந்தன. சிவராஜ பிள்ளையும் மருமக்கள் வழி மான்மியமும் பதிவு செய்த இந்தச் செய்தி வேறு எங்கேயும் இல்லை.

கே.என்.எஸ். நாஞ்சில் நாட்டு மக்களைப் பற்றி 23 பாடல்களில் பல செய்திகளை விரிவாகக் கூறுகிறார். குறிப்பாக உழவர், வணிகர், செம்மான், வண்ணார், நாவிதர், குயவர், சாலியர், இடையர், கம்மியர் எனப் பல ஜாதியினரின் தொழில் குணம் பற்றியும் இவர்களை மற்றவர்கள் எப்படி குறிப்பிட்டார்கள் என்பதையும் நாஞ்சில் வெண்பா கூறுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இந்த ஜாதிகளைப் பற்றி வழக்கில் இருந்த நம்பிக்கை, மதிப்பீடு ஆகியனவும் இப்பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. உதாரணமாக, விஸ்வகர்மா என்ற ஆசாரி ஜாதியினர் ஐந்து வகையாக இருந்தனர். இவர்களின் மேல் பிராமணர்களுக்குப் பொறாமை இருந்தது.

நாஞ்சில் நாட்டில் குயவரைப் பற்றியும் நாவிதரைப் பற்றியும் வழக்காற்றில் இறுமாப்பாகச் சொல்லப்பட்ட சொற்களை நாஞ்சில் வெண்பா கூறுகிறது.

நாஞ்சில் நாட்டு நாவிதர்கள் 1900–1930க்கு இடைப்பட்ட காலத்தில் கொழும்புக்கு வேலைக்குச் சென்றனர். அதனால் இவர்கள் செய்த சடங்குகளைச் செய்வதற்கு ஆள் இல்லாமல் ஆனது; பற்றாக்குறை வந்தது. இதை 1930 ல் சிவராஜ பிள்ளை கூறுகிறார்.

நாஞ்சில் நாட்டில் சில தொழில்களைக் குறிப்பிட்டு அதோடு ஊரையும் சேர்த்துச் சொல்வதுண்டு. தாழக்குடி சட்டி பானை, திட்டுவிளை கோரைப்பாய், வடசேரி வேட்டி எனச் சில.

சிவராஜ பிள்ளை நாஞ்சில் நாட்டில் 19 ஆம் நூற்றாண்டில் வழக்கில் இருந்த அணிகலன்கள் சிலவற்றைப் பட்டியலிடுகிறார். அவை சரப்பள்ளி (கழுத்தணி), பாடகம் (காலணி), தொங்கல் (காதணி), சுட்டி (நெற்றிச் சுட்டி), குச்சு (காதில் அணியும் சிறிய அணி), தண்டட்டி (கழுத்தணி), பாம்படம் (காதணி).

நாஞ்சில் நாட்டு விளையாட்டுகள் பற்றி நாஞ்சில் வெண்பாவில் சில செய்திகள் வருகின்றன. ஒரு காலத்தில் கோவில்களில் புராணங்கள் பாராயணம் செய்த இடங்களில் 'நாயும் புலியும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடுகின்றார்கள். இந்த இடங்களில் எப்போதும் கூச்சல் கேட்டுக் கொண்டிருக்கிறது.

சிறுவர்களும் சிறுமியரும் விளையாடிய பல விளையாட்டுகள் இப்போது (1930) நடைமுறையில் இல்லை. அந்த விளையாட்டுக்கள் சிங்கம்புள், குட்டிப்புள், பல்லாங்குழி, கழச்சி ஆடுதல், பூவரசங் கொம்பு எனச் சில.

நாஞ்சில் நாட்டில் சிறப்பு விழாக்கள் ஓணம், தீபாவளி, திருக்கார்த்திகை, சித்திர புத்திர நைனார் நோன்பு, இன்னும் சில பண்டிகைகள் உள்ளன. இவற்றைக் கொஞ்சம் கிண்டலாகவே விளக்குகிறார்.

**பாவைமார் செய்த பணியார பண்டம் எல்லாம்**
**தேவை மேல் இன்று தேவிட்டியும் பின் - சேவை**
**பிழிந்துதா என்ன பிணங்கினாள் நீராய்**
**இழிந்த கண்ணோடும் இவள்**

என்று கூறுகிறார். 'சேவை' இன்று அபூர்வமான ஒரு பலகாரம்.

சிவராஜ பிள்ளை நாட்டார் தெய்வ வழிபாட்டையும் சடங்குகளையும் பலி கொடுக்கும் வழக்கத்தையும் சாமி ஆடுவதையும் நம்பிக்கை இல்லாமல் கூறுகிறார். பேயாட்டம் என்று சாமி ஆட்டத்தைக் குறிப்பிடுகிறார். இது கோட்டிக்காரத்தனம் (பைத்தியக்காரத்தனம்) என்கிறார்.

கேஎன்எஸ் ஆரம்பக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்திருக்கிறார். அதன் பிறகு அரசுப் பள்ளி, மறுமலர்ச்சி கிறித்தவப் பள்ளிகளையும் பார்த்திருக்கிறார். தென் திருவிதாங்கூரில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நிறையவே இருந்தன. இதைப் பற்றி சி.எம்.ஆகூர் என்பவர் திருவிதாங்கூரின் சர்ச்சுகளின் வரலாறு என்ற நூலில் விரிவாகக் கூறுகிறார்.

சிவராஜ பிள்ளை திண்ணைப் பள்ளிக்கூட அண்ணாவிகளின் வீட்டுத் திண்ணைகள், அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுவடிகள் எல்லாம் மறைந்து விட்டன என்பதை, ஐந்து பாடல்களின் விளக்குகிறார்.

நாஞ்சில் நாட்டு உழவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இலக்கிய ரசனை குறைவு என்பதை வெளிப்படையாக ஒரு பாடலில் சொல்லிவிட்டு, இங்கே தாழை நகர் வைரவன் என்ற ஒரு பாடல் உண்டு. அந்தப் பாடலைப் பாடியவரின் திறம் பாராட்டத்தக்கது. இந்தப் பாடல் நாஞ்சில் நாட்டுக் கிராமத்து மக்களின் குணத்தையும் ரசனையையும் வெளிப்படுத்தும் என்கிறார். அவர் அந்தப் பாடலை நூலில் கூறவில்லை.

கேஎன்எஸ் குறிப்பிடும் இந்தப் பாடல் பற்றி கவிமணியின் மருமக்கள் வழி மான்மியத்தில் ஒரு சிறு குறிப்பு வருகிறது. கோடேறி குடி முடித்த படலத்தில் முளையநல்லூர் ஊர்க் கணக்கன் ஊழல் உடையவனாக இருந்ததைக் குறிப்பிடுகிறார். கவிமணி இதற்குக் கொடுக்கப்பட்ட அடிக்குறிப்பில்,

**தாழக்குடியில் வைரவனும்**
**தமிழ்த் தேரூரில் சந்திரனும்**
**கூழம் பெருத்த முளையநல்லூர்**
**குறும்பன் அணஞ்சு பெருமாளும்**
**கோளை மூட்டும் கடுக்கரையில்**
**கொச்சு மாடன் ஆறுமுகம்**
**நாளை இவர்கள் தலை தெறித்தால்**
**நன்றாய் வாழும் நாஞ்சில் நாடு**

என்ற பாடல் வருகிறது.

சிவராஜ பிள்ளைக்குச் சோதிடத்தில் நம்பிக்கை இல்லை. சோதிட நம்பிக்கையைத் தீவிரமாய்க் கிண்டல் செய்கிறார். இதற்காக 12 பாடல்களை ஒதுக்கி உள்ளார்.

இறுதியாக 18 பாடல்களில் நாஞ்சில் நாட்டுக்கு வந்த நாட்டார் கலைஞர்கள் பற்றிக் கூர்மையாய்ப் பதிவு செய்து இருக்கிறார். இது முக்கியமான செய்தி. சித்துரசி, கோடாங்கி, ராப்பாடி, கல்லுள்ளி மங்கன், படக்காரன், குறளி வித்தைக் காரன், கழைக் கூத்தாடி, குறத்தி, பண்டாரம், வாய் வேதாந்தி, குழுவன், கொடும்பாவி, கடுவாய் ஆட்டக்காரன் என நீண்ட பட்டியலைக் கூறுகிறார். இவர்களில் ஆறுபேர் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆறு பேர் கலைஞர்கள். பிறர் யாசகர்கள்.

இந்த யாசகர்கள் பிச்சைக்காரர்கள் அல்லர். இவர்களிடம் திறமை இருந்தது. இதைக் காட்டித்தான் யாசகம் கேட்டார்கள். இப்போது இந்த யாசகர்களும் கலைஞர்களும் நாஞ்சில் நாட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டார்கள்.

நாஞ்சில் நாட்டில் வேளாளர்களிடம் வழக்கில் இருந்த மருமக்கள் வழியைப் பற்றி ஏழு பாடல்களில் கூறுகிறார். இதனால் ஏற்பட்ட துயரத்தை விவரிக்கிறார். ஆனால் இந்த வழி சட்டப்படி 1926 இல் மறைந்து விட்டது. இதன் பிறகுதான் நாஞ்சில் வெண்பா வெளிவந்து இருக்கிறது. ஒருவேளை இந்தப் பாடல்களை 1926 க்கு முன் எழுதி இருக்கலாம். பின்னர் தன் நூலில் சேர்த்திருக்கலாம்.

நாஞ்சில் வெண்பா நாஞ்சில் நாட்டின் சிறிய வரலாற்று நூல். பண்பாட்டுப் பதிவு. இது குறித்த விரிவான ஆய்வு அவசியம்.

●

**கட்டுரையாளர்: பேராசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை: இடலாக்குடி அசன்

# ராஜ் தாத்தா



அவனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியில் இருந்து மினுமினுப்பான கண்கள் விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. ராஜ் தாத்தாவுக்கு எண்பது வயசுக்கு மேல இருக்கும். வீட்டுக்கு மண்வெட்ட, தோப்பு கொத்திக் கொடுக்க, தோட்டத்துலெ கெடக்குறெ புல்லு பூண்டுகளையும் மட்டைக் கதம்பைகளையும் கல்லு கட்டிகளையும் ஒதுக்கி தோட்டத்தெ கண்ணாடி போல ஆக்க அவரை விட்டால் வேறு ஆளில்லை. காலையிலெ ஆறு மணிக்கெல்லாம் மம்முட்டியும் கையுமா வேலை செய்யும் இடத்திற்கு வந்து விடுவார். என்னத்தெ சாப்பிட்டுவிட்டு வருவாரோ மனுசன். சாப்பிடச் சொன்னால் 'வேண்டாம் மக்கா... வேண்டாம் புள்ளே' என்று விடாப்பிடியாக மறுத்து விடுவார். ஒரு தூக்கு நிறைய வெறுந்தேயிலை மட்டும் போட்டுக் கேட்பார். அவ்வப்போது ஒரு மொடக்கு குடிச்சிக்குவார். ஆறிப்போன அந்த வெறுந்தேயிலைக்கு என்ன ருசியோ? அதை ஒரு மிடறு குடித்துவிட்டு பொக்கை வாய் உதடுகளை ஒன்றிணைத்துச் சப்பு கொட்டிக் கொள்வார். காது டமாரம் வச்சு அடிச்சாலும் கேட்காது. சத்தம் போட்டு ஊரைக் கூட்டினாத்தான் அவருக்குக் காதுலெ லேசாகக் கேட்கும். இந்த வயசுலையும் பொம்பிள்ளைங்களெ ஒரு மாதிரியாத்தான் பார்ப்பார். இந்த புத்தியிருந்தாலும் வேலெ மட்டும் சுத்தம் என்பதால் அவரை வேலைக்கு அழைக்கத்தான் தோணும். வேலைக்கு வந்த வீட்டிலுள்ள பெண்களின் முகத்த நேருக்கு நேராகப் பார்த்துப் பேசமாட்டார். ஆனால் அவர்களிடம் ரசனையோடு முகம் நிறைய சிரிப்புடன் கண்களை இடுக்கிக் கொண்டு உரையாடுவதைப் பார்த்தால் மனுசன் இந்த வயசுலெ இந்தப் போடு போட்டார்னா.... சின்ன வயசுலெ என்ன பாடு படுத்தியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றும். அதுலெ ஒரு சுகம் அவருக்கு. பாவம் கெழம் என்னெத்தையும் சொல்லிட்டு போட்டுன்னு சிரிச்சு மழுப்பி விடுவர் கதை கேட்கும் பெண்கள்.

ராஜ் தாத்தாவின் இந்தச் செய்கையைப் பார்த்து ஜெய்லானி எப்போதும் அருவருப்புடன் பயணிக்கும் பார்வையை அவரை நோக்கிப் பார்த்து எரிச்சலடைவான். வேலைக்கு வரும்போது வெளிநாட்டு ஸ்ப்ரேயை சட்டையில் கொழுக்க அடித்து மணக்க மணக்க வருவார். சாயங்காலம் எத்தனை மணி வரை வேண்டுமானாலும் வேலை பார்ப்பார். செய்யும் வேலையில் எந்தக் குறையும் வைக்கமாட்டார். வேலையின் இடையே இரண்டு மூன்று முறை வெற்றிலையைத் தட்டி விழுதை வாயில் போட்டுக் கொள்ளுவார். அவருடைய பொக்கை வாய்க்குள் வெற்றிலைச் சாறும் சக்கையும் விளையாடி மகிழும். அவர் சவைப்பதை ஜெய்லானி சலிக்காமல் பார்த்துக் கொண்டிருப்பான். ராஜ் தாத்தா மதிய உணவு உண்ணமாட்டார். வேலை முடிந்ததும் அவர் இடுப்பில் சிவாஜியைப் போல் கைவைத்து வேலை செய்த இடத்தினை பார்வையிட்டுத் தொகையைக் கேட்பார். அவர் கேக்குற சம்பளத்தெ கொடுத்துடணும். சம்பளத்தில் பேரம் பேசினால் அந்த வேலைக்குள்ள பேரம் பேசிக் கொடுக்கும் குறைத்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு போய்விடுவார். அடுத்த முறை தலை கீழாக நின்னு ஆத்திர அவசரத்திற்குப் போய்க் கூப்பிட்டால் 'அங்கெ வேலை இருக்கு, இங்கெ வேலை இருக்கு'ன்னு சொல்லித் தட்டிக் கழித்து விடுவாரேயன்றி வரவேமாட்டார். மறுபடியும் அவர் அந்த வீட்டுக்கு வேலைக்கு வரணும்னா பெரிய பெரிய பங்களாக்காரர்களின் சிபாரிசு வேண்டும்.

பணக்காரர்கள் வாழும் நகரின் மையப்பகுதியிலிருந்த குடியிருப்பு ஒன்றில் ஏதோவொரு பங்களா வீட்டிற்கு இரவுக் காவல் பணி வேலை பார்த்து வந்தார். எந்த வீட்டில் இரவுக் காவல் காக்கிறாரோ அந்த வீட்டு கார் நிறுத்துமிடத்தில் தன் படுக்கையைப் போட்டுக்கொள்வார். அந்த குடியிருப்பில் உள்ளவர்கள் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் வசிப்பவர்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தோடு வெளிநாட்டில் வசிப்பதால் ராஜ் தாத்தாவை வீட்டுக் காவலுக்கு நியமிப்பார்கள். வீட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையாளர் குடும்பம் இந்தியாவுக்கு இரண்டு அல்லது மூன்று மாத விடுமுறையில் வரும்போது இவர் தன் படுக்கையை இதுபோல் வெளிநாட்டில் வசிக்கும் மற்றொரு வீட்டிற்கு மாற்றி விடுவார். எப்படியிருந்தாலும் அந்தக் குடியிருப்பு உருவான காலத்திலிருந்து சுற்றிச்சுற்றி அந்தக் குடியிருப்புக்குள்ளேயே வாழ்ந்து வருகிறார் ஐம்பது ஆண்டு காலமாக. அவருக்கு மட்டும் வயசு கூடவே கூடாது போல. அப்ப பார்த்தது மாதிரியே தாத்தா கொஞ்சமும் சோர்வில்லாமல் அப்படியே எப்போதும் இருக்கிறார். தேவர்கள் அவரை நிதமும் பார்த்து மந்திரம் பூசி படுக்கையில் கிடத்துவார்களாயிருக்கும். தாத்தாவின் கண்ணுக்கு எந்தப் பார்வைக் குறைபாடுமில்லை. ஜெய்லானி பார்க்கும் அந்த நகரம் மட்டும் நாளுக்கு நாள் சிறு துளைகளுக்குள் புகுந்து மூச்சுத்திணறிக் கொண்டிருந்தது. தாத்தா அந்த நவநாகரிக உலகின் முது குழந்தையாக வலம் வந்து கொண்டிருந்தார். தாத்தாவைத் தேடி காலையில் அவர் படுத்திருக்கும் வீட்டை நோக்கி அவன் போய்க் கொண்டிருந்தான்.

தாத்தா தங்கியிருக்கும் வீடு ராஜ கொட்டாரம் போன்றிருந்தது. குறுகிய தெருக்களில் உயர்ந்து நிற்கும் கட்டிடங்கள் எவ்வாறு கட்டப்பட்டனவோ என்று யோசித்து கொண்டிருந்தான். வீடுகளுக்குப் பின்புறம் குன்றுகள் போல் உருண்டும் வடிவமற்றும் பாறைகளை யாரோ ஒன்றன் மீது ஒன்றாக எப்போதோ அடுக்கி வைத்திருப்பது போன்று காட்சியளித்தது. பாறையிடுக்குகளில் எப்படித்தான் மரங்கள் செழித்து வளர்ந்து நிற்கின்றனவோ என்ற பிரமிப்போடு பார்க்க அங்குள்ள உயர்ந்த கட்டிடங்களும் அவனை வேடிக்கை பார்த்தபடி அமைதியாக நின்றிருந்தன. தாத்தா படுத்திருக்கும் அந்த உயர்ந்த கட்டிடத்தின் வெளிப்புறச் சுவரில் தளதளவென்று வளர்ந்து நிற்கும் அரசமரத்தின் இலைகளில் மழைத்துளி வழிந்தோடுவதற்கு யோசித்தபடி தொங்கியபடி இருந்தன. அவன் எட்டிப் பார்த்தான் மதிலை. இரும்புக் கட்டில் ஒன்று காலியாகக் கிடந்தது. கட்டிலில் ராஜஸ்தான் கம்பளிப் போர்வைகள் இரண்டு மடித்து வைக்கப்பட்டிருந்தன. கட்டிலுக்கடியில் தரையில் டார்ட்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் எரிந்துகொண்டிருந்தது. அது இறுதி முடிவை எட்டிக் கொண்டிருந்தது. அவர் ஏதோவொரு பங்களாவில் தான் இருப்பார் என்று சொல்லப்பட்ட தகவல் பொய்யாக இருக்க வாய்ப்பில்லை என்று எண்ணிக் கொண்டான்.

அவன் நின்றிருந்த பங்களாவின் எதிர்வீட்டில் ஒரு பெண் வீட்டு வாசலிலிருந்து காய்கறிகளைத் தட்டத்திலிட்டு நறுக்கிக் கொண்டிருந்தாள். அருகில் சிறுமி குட்டிப் பூனைகளோடு எதையோ பேசிச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவன் பூனைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றான்.

குளச்சலிலிருந்து வீட்டிற்கு எடுத்துவந்த கறுப்புப் பூனைக்குட்டி ஒருமாத காலத்திற்குப் பிறகு எப்படியோ வீட்டிலிருந்து வெளியேறி தன்னை மறைத்துக் கொண்டது. குடும்பம் முழுவதும் ஒருவாரகாலம் அதனைத் தேடி அலையாத இடமில்லை. ஒரு வாரகாலத்திற்குப் பிறகு அவ்வப்போது அதனைக் குறித்து யாராவது பேசத் தொடங்கினர். உடனே மற்றவர்களும் அதன் பராக்கிரமங்கள் குறித்து பேசிப் பேசி மாய்ந்து போயினர். பிறகு அந்தப் பேச்சுக்களும் குறைந்து போனது மற்றவர்களிடம். சில நாட்களுக்குப் பிறகு ஜெய்லானியும் அவனுடைய மகனும் மட்டுமே அதனைக் குறித்து பேசிக் கொண்டனர். கதைகள் முடிவின்றி கதைக்குள் கதைகளாக ரூபம் எடுத்து அவனுடைய கழுத்தை நெரித்துக் கொண்டிருந்தன.

சட்டென்று நினைவு வந்தவனாய் திரும்பி தாத்தாவின் பங்களாவைப் பார்த்தான். தாத்தா பீடியை புகைத்துக் கொண்டு வாசல்படியில் உட்கார்ந்திருந்தார்.

ஜெய்லானி அவரை நெருங்கி வந்தான். 'நா வேலைக்குக் கூட்டிக்கிட்டு போவ வந்தேங்... ஓமரெ காணலெயேன்னு போவத்துக்குத்தான் நின்னேன்... நீரு வந்துட்டீரு...' என்றான்.

ஜெய்லானியைக் கூர்ந்து பார்த்தபடி அவனிடம் 'ஓ... இது யாரு நம்ம மொதலாளியிலா வந்திருக்கீரு... நா காலைலெ எந்திரிச்சு போயி சாயாக் குடிச்சிட்டு இஞ்ச வரும்போ ஒரு கூத்து கேட்டியளா' என்றார் தாத்தா.

'எப்புடீ... நா கேக்குரத்புக்கு பதில் சொல்லும் தாத்தா. வேலைக்கு வருவீர்லா...'

'அது வரலாம் ..ஒரு விசயத்தெக் கேளும்...'

'நா அந்தாக்குலெ பீடியெ இழுத்துக்கிட்டு ரோட்டுலெயிருந்து முடுக்குலெ நடந்து வந்துக்கிட்டிருந்தெனா...' காலில் கடித்த கொசுவைப் பலம் கொண்டு அவர் அடித்த போதும் அது தப்பிவிடவே 'சவத்து கூதி... தப்பிச்சிட்டுது... என்னா கடி கடிச்சுவு...' என்று அலுத்துக் கொண்டார்.

ஜெய்லானிக்கு எதிர்வீட்டுச் சிறுமியிடம் கேட்டு எப்படியாவது ஒரு கறுப்புப் பூனைக்குட்டியொன்றை போகும் போது வாங்கிச் செல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

'ஆங்... கதயெக் கேளும்... அங்கெ முக்குலெ நிக்குதுலா பலாமரம். அதுலெயிருந்து கொப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓடிஞ்சு தொப்புன்னு விழுந்தது போல ஒரு சத்தம்... நா பயந்துட்டேன் கேட்டீரா... இந்தா நீளமும் இவ்வளவு தண்டியும் (கைகளால் அதன் நீளத்தையும் உருவத்தையும் காட்டுகிறார் தாத்தா) மொதல்ல என்னதுன்னு பிடி கெடைக்கலெ... அப்புறம்தான் தெரிஞ்சுது... பழவுண்ணி... மண்டையை இங்குமங்கும் அசைத்து அதன் பிரம்மாண்டத்தை ஜெய்லானிக்குப் புரிய வைத்தார். அவன் கவனமோ திசைதிரும்பி வேறு பாதையில் பயணித்தது. நினைத்தது எதுவும் விரைவில் பெறமுடியாது என்பதை மட்டுமே கவனத்தில் வைத்துக் கொண்டு நிம்மதியற்றுத் துள்ளிக் கொண்டிருக்கும் சிந்தனைகளெல்லாம் முடிவற்ற நாடகங்களை உருவாக்கத்தான் செய்யும். எதற்கும் காலம் கைகூடி வரணும் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. பூனைக் குட்டியைச் சிறுமி தந்தால் சரி. தரலைன்னா என்ன செய்யமுடியும்?

ஜெய்லானி அந்தத் கொட்டாரத்தின் காம்பவுண்டுக்குள் கவனத்தைத் திருப்பினான். தாத்தாவிடம் 'என்னது பழவுண்ணியா? அப்படீன்னா என்னது?' என்று கேட்டான்.

'ஆமா... பழவுண்ணி... அது விழுந்ததும் வேகமா வந்த ஒரு வண்டி தட்டிப் போட்டுட்டு போயிட்டுது' என்று சொல்லிவிட்டு நடந்த துயரச் சம்பவத்திற்காக எதுவும் சொல்லாமல் அமைதியாக வேறெங்கோ பார்த்தபடி கட்டிலில் உட்கார்ந்தார்.

'அய்யய்யோ... பாவம்... சங்கதி சட்னியாயிட்டுதோ...' ஜெய்லானி கேட்டான்.

'சட்னின்னுதான் நெனச்சேன்... தப்பிச்சிட்டுது.. நல்லகாலம்... வண்டிக்க டயரு ஏறியெறங்கல... டயரு ஏறுனா வழிச்சுதான் எடுக்கணும்... மண்டையிலெ லேசாத்தான் அடிபட்டிருக்கும்னு நெனைக்கேன். ஆனா... சோலி முடிஞ்சுபோச்சு... ஒரு பைக்குகாரன் இதுக்கு முன்னெ போயிக்கிட்டிருந்தானா... அவன் சடம்பிரேக்கு போட்டு ரிவேர்ஸுலெ வந்து பொசுக்குன்னு எறங்கி அதெ எடுத்துக் கொண்டு போயிட்டான்...'

'எதுக்கு எடுத்துட்டு போனான் பைக்குகாரன்.' ஜெய்லானி கேட்டான்.

தாத்தா ஒரு கையை மலத்தி வச்சுக்கிட்டு வெற்றிலைக் கல்லில் இட்டுத் தட்டி விழுதாக்கிய சக்கையை மறுகையால் வழித்து வாயில் போட்டுக் கொண்டார். வெற்றிலைச் சக்கையும் அவர் வாயும் படும் பாட்டை ரசித்துப் பார்த்தபடி ஜெய்லானி நின்று கொண்டிருந்தான்.

'அவங் அறுத்து தின்னுப்போடுவாங்... இல்லயா தாத்தா...' பழவுண்ணி என்றால் என்னவென்று தெரியாமல் ஜெய்லானி எதற்கோ கேட்டு வைத்தான்.

'அது பழம் மட்டும்தான் திங்கும்... என்னத்தெ சொல்ல... நீரு பாத்திருப்பீரு... வாலு புஸ்புஸ்னு இருக்கும்... மூஞ்சி நரிக்கு மூஞ்சியெப் போலெ இருக்கும்... கறி நல்ல ருசியாயிருக்கும்... போவும் போது பாரெஸ்ட்காரன் கண்ணுலெ பட்டான்... கொண்டு போறவன் தொலஞ்சான்... ஆயுசு பூரா அவனுகளுக்கு கூடெக் கெடந்து பாட வேண்டியது தான் வரும்' தாத்தா சொன்னார்.

'ராஜ் தாத்தா... அது மரநாய்தானெ...'

'உம்..'

'எங்க ஊர்லெ இந்த எழவு நெறைய கெடக்கு... ராத்திரியானா எல்லாத் தெருவிலெயும் இங்கெயிருந்து அங்கெயும் அங்கெயிருந்து இங்கெயும் சாடிச் சாடி போகும்.'

'உம்...' உதடுகளைக் குவித்து வாயைப் பொத்திக் கொண்டு ஒரு முறை தொண்டையைக் காறிக் கொண்டார்.

'நாங் சின்னப்புள்ளையா இருக்கும் போது எத்தனெண்ணத்த வெரட்டி காச்சிருக்கோம் தெரியுமா?'

'அப்புடியா...'

'ஆம தாத்தா... ஓம்மெட்ட ஒண்ணு கேக்கணும்... அதுக்கு மூஞ்சியிலெ பேட்டரி அடிச்சா அதுக்கு கண்ணு தெரியாம அப்படியே நிக்குமாமே... அப்புடியா?'

'எதுக்கு அதுக்கு மூஞ்சியிலெ டார்ச்சு அடிக்கணும்?'

'டார்ச்சு அடிச்சதும் கண்ணு தெரியாம நிக்கும்லா மெதுவா போயி ஒரே போடு... எத்தனெண்ணத்த கொன்னிருக்கோம் தெரியுமா?' ஜெய்லானி தன் சின்ன வயது அழிச்சாட்டியங்களை ராஜ் தாத்தாவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான்.

'அது அதுபாட்டுக்கு பழங்களெத் தேடி போவும். நம்மளெ என்ன செய்யப் போவுது? அதெ ஏங் கொல்லணும்... பாவம்லா' ராஜ் தாத்தா கேட்டார்.

'எனக்கெ ஃபிரண்ட்ஸெல்லாம் சொன்னானுவோ... அது அசைவமெல்லாம் திங்கும்னு. அப்ப நா சொன்னேங்... இல்லெப்பா... அது அசைவம் திங்காது... பழங்களெயும் தென்ன மரத்திலெ உள்ள எளநியையும் பறிச்சு திங்கும்ன்னு சொன்னா அவனுவோ கேக்கவே மாட்டானுவோ... அது கோழியெப் பிடிச்சு திங்கும்... கொக்கெப் பிடிச்சு திங்கும்னு... ஒனக்கு ஒரு மயிரும் தெரியாதுன்னு சொல்வானுவோ. அது சைவம்தான் இல்லியா தாத்தா. சொன்னா கேக்கணும்லா... அவனுகளுக்கு வீட்டுலெ கோழிக் கூட்டுக்குள்ளெ மரநாயி போயி கோழியெ பிடிச்சு அதுக்கெ கழுத்தெக் கடிச்சு ரெத்தத்தெக் குடிச்சு அப்புடியே போட்டுட்டு போயிடுமாங்... காலைலெ கூட்டெத் தொறந்து பாத்தா செத்துக் கெடக்குமாம் கோழியெல்லாம்...' என்றான்.

'செ... அவம்மாருக்கு பைத்தியம்... அது பொய்... கேரளத்துலெ அதுக்கு பேர பழவுண்ணின்னு சொல்லுவானுவோ நாமெ இங்கெ மரநாய்னு சொல்லுவோம்... என்னத்தெ... நாம ரெண்டு கெட்டானுவள்லா' தாத்தா சொல்லிவிட்டுப் பொக்கை வாயில் சிரித்துக் காட்டினார்.

ஜெய்லானி சின்னப்புள்ளையா இருக்கும் போதுள்ள கதையெ சொன்னா ராஜ் தாத்தா சும்மா இருப்பாரா... அவரும் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது தன் பங்குக்கு, 'நான் சின்னபுள்ளையா இருக்கும் போது கன்கார்டியா ஸ்கூல்லெ ஆறாங்கிளாஸ் படிச்சேங்...' என்று ஜெய்லானியிடம் பேச்சைத் தொடங்கினார்.

'அப்ப எந்த வருசம்?' ஜெய்லானி கேட்டான்.

தாத்தா கண்களை இடுக்கி வானத்தைப் பார்த்து யோசித்து விட்டு, 'ஆயிரத்து தொள்ளாயிரத்து நாப்பத்தியாறு' என்றார்.

'தாத்தா... பொய்யெச் சொன்னாலும் பொருந்தச் சொல்லணும்... கதெ உடாதியும் தாத்தா'.

'நா எதுக்கு பொய் சொல்லணும்?'

'தாத்தா... அப்பொவெல்லாம் கிளாஸ் கெடையாதாமே... பர்ஸ்ட் பார்ம்... செகண்டு பார்ம் அப்படித்தானெ உண்டாம்.... எனக்கெ வாப்பா சொல்லியிருக்காரு'

'உங்க வாப்பா எங்க படிச்சாவளாம்?'

'செட்டி ஸ்கூல்ல'

'அது என்னவோ எனக்குத் தெரியாது... ஓமக்கு தெரிஞ்சது மாதிரி சொல்லுதீரு... நா சொல்றதெ கேக்கணும்னா கேளும்... இல்லைன்னா சவத்தெ விட்டுத்தள்ளும்'.

'இல்லத்தாத்தா... நா அப்புடித்தாங் கேள்விப் பட்டிருக்கேங்... அதான் சொன்னேங்'

'எந்தப் பைத்தியாறனாம் வாய்லெ வந்ததெ உளறுவாங்... நீரு அதெ கேட்டுக்கிட்டு எங்கிட்டெ வந்து கதெ வுடாதேயும் என்னா... கொஞ்சம் தள்ளி நின்னு பாடு கேளும்... மம்முட்டி வீச்சுக்குப் பக்கத்துலெ வராதேயும்... மேலகீலெ பட்டுடப் போவுது'

'தாத்தா... அது பூவரசங் கன்னு... மம்முட்டியெப் போட்டு கோரிடாதேயும்.'

'யாங்... எனக்கு தெரியாமலா கெடக்கு... அதெல்லாம் நா பாத்துத்தான் வெட்டுவேங்... அப்ப கேக்கீரா... இப்ப இருக்குலா நடுக்காட்டு எசக்கியம்மங் கோயிலு... அது அப்ப கெடையாது. ஆனா அங்கனெ எசக்கிக்கெ வொவத்துரவம் மட்டும் இருந்துக்கிட்டே இருந்தது. பவல்லெ கூட யாரும் அந்தப் பக்கம் போவமாட்டாவியெ... ஒரே காடு போலத்தாங் கெடக்கும்... ராவும் பவலும் இருட்டு போலத்தாங் இருக்கும்... இருட்டுன்னா எசக்கிக்கு கொண்டாட்டந்தாங்... பின்னெ கேக்கவா செய்யணும்... எசக்கி கொஞ்சம் வேகமான எசக்கிங்குறதுனாலெ ஒரு மனுசரு அந்தப் பக்கம் போவமாட்டாவிய.'

எசக்கின்னா ஜெய்லானிக்கும் கொஞ்சம் வெறையல் எடுக்கத்தான் செய்யும். பால்ய காலத்துலெ கபீரு தொட்டு சபீரு வரை கதை சொல்லத் தொடங்குனானுவன்னா எந்தப்பக்கம் இருந்தாவது எசக்கி கதைக்குள்ளெ நுழையாம இருக்காது... அல்லது எசக்கி அந்தக் கதைகளில் பிரதான கதாபாத்திரமாக வலம் வரும். கூட்டமாகச் சேர்ந்திருந்து கதை கேட்கும் போது ஜெய்லானி எசக்கி பயத்தில் நெருக்கிப் பிடித்து மற்றவர்களின் அண்மைக்காக நெருங்கும் போது சகநண்பர்கள் அவனைக் கடிந்து கொண்டு பிடித்துத் தள்ளி விலக்கிவிடுவர். அப்படி விலக்கும் போது கூட்டத்திலிருந்து விரட்டப்படுவான் அவன். பாதிக்கதையில் அவன் பயந்து கொண்டே வீடு வரும்போது எசக்கியும் கூடவே அவனுடன் வந்துவிடும். அன்று முழுவதும் பயத்தில் பாதிக்கதை மனத்தில் குடைந்து கொண்டேயிருக்கும். எசக்கி தன்னோடு வந்து விட்டதாகவே எண்ணுவான். இரவில் உறக்கத்தில் அழுகையோடு திடீரென்று எழுந்திருந்து கத்திப் புலம்பும் போது, ஜெய்லானியின் உம்மா அவனை முதுகில் ரெண்டு போட்டு உணர்த்தி புலப்பத்தை நிறுத்துவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலையில் உம்மாவின் அர்ச்சனையோடு தான் பொழுது விடியும்.

ராஜ் தாத்தா வெற்றிலை சவைப்பதற்காக தன் வெற்றிலைப் பெட்டியை எடுக்கப்போனார். ஜெய்லானி அவரைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான். அவருடைய முதுகில் வேர்வை முத்துக்கள் அழகாக ஒட்டி வைத்தது போன்று காட்சியளித்ததை ரசித்தான்.

'தாத்தா... எசக்கி கதையெ பாதியிலெ வுட்டுட்டீரு...' நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து குரல் கொடுத்தான் ஜெய்லானி.

'வாறெங்... வாய் மசமசங்குது... ஒரு வாயி வெத்துலெ போட்டுக்கிடட்டு...'

ஜெய்லானி நகர்ந்து சென்று பூவரசங்கன்றைப் பார்த்தான். அவனுக்கே தெரியாது அது எப்படி தோட்டத்தில் முளைத்தது என்று. ஜெய்லானியின் நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜ் தாத்தா, 'நா வேணும்னா பூவரசங்கம்பு ஒன்னு கொண்டு வந்து தரட்டா... இந்த கன்னு எப்ப வளந்து மரமாவத்துக்கு... நா ஒரு வெளஞ்ச நல்ல கொப்பு ஒண்ணு கொண்டு வந்து தாறேங்... ரெண்டடியிலெ ஒரு குழி தோண்டி ஆறப்போட்டு அதுலெ வச்சு... கொப்புக்கு மேல் காயாம இரிக்குறதுக்கு சாணியெ உருட்டி தொப்பி வச்சாப் போதும். ஒருவாரத்துலெ தளுக்க ஆரம்பிச்சிடும்... கொண்டு வரட்டா' என்றார்.

'கொண்டு வரட்டான்னு கேள்வியா... கொண்டு வந்து தாரும்... சொல்லிக்கிட்டு அப்படியே போயிடாதேயும்... அப்புறம்... சொல்ல வந்ததெ பாதியிலெ வுட்டுட்டீரே'

'அங்கெ ஒரு மடம் இருந்துது பாத்துக்காங்க... அந்த மடத்துலெ மாடு மேய்க்குறவங்களும் பிச்செக்காரங்களும் கெடந்து வொறங்குவாங்க... எனக்கெ அம்மா இருக்காள்லியா... அவளுக்கு ஒரு எள்ளு போலேயும் பயம் கெடையாது... அந்தக் காட்டுக்குள்ளெ ஈக்கம்புல்லு புடுங்க போவா... அப்ப நானும் கூடவே போவேங்... அப்ப அந்தக்காட்டுலெ கொல்லமாவு மரம் எக்கச்சக்கமா நிக்கும். காட்டுக்குள்ளெ நொழஞ்சதுமே ஒரே கொல்லாம்பழ மணம்தான் மணக்கும்... மரத்துலெ கொல்லாம்பழம் ஒவ்வொண்ணும் உள்ளங்கை அளவுக்கு இந்த தண்டியிலெ கொத்துக் கொத்தாக் காச்சு தொங்கிக் கிடக்கும். எசக்கி கொல்லா மரத்து மூட்டுலெ குண்டியெ காணிச்சு இருந்துக்கிட்டு வார போற ஆளையெல்லாம் நித்தத்துக்கும் பயம் காணிக்கும்... அந்த பயத்துலெ பாதி பேரு காக்காவலிப்பு வந்து அங்கனெயே விழுந்து செத்திருக்கானுக... செலது சாவல்லேன்னாலும் பயந்து காச்சல் வந்து மாசக் கணக்குலெ படுக்கையிலெ இழுத்துக்கிட்டு கெடந்து செத்திருக்காவியெ.. வேற ஒண்ணும் செய்யாதாம்'.

'செய்றதையெல்லாம் செஞ்சுப் புட்டு எசக்கி வேற வொண்ணும் செய்யாதுங்கிறீரு'

'பயந்து செத்தா அதுக்கு எசக்கியா பழி... தைரியம் இல்லேன்னா என்ன மயிருக்கு அங்கெ போறானுவெ... அப்புறம் கதயெக் கேளும்... இங்கெயிருந்து பாத்தா அந்த மரத்துலெ கொல்லாம்பழம் கொத்துக் கொத்தாக் காச்சு கெடக்குறது போல இரிக்குமாம். சரி அங்கெப் போயி பறிக்கலாம்னு போனா அந்த மரத்துலெ ஒரு பழம் கூடெ இரிக்காதாம். சரின்னு சொல்லிட்டு அங்கெயிருந்து பாத்தா வேறொரு மரத்துலெ கொத்துக் கொத்தா பழம் காச்சு கைக்கு எட்டுறது மாதிரி கெடக்குமாம். சரி...அங்கெ போயி பறிக்கலாமுன்னுட்டு நடந்து கிட்டெ போயி பறிக்கலாம்னு பாத்தா பழமெல்லாம் உச்சியிலெ கெடக்குமாம். செலப்போ... பழத்தெ ஒண்ணையும் காணாதாம்... ஆனா கொல்லாம்பழ மணம் மட்டும் அடிச்சிக்கிட்டே இருக்குமாம்... எனக்கெ தள்ளெ சொல்லியிருக்காவியெ... இதெல்லாம் எசக்கிக்கெ வேலத்தாங்... நம்மளெப் போட்டு ஏமாத்துவா பாத்துக்காங்க... - சொல்லிவிட்டு பொக்கை வாயால் சத்தமிட்டு சிரித்தார்.

'தாத்தா... பேசுறதெல்லாம் சரிதாம் நீட்டா வெட்டுங்கெ...வேரு அற ஆழத்துலெ வெட்டுங்க தாத்தா... இல்லைன்னா நீரு வெட்டிட்டு போன ரெண்டு நாள்லெ மொளச்சுட்டு நிக்கும்' - சொன்னான். அவனுடைய மனதுக்குள் தூக்கம் புகுந்து கொண்டது.தோட்டத்தில் காற்று அங்குமிங்கும் நடந்து போக அவனும் கூடவே நடக்கலானான்.

தாத்தாக்கு பொசுக்கென்று கோபம் வந்து விட்டது. அவர் வெட்டுவதை நிறுத்தி விட்டு, 'இங்கெ பாரும் அப்ப நீங்க வெட்ட வேண்டியது தானே... என்ன ஒரு மனுசரு குத்தம் சொல்ல மாட்டாவியெ... அதாங் வொடமஸ்த்தனெ கிட்டெ உட்டுக்கிட்டு வேல செய்யப்புடாதுங்கிறது... இது சடைபுல்லு... முடிஞ்ச வரைக்கும் வேரோட புடுங்கித்தான் எடுக்குதேங்... கண்ணாலெ பாக்கத்தானெ செய்தீரு... அதயே போட்டு நோண்டிக்கிட்டு நின்னா வேலெ ஓடாது... சாயங்காலம் இருட்டுறதுக்குள்ளெ வேலையெ முடிச்சேண்டாமா?' என்றார் ராஜ் தாத்தா.

மலைகளில் உருக்குலைந்து போன காற்று, ராஜ் தாத்தாவின் முன்னே புதைந்து கிடந்த சடைப் புற்களின் வேர்களில் உரசி சங்கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிக் கொண்டிருந்தது. மம்முட்டியில் அறுபட்ட புற்களின் வேர்களோடு மண்ணின் மணமும் கலந்து அவனின் எண்ணவோட்டத்தைத் தடை செய்தது. அவன் வேறெங்கேயோ பார்த்தபடி நின்றிருந்தான். ராஜ் தாத்தா வாயிலிருந்த வெற்றிலைச் சாறை 'ப்ளிச்'சென்று துப்பினார்.

அந்த ரத்தம் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது. அவனை விளித்தார். 'இங்கெ கேளும்... நா சொல்ல வந்ததெ மறந்துட்டேனே... இப்ப நடுக்காட்டு எசக்கியம்மன் கோயில் இருக்கு பாத்தேரா... அந்த எடம் முன்னாலெ ஒரு பெரிய கொளமாட்டாக்கும் இருந்துது. அதுக்கு கீழ்ப்பக்கந்தான் தூக்குமரம் இருந்துது... முன்னாலெ ராஜா காலத்துலெ குத்தம் செய்தவனெ இங்கெ கொண்டு வந்து, அந்தக் கொளத்துலெ குளிப்பாட்டி தூக்கு போடுவாங்கெ.'

'தூக்குலெ போடப் போறவனெ எதுக்கு குளிக்க ஊத்தணும்?' ஜெய்லானி கேட்டான்.

'அதென்னவோ எனக்குத் தெரியாது... தூக்குப் போடுற எடத்துக்குப் பக்கத்துலெ இருந்த கொளத்தெ நிரப்பித்தான் நடுக்காட்டு எசக்கி அம்மன் கோயிலெ வச்சிருக்காங்கெ. சொதந்திரத்துக்குப் பொறவு இப்ப இரிக்குல்லா லிஸ்ட்டர் ஆசுவத்திரி... அதுக்குப் பக்கத்திலிருந்து ஒரு காமேஸ்வரன்ங்கிறவரு செவ்வாயும் வெள்ளியும் கொஞ்சம் மஞ்செண்ணை பூசி பூஜெ செய்துக்கிட்டிருந்தாரு... அவரு என்ன செய்தாரு தெரியுமா... பையப் பைய கோயிலெச் சுத்தியுள்ள எடத்தெ வளைக்க ஆரம்பிச்சாரு... அந்த சமயத்துலெ கெவர்மெண்டு பாத்துச்சு... ஆஹா... இவங் நெலத்தெ அபகரிக்கப் பாக்குறாண்டான்னு சொல்லி அவன்டெயிருந்து கோயிலெ புடுங்கி தேவசம்போடு கைலெ கொடுத்திச்சு... மொதலாளி தோட்டத்துலெ நெறைய மொடக்கறுத்தான் நிக்குது... பாத்திரா...'

'எனக்கு அது மொடக்கறுத்தான்னு தெரியாது தாத்தா... அது மருந்துச் செடிதானெ.'

'பின்னெ... தரையிலெ நெறைய படந்து கெடக்குது. ஒரு காலத்துலெ எல்லா எழவையும் தின்னு தீத்தாச்சு... இப்ப தெருவும் திண்ணையுமா ஆனதுனாலெ இதுக்கு மேல உள்ள நாட்டமெல்லாம் போயிட்டுது... முன்னாலெ தூக்கு மரத்துலெ ஆளெ தூக்குப் போடும் போது நான்லாம் அங்கெ போய் நின்னு பாத்திருக்கேங். ராஜா மொதல்லெ நடந்து வருவாரு... பின்னாலெ தூக்குப் போடுறவனுக்கு தலையெ கறுப்புத் துணியாலெ மறச்சு கொண்டு வருவாங்கெ. அவனுக்கு ரெண்டு பொறமும் நம்பூதிரிமார் ரெண்டு பேரு வருவாங்கெ...' என்றார். ஜெய்லானிக்கு அவர் ஏதோ சொல்லணும் என்பதற்காக பாத்தேங்... வச்சேங்னு பொய் சொல்றாராயிருக்கும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அவன் அவர் முகத்தைப் பார்க்காமல் எங்கோ பார்த்துக் கொண்டு தாத்தா சொல்வதற்கெல்லாம் உம் கொட்டிக் கொண்டிருந்தான்.

'தாத்தா... நாப்பத்தாறுலெ ஆறாங்கிளாஸ் உண்டாக்கும்... அப்பல்லாம் பர்ஸ்ட் பார்ம் செகண்ட் பார்ம்னுலா சொல்லுவாங்கெ'

'அதாங் சொன்னேன்லா... என்ன எழவு பார்மோ... நா பள்ளியோடத்துக்கு போவைலா செஞ்சேங்... எந்தள்ளெ காலத்தெ கொண்டு போயி பள்ளியோடத்துல என்னெ விட்டுட்டு பெட்டி நெறைய கொல்லாம்பழமும் வித்துட்டு வருவா... அப்ப அது பொய்யா'

'அதிருக்கட்டும்... நீரு எசக்கியெ கண்ணாலெ பாத்திராக்கும்'

'பின்னெ பாக்காமலா சொல்லுயேங்... நீரு சாயுபுலா... அதான் இப்புடி குண்டக்க மண்டக்க பேசுறீரு'

'தூக்குப் போடுறதெ பாத்தேன்னு சொல்றீரு... அங்கெயெல்லாம் ஜனங்களெ பாக்க உடுவாளாக்கும். அதுவுமில்லாமெ தூக்குலெ போடுறவனுக்கு கூடெ ராஜாவும் வருவார்னு சொல்றதெ நம்பவே முடியலெ தாத்தா... மழை வரும்போலெ இருக்கு.'

'வரட்டு... நீரு நா என்ன சொன்னாலும் நம்ப மாட்டீங்கீரு... வொம்மட்டெ பேசி பிரயோஜனமில்லெ... நீங்கி நில்லும். மழெய்க்கு முன்னெ முடிச்சிட்டு போட்டு.' ராஜ் தாத்தா மம்மட்டியின் வீச்சை வேகப்படுத்தினார்.

காற்று வீசியடித்தது. கருக்கொண்ட மேகங்களைக் காற்று வேகமாகத் தள்ளிக் கொண்டு போயே போய்விட்டது.

'மழை பெய்யத் தொடங்கியதும் எங்கிருந்து தான் இந்தப் பேய்க்காத்து வருமோ... அந்தாலெ மேகம் கலஞ்சு வந்த மழையும் போயிடும். மழையும் நிக்கும். அந்தாக்குலெ காத்தும் நிக்கும். இது எசக்கிக்கு வேலையாத்தான் இருக்கும்... எசக்கி எப்பவும் எங்கூடெத்தான்... கேட்டீரா சாயிபே...' ராஜ் தாத்தா சொல்லிவிட்டு வெற்றிலையைத் துப்பினார். வெற்றிலைத் துப்பலிலிருந்து இரத்தச் சிவப்பில் ஆறு பெருக்கெடுத்து ஓடியது. ராஜ் தாத்தா மம்முட்டியை ஆற்றில் வீசிவிட்டு பொத்தென்று ஆற்றில் சாடி நீந்திப் போனார்.

●

**சிறுகதையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: எஸ்.ஜெயச்சந்திரன் நாயர்
மலையாள மூலத்திலிருந்து தமிழில்: யூமா வாசுகி

உன்மத்தத்தின் சூரியகாந்திகள்: 5

# இலக்கியத்தைக் காதலித்த ஓவியன்



ப்ரபாண்டில் வசிக்கும்போது வரைந்த விவசாயத் தொழிலாளர் ஓவியங்களுடன், தபால்காரர் ரோலினையும் மருத்துவர் பால் காச்செட்டையும் வின்சென்ட் வரைந்தார். அவர்கள் இருவரும் தன் தனிப்பட்ட பார்வையின் பிரதிநிதிகள் என்று பதிவு செய்யும்போது அவர் இப்படி எழுதினார்: "மிகையுணர்ச்சியையும் கஷ்டத்தையும் அல்ல, ஆழ்ந்த துயரத்தை ஓவியமாக்கவே நான் விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஓவியங்கள் மென்மையற்றதாகத் தோன்றும். ஆயினும் அவை உங்களை உணர்ச்சிகரமாக அசைத்தால் அதில் எனக்கு திருப்தி."

வின்சென்ட் வரைந்த 'உருளைக்கிழங்கு உண்பவர்கள்' ஓவியம், கேலிச்சித்திரம்போல தரம் தாழ்ந்தது என்று ஆட்சேபித்த ரப்பார்டுடன் சச்சரவிட்டுப் பிரிந்த வின்சென்ட் தம்பிக்கு எழுதினார்: "தொழில்நுட்பத்தின் பேரில் ஒரு ஓவியம் புகழப்படும்போது அதில் சித்திரிக்கப்படும் கதாபாத்திரம் எவ்வகைப்பட்டது என்று யாரும் கேட்பதில்லை. ஆனால், சிலர் வரையும் ஓவியங்களில் உருவம் கொள்பவர்கள் உயிர்த்துடிப்புள்ளவர்கள் என்று அவற்றைப் பார்ப்பவர்களுக்குத் தோன்றுவதுண்டு. கலையின் நோக்கம் இதுதானே." 1888ல் தியோவுக்கு எழுதிய கடிதத்தில் தன்னுடைய இந்த நிலைப்பாட்டை அவர் மீண்டும் சொல்லியிருந்தார். "நான் மிக அவசரமாக ஓவியங்கள் வரைகிறேன் என்று சொல்வதில் எந்த உண்மையும் இல்லை. அதை நம்பாதே. நம்மிடம் உள்ள உணர்ச்சி, இயற்கையின் மீதான நம் அன்பு நிறைந்த நெருக்கம், இவையெல்லாம்தானே நம்மைக் கொண்டு செலுத்துகின்றன?"

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு உணர்ச்சி கொள்பவனாக ஆனால்தான், மனிதனின் அசலான இயல்பை ஒரு கலைஞனால் கண்டுபிடிக்க முடியும் என்றும் அவர் நம்பினார். ஓவியக் கலையுடனான தன் அணுகுமுறையை விவரிப்பதுடன், தான் வரையும் ஓவியங்களின் பின்னால் உள்ள நோக்கங்களையும் அவர் தெளிவுபடுத்துவதுண்டு.

வின்சென்ட் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஓவியங்கள் வரைந்தார். அவற்றில் அறுநூறு ஓவியங்கள்தான் அவரது கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சில ஓவியங்கள் மிக விரிவாகப் பேசப்பட்டன. மற்ற சில, சிறிய குறிப்புகளில் அடங்கின. ஓவியங்கள் வரையப் பயன்படுத்திய பொருட்களையும், பலவித வண்ணங்களையும் வின்சென்ட் பேச்சுப்பொருளாக்குவார். அவரது ஹேக் காலகட்ட ஓவியங்கள் ஊதா மற்றும் தவிட்டு நிறமும் பச்சை நிறமும் கலந்தவையாக இருந்தன. உணர்ச்சிகளையும் மனநிலைகளையும் வெளிப்படுத்துவதற்கு இந்த நிறங்கள் பயன்படும் என்று அவர் கருதினார். புகழ் பெற்ற, 'உருளைக்கிழங்கு உண்பவர்கள்' வரைவதற்கு முன்பாக, அதற்காக தான் சேகரித்த தரவுகளைப் பற்றி அவர் எழுதியிருக்கிறார். அந்த ஓவியத்தில் பாத்திரங்களின் கைகளையும் முகங்களையும் வரைந்ததைப் பற்றி அவர் எழுதினார்: "அவர்களுக்கு, சேறும் மண்ணும் படிந்த தோல் உரிக்காத உருளைக்கிழங்கு நிறம்." அந்த ஓவியத்தின் மூலம், ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் துயரம் பதிவு செய்யப்பட்டது.

சித்திரிக்கப்படும் உருவத்துடன் தொடர்பற்ற நிலைநிற்பு வண்ணங்களுக்கு உண்டு எனும் தன் நம்பிக்கையை நிறுவுவதற்கு உதாரணமாக, தன் பல ஓவியங்களை அவர் சுட்டிக்காட்டுவதுண்டு. பாரீஸில் வசிக்கும்போது பிரகாசமான நிறங்களைப் பயன்படுத்திய அவர், அர்லிஸில் செலவிட்ட நாட்களில் வரைந்த ஓவியங்களில் பரஸ்பரம் முரண்பட்ட, கூடுதல் சக்தியளிக்கும் நிறங்களைப் பயன்படுத்தினார். அந்தக் காலத்தில்தான், ஜப்பானிலிருந்து வந்த ஓவியங்களால் வின்சென்ட் கவரப்பட்டார். ஓவியங்களில் சக்தி தொனிக்கச் செய்வதுடன் பரப்பும் ஆழமும் கொடுக்க அவை காரணமாயின.

எந்த ஒரு முக்கியத்துவமும் தோன்றாத, இருவர் சலிப்புடன் இருக்கும், 'தி நைட் கபே' ஓவியத்தில், அறியப்படாத துயரத்தை பரவச் செய்யும் விதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்களைப் பயன்படுத்தியிருந்தார் வின்சென்ட். "தன்னை இழக்கவும், பைத்தியமாகவோ குற்றச் செயல்புரியவோ தூண்டும் சூழ்நிலையைத்தான் அந்த இரவு காப்பிக் கடையின் மூலம் வெளிப்படுத்த நான் முயன்றேன்" என்று அவர் எழுதினார். 'வில்லோ ட்ரீ', 'கார்டன் ஆஃப் தி அசைலம்' ஆகிய ஓவியங்கள் வரையும்போதும் அவை தனித்ததோர் உணர்ச்சியை உருவாக்கின. அதற்கேற்றபடியான வண்ணங்களைத்தான் அவர் பயன்படுத்தினார். இதே உணர்ச்சியைத்தான், 'காகினின் நாற்காலி' (*Gauguin's chair*) ஓவியமும் உண்டாக்குகிறது. "நாங்கள் பிரிவதற்கு சில நாட்கள் முன்பு, என்னை மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள் அல்லவா, அப்போது, யாரும் அமராத ஒரு வெற்று நாற்காலியை நான் வரைந்தேன். அடர் நிறக் கைப்பிடியுள்ள, சிவப்பு மற்றும் தவிட்டு நிறமுள்ள மரம். பச்சை நிற அமரும் இடம். ஆளற்று வெற்றாக இருந்த இருப்பிடத்தில் நான் ஒரு மெழுகுவர்த்தியையும் சில நாவல்களையும் வரைந்தேன்." நாற்காலி ஓவியம் வரையும்போது அதன் மூலம் ஓவியனின் தனித்துவத்தை நிறுவவே வின்சென்ட் முயன்றார்.

தனக்கு இலக்கியத்தின் மீது காதல் என்று தன் கடிதங்கள் மூலம் வின்சென்ட் உணர்த்தியிருக்கிறார். தான் எழுதிய கடிதங்களில் 800 புத்தகங்களையும் 150 எழுத்தாளர்களையும் குறிப்பிட்டிருக்கிறார். டச்சு மொழியுடன் ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிப் புத்தகங்களுடனும் அவர் தோழமை கொண்டிருந்தார். எண்ணங்களை கூடுதல் தெளிவுபடுத்தவும் தன் நிலைப்பாடுகளுக்கு வலு சேர்க்கவும் அவர் இலக்கியத்தைப் பயன்படுத்தினார். அனுபவங்களுக்கு ஆதரவாகவும் இலக்கிய நூல்கள் எடுத்துக் காட்டப்பட்டன. அவர் வாழ்வின் மேடு பள்ளங்கள் அவரது வாசிப்பிலும் பிரதிபலித்தன.

டச்சு ரிபார்ம்ஸ் சர்ச்சை (*Duch reformed church*) சேர்ந்த பாதிரியாரின் மகனாக குழந்தைப் பருவத்தைச் செலவிட்ட அவரை முக்கியமாக ஈர்த்தது பைபிள்தான். அதிலிருந்து பெற்ற பைபிள் மொழி, வின்சென்ட்டின் இலக்கிய சிந்தனைகளிலும் அவற்றைப் பதிவு செய்த கடிதங்களிலும் பிரதிபலித்தது. 1873 க்கும் 1879 க்கும் இடையில் லண்டனில் வசிக்கும்போது அவரது மத நம்பிக்கை தீவிரமானது. பைபிளுடன், தாமஸ் கெம்பிஸின், 'தி இமிடேஷன் ஆஃப் கிரைஸ்ட்' (*The Imitation of christ - Thomas Kempis*), ஜான் பன்யானின், 'தி பில்கிரிம்ஸ் புராகரஸ்' (*The pilgrim's Progress - John Bunyan*) முதலிய நூல்கள் வாசித்தார். ஸ்காட்லாந்து எழுத்தாளர் தாமஸ் கார்லைல் (*Thomas Carlyle*), ஜார்ஜ் எலியட், சார்லஸ் டிக்கன்ஸ் (*Charles Dickens*) முதலியோரின் நூல்களுக்கும் சென்று சேர்ந்தார் வின்சென்ட். அடிமைத்தனத்துக்கு எதிராக எழுதப்பட்ட, ஹாரியட் பீச்சர் ஸ்டோவின் 'அங்கிள் டாம்ஸ் கேபின்' (*Uncle Tom's Cabin - Harriet Beecher Stowe*) வின்சென்ட்டின் அன்புக்குரிய நாவல்களில் ஒன்றாக இருந்தது. தாமதமாகத்தான் அவர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை வாசித்தார். அந்த நாடகங்கள் தனக்கு புதியதொரு அனுபவ மண்டலத்தைப் பரிசளித்ததாக அவர் கூறினார்.

## இயற்கையின் வரங்களான ஓவியங்கள்

1880ல், வின்சென்ட்டின் மத நம்பிக்கையின் தீவிரம் பலவீனமடைந்தது. இது அவரது வாசிப்பிலும் வெளிப்பட்டது. குடும்பத்தின் வேதப் புத்தகமான தோல் உறையிடப்பட்ட பைபிள் ஓவியத்தை வின்சென்ட் வரைந்த பிறகு, அவரைக் கவர்ந்தார் பிரெஞ்சு இலக்கியத்தில் அக்காலத்தில் கவனிக்கப்பட்ட எழுத்தாளர் எமிலி ஸோலா. தொடர்ந்து வின்சென்ட், கொன்கோர்ட் சகோதரர்கள் (*Goncourt brothers*), பிளாபர், பால்சாக், அல்போன்ஸ் தாதே (*Alphonse Daudet*) ஆகியோரின் நாவல்களை வாசித்தார். மனநிலை சிதைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கே தனிமையின் கடும் வேதனையில் நொந்து குமைந்த கடைசி நாட்களில் அங்கிள் டாம்ஸ் கேபினுக்கும், கிறிஸ்துமஸ் கதைகளுக்கும் திரும்பினார். ஆயினும், சிதறுண்டுபோன மனது வாசிப்பில் லயிக்க மறுத்தது. அந்த இழப்பை வின்சென்ட் உணர்ந்தார். இதற்கொரு தீர்வு இல்லை என்றும் வேதனையுடன் அறிந்துகொண்டார்.

ஏமாற்றத்தில் கலங்கிய அவர் வாழ்வின் கடைசி பதினைந்து மாதங்கள். செயின்ட் ரெமியில், செயின்ட் பால் மடம் எனும் பெயரில் அறியப்படும் மனநோய் மருத்துவ மையத்தில் சிகிச்சைக்காக 1889 மே முதல் 1890 வரை இருந்தார் வின்சென்ட். அந்தக் காலத்தில்தான் அவர், பிற்காலத்தில் பெரும் புகழ் பெற்ற ஓவியங்களைப் படைத்தார். அவர் அந்தக் காலத்தில் எழுதிய கடிதங்களில் எல்லாம், இழந்த கனவுகளின் விம்மல்கள் நிறைந்திருப்பதை உணர முடியும். சிறியதொரு குழுவின் கவனத்தில் பட்டு பிரஸல்ஸில் நடக்கும் ஓவியக் காட்சியில் பங்கெடுக்க வின்சென்ட் அழைக்கப்பட்டார். என்றாலும், தோல்வி உணர்வு அவரை அலைக்கழித்திருந்தது. அதனால் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஏற்பட்ட கஷ்டங்கள் தன் படைப்பு வாழ்க்கையைத் தாறுமாறாக்கியதாக கடிதங்களில் அவர் குறைபட்டுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயின்ட் ரெமியிலிருந்து தியோவுக்கு இப்படி எழுதினார்: "இந்த வருட இறுதியில் என்னால் என்ன செய்ய முடியும், என்ன வேண்டும் என்பதான விஷயங்களைத் தீர்மானிக்க வேண்டும். விரும்புவதுபோல எல்லாவற்றையும் மெல்ல மெல்ல செய்யத் தொடங்க வேண்டும்."

ஆனால், பத்து நாட்களுக்குப் பிறகு அவர் மீண்டும் எழுதினார்: "என் கனவுகளின் தொடர்ச்சியாக என்னால் ஏதும் செய்ய முடியவில்லையே எனும் பச்சாதாபத்தில் இருக்கிறேன். ஆயினும், கடைசியில் எல்லாம் சரியாகிவிடும்தானே?"

முன்பைப்போல பரிசோதனைகளில் ஈடுபடவோ, கடும் நிறங்களைப் பயன்படுத்தவோ செய்யாமல் 'எளிமையான நிறங்க' ளைப் பயன்படுத்தி அவர் ஓவியங்கள் வரையத் தொடங்கினார்.

இயற்கையிலும் இயற்கைக் காட்சிகளிலும் ஒதுங்கி வாழ வேண்டிய கட்டாயம் வின்சென்டுக்கு ஏற்பட்டது. செயின்ட் ரெமியில் சிகிச்சையளித்த மருத்துவர் தியோபைல் பெய்ரோன், கிளினிக்கின் வெளியே செல்ல வின்சென்டை அனுமதிக்கவில்லை. அவர் அடிக்கடி நோய்ப்படுவதால் அவரின் சுதந்திரமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியிருந்தார்கள். அதனால் அந்தக் காலத்தில் அவர் நான்கு சுவர்களுக்கு அப்பால் உள்ள காட்சிகளைத்தான் வரைந்தார். சன்னல் காட்சிகள், பைன் மரங்கள் பிற தாவரங்கள் ஆகியவற்றை வரைந்தார். அப்போது ஷேக்ஸ்பியர் நூல்களை வாசிப்பதில் உத்வேகம் கொண்டு சகோதரி வில்லுக்கு எழுதினார்: "வாசிப்பு முடிந்த பிறகு நான் ஓவியம் வரைவதற்குத் திரும்புவேன். புல் நுனிகளும் பைன் மர இலைகளும் விளைந்த கோதுமை மணிகளும் எனக்கு அமைதியளிக்கின்றன. ஓவியர்கள் செய்வதுபோல, வெள்ளையும் சிவப்பும் கலந்த பூக்கள் நிறைந்த செடிகளை நீயும் பார்த்துக்கொண்டிருக்கலாம். அதன் மூலம் மெல்லக் கவலைகள் மறைந்துபோகும்."

உண்மையில் தான் ஒரு கைதியாக இருப்பதாக எண்ணி அக்காலத்தில் அவர் துயருற்றிருந்தார். "திறந்தவெளிகள் எனக்கு அந்நியமாகியிருக்கின்றன. வெளியே சென்று சுதந்திரமாக நடக்கவும் விருப்பப்படி ஓவியங்கள் வரையவும் என்னால் முடியவில்லை." அப்போதுதான், செயின்ட் ரெமியின் எல்லையில் வளர்ந்து நிற்கும் 'சைப்ரஸ் மரங்க' ளை அவர் ஓவியமாக்குகிறார். "இயற்கைக் காட்சிகளின் தனித் தன்மையை வண்ணத்தினூடே வரவழைக்கும்போது யதார்த்தத்தைவிட முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவற்றின் குணத்துக்குத்தான்."

அப்படி சிறிதும் பெரிதுமாக ஓவியங்கள் வரைந்துகொண்டிருக்கும்போது, 'நட்சத்திர இரவு' *(Starry night)* வரைந்தது, அவரது கலை வாழ்க்கையில் மிகப் பெரிய வெற்றியானது. "இருள் நிறைந்த ஆகாயத்தை பிரகாசிக்கச் செய்தபடி கண் சிமிட்டும் நட்சத்திரங்கள்" அவருக்கு ஆன்மீகத்தின் அனுக்கிரகமாக அனுபவமாயின.

'சூரியகாந்திப் பூக்க' ளிலிருந்து, 'சைப்ரஸ்' ஸை அடைந்த வின்சென்டின் ஓவியப் படைப்புக் காலம் மிக முக்கியமானதாக மாறியது. கலை விமர்சகர் ஒருவர் அந்தக் காலத்தை இப்படி மதிப்பிடுகிறார்: "செயின்ட் ரெமியில் வசிக்கும்போது தூரிகையிலும் வண்ணத்திலும் கேன்வாஸிலும் தன் ஆதிக்கத்தை நிறுவ வின்சென்டால் முடிந்தது. மற்றொரு விதத்தில், அந்தக் காலத்தில் அவர் வரைந்த ஓவியங்கள் சுதந்திரத்தின் உச்சத்தைப் பிரகடனப்படுத்துபவை."

இடையில் மனரீதியான கலக்கங்கள் அவரைப் பலவீனப்படுத்தின. உதவிக்காக மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிராதரவில் வீழ்ந்திருந்தார். ஆயினும் 1890 மே மாதம் - ஒரு வருடத்துக்குப் பிறகு - செயிட் ரெமியிலிருந்து அவர் விடைபெற்றார். அப்போது தியோவுக்கு இப்படி எழுதினார்: "நான் தோல்வியடைந்தவனாக இருக்கிறேன். அது என் விதி. அதை ஏற்றுக்கொள்ளாமல் வேறென்ன செய்வது? அதுவொன்றும் மாறாது. அதற்கு வேறொரு காரணமும் உண்டு. அனைத்து ஆசைகளையும் கைவிடுவது என்பதுதான் அது."

கடும் ஏமாற்றம்தான் இப்படி எழுத வின்சென்டை தூண்டியிருக்க வேண்டும். ஆனால், நாளுக்கொரு ஓவியம் எனும் கணக்கில், அத்தனை நாட்களில் எழுபது ஓவியங்கள் வரைந்தார் என்பது அதிசயம்தான். ஆயினும் அவரால் தன்னை மூழ்கடிக்கும் அவநம்பிக்கையிருந்து விடுபட முடியவில்லை.

–தொடரும்

உதவிய நூல்கள்:
Van Gogh: Steven naifeh and gregory White Smith
Dear Theo – The Autobiography of vincent van Gogh: Edited Irving stone
The Real Van Gogh: The Artist and His Letters
Van Gogh's Ear – Bernadette Murphy
Vincent and Theo – Deborah heiligman
Saint Remy and Avers – Dairy Notes
Gaugin – Michael Howard

கட்டுரையாளர்:
மொழிபெயர்ப்பாளர், ஓவியர், எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: நிழல்வண்ணன்



# பாலஸ்தீனத்தின் கதைசொல்லி: ரெ:ஃபாத் அல் அராரீர்

"அது ஒரு கதையாக இருக்கட்டும். இஸ்ரேல் காசாவின் கதை சொல்லிகளைக் கொல்கிறது ஆனால் கதையைக் கொல்ல முடியாது."

காசாவில் நிகழ்ந்துவருவது வரலாற்றுப் புத்தகங்களுக்கானது. நீண்ட காலமாக கொடூரமான முற்றுகையில் இருந்துவருகிற, உலகின் மாபெரும் இராணுவ வல்லரசுகளில் ஒன்றை எதிர்கொண்டுவருகிற, எனினும் தோல்வியைச் சந்திக்க மறுக்கும் ஒரு சிறிய தேசத்தின் காவியக் கதை.

காசாவினரின் வீரசாகசத்தை லியோ டால்ஸ்டாயின் காலம் கடந்தும் நினைவில் அகலாத 'போரும் அமைதியும்' நாவலின் பாத்திரங்களின் விடாப்பிடியான பற்றுதலுடன் ஒப்பிடலாம். அவர்கள் நீண்டு கிடக்கும் சின்னஞ்சிறிய நிலப்பரப்பில் இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு மிகவும் முன்பிருந்தே பேரிடரில் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் காசா ஏற்கெனவே 2020 இலேயே வசிப்பதற்கு உகந்ததல்ல என்று ஐ.நா. வின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அப்போதிருந்து நிகழ்ந்துவரும் அனைத்தையும் குறிப்பாக, முன்னெப்போதும் இல்லாத அளவுக்குக் கடுமையான இஸ்ரேல் போரை அது எவ்வாறு சமாளித்து வருகிறது?

"காசா நிலப்பரப்பை முழுவதுமாக முற்றுகையிடுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். அங்கு மின்சாரம், உணவு, எரிபொருள் எதுவும் இருக்காது, அனைத்தும் மூடப்பட்டிருக்கும்" என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் கூறியுள்ளார். உண்மையில் இஸ்ரேல் 2.3 மில்லியன் மக்களை மூச்சுத் திணற வைத்துக்கொண்டு மாபெரும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டு வருகிறது.

"எந்த இடமும் பாதுகாப்பானதல்ல, பள்ளிகளும் மருத்துவமனைகளும் கூட" என்று ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. அந்த அறிவிப்புக்குப் பிறகு விடயங்கள் இன்னும் மிக மோசமாக ஆகிவருகின்றன.

காசாவினர் 365 சதுர கிலோமீட்டர்கள் பரப்புள்ள தமது தாய் நிலத்தை விட்டு வெளியேற மறுப்பதால் அந்நிலம் மனிதர்களை வேட்டையாடும் பூமியாக ஆகிவிட்டது. அவர்கள் கற்பனைக்கு எட்டும் எல்லா முறைகளிலும் கொல்லப்படுகிறார்கள். தங்கள் வீடுகளின் இடிபாடுகளுக்குள் சிக்கி மாண்டுபோகாதவர்கள் ஹெலிகாப்டரிலிருந்து சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குத் தப்பிச்செல்ல முயற்சி செய்வோர் நோயாலும் பட்டினியாலும் மாண்டுவருகின்றனர்.

குழந்தைகள், பெண்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், மீட்புக் குழுவினர், கலைஞர்களும் கவிஞர்களும் கூட விட்டுவைக்கப்படுவதில்லை. கொல்லப்படும் இவர்கள் பட்டியல் நாள்தோறும் நீள்கிறது.

காசாவில் தனது போர்க்குற்றங்களை முழுமையாக அறிந்துள்ள இஸ்ரேல், காசாவின் கதைசொல்லிகளை --- அதாவது இதழியலாளர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும், வலைப் பூவில் எழுதுவோரையும், அறிவார்ந்தவர்கள், சமூக ஊடக செல்வாக்குப் பெற்றவர்கள் உட்பட திட்டமிட்ட முறையில் தாக்குதல் தொடுத்துவருகிறது.

காசா மக்கள் தங்கள் கூட்டு வேதனையையும் எதிர்ப்பையும் ஒளிபரப்ப வேண்டும் என்று வலியுறுத்திவரும் அதே வேளையில் இஸ்ரேல் கதைசொல்லிகளை ஒழித்துக் கட்டுவதற்கு அதன் அதிகாரத்தில் உள்ள அனைத்தையும் செய்துவருகிறது.

போர் தொடங்கியதிலிருந்து 2023 டிசம்பர் 6 வரை 75 பாலஸ்தீனிய இதழியலாளர்களையும் ஊடக ஊழியர்களையும் இஸ்ரேல் கொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவித்துள்ளது என்று பாலஸ்தீனிய இதழியலாளர்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கையில் அதிகாரபூரவமற்ற முறையில் செயல்பட்ட பல குடிமக்கள் இதழியலாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் எண்ணிக்கை இடம் பெறவில்லை. மேலும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையும் இடம் பெறவில்லை.

காசாவின் அறிவாளிகள் இஸ்ரேலின் தாக்குதல் இலக்காக இருந்ததை அறிந்த அந்த மக்கள் பல ஆண்டுகளாக மிகுதியான கதைசொல்லிகளை உருவாக்க முயற்சி செய்தனர். 2015 இல், இளம் இதழியலாளர்கள் மற்றும் மாணவர்களின் ஒரு குழு "நாங்கள் எண்ணிக்கை அல்ல" என்ற பெயரில் ஒரு குழுவைத் தொடங்கினர். "செய்திகளில் உள்ள பாலஸ்தீனியர்களின் மற்றும் அவர்களுடைய மனித உரிமைகளுக்கான ஆதரவாளர்களையும் எண்ணிக்கை குறிப்பிட்டுக் கதை சொல்பவர்கள் அல்ல" என்று அவர்கள் தங்களைப் பற்றிக் கூறிக்கொள்கின்றனர்.

அவர் பதிப்பித்துள்ளார். அதன் மூலம் அவர் பாலஸ்தீனத்து அறிவாளிகளின் செய்திகளை எஞ்சிய உலகுக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

"சில நேரங்களில் தாயக நிலம் ஒரு கதையாகி விடுகிறது. நாங்கள் அந்தக் கதையை நேசிக்கிறோம், ஏனென்றால் அது எங்கள் தாய் நிலம் பற்றியது. அந்தக் கதை மூலம் எங்கள் தாய் நிலத்தை இன்னும் மிகுதியாக நேசிக்கிறோம்" என்று காசா பதிலுக்கு எழுதுகிறது என்ற தொகுதியில் எழுதியுள்ளார்.

இஸ்ரேல் எண்ணற்ற படுகொலைகளை நிகழ்த்தி வடக்குகாசாவை அதன் எஞ்சிய நிலப்பரப்பிலிருந்து தனிமைப்படுத்திய பிறகும் கூட அல் அராரீர் வடக்கு காசாவை விட்டுச் செல்ல மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. அவருக்குக் காத்திருந்த விதியைப் பற்றி அவர் அறிந்திருந்தார் என்பதைப் போல, டிவிட்டரில் பின்வரும் வரியை அவர் ஒரு கவிதையுடன் எழுதியிருந்தார்: "நான் சாகத்தான் வேண்டுமெனில், அது ஒரு கதையாக இருக்கட்டும்."

**காசாவினர் 365 சதுர கிலோமீட்டர்கள் பரப்புள்ள தமது தாய் நிலத்தை விட்டு வெளியேற மறுப்பதால் அந்நிலம் மனிதர்களை வேட்டையாடும் பூமியாக ஆகிவிட்டது. அவர்கள் கற்பனைக்கு எட்டும் எல்லா முறைகளிலும் கொல்லப்படுகிறார்கள். தங்கள் வீடுகளின் இடிபாடுகளுக்குள் சிக்கி மாண்டுபோகாதவர்கள் ஹெலிகாப்டரிலிருந்து சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குத் தப்பிச்செல்ல முயற்சி செய்வோர் நோயாலும் பட்டினியாலும் மாண்டுவருகின்றனர்.**

அந்தக் குழுவின் இணை நிறுவனரான பேராசிரியர் ரெஃபாத் அல் அராரீர் காசா மக்களால் நேசிக்கப்பட்ட கல்வியாளர் ஆவார். அவருடைய அறிவுத்திறன் அவருடைய இரக்க குணத்துடன் மட்டுமே ஒப்பிடக்கூடிய அளவுக்கு சிறந்த ஒன்றாக இருந்தது. பாலஸ்தீனத்தின் கதை, குறிப்பாக காசாவின் கதை, பாலஸ்தீனத்துடன் நெருங்கிய உறவுகொண்ட பாலஸ்தீனியர்களால் மட்டுமே கூறப்பட வேண்டும்.

"காசா மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு உயிரைப் பற்றிக்கொண்டிருப்பதால், நாங்கள் மூச்சுவிடப் போராடிக் கொண்டிருக்கிறோம். எதிர்த்துப் போரிடுவதையும் காசாவின் கதைகளைச் சொல்வதையும் விட வேறு எந்த வாய்ப்பும் எங்களுக்கு இல்லை" என்று '*Light in Gaza: Writing Born of Fire*' என்ற தொகுதியில் அவர் எழுதி உள்ளார்.

"காசா பதிலுக்கு எழுதுகிறது", "மௌனம் கலைக்கப்பட்ட காசா" உள்ளிட்ட பல நூல்களை

'நாங்கள் எண்ணிக்கை அல்ல' கூட்டமைப்பு 2023 டிசம்பர் 7 அன்று வடக்குக் காசாவில் இஸ்ரேலின் வான் தாக்குதலில் தங்கள் நேசத்துக்குரிய நிறுவனர் ரெஃபாத் அல் அராரீர் கொல்லப்பட்டதாக அறிவித்திருந்தது.

அவர் எளிய காசா மக்களின் கதைகளைக் கூற வேண்டும் என்று விரும்பினார். அதன் மூலம் உலகெங்கும் உள்ள பிற எளிய மக்கள் பாலஸ்தீன மக்களின் அன்றாடப் போராட்டத்தையும் நீதிக்கான அவர்களுடைய நேர்மையான கோரிக்கைக்களையும் நல்ல எதிர்காலத்துக்கான அவர்களுடைய நம்பிக்கையையும் பற்றி அறிந்துகொள்ள முடியும் என்று கூறினார்.

அவர்களுடன் அவர்களுடைய கதைகளும் செத்துப்போகும் என்ற நம்பிக்கையில் இந்தக் கதை சொல்லிகள் அனைவரையும் இஸ்ரேல் கொன்றது. ஆனால் இஸ்ரேல் தோற்றுப் போகும் ஏனென்றால் அந்தக் கூட்டுக் கதை நம் அனைவரையும் விடப் பெரியது. காஸ்ஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காசா மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு உயிரைப் பற்றிக்கொண்டிருப்பதால், நாங்கள் மூச்சுவிடப் போராடிக் கொண்டிருக்கிறோம். எதிர்த்துப் போரிடுவதையும் காசாவின் கதைகளைச் சொல்வதையும் விட வேறு எந்த வாய்ப்பும் எங்களுக்கு இல்லை"

*கனாஃபனி, பாசில் அல்-அராஜ், மற்றும் ரெஃபாத் அல் அரார்ீர் போன்றவர்களை உருவாக்கிய ஒரு தேசம் எப்போதும் மாபெரும் அறிவாளிகளை உருவாக்கிக்கொண்டே இருக்கும், அவர்கள் பாலஸ்தீனத்தின் கதையையும் அதன் விடுதலை பற்றிய கதையையும் கூறிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை வகித்து வருவார்கள்.*

*-டாக்டர் ராம்ஸி பரவ்ட்*

**அல் அரார்ீர் பகிர்ந்துகொண்ட கடைசிக் கவிதை**

நான் சாகத்தான் வேண்டுமெனில்
எனது கதையைச் சொல்லவும்
ஒரு துண்டுத் துணியையும்
(அதை நீண்ட வெள்ளைத்துணியாக்கவும்)
கொஞ்சம் நூலிழையும் வாங்குவதற்கு
எனது பொருட்களை விற்கவும்
நீங்கள் வாழவேண்டும்
அதன் மூலம் காசாவில் எங்கோ
யாருக்கும் தனது சதைக்கோ தனக்கே கூட
விடை கொடுக்காமல்
குண்டுவெடிப்பில் இறந்துபோன தன் தந்தையை
வானை நோக்கி எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும்
ஒரு குழந்தை
அந்த வெள்ளைத் துணியால்
நீங்கள் செய்த பட்டம் உயரப் பறப்பதை
பார்த்துக்கொண்டிருக்கும்
ஒரு தேவதை அன்பை மீண்டும்
கொண்டுவந்து சேர்க்குமென்று
ஒரு கணம் நினைக்கும்.
நான் சாகத்தான் வேண்டுமெனில்
அது நம்பிக்கையைக் கொண்டுவரட்டும்
அது ஒரு கதையாக இருக்கட்டும்.

**அவாரீருக்கு ஒரு கவிதை**

*- மௌமிதா அலாம்*

நாம் அனைவருமே சாகத்தான் வேண்டும் ரெஃபாத்
நான் ஒப்புக்கொள்கிறேன்
ஆனால் இடிபாடுகளுக்குள் மறைவதற்கு
சதையெல்லாம்புழுதியோடு புழுதியாக ஆவதற்கு
ஒரு கட்டிடத்திலிருந்து இன்னொன்றுக்கு
நாம் விரையக் கூடாது.
எந்த ஒரு அன்னையும் தான் விடைபெறுவதை
தனது குழந்தைக்கு வானில் எழுதக்கூடாது.
இலைகளின் மீது படர்ந்துள்ள அடர்பனி போல
துளித் துளியாய் உருகி
பூமியில் விழுவதைப் போல
நாம் துயர் தணிக்க
சாவு நம் நெற்றியில் ஒரு கணம்
நிற்க வேண்டும்
சாவு இவ்வளவு கொடூரமான
திடீரென, எதிர்பாராத, மனிதாபிமானமற்ற
சக்திவாய்ந்த காட்சியாக இருக்ககூடாது.
உங்களுக்காக நான் ஒரு பட்டம் செய்வேன்
அன்று நம்மை நாம் விடுவித்திருப்போம்
அந்த நாளில் நாம் விடுதலையை அடைந்திருப்போம்
அந்தப் பட்டத்தை நான் நமது கஃபானிலிருந்து
செய்ய மாட்டேன்
சுதந்திரப் பாலஸ்தீனத்தின்
கோதுமை வயல்களில் தெறித்து
மின்னும் கதிரொலியின் ஒரு துண்டிலிருந்து
அதை நான் செய்வேன்
ஒரு கவிஞனைக் கொல்ல முடியாது, ரெஃபாத்
ஒவ்வொரு மொட்டின் மலர்ச்சியிலும்
ஒவ்வொரு விதையின் முளைப்பிலும்
நம்பிக்கையின் ஒவ்வொரு தோற்றத்திலும்
கவிஞன் ஒருவன் இருக்கிறான்
அவன் நம்பிக்கைக்காகப் பாடுகிறான்
அங்கு நீங்கள் இருப்பீர்கள் ரெஃபாத்
உங்களுக்கு வாக்களிக்கிறேன் ரெஃபாத்
ஒவ்வொரு அரிச்சுவடியிலும் நான்
உங்கள் கதையை எழுதுவேன்
அவற்றைக் கடல் மீது பரப்புவேன்
கடலைக் கடந்துசெல்லும் ஒவ்வொரு பறவையும்
உங்கள் கதையில் தமது இறகுகளை நனைத்து
அதைத் தொலைதூர நிலங்களுக்கு எடுத்துச் செல்லும்
ஒவ்வொரு குரலும் ஒவ்வொரு மலையிலிருந்தும்
உங்களுக்காக, சுதந்திரப் பாலஸ்தீனக் கனவுக்காக
எழும்
ஸ்னைப்பர்களால் மலைகளைக், கொல்லமுடியாது
கொடூரமாக விரைந்து வருகிற இந்த மரணம்
ஒழியும் வரை,
நாங்கள் விடுதலை அடையும் வரை
சுதந்திரப் பாலஸ்தீனத்திலிருந்து சூரியன் உதிக்கும்
வரை
அந்த மலைகளிலிருந்து இறங்கிவரும் ஆறுகள்
உங்களுக்காகப் பாடிக்கொண்டிருக்கும்

*நன்றி: ஜனதா வீக்லி.*

*தமிழில் நிழல்வண்ணன்*

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: சச்சிதானந்தன் சுகிர்தராஜா

# இலக்கியக் குத்தல்






சல்மான் ருஷ்டி ஒரு மதவெறியரால் கத்தியால் குத்தப்படுவதற்கு சில இரவுகளுக்கு முன்பு, ஒரு ரோமானிய மல்லன் ஒருவன் அவரை ஈட்டியால் தாக்கப்படுவதைப் பற்றி கனவு கண்டார்.

1989 ஆம் ஆண்டு அவரின் தர்க்கத்துக்குரிய நாவலான 'சாத்தானின் செய்யுள்கள்' (*Satanic Verses*) வெளியானதைத் தொடர்ந்து எப்போது அயதுல்லா கொமேனி ருஷ்டி கொல்லப்பட வேண்டும் என்று மததீர்ப்பு அறிவித்தாரோ அன்றிலிருந்து என்னுடைய கொலையாளி ஏதாவது ஒரு பொது இடத்தில் தன்னைத் தாக்கவருவார் என்று ருஷ்டி கற்பனை செய்தார். கனவுகளும் கண்டார். அவர் எதிர்பார்த்தது ஆகஸ்ட் 12, 2022 அன்று, நியூயார்க்கில் உள்ள செட்டகுவாவில் நடந்தது. இது எழுத்தாளரின் படைப்புகளின் பின்விளைவுகளிலிருந்து வரும் ஆபத்துகளிலிருந்து அவர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் இந்த முரட்டுத்தனமான செய்கை பகிரங்கமாக எல்லார் முன்னிலையிலும் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கருணையில்லாதப் பழிச்செயலில் பொதிந்துகிடக்கும் முரண்நகை தவிர்க்கமுடியாதது. இப்படி யோசித்துப் பாருங்கள். நுளம்புக்கடியிலிருந்து எப்படி மக்களைப் பாதுகாப்பது என்று ஒழுங்கு செய்த கருத்தரங்கில் முக்கிய பேச்சாளார் அதே நுளம்புகளால் கொடுரமாகத் தாக்கப்பட்டால் எப்படி இருக்கும்.

மேடையில் ருஷ்டி பேச்சைத் தொடங்கும்போது, கருப்பு நிறத்தில் ஒரு உருவம் தன்னை நோக்கி விரைந்து வருவது அவரின் ஓரக் கண்ணுக்குத் தெரிந்தது. அப்போது அவருக்கு வந்த எண்ணங்கள் "நீதான அந்த ஆள்? இவ்வளவு நாளும் எங்கிருந்தாய்? இத்தனை வருடங்கள் கழித்து இப்போது ஏன்?"

ருஷ்டியின் சமீபத்திய நூலான 'கத்தி'(*Knife : Meditations After and Attempted Murder*) அன்று நடந்த தாக்குதல், அவரின் கண்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அவற்றிலிருந்து குணப்பட்டு, மீண்டும் செயல்பட, கிட்டத்தட்ட ஆரோக்கியமடைந்த ஆளுமையாக தன் வாழ்க்கையை தொடங்கியதை விவரிக்கிறது. இது ருஷ்டியின் இரண்டாவது சுய கதை. அவரது 2012 ஆம் ஆண்டு நினைவுக் குறிப்பான ஜோசப் ஆண்டன் (*Joseph Anton*) ஈரானிய மததீர்ப்புக்குப் பிந்தைய, ருஷ்டியின் வாழ்வு எப்படி அமைந்திருந்தது என்பதை வெளிப்படுத்தினார். மூன்றாம் நபரில் தனது அனுபவங்களை எழுதியதன் மூலம், இந்த நிகழ்ச்சி, அதிர்ச்சி வேறொருவருக்கு ஏற்படுவது போல விவரித்திருந்தார். அவர் தனது சொந்தப் பெயரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து அவரது இலக்கிய நாயகர்களான கான்ராட் ( *Joesph Conrad*) மற்றும் செக்கோவ் (*Anton Chekov*) ஆகியோரின் கிறித்துவப் பெயர்களான ஜோசப், மற்றும் ஆண்டன் ஐ இணைத்து படர்க்கையில் குறியீட்டுப் பெயரில் எழுதினார்.. கத்தியில் ருஷ்டி தன்னைப் பற்றி எந்தவித கூச்சமும் இல்லாமல் தன்மையில் எழுதுகிறார். இந்த நூலில் அவரது தாக்குதலாளியின் பெயரான ஹாடி மாட்டாரை (*Hadi Matar*) நேரடியாகச் சொல்வதை அவர் தவிர்த்து இருக்கிறார். அவருக்கு "*A*" என்றுமட்டுமே பெயர் கொடுத்தார். *A* எதைக் குறிக்கிறது என்பதை அவருடைய ஆங்கில சொற்களிலேயே தருகிறேன், அவற்றுக்கு தமிழ் அகரவரிசையில் அடுக்குமொழி வார்த்தைகள் கண்டுப்பிடிப்பது கடினம்: *Assailant, Assassin. Ass.*

*A* தன்னை தாக்கியபோது அவர் ஏன் உறைந்து போனார் என்று அவர் ஆச்சரியப்படுகிறார், வெட்கமும், கோபமும் படுகிறரர்.. அவர் ஓடிப்போயிருக்கலாம் அல்லது சண்டையிட்டிருக்கலாம். ஆனால், அதிர்ச்சியில் 75 வயது முதியவர், 24 வயது இளைஞனிடம் கத்தியுடன் சண்டையிடுவது எப்படி? என்று அங்கலாய்க்கிறார்.

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு அவரது வலது கண்ணில் பார்வை இழந்தார். தாக்குதல்கள் எடுத்துக்கொண்ட வினாடிகள் 27. இந்தக் குறைந்த அவகாசத்தில் எத்தனையோ இலக்கிய, சமய சம்பந்தமான காரியங்களைச் செய்திருக்கலாம் என்கிறார். சேக்ஸ்பியரின் ஒரு ஈரேழ்வரிப்பா (*sonnet*) அல்லது பரமண்டலத்திலிருக்கும் பிதாவே ஜெபம் சொல்லியிருக்கலாம் என்று ருஷ்டி சொல்லுகிறார். இந்த காலவெளியில் நாலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறள்கள் படித்திருக்கலாம் என்று ரூஷ்டியின் மனைவிகளில் ஒருவர் தமிழரான பத்மா சொல்ல மறந்துவிட்டார் போலிருக்கிறது.

ஒரு முதியவரின் கழுத்தில் கத்தியை செலுத்தத் தயாராக இருக்கும் ஒருவரின் மனநிலையை அறிய தன்னைத்தாக்கியவரை ரூஷ்டி சந்திக்கவிரும்பினார். ஆனால் அது நடக்காத காரியம். அதற்குப் பதிலாக ஒரு எழுத்தாளர் செய்யக்கூடிய வேலையைச் செய்தார்.

நிகழமுடியாத இந்த நிகழ்வை கற்பனை செய்து பார்த்தார். ஒன்றரை வருடங்களாக அவரின் மனதில் வைத்திருந்த அவருக்கும் அவரைத் தாக்கியவருக்கும் நடந்த உரையாடலை இப்போது வசனப்படுத்தி இந்த நூலில் சேர்த்திருக்கிறார். இந்த 40 பக்கங்கள் கொண்ட இந்த கற்பனை நேர்காணல் வாசகர்களின் கருத்துப் பாங்கு, சமய சார்புவைப் பொறுத்து ஏக காலத்தில் விறுவிறுப்பையும் விசனத்தையும் ஏற்படுத்தும். இவரைக் கொல்ல முயன்ற மாட்டர் லேபனனுக்குப் போனது, அங்கு இஸ்லாமிய மதவாதிகளால் ஏற்பட்ட தாக்கம், ரூஷ்டியின் நாவல் இரண்டு அல்லது மூன்று பக்கங்கள் மட்டுமே வாசித்தது தவிர இந்த மனிதத் தன்மையற்றச் செயலைச் செய்த மனிதரைப் பற்றிய நமக்குப் புதிதாக செய்திகள் இல்லை. 2002 குஜராத்தில் நடந்த இனக் கலவர அறிக்கையில் நரேந்திர மோடி வெறும் தேத்தண்ணீர் கடை வியாபாரி என்று சொல்வது போன்றது.

மாட்டர் ரூஷ்டியை பத்துக்கும் மேற்பட்ட முறை குத்திய இவர் நியூயார்க் போஸ்ட் இதழுக்குக் கொடுத்த பேட்டியில் ரூஷ்டி "வெறுக்கத்தக்கவர்" என்று நினைத்ததால் தான் இந்த வன்முறைச் செயலில் ஈடுபட்டதாகக் கூறினார்.

புத்தகத்தில் உள்ள மிகவும் வாக்கியம் கொடூரமான, கோரமான வாக்கியம் அவரது பாழடைந்த கண் வேகவைத்த முட்டையைப் போல அவரது முகத்தில் தொங்கியது என்று வர்ணித்தது. அதே நேரத்தில் சுய பகுடியும் உண்டு. அறுவைச் சிகிச்சையினால் உடலில் ஏற்பட்ட வடுக்கள் சுரங்கத் தொடருந்து வரிப்படம் போல் இருந்ததாக வர்ணித்தது. சென்னை வாசிகளின் கனிவான கவனத்துக்கு மட்டும். சுரங்க தொடருந்து என்பதற்குப் பதிலாக மெட்ரோ இரயில் என்று வாசியுங்கள். புத்தகத்தில் மிளிரும் இன்னுமொரு இருண்மையான நகைச்சுவை அவரைக் காப்பாற்றிய மருத்துவர்களில் ஒருவர் முகத்தை நேராக வைத்துக்கொண்டு எந்தவிதமான சலனமும் இல்லாமல் கூறிய வார்த்தைகள்: "உங்களைத் தாக்கிய மனிதனுக்கு ஒரு மனிதனைக் கத்தியால் எப்படிக் கொல்வது என்று தெரியவில்லை. நீங்கள் அதிர்ஷ்டசாலி".

இந்த நினைவுக் குறிப்பு தனது சொந்த வாழ்க்கை அவருடைய கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டுவருவதற்கான ஒரு சாதனமாகக் கருதுகிறார். மேடையில் ரத்த வெள்ளத்தில் கிடந்த பரிதாபமான மனிதனாக இருப்பதற்குப் பதிலாக, இரத்தக் குளத்தில் மிதந்த ஒரு மனிதனைப் பற்றி ஒரு புத்தகம் எழுதும் ஒரு மனிதனாக இருக்க விரும்பினேன் என்கிறார். ஏனென்றால் இதை எழுதும்போது என் கதையை நான் என் வழியில் சொல்ல அது எனக்கு சக்தியைத் திரும்பக் கொடுத்தது போல் உணர்ந்தேன் என்கிறார்.

'கத்தி' இவரைப் பொறுத்த வரையில் அவர் எழுதத் தேவையில்லாத புத்தகம் என்று அவருக்குப் படுகிறது. ஒரு கண் மற்றும் ஒன்றரை கைகளால் இந்த ஆக்கம் இயற்றப்பட்டது. தாக்குதல் மட்டுமல்ல குழந்தைப் பருவத்தின் நினைவுகள் மற்றும் அவரது தவறான, குடிகார தந்தையின் ஆக்கினைகள், அவருடைய இலக்கிய நண்பர்களுடன் நடத்திய சம்பாஷணைகள், இவர் மறைந்திருந்த நாட்களில் இவருக்கு ஆதரவும் ஆட்சேபனையும் தெரிவித்த அரசியல்வாதிகள், இலக்கிய ஆளுமைகள் இந்த நூலில் பக்கங்களை நிரப்புகின்றன.

மேலும் அவரது உடல், மனம் சார்ந்த இன்னல்களை ஆவணப்படுத்துவதுடன், கத்திக்குத்தால் பாதிக்கப்பட்ட மற்ற எழுத்தாளர்களையும் நினைவுகூறுகிறார்., சாமுவேல் பெக்கெட் 1938 இல் பாரிஸில் ஒரு காமத் தரகரால் மார்பில் குத்தப்பட்டார்; எண்பத்தி இரண்டு வயதான நகுயிப் மஹ்பூஸ் 1994இல் கெய்ரோவில் உள்ள தனது விருப்பமான உணவு உண்டிச் சாலைக்குச் செல்லும் வழியில் கழுத்தில் கத்தியால் குத்தப்பட்டார்.

ஒரு விதத்தில் இந்த அபுனைவு எழுத்து ஒரு வயோதிகரின் அவருடைய ஐந்தாவது இளம் மனைவியான ரேச்சல் எலிசா கிரிஃபித்ஸ் க்கு எழுதிய காதல் கடிதமாகவும் எடுத்துக்கொள்ளலாம். இந்தக் கட்டத்தில் ஈழத் தமிழர் உமாதேவி கபாலி படத்திற்கு எழுதிய தூய நரையிலும் காதல் மலருதே என்ற வரிகளை முனுமுனுப்பது அவசியம். இதை ரூஷ்டி விரும்புவார்.

ரூஷ்டி உடல்ரீதியாக பாதிக்கப்பட்டது நேரடியாகவும், துல்லியமாகவும், உணர்ச்சியற்றதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது: அவரது இடது கையில் ஒரு ஆழமான கத்தி காயம், அதன் தசைநாண்கள் மற்றும் பெரும்பாலான நரம்புகளை துண்டித்தது; கழுத்தில் விழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொழிகூட தனக்கு கத்தி போலத்தான் என்கிறார் ரூஷ்டி. மொழியின் வேலையும் கருத்துக்களை வெட்டி, கூராக்கி உண்மையையும் அர்த்தங்களையும் வெளி கொண்டுவருவதுதான். கண்களை குருடாக்குவதில்லை.**

இரண்டு ஆழமான கத்திக்குத்துக்கள், அவரது முகம், வாய், மார்பு, வயிறு மற்றும் வலது தொடையில் ஏற்பட்ட சிதைவுகள். இந்த விவரிப்புக்களை பூலோகத்தில் உள்ள எல்லா ஊட்டச் சக்திகள் உள்ளது என்று விளம்பரப்படுத்தபடும் மதுரை பருத்திப் பால் அருந்திக்கொண்டு வாசிப்பது நல்லது.

ரூஷ்டி எப்போ எழுதத் தொடங்கினாரோ அன்றிலிருந்து அவரை சர்ச்சைகளும், வழக்குகளும், மிரட்டல்களும் தொடர்ந்து கொண்டே இருந்தது. அவரைப் பிரபலமாக்கிய நடுநிசி குழந்தைகளில் அவர் எழுதிய ஒரு வரி அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்குப் பிடிக்கவில்லை. ரூஷ்டியை அந்த புத்தகத்தில் உள்ள அவரது கணவரின் மரணத்திற்கு இந்திரா தான் காரணம் என்ற ஒரு வாக்கியத்துக்காகவே நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றார், அந்த வரியை ரூஷ்டி நீக்க ஒப்புக்கொண்டபோது வழக்கு பின் வாங்கப்பட்டது. இதன் முழு விபரமும் நடுநிசி குழந்தைகள் 25 ஆம் ஆண்டு சிறப்புப் பதிப்பில் படிக்கலாம்.

இந்திரா காந்தியை விட பக்தியுள்ள முஸ்லிம்களைக் காயப்படுத்தக்கூடிய வரிகள் நடுநிசி குழந்தைகளில் உண்டு. ரூஷ்டி எழுதிய வரிகளில் ஒன்று: “முஹம்மது தீர்க்கதரிசனம் கூறியபோது, மக்கள் அவர் சொன்னதை பனை ஓலைகளில் எழுதி வைத்தார்கள், அவை பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. அவர் இறந்த பிறகு, அபுபக்கரும் மற்றவர்களும் சரியாக வரிசை படுத்த முயன்றனர், ஆனால் அவர்களுக்கு நல்ல நினைவுகள் இல்லை.” இது குர்ஆனின் புனிதத் தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மட்டும் அல்ல இஸ்லாமிய நம்பிக்கையில் விலைமதிப்பற்ற இரவான லைலத்துல் கத்ரின் போது கடவுள் குர்ஆனை முழுமையாக தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தினார் என்ற கருத்தை சந்தேகத்துக்குள்ளாக்கியது. இந்த வரி மட்டுமே சாத்தானின் செய்யுள்கள் வசனங்களில் உள்ளது போல முஸ்லிம்களை ஆத்திரமூட்டும் வகையில் உள்ளது.

புத்தகங்கள் பெரிதும் கண்காணிக்கப்பட்டு தணிக்கை செய்யப்பட்ட ஈரான் நாட்டில், இந்த வரிகள் பாரசீக மொழிபெயர்ப்பில் மாற்றப்படாமல் விநியோகிக்கப்படுகின்றன. 1985 ஆம் ஆண்டில், நடுநிசி குழந்தகள் சிறந்த மொழிபெயர்ப்பு புத்தகத்துக்கான பரிசை வென்றது. அதன் மொழிபெயர்ப்பாளருக்குப் பரிசை வழங்கியவர் வேறு யாருமில்லை. அன்றைய ஜனாதிபதியும் இப்போது ஈரானின் உச்ச தலைவருமான அலி கமேனி.

மீண்டும் வாழ வேண்டும் என்கிற எண்ணம் மதசார்பற்ற இஸ்லாமியரான ரூஷ்டிக்கு தெய்வீக அகத்தூண்டுதலினால் வர வாய்ப்பே இல்லை.. இந்த இலக்கியவாதிக்கு இலக்கியங்களும் கைகொடுக்கவில்லை. அவற்றில் ஒன்றுதான் *Joe Saramangoவின் Blindess*. இந்த இலக்கியங்களில் பார்வை உணர்வற்றவர்கள் திடீரென்று மற்றும் எந்த வித விளக்கமும் இல்லாமல் மீண்டும் பார்வை அடைகிறார்கள். இது ரூஷ்டிக்குச் சினத்தைத் தருகிறது. தமிழ் சினிமாவுக்கு இது புதிசல்ல. கதாநாயகிகள் இறுதிக் காட்சியில் கடவுளின் சிலை முன் நின்று நெஞ்சு விம்மிப் பாடி தங்கள் கணவர்களுக்கு தெய்வீக அருளால் கண் பார்வையை கிடைக்கச்செய்வார்கள். உள்ளத்தைப் உருக்கி எடுக்கும் உதாரணம் சிவாஜி-பத்மினி ஜோடியின் தங்கப் பதுமை. பார்வை இழந்தவர்கள் அல்லது என்னைப் போல் பாதி பார்வையாளர்களுக்குத் தெரியும் கண்தெரியாமை வெறுமனே ஒழிந்துவிடாது. சிலேடையை கலைவடிவமாக்கிய அவரின் பாஷையில் சொல்லப்போனால் கண்ணுக்குத் தெரியாமற் போய்விடப்போவதில்லை.

மறுபடியும் வாழ்க்கைத் தொடங்கலாம், வாழலாம் என்று ரூஷ்டிக்குத் தைரியம் கொடுத்தது இலக்கியமோ இலக்கியவாதிகளோ அல்லது சமய போதனைகளோ, மதவாதிகளோ அல்ல. ஒரு கிரிக்கட் வீரர். முகமது மன்சூர் அலி கான் அல்லது எம். ஏ. கே. பட்டோடி என்றும் டைகர் பட்டோடி என்ற புனைப்பெயர் கொண்ட ஒரு இந்திய கிரிக்கெட் வீரர். 1960-70 களில் ஆடியவர். இவர் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஆவார். இன்றைய தலைமுறைக்கு இவர் சினிமா நட்சத்திரம் சர்மிளா தாகூரின் கணவர். சைஃப் அலிகான் மற்றும் சோஹா அலிகானின் தகப்பனார். ஒரு விபத்தில் பட்டோடி வலது கண்பார்வையை இழந்தார். அவரே மறுபடியும் துடுப்பெடுத்து பேய்வேகத்தில் பந்தெறிந்தவர்களான வெஸ்லி ஹால், சார்லி கிரிஃபித்ஸ் சதங்கள் எடுத்தவர். அந்த நாட்களில் மேற்கிந்திய அணிகளுக்கு எதிராக நூறு ஓட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்பது தமிழ்நாட்டு பாராளுமன்றத் தொகுதிகளில் கூட்டுச் சேராத பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெல்வதற்குச் சமனானது. பட்டோடியினால் இயந்திர வேகத்தில் எறியப்படும் பந்தை எதிர்நோக்கமுடியுமானால் என்னாலும் வாழமுடியும் ஏன்று ரூஷ்டி நம்பினார்.

பட்டோடி மறுபடியும் விளையாட வந்ததுபற்றி ரூஷ்டியின் நூலில் சொல்லாத சம்பவம் ஒன்று உண்டு. ஆங்கில விளையாட்டு விமர்சகர் ஒருவர் மீண்டும் துடுப்பெடுத்து ஆடலாம் என்ற எண்ணம் எப்போது உங்களுக்கு வந்தது என்று கேட்டபோது பட்டோடி தன் நாக்கை கன்னத்துக்குள் (*tongue-in- check*) இறுக்க வைத்துக்கொண்டு பரிகாசமாகச் சொன்ன பதில்: ஆங்கில பந்துவிச்சாளர்களின் மோசமான பந்து விச்சைப் பார்த்த பிறகு. சமீபத்தில் நடந்து முடிந்த இந்தியா-இலங்கிலாந்து 5 நாள் டெஸ்டு போட்டியில் இரண்டு இரட்டை சதம் அடித்த யஷஸ்வி ஜெய்ஸ்வால்-ஐக் கேட்டுப்பாருங்கள் ஆங்கில அணியின் பந்துவீச்சுத் தரம் பற்றிச் சொல்வார்.

வேதனை நிறைந்த நித்திரை இல்லாத நாட்களில் ட்டிலில் புரண்டபோது அதிக சேதங்களை விளைவிக்கிற இரண்டு கருவிகளான துப்பாக்கியையும் கத்தியைப் பற்றியும் நிறையவே யோசித்தார். கத்தி பின்பற்றத்தக்க கருத்தியலான கருவியாக இவருக்குப்பட்டது. திருமணங்களில் கேக்கை இரண்டாக வெட்டும்போது இரண்டு உள்ளங்களை ஒன்றாக இணைத்து வைக்கிறது. அடுப்படியில் கொச்சிக்காயை நறுக்கி செட்டி நாட்டு கோழிக்கறிக்கு சுவை ஊட்டுகிறது. ஆனால் துப்பாக்கி அப்படி அல்ல.. துப்பாக்கிக்கு மோடியின் தேசிய சுலோகங்கள் போல் ஒரே செயல், ஒரே நோக்கமும் உபயோகமும் தான் உண்டு. அதற்கு சுடவும், கொல்லவுந்தான் தெரியும். பரோட்டாவை துண்டுதுண்டாக்கி கொத்துப் பரோட்டா அது செய்யமுடியாது. இதையும் சொல்லவேண்டும். இங்கே நான் சொன்ன கொச்சிக்காய், கொத்துப் பரோட்டாச் சமாச்சாரங்கள் ரூஷ்டியின் நூலில் இல்லை. அவர் சொன்ன உதாரணங்கள் ஐரோப்பிய கலாச்சாரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளவை. அவற்றைத் தமிழ் வாசகர்களுக்கு இலகுவாக இந்தத் தமிழ் மண்வாசனை எடுத்துக்காட்டுக்கள்.

மொழிகூட தனக்கு கத்தி போலத்தான் என்கிறார் ரூஷ்டி. மொழியின் வேலையும் கருத்துக்களை வெட்டி, கூராக்கி உண்மையையும் அர்த்தங்களையும் வெளி கொண்டுவருவதுதான். கண்களை குருடாக்குவதில்லை. செதில்கள் நிறைந்த கண்களைத் திறந்துவிடுவது தான். ஒரு உலகத்தை மறைப்பதல்ல, ஒரு புது உலகத்தை உருவாக்குவதுதான்.

கொமெனியின் மத தீர்ப்புக்குப் பின் ரூஷ்டியின் மனதில் இரண்டு கேள்விகள் எழுந்தன. ஒன்று பழிவாங்கும், பயமுறுத்தும் மிரட்டல்தனமான புத்தகங்கள் எழுதுவதா?. அல்லது அஞ்சியஞ்சி நடுங்குகிற பயத்துடன், பதட்டத்துடன் எழுதுவதா? இதில் எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தாலும் ஈரான் மதவாதியின் அறிவிப்பு என்னை ஆட்கொண்டு விடும். என் அழிவுக்கு வழிவகுக்கும். எனது தனித்துவத்தையும் என் சுதந்திரத்தையும் அழித்துவிடும். ஆகையினால் தான் வந்த இலக்கியப் பாதையை மேலும் தொடர்வதே கலைஞனாக வாழ்வதற்கான ஒரேவழி என்பதைப் புரிந்துகொண்டேன் என்கிறார். அந்த வழி மனிதர்களின் உள்ளுணர்வுகளையும் நிகழ்வுகளின் விளைவுகளையும் தாக்கங்களை புரிந்துகொள்ள முயற்சிப்பதும், அவைகளை அர்த்தப்படுத்துவதும், தர்க்கப்படுத்துவதும் இலக்கியமாக்குவதும் தான். இதை எழுத்தாளர்களின் வேலைச் சுமைகளில் ஒன்றாகப் பார்க்கிறார்.

இந்த நூலும் ரூஷ்டி மீண்டும் பொதுவெளிக்குத் திரும்பி வந்ததும் சொல்லும் செய்தி இதுதான்: பயங்கரவாதம் நம்மை பயமுறுத்தக்கூடாது.

ரூஷ்டியைத் தாக்கிய ஹாடி மாட்டார் போன்றவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். நமக்கு ஒத்துவராத எழுத்துக்கள், கருத்துக்களுக்குச் சொந்தக்காரர்களை தடைசெய்யலாம், அழித்துவிடலாம், உடலை ஊனப்படுத்தலாம். அவர்களின் எண்ணங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். நகுயிப் மஹ்ஃபூஸ் அராபிய மொழியில் எழுதியதை ஆங்கிலத்தில் வாசித்ததை என்னுடைய தளர்ச்சியான மொழிபெயர்ப்பில் தருகிறேன். இவை சாத்தானின் செய்யுள்கள் எழுதியவர் கொல்லப்படவேண்டும் கொமெனி அறிக்கை இட்ட நாட்களில் இந்த எகிப்திய ஆசிரியரால் எழுதப்பட்டவை: "ஒரு கருத்தை மாற்றுக் கருத்துகளாலும் எதிர்கூறல்களாலும் மட்டுமே சந்திக்க முடியும், நேருக்கு நேராக சவால்விட முடியும். எழுத்தாளர் மடிந்துபோனாலும், கொல்லப்பட்டாலும் அவரின் எண்ணமும், புத்தகமும் நிலைத்திருக்கும்" இதையே வேறுவிதமாக ரூஷ்டி எழுதிய சமீபத்திய வெற்றி நகரம் (*Victory City*) புத்தகத்தில் சொல்லியிருந்தார். இதுவே நூலின் கடைசி வரிகள்:

"இறுதியில் வார்த்தைகளே வாகை சூடும்."

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாக்கம்: அக்களூர் ரவி

# என்சிஇஆர்டி (NCERT) புத்தகங்களில் ராக்கிகர்ஹி அகழ்விடக் கண்டுபிடிப்புகள்: நர்மதா அணைக் குறிப்புகள் நீக்கப்பட்டுள்ளது.

பன்னிரெண்டாம் வகுப்பு வரலாற்றுப் பாடப் புத்தகத்தில், ஹரப்பா மக்களின் மரபணு தொடர்ச்சி ஆரியர்கள் இங்கு குடியேறினார்கள் என்பதை இல்லையென்றாக்குகிறது என்று NCERT கூறியுள்ளது; அரசியல் அறிவியல் பாடப் புத்தகங்களிலும் பாபர் மசூதி இடிப்பு பற்றிய குறிப்புகளை நீக்கிவிட்டு ராமஜென்மபூமி கோவில் இயக்கத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (NCERT) முன்மொழிவு ஒன்றை அளித்துள்ளது; ஹரியானாவில் இருக்கும் ராக்கிகர்ஹி என்ற தொல்பொருள் அகழ்விடத்தில் தோண்டியெடுக்கப்பட்டிருக்கும் எலும்புக்கூடுகளின் டிஎன்ஏ பகுப்பாய்வு முடிவுகளை 12 ஆம் வகுப்பு வரலாற்று பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று கூறுகிறது; அதே நேரத்தில் நர்மதா அணைத் திட்டம், எந்த அளவுக்கு மோசமாக பழங்குடியின மக்களை பாதித்தது; மிகவும் நிராதவரான நிலைமைக்குத் தள்ளியது என்பது பற்றிய குறிப்புகளை சமூகவியல் பாடப்புத்தகத்திலிருந்து நீக்கவேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது.

**இவை என்சிஇஆர்டி மிகச் சமீபத்தில் முன்மொழிந்த பள்ளி பாடப்புத்தகங்களில் செய்ய வேண்டிய திருத்தங்கள்.**

12 ஆம் வகுப்பு சமூகவியல் பாடப் புத்தகத்திலிருந்த, "பட்டியலின சாதிகளும் பழங்குடி இனத்தவரும் வறுமையாலும், அதிகாரமின்மையாலும் சமூக அவமதிப்பாலும் குறிப்பாக பாதிக்கப்பட்ட சமூகக் குழுக்கள்" என்ற வரி நீக்கப்பட்டுள்ளது:

பன்னிரெண்டாம் ஆம் வகுப்பு வரலாற்று பாடப் புத்தகத்தின் முதல் பகுதியான *Themes in India History* இல், ஹரப்பா நாகரிகம் - செங்கற்கள், மணிகள் மற்றும் எலும்புகள் என்ற அத்தியாயத்தில் முக்கியமான ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது: ராக்கிகர்ஹியில் கிடைத்துள்ள தொல்லியல் ஆதாரங்களின் தொன்மை குறித்து நடத்தப்பட்ட மரபணு ஆய்வு, ஹரப்பா மக்களின் மரபணு வேர்கள் கி.மு.10000 வரையிலும் செல்கின்றன என்று NCERT தெரிவித்துள்ளது. "ஹரப்பா மனிதர்களின் மரபணு முறிவேதுமின்றி இன்று வரையிலும் தொடர்கிறது; தெற்காசிய மக்களின் பெரும்பான்மையோர் அவர்களின் வழித்தோன்றல்களாகத் தோன்றுகின்றனர். தொலைதூர பிரதேசங்களுடன் ஹரப்பா மனிதர்கள் கொண்டிருந்த வர்த்தகம் மற்றும் கலாச்சாரத் தொடர்புகள் காரணமாக, சிறிய அளவில் மரபணுவின் கலப்பு இருக்கிறது. மரபணு வரலாற்றிலும் கலாச்சார வரலாற்றிலும் பார்க்க முடிகிற முறிவற்ற தொடர்ச்சி, ஆரியர்கள் என்று அழைக்கப்படுவோர் பெரும் அளவில் குடியேறினார்கள் என்பதை நிராகரிக்கிறது" என்கிறது அந்தச் சொற்றொடர். சுற்றியிருந்த பிரதேசங்களிலிருந்தும் தூரத்துப் பகுதிகளிலிருந்தும் வந்த மக்கள் இந்திய சமூகத்தில் உள்வாங்கிக் கொள்ளப்பட்டனர் என்று அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது என்று திருத்தப்பட்ட சொற்றொடர் கூடுதலாகக் கூறுகிறது. "எந்தக் கட்டத்திலும், இந்தியர்களின் மரபணு வரலாற்று தொடர்ச்சி நிற்கவில்லை அல்லது முறிபடவில்லை. ஹரப்பா மனிதர்கள் ஈரான் மற்றும் மத்திய ஆசியாவை நோக்கி நகரத் தொடங்கியதும், அவர்களது மரபணுக்களும் படிப்படியாக அந்தப் பிரதேசங்களில் பரவின" என்று அது கூறுகிறது.

ஹரப்பா மக்களின் மரபணு வரலாற்றை ஆய்வு செய்வதற்காக, ராக்கிகர்ஹியில் தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் இருந்து மரபணு மாதிரி எடுக்கப்பட்டது. ஹைதராபாத்தின் செல்லுலார் மற்றும் மாலிக்யூலர் பயாலஜி மையம் மற்றும் ஹார்வர்ட் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து புனேவில் இயங்கும் டெக்கான் கல்லூரி மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகம் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டது.

தரவுகளை பகுப்பாய்வு செய்த சிலர், ஹரப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மரபணு வரலாற்றிலும் கலாச்சார வரலாற்றிலும் பார்க்க முடிகிற முறிவற்ற தொடர்ச்சி, ஆரியர்கள் என்று அழைக்கப்படுவோர் பெரும் அளவில் குடியேறினார்கள் என்பதை நிராகரிக்கிறது.**

மனிதர்கள் இப்பிரதேசத்தின் பூர்வகுடிகள் என்று விளக்கம் அளித்துள்ளனர். அந்த ஆய்வாளர்களின் குழு ஹரப்பா மக்களின் உடலம்சங்களை 3D முறையில் மீண்டும் உருவாக்கியது. அவ்வாறு மீண்டும் உருவாக்கப்பட்ட ஹரப்பா மக்களின் - ஆண் மற்றும் பெண் - முக அமைப்புகள் இக்காலத்து ஹரியானா மக்களுடையதைப் போலவே, குறிப்பிட்டுச் சொல்லும்படியாக ஒத்தத்தன்மையுடன் இருப்பதாகவும், 5000 ஆண்டுகளாக இந்தப் பிரதேசத்தில் முறிவுக்கு உட்படாத மரபணு தொடர்ச்சி இருப்பதையும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது என்று NCERT கூறியுள்ளது.

ஹிந்து நாளிதழுக்கான கட்டுரையில், தொல்பொருள் ஆய்வாளர் முதித் திரிவேதி, "ராக்கிகர்ஹியைச் சேர்ந்த ஒருவரின் டிஎன்ஏ... ஈரானிய மக்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட மிகப் பழமையான வம்சாவளியினரின் பங்களிப்புகள் மற்றும்... அந்தமானியர்கள் அல்லது தென்கிழக்கு ஆசியர்களின் பங்களிப்புடன் ஒரு கலவையாகும் என்று வாதிட்டார். அவளது வம்சாவளியின் ஆழமான கடந்த காலத்தை... ஊடகக் கவரேஜ் அவளது 'பூர்வீகத்தன்மையை' வலியுறுத்தியது, எனினும், அவளை ஒருவகையுடன் தொகுத்து வைக்கும் சமூகப் புவியியல் தரவுகள் இன்றைய இந்தியாவின் எல்லைக்குள் என்பதைக் காட்டிலும் குறிப்பிடும் அளவிற்கு அதிகம் மேற்கத்தியத் தன்மையுடன் இருக்கின்றன என்று அவளது மரபணுக் கலவை மறுபரிசீலனை செய்ய வைக்கிறது என்ற தகவலைப் பேசவில்லை."

12ஆம் வகுப்பு சமூகவியல் பாடப்புத்தகம் பக்கம் 85 இல், "மேற்கு இந்தியாவின் நர்மதா நதியின் சர்தார் சரோவர் அணை மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் கோதாவரி நதியின் போலவரம் அணை போன்ற திட்டங்களால் லட்சக்கணக்கான ஆதிவாசிகள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களை பெரும் நிராதரவான நிலைக்குத் தள்ளுகிறது" என்ற சொற்றொடர், "மேற்கு இந்தியாவின் நர்மதா நதியின் சர்தார் சரோவர் அணை மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் கோதாவரி நதியின் போலவரம் அணை போன்ற திட்டங்கள் லட்சக்கணக்கான ஆதிவாசிகளை அவர்களது பூர்விக வசிப்பிடங்களிலிருந்து இடம் பெயரச் செய்துள்ளது" என்று மாற்றப்படும் என்கிறது NCERT. நர்மதா திட்டம் பற்றிய மற்ற குறிப்புகளையும் அது நீக்கிவிட்டது. அத்தியாயம் மூன்றில், "அந்த நிலத்தில் ஒரு தனியார் சொத்து/ கட்டுமானம் உருவாவது பழங்குடியினரை மோசமாகப் பாதித்துள்ளது; இந்தப் புதிய அமைப்பின் காரணமாக அவர்களுடைய சமூக அடிப்படையிலான கூட்டு உடைமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கான சமீபத்திய எடுத்துக்காட்டாக நர்மதா பிரதேசத்தில் தொடர்ச்சியாக அணைகள் கட்டப்பட்டு வருவது; அங்கு பெரும்பாலான செலவுகளும் பலன்களும் வெவ்வேறு சமூகங்களுக்கும் பிரதேசங்களுக்கும் சமமற்ற விகிதத்தில் செல்வதாகத் தோன்றுகிறது" என்று இருக்கும் சொற்றொடர்கள் இப்போது "அந்த நிலத்தில் ஒரு தனியார் சொத்து/ கட்டுமானம் உருவாக்கப்படுவது பழங்குடியினரை மோசமாகப் பாதித்துள்ளது; இந்தப் புதிய அமைப்பின் காரணமாக அவர்களுடைய சமூக அடிப்படையிலான கூட்டு உடமைகள் பாதிக்கப்பட்டுள்ளன" என்று மாறியுள்ளன.

NCERT, அதனுடைய அரசியல் அறிவியல் பாடப்புத்தகங்களில் இருந்து பாபர் மசூதி இடிப்பு பற்றிய குறிப்புகளை நீக்கிவிட்டு, ராம ஜென்மபூமி கோவில் இயக்கத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

•

**மொழிபெயர்ப்பாளர்: எழுத்தாளர்**

*Courtesy: Translated from The Hindu news by Maitri Porecha "Rakhigarhi findings in NCERT Books; Narmada Dam references dropped" (dated: 29-4-24)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: மு. கலையரசன்

# பண்டைய மருங்கையும் மருங்கவர் கிழார் பெருங்கண்ணனார் பாடபேதமும் - சில விவாதக்குறிப்புகள்

சங்க இலக்கியம் என வழங்கப்படும் பண்டைய தமிழ் இலக்கியத்தில் காணப்படும் ஊர்ப்பெயர்களைப் பற்றி பதிப்புக்காலம் தொட்டு இன்றுவரை பல ஆய்வுகள் நடந்த வண்ணமே உள்ளன. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சங்க கால ஊர்களைத் தமிழ்நாடு தொல்லியல் துறையும் தற்போது அடையாளம் கண்டுள்ளது. இவற்றுள் சில ஊர்களில் அகழாய்வுகள் செய்யப்பட்டு அறிக்கைகளாகவும் வெளிவந்துள்ளன, சில அறிக்கைகள் பதிப்பிக்கப் படாமலும் உள்ளன.

பண்டைய தமிழ் இலக்கியத்தில் காணப்படும் ஊர்களில் துறைமுகப் பட்டினமான மருங்கூர் பட்டினமும் ஒன்றாகும். இம்மருங்கூர்ப் பட்டினம் மருங்கை(நற்:358) என்று சங்கப் பாடல் குறிப்பிடப்படுகிறது. எட்டுத்தொகையில் அகநானூறு 227-ஆம் பாடலிலும் நற்றிணை 258 மற்றும் 358-ஆம் பாடல்களும் நக்கீரரால் மட்டுமே மருங்கூர்ப் பட்டினம் என நேரடியாகப் பாடப்படுவது கவனிக்கத் தக்கதாகும். மேலும் மருங்கூரைச் சேர்ந்த புலவர்களாகப் பாடலின் அடிக்குறிப்பில் மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்(அகம்:80), மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்(நற்றி:289), மருங்கூர்ப் பாகைச் சாத்தன் பூதனார்(அகம்:327) ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பண்டைய பாண்டியத் துறைமுகப் பட்டினமாக அறியப்படும் மருங்கூர்ப் பட்டினத்தின் அமைவிடத்தை அடையாளம் காண்பதிலுள்ள ஆய்வாளர்களின் முடிவுகளில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் அகநானூறு- 80யைப் பாடிய மருங்கூர் கிழார் பெருங்கண்ணனாருக்குப் பாடபேதமாக நக்கீரர் குறிக்கப்படுவதில் அடங்கியுள்ளது. மருங்கூர்ப் பட்டினத்தை நக்கீரர் மட்டுமே பாடுவதைக் கொண்டும் நக்கீரரின் பாடல்கள் வழியாக பாடபேதத்தின் சாத்தியப்பாடுகளை தெளிவுப்படுத்த முயற்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மருங்கூர்ப் பட்டினமும் அமைவிடச் சிக்கல்களும்

நற்றிணைக்கு உரையெழுதிப் பதிப்பித்த ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, மருங்கூர்ப் பட்டினத்தைப் பற்றி குறிப்பிடுகையில்,

"மருங்கூர்ப்பட்டினம் பாண்டி நாட்டுக் கடற்கரை நகரங்களுள் ஒன்று. மதுரை மாவட்டத்துத் திருவாடனைப் பகுதியில் ஒரு மருங்கூரும், குமரி மாவட்டத்துப் பகுதியில் ஒரு மருங்கூரும் உள்ளன. இரண்டும் கடற்கரையைச் சார்ந்தனவே யெனினும், குமரக் கடவுள் கோயிலொன்று பெற்று இன்றும் ஓரளவு சிறந்து நிற்பது குமரி வட்டத்து மருங்கூர். ஒருக்கால் இம்மருங்கூர் பண்டைய மருங்கூர்ப் பட்டின மாகலாம் என நினைப்பதற்கு இடமுண்டாகும்" (2011:399)

இவர் கூற்றிலுள்ளது போல குமரி மாவட்டத்தின் மருங்கூர் பிரபலமான ஊராக விளங்குவதில் சந்தேகமில்லை. ஆனால் பண்டைய தமிழ் இலக்கியத்தில் குறிக்கப்படும் மருங்கூர் குமரி மாவட்ட மருங்கூரானது கடற்கரையை ஒட்டிய ஊரன்று. கடற்கரையை விட்டு வெகுத்தொலைவில் அமைந்துள்ளது. மேலும் தமிழகத்தில் பல பகுதிகளில் மருங்கூர் என்ற பெயரில் ஊர்கள் வழங்கப்படுகின்றன. மருங்கூர் என்ற பெயர் ஒற்றுமையைத் தவிர வேறெந்தச் சான்றுகளில்லை என்பதை இக்கூற்றின் வாயிலாக அறியமுடியும்.

பண்டையத் துறைமுகப் பட்டினங்களைப் பற்றிக் கூறும் மயிலை. சீனி.வேங்கடசாமி, பாண்டி நாட்டின் கீழைக்கடற்கரை பட்டினங்களில் ஒன்றாக மருங்கூர்ப் பட்டினத்தைக் குறிப்பிடுகிறார்(2002,2014). இம்மருங்கூர் பட்டினமானது கொற்கைக்குத் தெற்கேயும் ஊணூர்க்கு (அகம்:220,227,நற்:300,புறம்:348) மேற்கேயும் அமைந்துள்ளது என்று வரையறுக்கிறார். காவிரிப்பூம்பட்டினத்தின் மருவூர்ப்பாக்கம், பட்டினபாக்கம் போல மருங்கூர்ப் பட்டினமும்(துறைமுகப்பகுதி) ஊணூரும்(நகரப்பகுதி) இருந்திருக்க வேண்டும் என்றும் மதுரைக்காஞ்சியில்(87-88) காணப்பெறும் நெல்லூர் என்பது மேற்கண்ட ஊர்களைச் சேர்ந்த துறைமுகப்பகுதி என்றும் கூறுகிறார். மேலும் தாலமி குறிப்பிடும் சாலியூர் நெல்லூரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கிறது என்றும் கூறுகிறார். அ.துளசிராமன் அவர்களும் இக்கருத்தையே கொண்டுள்ளார்(ந. அதியமான்- பா.ஜெயக்குமார்(பதிப்பு): 2006) .

வைகைநதி கடலில் கலக்கும் கழிமுகப் பகுதியான அழகன்குளம் என்ற துறைமுகப் பகுதியே மருங்கூர்ப் பட்டினம் எனத் தமிழ்நாடு தொல்லியல் துறை அடையாளம் கண்டுள்ளது(1992). இவ்வறிக்கைக்கு பிறகு அழகன்குளம் என்பதை பண்டைய மருங்கூர் பட்டினம் மற்றும் ஊணூர் சேர்ந்த பகுதியாக அடையாளம் காண முயற்சித்துள்ளனர்(ந.அதியமான்- பா. ஜெயக்குமார்(பதிப்பு) :2006). மேலும், புலவர் செ.இராசு(2018:ப.42) இவ்வறிக்கையை அடியொற்றி இன்றைய அழகன்குளமே மருங்கூர்ப்பட்டினம் எனக்குறிப்பிடுகிறார்.

தமிழ்நாடு தொல்லியல் துறை அடையாளம் கண்டுள்ள அழகன்குளம் பண்டைய மருங்கூர்ப் பட்டினமாக குறிக்கப்படுவது மறுபரிசீலனைக்கு உட்படுத்தவேண்டும் என்றும் அழகன்குளம் பாண்டி நாட்டின் வேறொரு துறைமுகப்பகுதியாக இருந்திருக்கவேண்டும் என்றும் இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை வட்டத்திலுள்ள கடற்கரையை ஒட்டியுள்ள ஒரு சிற்றூரான தளிமருங்கூரே சங்க இலக்கியம் குறிப்பிடும் மருங்கையாக இருந்திருக்கவேண்டும் என்று சொ.சாந்தலிங்கம் கூறுகிறார்1. இவ்வூரானது கடற்கரையை ஒட்டி ஆறு கிலோமீட்டரில் அமைந்துள்ளது. பாண்டியரின் பண்டைய முத்தூற்றுக் கூற்றத்தில் அமைந்துள்ள இந்த ஊரை மேற்பரப்பு ஆய்வுசெய்கையில் கருப்புசிவப்பு மட்பாண்டங்கள் கிடைப்பதோடு பிற்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் தளிமருங்கூரானது தெக்கூர், வடக்கூர் என்று திசைகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. தெக்கூரின் கல்வெட்டில் குறிக்கப்படும் தளிமருங்கூர் வேளாண் பகுதியாகவும் வடக்கூரின் கல்வெட்டில் குலமாணிக்கபுரம் வணிக நகரமாகவும் இருந்திருக்க வேண்டும். பாண்டி நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் இதுவே கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளதாலும் சங்க காலத்தைச் சார்ந்த கருப்புசிவப்பு மட்பாண்டங்கள் கிடைப்பதைக் கொண்டும் தளிமருங்கூரே பண்டைய மருங்கூர்ப் பட்டினமாக இருந்திருக்க வேண்டும் என சொ.சாந்தலிங்கம் கூறுகிறார்.

பாண்டிநாட்டுக் கடற்கரைப் பட்டினங்களை பற்றிக் கூறும் போது வெ.வேதாசலம்(2021:190) திருவாடனை வட்டத்திலிருந்து தொண்டி செல்லும் வழியில் அமைந்துள்ள தளிர்மருங்கூரே பண்டைய மருங்கூர்ப் பட்டினமாக இருந்திருக்க வேண்டும். தளிர்மருங்கூர் பிற்கால பாண்டியர் கல்வெட்டுக்களில்(13th.) தளிமருங்கூர் என அழைக்கபட்டுள்ளது(2019:203) என்றும் பண்டைய மருங்கூர்ப் பட்டினம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள பட்டினமருதூராக இருக்க வாய்ப்புள்ளது எனவும் கருதுகிறார்.

மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும்போது பண்டைய மருங்கூர்ப் பட்டினத்தைத் தற்போது அடையாளம் காண்பதிலுள்ள சிக்கல்கள் இன்றுவரை நீடிப்பது தவிர்க்க முடியாததாக உள்ளது. சங்க இலக்கியக் குறிப்பினை வைத்துப் பார்க்கும்போது இந்த ஐயப்பாடுகள் இன்னும் கூட சிக்கல் அடைவதாகத் தோன்றுகிறது.

### சங்க இலக்கியத்தில் மருங்கூர்ப் பட்டினம் பற்றிய குறிப்புகள்

சங்க இலக்கியத்தில் மருங்கூர்ப் பட்டினம் அல்லது மருங்கை என்பது இடப்பெயராக மூன்று இடங்களிலும் புலவர் பெயராக மூன்று இடங்களிலும் குறிக்கப்படுகின்றன. சங்கப்பாடல்களில் காணப்படும் மருங்கூர் பற்றிய குறிப்புகளாக,

அகல் அங்காடி அசை நிழல் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினத்து அன்ன
-நக்கீரர் (நற்றி: 258,7-10).

சிறுவெண் காக்கை நாள் இரை பெறூஉம்
பசும்பூண் வழுதி மருங்கை அன்ன
-நக்கீரர் (நற்றி:358,9-10).

தமிழ் அகப்படுத்த இமிழ் இசை முரசின்
வருநர் வரையாப் பெரு நாள் இருக்கை
தூங்கல் பாடிய ஓங்கு பெரு நல் இசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விழுநிதி துஞ்சும் வீறு பெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல் உமிழ் ஆவணத்து அன்ன
-நக்கீரர்(அகம்:227,14-21).

மருங்கூர்ப் பட்டினத்தின் சூழலைக் குறிக்க நக்கீரர் நற்றிணையில் காக்கையைக் காட்சியாக அமைத்து, சிறுவெண் காக்கை நாள் இரையைப் பெறுவதாகவும்(358), பசுங்கண் காக்கை அகன்ற அங்காடியில் நிழலில் இருந்த இறால்மீனைக் கவர்ந்து வங்கக் கடலில் முன்னும்பின்னும் ஆடிக் கொண்டிருக்கும் கப்பலின் கூம்பில் அமர்ந்து உண்ணும்(258) தன்மையை உடைய மருங்கூர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினம் என்று காட்சிப்படுத்துகிறார்.

மருங்கூர்ப் பட்டினம் பற்றி வரும்போது நக்கீரர் 'அகலங்காடி அசைநிழற் குவைஇய' (நற்றி:258-7) அகன்ற கடைத் தெரு கொண்ட, அசைநிழற் என்பது ஒரு தற்காலிக கூரை அல்லது பாய் ஆக இருக்கலாம் அவை அசையும் நிழலை உடையது என்று கூறும்போது அது ஒரு பகல்நேர நாளங்காடியாக இருக்க வேண்டும். மேலும், 'எல்உமிழ் ஆவணத்து அன்ன' (அகம்:227-21) இதில் எல்உமிழ் என்பது ஒளிவீசுகின்ற(விளக்கு ஒளியை உமிழ்கின்ற) கடைத்தெருவைப் போன்றது. எல் என்பதற்கு இரவு என்ற ஒரு பொருளும் உண்டு என்பதால் இவை இரவுநேர அல்லங்காடியை குறிக்கிறது என்பதை அறியலாம். இந்த மருங்கூர்ப் பட்டினம் நாளங்காடி மற்றும் அல்லங்காடியைக் கொண்ட வணிகப் பகுதியைக் கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. நக்கீரர் மருங்கூரைக் குறிக்கும் போது மற்றொரு நிலவியல் சூழலையும் குறிப்படுகிறார். 'இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து'(அகம்:227-20) இவ்வரியில் குறிப்பிட்டும் இருங்கழியின் தன்மையானது , அகநானூற்றில்,

**கொடுந் தாள் முதலையொடு கோட்டுமீன்**
**வழங்கும்**
**இருங்கழி இட்டுச் சுரம் நீந்தி, இரவின்**
**-மருங்கூர்கிழார் பெருங்கண்ணனார்(80:1-2).**

முதலையும் சுறாமீனும் வலம் வரும் இருங்கழியாக இருந்துள்ளது. மேலும், அகநானூற்றில்

**கழிச் சுறா எறிந்த புண் தாள் அத்திரி**
**நெடு நீர் இருங்கழிப் பரி மெலிந்து அசைஇய**
**-நக்கீரனார்(120:10-11)**

நீண்டு பரந்திருந்த இருங்கழியில் சென்ற கோவேறு கழுதையைச் சுறாமீன் கடித்ததால் அதன் நடை குறைந்தது .மேலும், அகநானூற்றில்.

**கழியே ஓதம் மல்கின்று; வழியே**
**வள் எயிற்று அரவவொடு வய மீன் கொட்கும்**
**-நக்கீரர்(340:9-10)**

ஆரவாரிக்கும் நீர் ஒலி எழுப்பும் கூரிய பற்களைக்கொண்ட பாம்போடு சுறாமீனும் உலவும் கழியாக இருந்திருக்கிறது.

இவ்வாறான நிலவியல் சூழலை உடையதாக மருங்கூர் பட்டினம் விளங்கியிருக்கிறது. தொல்லியலாளர்களால் பண்டைய மருங்கூராக அடையாளப் படுத்தப்படும் தளிமருங்கூரில் கழிமுகப்பகுதி இல்லை. கழிமுகம் இல்லாதற்குக் காரணமாக கடல் உள்வாங்கி இருக்கக்கூடும் என்கின்றனர்2. எனில், இதே கீழைக்கடற்கரையைச் சார்ந்த தொண்டை மண்டலத்தின் சங்ககாலத் துறைமுகப் பட்டினமான எயிற்பட்டினத்தில்3 இன்றும் கழிமுகமும் உப்பு விளைவித்தலும் தொடர்வது தளிமருங்கூர் பற்றிய ஒரு ஐயத்தை ஏற்படுத்துகிறது. மருங்கூர்ப் பட்டினத்தைப் பற்றிப் பாடும்போது பசும்பூண் வழுதியும் ஊணூர் தழும்பனும் குறிக்கப்படுவதைக் காணலாம். மருங்கூர்ப் பட்டினத்திற்கும் இவர்களுக்குமான உறவைப் பற்றிப் பேசுவது அவசியமாகிறது.

### வழுதி

மருங்கூர்ப் பட்டினத்திற்கு உரியவனாக வழுதியைப் 'பசும் பூண் வழுதி மருங்கை அன்ன' (நற்றி:358) என்று நக்கீரர் குறிப்பிடுகிறார். இங்குக் குறிப்பிடப் படும் வழுதி என்பதன் பொருள் என்ன? வழுதி என்பவன் யாராக இருக்கக்கூடும்? என்ற கேள்விகள் எழுகின்றன. பொதுவாக வழுதி என்பது பாண்டியர்களின் பெயர்களில் ஒன்றாகவே கருதப்படுகிறது. மயிலை.சீனி.வேங்கடசாமி, வழுதி என்ற சொல், "வழித்தோன்றல் என்னும் பொருளில் தோன்றியதாக எண்ண இடமுண்டு"(2002:257) என்பார்.

வழுதி என்பதற்கு மொ.அ. துரை.அரங்கசாமி, "வழுத்து என்ற சொல்லுக்கும் வழுதி என்ற சொல்லுக்கும் தொடர்பு இருத்தல் வேண்டும். வழுத்து என்பது புகழ் என்று பொருள்படும். எனவே வழுத்தவன் தக்கவன் வழுதி எனப்பட்டான்"(2014:189) என்பார்4. இவருடைய கருத்தே பொருத்தமானது எனலாம். ஏனெனில், மதுரை மீனாட்சிபுரம் கல்வெட்டில், 'நெடுஞ்செழியன் பணஅன் கடல்அன் வழுத்திய்' (2006:17) என்றே நீட்டி ஒலிக்கப்படுகிறது. இதன்மூலம் புகழ் என்ற பொருள் கொண்ட வாழ்,வழுத்து,வழுத்தி என்ற சொல்லிருந்து வழுதி என்ற சொல் உருவாகியிக்க வேண்டும். மேற்கண்ட கல்வெட்டில், வழுதியைக் குறிப்பிடும்போது நெடுஞ்செழியனுடைய அலுவலனான(பணஅன்) கடலன் வழுதி என்று பொருள் கொள்ளப்படுகிறது. கீழைக் கடற்கரையின் மருங்கைக்கு உரியவனான வழுதி, நெடுஞ்செழியனின் மரபிற்குக் கீழ்ப்பட்ட மருங்கையின் கடற்கரை அலுவலனாக அல்லது தலைவனாக இருக்கக்கூடுமோ என்ற கேள்வி எழுகிறது. கல்வெட்டிலும் 'கடலன் வழுதி' கடலொடு தொடர்புடைய தலைவன் என்ற பெயராகவே வருகிறது. அகநானூற்றில்,

**கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்**
**நற்றேர் வழுதி கொற்கை முன்துறை**
**-வெண்கண்ணனார்(130:10-11)**

கொற்கைக்கு உரியவனாகவும் வழுதியே கூறப்படுகிறான். சங்க இலக்கியத்தில் பல வழுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் கடலுடன் தொடர்புடைய இவ்வழுதிகள் செழியன் மரபிற்கு உட்பட்ட கடற்கரையின் தலைவனாக இருக்கவேண்டும். செழியன் என்றாலே அது தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைச் சாரும் என்பர்(2002). அகநானூற்றில்,

**கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்**
**முதுநீர் முன்றுறை முசிறி முற்றிக்**
**-நக்கீரர்(57:14-15)**

சேரனின் மேலைக் கடற்கரையான முசிறியைச் செழியன் கைப்பற்றியது பற்றி இப்பாடல் கூறுகிறது. பண்டைய பாண்டியரில் செழியன் மரபினர் என்றும் வழுதி5 மரபினர் என்றும் இருப்பிரிவுகள் இருந்திருக்க கூடுமோ? என்ற ஐயமும் ஏற்படுகிறது.

**ஊணூர் தழும்பன்**

அகநானூற்றில் மருங்கூர்ப் பட்டினத்திற்கு அருகேயுள்ள ஊணூரையும் அதன் தலைவனான தழும்பனையும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ் அகப்படுத்த இமிழ்இசை முரசின்**
**வருநர் வரையாப் பெருநாள் இருக்கை**
**தூங்கல் பாடிய ஓங்குபெரு நல் இசைப்**
**பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்**
**கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்**
**-நக்கீரர்(227:14-19)**

இப்பாடலில் 'தமிழ் அகப்படுத்த இமிழ்இசை முரசின்', என்ற வரியில் வரும் முரசு என்பது புகழினை விளக்குவது என்று மட்டும் கொள்ளாமல், மதுரைக்காஞ்சியில் பாடப்படும்,

**இன்னிசைய முரசமுழங்கப்**
**பொன்மலிந்த விழுப்பண்ட**
**நாடார நன்கிழிதரு**
**ஆடியற் பெருநாவாய்**
**-மாங்குடி மருதனார்(80-83)**

துறைமுகத்தில் கப்பலிலுள்ள பண்டங்கள் இறக்குமதி செய்யப்படுவதை அறிவிக்க முரசு முழங்குவதனை அறிந்த வாணிகர்கள் எப்படி பண்டங்களை நுகருவார்களோ, அதனைப் போன்று தழும்பனின் புகழும் வரியவர்க்கு அளித்த கொடையும் இருந்தன என்றே நக்கீரர் பாடுவதாகப் புரிந்துகொள்ள இடமுண்டு. ஏனெனில், மருங்கூர்ப் பட்டினம் என்ற துறைமுகப்பட்டினத்தின் இயல்பினை உணர்த்தவே இப்படிப் பாடப்பட்டிருக்கலாம்.

தழும்பனைக் குறிக்கும் போது நக்கீரர், 'தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசை' என்று கூறுவார். இதில் தூங்கல் பாடிய என்பதைப் பதிப்பித்த உரையாசிரியர்களான வே. இராசகோபாலயங்கார்(மூலப்படியில் உள்ளபடி) (1923), ந.மு. வேங்கடசாமி நாட்டார் (2022) ஆகியோர் தூங்கல் என்னும் புலவன் பாடியது என்றும் ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை (2010), பொ.வே.சோமசுந்தரனார் (1983) ஆகியோர் தூங்கலோரியார்6 (தூங்கலோரி) பாடியது என்றும் பொருள் கொண்டுள்ளனர். இந்த பொருள்கொள்ளல் தவறானது ஆகும். தூங்கல்7 என்ற சொல் சங்க இலக்கயத்தில் ஆறு இடங்களில் வருகின்றது. அது தொங்குதல்(நற்:135), அலைத்தல்(நற்:258) முதலிய பொருள்களிலேயே வருகின்றன. உரையாசிரியர்கள், 'பாடிய'8 என்பது சங்க இலக்கியத்தில் புலவனைக் குறிக்க வருவதால் தூங்கல் புலவன் என்றும் சங்க இலக்கியப் புலவரான தூங்கலோரியார்(நற்றி:135,குறுந்:151,295) என்றும் பொருள் கொண்டனர். நக்கீரர் தூங்கல் பாடிய என்பதனை முன்னும்பின்னும் அலைக்கும் அலையின் ஓங்கிய நல்லிசையைக் குறிக்கவே பாடியுள்ளார். இதனை உரையாசிரியர்கள் கவனிக்கத் தவறியுள்ளனர். நக்கீரர் 'தூங்கல் வங்கத்து கூம்பிற் சேக்கும்'(நற்:258) என்று வங்கக் கடலில் அலைக்கும் தோணி எனப் பாடியுள்ளார். எனவே, 'தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசை' என்பது மருங்கூரின் கடல் அலையின் ஒலியாகும் எனக் கொள்ளத் தகும்.

தழும்பனது ஊணூரைப் பற்றி மருத இளநாகனார் அகநானூற்றில்(220) பாடும் போது, 'ஊரும் சேரியும் உடன் இயைந்து' என்று கூறுகையில் ஊணூரானது ஊரும் சேரியுமாக இரண்டாக பிரிக்கப்பட்டிருந்த குறிப்பு கிடைக்கிறது. மேலும் புறநானூற்றில் ,

**கள்ளரிக்குங் குயஞ்சிறுசீன்**
**மீன்சீவும் பாண்சேரி**
**வாய்மொழித் தழும்பன் ஊணூர் அன்ன**
**-பரணர்(348:3-5)**

ஊணூரில் சிலவகையான சிறிய மீன்களைப் பிடித்து உண்ணும் பாண்சேரிகளைக் கொண்டுள்ள வாய்மொழித் தழும்பன் எனக் கூறப்படுவதன் மூலம் ஊணூர் ஊரும் சேரியுமாக பிரிந்து இருந்தது உறுதியாகிறது. மேலும், அகநானூற்றில்

**முடங்கு கடல் ஓதம் காலைக் கொடங்கும்**
**பழம்பல் நெல்லின் ஊணூர் ஆங்கண்**
**-மதுரை மருதன் இளநாகனார்(220:12-13).**

இவ்வரிகளில், 'பழம்பல் நெல்லின்' என்பதன் மூலம் பழமையான - பலவகையான நெல்லினைச் சேகரித்து வைக்கும் ஊராக ஊணூர் இருந்திருக்கவேண்டும் என்பதை அறியலாம். மேலும், நக்கீரர் பாடிய 'கடிமதில் வரைப்பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊணூர் உம்பர்'(அகம்:227) என்பதால் நெல் முதலியவற்றைப் பாதுகாக்கும்பொருட்டு மதில் கொண்ட ஊரின் தலைவனாகத் தழும்பன் இருந்திருக்க வேண்டும் என அறிலாம். அகநானூற்றில் 126ஆவது பாடலில் எவ்வியைப் பற்றிக் கூறும் போது,

பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்
கழங்குஉறழ் முத்தமொடு நன்கலன் பொறூஉம்
பயம்கெழு வைப்பிற் பலவேல் எவ்வி
-நக்கீரர்(11-13)

இவ்வரிகளில் குறிக்கப்படும், பாதுகாக்கப்பட்டதால் பழையதான செந்நெல்லை அளந்து எடுத்துக் கொள்ள விரும்பாதவள் என்றுக் கூறுவதன் எதிர்பதமாகப் பார்த்தால் எவ்வி நெல்லைப் பாதுகாத்து அளந்து கொடுக்கும் பண்புடையவன் ஆவான் . அதேசமயம் பலகுடிகளுக்குத் (பயம்கெழு வைப்பிற்) தலைவனாகவும் உள்ளான். எவ்வியைப் போலவே நெல் முதலிய பண்டங்களைப் பாதுகாக்கும் தலைவனாக ஊணூர் தழும்பனையும் நாம் கருதமுடியும். இதன்மூலம் மருங்கூர்பட்டினத்திற்கு அருகே உள்ள ஊணூரானது துறைமுகத்தின் ஏற்Wமதி - இறக்குமதி ஆகியவற்றோடும் துறைமுகப் பணியாளர்களையும் கொண்ட ஊராகவும் இருந்திருக்க வாய்ப்புண்டு. எனவே மருங்கூர் பட்டினம் துறைமுக வணிக நகரமாகவும் ஊணூர் ஊர் பகுதியாகவும் இருந்திருப்பதை உணரலாம்.

**புலவர் பாடபேதம்: மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் - நக்கீரர்**

அகநானூறு என்ற தொகை நூலைப் பதிப்பித்ததில் மட்டும் மொத்தம் ஐம்பது புலவர்களின் பெயர்கள் பாடபேதமாக அமைந்துள்ளன. அதில் எட்டு புலவர்கள் கிழார் என்ற அடையைக் கொண்ட புலவர்களாவர். அவற்றுள் மருங்கூர் புலவராக விளங்கும் மருங்கூர் கிழார் பெருங்கண்ணனாருக்கு நக்கீரரின்9 பெயர் பாடபேதமாக அமைந்துள்ளது. இவரல்லாது, மருங்கூர் பட்டினத்துச் சேந்தன் குமரனார்(நற்றி:289) மற்றும் மருங்கூர் பாகைச் சாத்தன் பூதனார் ஆகிய இருவரும் உள்ளனர். மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்(அகம்:80) மருங்கூரைச் சார்ந்த புலவராக இருப்பினும் மருங்கூரை நேரடியாக மூன்று(அகம்:227, நற்றி:258, நற்றி:358) பாடல்களில் குறிப்பவராக நக்கீரரே உள்ளார். இதனைக் கொண்டு பாடபேத்தின் சாத்தியபாடுகளை ஆராய்வது அவசியமாகிறது. மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் அகநானூற்றில் ,

கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி இட்டுச் சுரம் நீந்தி, இரவின்
வந்தோய்மன்ற - தண் கடற் சேர்ப்ப!
நினக்குஎவன் அரியமோ, யாமே? எந்தை
புணர்திரைப் பரப்பகம் துழைஇத் தந்த
பல்மீன் உணங்கற் படுபுள் ஓப்புதும்
முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை
ஒண்பல் மலர கவட்டு இலை அடும்பின்
செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப
இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ
மின்இலைப் பொலிந்த விளக்கு இணர்
அவிழ்பொன்
தண்நறும் பைந்தாது உறைக்கும்
புன்னைஅம் கானல், பகல் வந்தீமே. -அகம்(80).

கழிமுகப் பகுதியில் உள்ள முதலை சுறாவுடன் இணைந்து வருவது இப்பாட்டில் தான் அமைந்துள்ளது. மேலும் இப்பாடலில் வரும் சேர்ப்பன் என்பவன் பொதுவாகக் கடற்கரைத் தலைவன் என்றே அறியப்படுகிறான். எனில், பரதவர்க்கும்(எந்தை) சேர்ப்பனுக்கும் உள்ள தொடர்பு என்ன? நக்கீரர் பரதவரைப் பற்றிக் கூறுகையில், 'திண் திமில் எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்' (அகம்:340,18-19) வலிமையான படகில் பகல் பொழுதில் மீன் பிடிக்கும் வலிய செயலுடைய தொழில் உடைய பரதவர் எனக் குறிப்பிடுகிறார். சேர்ப்பனைப் பற்றிக் கூறுகையில்,

சிறுபல் தொல் குடிப்பெரு நீர்ச்சேர்ப்பன்
கழிசேர் புன்னை அழிபூங்கானல் -அகம்(290:8-9)

சிறிய பல தொல்குடிகள் உடைய கடற்கரையின் தலைவனாகச் சேர்ப்பன் சுட்டுகிறார். இங்குத் தொல்குடி என்பது பரதவரைக் குறிக்க இடமுண்டு. அரசு உருவாக்கத்தின் போது பரதவர்கள் சேர்ப்பன் என்ற கடற்கரையின் தலைவனுக்கு உட்பட்ட தொல்குடிகளாகவே இருந்திருக்க வேண்டும். மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் பாடலிலும் தலைவனான சேர்ப்பன் இணையான குதிரைகள் பூட்டிய தேரில் வருவதாகவும் தலைவி தன்னுடைய தந்தை பிடித்து வந்த பலவகை மீன்களைப் பகல் பொழுதில் உலர்த்துவதாகப் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. சங்க பாடல்களில் குதிரைகள் உயர்குடியினர் அல்லது அரசர்களைக் குறிக்கவே பயன்படுத்தப் படுகிறது. குதிரை இறக்குமதி செய்யப்பட்டது பற்றி மதுரைக்காஞ்சியில்,

நனைந்தலைத் தேஎத்து நன்கலம் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோடனைத்தும்
(322-323).

குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டு இருந்தபோதிலும் தமிழகத்தில் குதிரை வருகை மற்றும் பயன்பாடு எந்தக் காலத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது என்ற கேள்வி இன்னும் தீர்க்கப் படாமலேதான் உள்ளது. அடிக்குறிப்புகளாகக் காணப்படும் மருங்கூர் புலவர்களின் பாடல்கள் பெரும்பாலும் அகக்குறிப்புகளைக் கொண்டதாகவே காணப்படுகிற வேலையில் மருங்கூர் பட்டினம் பற்றிய நிலவியல் மற்றும் அதன் செயல்பாடுகள் தொடர்பான குறிப்புகள் நக்கீரர் பாடல்களிலேதான் காணமுடிகிறது. அதேவேலையில் மருங்கூர் கிழார் பெருங்கண்ணனாருக்கு நக்கீரர் பாடபேதமாக அமைவது கொண்டும் இருங்கழிப் பற்றிய குறிப்புகள் முதலானவை ஒத்த தன்மையில் பாடப்படுவது கொண்டும் அகநானூறு 80 ஆம் பாடலை பாடியவர் நக்கீரராக கொள்ள முடியுமா என்ற கேள்வி தவிர்க்க முடியாதாக உள்ளது.

**நிறைவாக...**

மேற்கண்ட மருங்கூர் அமைவிடச் சிக்கலையும் பாடபேதத்தைத் தொகுத்துப் பார்க்கையில்,

மருங்கூர்ப் பட்டினமாக ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கருதும் குமரி மாவட்டத்தின் மருங்கூர் பண்டைய மருங்கூர்ப் பட்டினமாக இருக்கமுடியாது.

மயிலை. சீனி. வேங்கடசாமி, மருங்கூர்ப் பட்டினமாகக் கொள்ளும் தாலமி கூறும் சாலியூரை தமிழ்நாடு தொல்லியல் துறை இன்றைய அழகன்குளம் என அடையாளம் கண்டுள்ளது. அழகன்குளம் பண்டைய மருங்கூராக இருக்க சாத்தியமில்லை எனக்கூறும் சொ.சாந்தலிங்கம், பிற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டைக் கொண்டு கடற்கரையை ஒட்டியுள்ள தளிமருங்கூரே பண்டைய மருங்கூர்ப் பட்டினமாக இருக்கக்கூடும் என்கிறார்.

வெ.வேதாசலம், மருங்கூர்ப் பட்டினமாக அழகன்குளம் இருக்கமுடியாது என்று கூறுகின்றனர். தளிமருங்கூரோடு சேர்த்து தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள பட்டினமருதூராகவும் இருக்கக்கூடும் என்றும் மற்றொரு புதிய இடத்தினையும் அடையாளம் காட்டுகிறார்.

சங்க இலக்கியப் பாடல்களின் வழியாக பார்க்கும்போது கழிமுகப்பகுதியாக மருங்கூர்ப் பட்டினம் இருப்பதை அறியலாம். தளிமருங்கூரில் தற்போது கழிமுகப்பகுதி இல்லை என்பதை அறியலாம். அங்கு கடல் உள்வாங்கியிருப்பதாக கொண்டால், மேலைக்கடற்கரையைச் சார்ந்த சங்க கால எயிற் பட்டினம் என்று குறிக்கப்பெறும் இன்றைய மரக்காணம் கழிமுகப் பகுதியாக தற்போதும் விளங்குகிறது. இதனை எண்ணிப் பார்க்கும் போது பண்டைய மருங்கூர்ப் பட்டினமாக தளிமருங்கூரை ஏற்றுக் கொள்வதில் ஐயப்பாடு ஏற்படுகிறது.

மருங்கூர் பட்டினத்தின் அமைவிடத்தை அடையாளம் காண்பதில் அடிப்படையில் இருக்கும் சிக்கல் இலக்கியக் குறிப்புகளுக்கும் அமைவிடமாகச் சுட்டப்படும் இடத்தின் தன்மைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்தான் எனத் தோன்றுகிறது. சங்க கால மருங்கூர்ப் பட்டினம் என அறியப்படும் ஊர்களை அகழாய்வுகள் நடத்தாத வரை இச்சிக்கல் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மருங்கூர்ப் பட்டினத்தைக் குறிக்க வரும் அனைத்துக் குறிப்புகளும் மருங்கூர் கிழார் பெருங்கண்ணனாரைக் காட்டிலும் நக்கீரர் வழியாகவே அறியமுடிகிறது. மருங்கூர்ப் பட்டினத்தைப் பற்றிய மேற்கண்ட சான்றுகளை தொகுத்துப் பார்க்கையில் மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் பாடிய அகநானூறு 80 ஆவது பாடலை நக்கீரர் பாடியிருக்க கூடுமோ என்ற கேள்வி எழுவது இயல்பானதேயாகும். மருங்கூர்ப் பட்டினத்தைக் குறிக்கப் பயன்படுத்திய இருங்கழி, காக்கை (நற்:367,358,258) பற்றிய குறிப்புகளை நக்கீரர் பயன்படுத்துகிறார். மேலும், துறைமுகத்தின் செல்வத்தைக் குறிக்க விழுநிதி (அகம்:205,227) என்ற சொல்லை இரண்டு இடங்களில் பயன்படுத்துகிறார். சங்க இலக்கியத்தில் கலித்தொகையைப் போல நமக்கு ஒப்புநோக்கி விளங்கிக்கொள்ள மூலபாடம் கிடைக்காத நிலையில் (கோ.சசிகலா- ர.பூங்குன்றன்:2022) இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு இந்த பாடவேறுபாடு என்னும் சிக்கலைத்தீர்க்க முடியாது என்பது தெளிவு. எனினும், இவற்றை மொழியியல் மற்றும் ஒப்புமை அடிப்படையில் விளக்க முயற்சிப்பதன் மூலம் இன்னும்கூட சிலபுதிய முடிவுகளை எட்ட முடியும் எனத் தோன்றுகிறது.

**குறிப்புகள்**

சொ. சாந்தலிங்கம் மற்றும் வெ. வேதாசலம் அவர்களும் தளிமருங்கூருக்குச் சென்று மேற்பரப்பு ஆய்வுகள் மேற்கண்டனர். அவ்வாய்வுக்கு சொ.சாந்தலிங்கம் ஒரு கட்டுரையும் எழுதியுள்ளார். அந்த கட்டுரை ஆசிரியரிடம் இல்லாததால், அவர் எழுதிய கட்டுரை மின்தமிழ் மேடை இணையத் தளத்தின்(சூலை-20,2016) பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த 'மருங்கூர் - சங்க காலக் கடற்கரை' என்ற கட்டுரையிலிருந்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரைக்குத் துணையான கருத்துகள் பெறப்பட்டன.

வெ.வேதாசலம் அவர்களோடு உரையாடுகையில், தளிமருங்கூரில் இலக்கியத்தில் குறிப்படும் கழிமுகம் தற்போது இல்லையே என்ற கேள்விக்கு ,தற்போது உள்ள கடல் ஆறு கிலோ மீட்டர் உள்ளே சென்றதால் கழிமுகம் இல்லை என்று கூறினார்.

சிறுபாணாற்றுப்படையில் 'நன்மா விலங்கை'(121) என்றும் எயிற் பட்டினம் என்றும் வழங்கப்படுவன இன்றைய மரக்காணம் ஆகும்.

வழுத்து என்பது 'மந்திர நாவிடை வழுத்துவராயின்' (சிலம்பு.16,172), 'வழுத்தினாள் தும்மினேனாக' '(குறள்.1317), 'வழுத்தியுங் காணா மலரடி' (திருவாச.4,9) என்று வாழ்த்தல் என்பதிலிருந்து தோன்றிய சொல்லாகும்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் வழுதிகளாக, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (புறம்.6,9,12,15,64), பெரும்பெயர் வழுதி (புறம்.3), உக்கிரபெருவழுதி(புறம்.367),மாறன் வழுதி, (புறம்.51,52), பெருவழுதி (புறம்.58) ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர்.

சங்க இலக்கியத்தில் தூங்கலோரியார் நற்-60, தூங்கலோரி குறுந்-151,295 ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார். ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை மட்டும் நற்-135 உம் தூங்கல் ஓரியார் பாடினார் என்கிறார் .மற்ற உரையாசிரியர்கள் கதப்பிள்ளையார் பாடினார் என்பர். மேலும் தூங்கலோசியார் பாடல்களில் தழும்பனை பற்றி எந்த குறிப்பும் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

சங்க இலக்கியத்தில் தூங்கல்- முல்லை.53; நற்;135-1,258-9,354-7;அகம்;98-20,227-16, ஆகிய ஆறு இடங்களில் இடம் பெறுகின்றன.

பாடிய என்பது சங்க இலக்கியத்தில் பன்னிரண்டு இடங்களில் பட்டின.3; குறுந்23; பதிற்று.85-12; பரி.19-26; அகம்.59,227,34; புறம்.11,23,158,159,174 காணப்படுகின்றது. தூங்கல் என்பதைப் போலவே பாடிய என்பதற்கு முன்னுள்ள அந்துவன் ,மோசி போன்றோரையும் உரையாசிரியர்கள் தவறாக பொருள் கொண்டுள்ளனர்.இதனைத் தனியாக நோக்கவேண்டும். பல நக்கீரர் இருப்பினும் ஔவை.துரைசாமிப்பிள்ளையைப் பின்பற்றி நக்கீரர் (நற்.86,197,258,340,358,367;குறுந்.105,161,266, 28,368;அகம்.57,126,141,205,227,253,290,340,346,369), நக்கீரனார் (நற்.31;குறுந்.78;அகம்.120,249,310,389), மதுரை நக்கீரர் (அகம்.36;புறம்.395), மதுரை நக்கீரனார் (அகம்.78) பாடல்கள் மட்டுமே இக்கட்டுரைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**துணைநூற்கள்**


- அரங்கசாமி துரை மொ. அ, சங்க காலச் சிறப்பு பெயர்கள், சென்னை: பாரி நிலையம்.
- அதியமான், ந- ஜெயக்குமார், பா(பதிப்பு) .2006: தமிழகக் கடல்சார் வரலாறு- அண்மைக்கால ஆய்வுகள், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.
- இராஜகோபாவலங்கார், வே. (பதிப்பு),1923: அகநானூறு மூலமும் உரையும்,சென்னை:The Tata Printing Works.
- இராசு. செ, புலவர்,2018: தமிழக தொல்லியல் ஆய்வுகள்,கோயம்புத்தூர்:வேலா வெளியீட்டகம்.
- சசிகலா, கோ- ர, பூங்குன்றன்,2022: பண்டையத் தமிழ்ச் சமூகம், சென்னை: தடாகம் வெளியீடு.
- சாமிநாதையர், உ. வே. 2019: பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: உ.வே.சா.நூல் நிலையம்.
- சாமிநாதையர், உ. வே. 2017: குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை: உ.வே.சா.நூல் நிலையம்.
- சாமிநாதையர், உ. வே. 2014: புறநானூறு மூலமும் உரையும், சென்னை: உ. வே. சா. நூல் நிலையம்.
- சோமசுந்தரனார், பொ. வே.1983: அகநானூறு(மூன்றும்), சென்னை: கழக வெளியீடு.
- சோமசுந்தரனார், பொ. வே.1962: நற்றிணை மூலமும் உரையும், சென்னை: கழக வெளியீடு.
- துரைசாமிப்பிள்ளை, சு. ஔவை. 2010: புறநானூறு மூலமும் உரையும், சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- துரைசாமிப்பிள்ளை, சு. ஔவை. 2010: நற்றிணை மூலமும் உரையும், சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- நாராயணசாமி, அ. 1915: நற்றிணை உரை, சென்னை பட்டனம்: சைவவித்தியா நூபாலனயந்திரசாலை.
- மர்ரே. எஸ். ராஜம்(பதிப்பு). 1981, அகநானூறு: சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- மர்ரே. எஸ். ராஜம்(பதிப்பு). 1981, பாட்டும் தொகையும்: சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பா.தொ).
- மர்ரே. எஸ். ராஜம்(பதிப்பு). 1981, புறநானூறு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- மர்ரே. எஸ். ராஜம்(பதிப்பு).1981, நற்றிணை, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- மாதையன், பெ. 2007: சங்க இலக்கியச் சொல்லடைவு, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.
- ராசு குமார், மே.து. - வசந்தா.ரா.(பதிப்பு), 2002: மயிலை. சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்: தொகுதி-1, சென்னை: மக்கள் வெளியீடு.
- வேங்கடசாமி, மயிலை. சீனி, 2011: பழங்காலத் தமிழர் வணிகம்(சங்க காலம்), சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- வேங்கடசாமி நாட்டார். ந. மு. 2022: அகநானூறு(மூன்றும்) மூலமும் உரையும், சென்னை: பாரதி பதிப்பகம்.
- வேதாசலம், வெ. 2019: பாண்டியநாட்டு வரலாற்றுமுறை சமூக நிலவியல்(கி.பி.600-1400),தஞ்சாவூர்: கற்பகம் பதிப்பகம்.
- வேதாசலம், வெ. 2021: பாண்டிநாட்டில் வணிகமும் வணிகச் சமூகமும்(கி.பி.600-1400), தஞ்சாவூர் : தஞ்சைப் பல்கலைக் கழகம்.
- ஸ்ரீதர், தி. ஸ்ரீ. 2006: தமிழ்-பிராமிக் கல்வெட்டுக்கள், சென்னை: தமிழ்நாடு தொல்லியல் துறை.
- Abdulmajeed. A, Thulasiram. D, and vasanthi. s, 1992, Alagankulam: A Preliminary Reprot, State Department of Archaeilogy, Madras.



கட்டுரையாளர்: பேராசிரியர்,
பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தனார் பல்கலைக் கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: என்.சரவணன்

# ரொக்வூட்:
# வெள்ளாளரல்லாத முதல் தமிழ் பிரதிநிதி

இலங்கையில் முதன் முறையாக வெள்ளாளரல்லாத முதல் பாராளுமன்ற பிரதிநிதி டொக்டர் டபிள்யு.ஜீ.ரொக்வூட் (*William Gabriel Rockwood*).

இலங்கையில் முதற்தடவை இலங்கைக்கான அரசியலமைப்பு சட்டவுருவாக்கமும், அரசியல் ரீதியில் நாட்டை ஆள்வதற்கான அமைப்பும் 1833 கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. 15 அங்கத்தவர்களைக் கொண்ட அந்த சட்ட நிரூபன சபை உத்தியோகபற்றுள்ள 9 உறுப்பினர்களும், உத்தியோக பற்றற்ற உறுப்பினர்களாக 6 பேரையும் கொண்டதாக அது அமைக்கப்பட்டது. அதன்படி உத்தியோகபற்றற்ற அறுவரில் ஐரோப்பியர் மூவரும், சிங்களவர் -1, தமிழர் -1, பறங்கியர் - 1. என்கிற அடிப்படையில் அங்கத்துவம் வகித்தார்கள். அதன் அடிப்படையில் இலங்கையின் சட்டசபை மரபில் முதலாவது தமிழ் பிரதிநிதியாக ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமியும், முதலாவது சிங்கள அங்கத்தினராக ஜே.ஜி.பிலிப்ஸ் பண்டிதரத்ன (*J.G. Philipsz Panditharatne*) என்பவரும், ஜே.சீ.ஹீலபிரான்ட் (*J.G. Philipsz*) முதலாவது பறங்கி இனத்து உறுப்பினராகவும் தெரிவானார்கள்.

குமாரசுவாமி குடும்பத்தினர் அதன் பின்னர் நீண்ட காலமாக தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சக்தியாக ஆகினர். ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமியைத் தொடர்ந்து அதே பரம்பரையில் இருந்து எதிர்மன்னசிங்கம், ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி (30 மே 1835 – 07.11.1836 இறக்கும்வரை) எதிர்மன்னசிங்கம் (1846-1861), முத்து குமாரசுவாமி (1861-1879 இறக்கும்வரை), சேர் பொன்னம்பலம் இராமநாதன் (1879-1930), பொன்னம்பலம் குமாரசுவாமி (1892-1898) பொன்னம்பலம் அருணாச்சலம் (1912-1913) என இன்னும் அடுத்து பலரும் அக் குடும்பத்தில் இருந்து வந்தார்கள்.[1] இவர்களில் சேர் பொன் இராமநாதன் சுமார் அரை நூற்றாண்டு கால அரசியல் பங்களிப்பைக் கொண்டவர். அதேவேளை இராமநாதனை விட அதிகமாக போற்றப்படுப்பவர் அவரின் இளைய சகோதரர் சேர் போன் அருணாச்சலம். இராமநாதனுக்குப் பின்னர் பிறந்து இராமநாதனுக்கு முன்னரே காலமாகிப் போன அருணாச்சலம் ஒரே ஒரு ஆண்டு தான் சட்டசபைப் பிரதிநிதியாக இருந்தார். ஆனால் அவர் ஒரு சிவில் சேவையாளராகவும், அரசியல் மற்றும் தொழிற்சங்க விடயங்களில் ஆற்றிய பாத்திரம் மகத்தானது.

சிங்களச் சூழலை எடுத்துக் கொண்டாலும் சிங்கள வெள்ளாள சாதியான "கொவிகம" சாதியைச் சேர்ந்தவர்களே ஆரம்பத்தில் இருந்து சட்ட சபையில் கோலோச்சு வந்தார்கள். சட்ட சபையில் தமிழ் சமூகத்தில் இருந்து குமாரசுவாமி குடும்பத்தை (வெள்ளாள) சேர்ந்தவர்களே தொடர்ந்து ஏகபோகமாக கோலோச்சியதைப் போலவே, சிங்களச் சூழலிலும் பண்டாரநாயக்க, ஒபேசேகர ஆகிய இரு (கொவிகம எனப்படுகிற வெள்ளாள) குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏகபோகமாக கோலோச்சி வந்தார்கள். அவர்களை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்; எச் டயஸ் (*H. Dias, 1861-1865*), ஜேம்ஸ் அல்விஸ் (*James Alwis, 1875-1878*), ஜே.பி.ஒபேசேகர ( *J.P. Obeyesekera 1878-1881*), ஏ.எல்.டி அல்விஸ் (*A.L. de Alwis, 1881-1888*), ஏ.டி.அல்விஸ் செனவிரத்ன (*A. de Alwis Seneviratne, 1888-1900*) எஸ்.சி.ஒபேசேகர (*S.C. Obeyesekera, 1900-1911*).

இவர்களில் ஒரே ஒருவர் விதி விதிவிலக்கு. அவர் 1865 -1875 வரை அங்கம் வகித்த ஈ.எச். தெஹிகம (*E.H. Dehigama*).[2]

## தமிழ் வெள்ளாள x சிங்கள கொவிகம கூட்டு

பிற்காலத்தில் 1911ம் ஆண்டு சட்டசபைக்காக படித்த இலங்கையரை தெரிவு செய்வதற்கான

1 என்.சரவணன், கேட் முதலியார் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி: இலங்கைத் தமிழர்களின் முதலாவது நாடாளுமன்றப் பிரதிநிதி, தினக்குரல், 12, ஜனவரி, 2020

2. *Lakshmi Kiran Daniel, PRIVILEGE AND POLICY: THE INDIGENOUS ELITE AND THE COLONIAL EDUCATION SYSTEM IN CEYLON, 1912-1948, Thesis submitted for the Degree of Doctor of Philosophy, Faculty of Modern History, Michaelmas Term, 1992*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலில் சேர் போன் இராமநாதனை எதிர்த்து போட்டியிட்ட மார்கஸ் பெர்னான்டோ கராவ (கரையார்) சாதியை சேர்ந்தவர் என்பதற்காகவே சிங்கள 'கொவிகம' சமூகத்தைச் சேர்ந்த மேட்டுக்குடியினர் 'கரவ' சமூகத்தைச் சேர்ந்த ஒருவரைத் தமது பிரதிநிதியாக ஏற்கத் தயாரில்லாமல் மார்கஸ் பெர்னாண்டோவை தோற்கடித்து அதைவிட உயர் சாதி வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த பொன் இராமநாதனை வெற்றிபெறச் செய்தனர் என்பதை இங்கே நினைவிற் கொள்வோம்.

அப்போது சிங்கள - தமிழ் முரண்பாடுகள் கூட ஒரு பொருட்டாக இருக்கவில்லை. மாறாக "யாழ் x சைவ x தமிழ் x வேளாள x படித்த s மேட்டுக்குடி" பொன்னம்பம் இராமநாதனா அல்லது "கொழும்பு x பௌத்த x சிங்கள x கராவ x படித்த s மேட்டுக்குடி" மார்கஸ் பெர்னாண்டோவா எனும் போது அங்கே பொன்னம்பலம் தெரிவாக சாதி என்பது மட்டுமே மேலதிக தகுதியாக இருந்தது.

இந்தப் பின்னணியில் இருந்து பார்க்கையில் முதற் தடவையாக வெள்ளாள - கொவிகம சாதியின் ஏகபோகத்துக்கு வெளியில் இருந்து வந்த தமிழ் பிரதிநிதி டொக்டர் டபிள்யு.ஜீ.ரொக்வூட் அவர்களே. சிங்களச் சூழலில் கொவிகம சாதிக்கு வெளியில் ஒருவர் தெரிவு செய்யப்பட 1912 வரை ஆனது என்பதையும் இங்கே நினைவுபடுத்துவோம்.[3]

மேற்படி தமிழ் பிதிநிதிகள் வரிசையில் 1838-1845 வரை தமிழர் பிரதிநிதியாக இருந்த சைமன் காசிச்செட்டியை சிலவேளை விதிவிலக்கென எவரும் கூறக்கூடும். ஆனால் செட்டியார் சமூகமும் எப்போதும் வெள்ளாள சாதிக்கு நிகராகவே இலங்கையின் சாதிய அமைப்பில் மதிக்கப்படுகிறது.

முன்னர் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதியாக ஒருவரே இருந்தார். முஸ்லிம்களையும் தமிழராகவே கருத்திற்கொண்டிருந்த சமயம் அது. இராமநாதன் இவ்வாறு 28-8-1879 இலிருந்து 15-12-1892 வரை சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற தமிழ் பிரதிநிதியாக இருந்தார். பின்னர் அவர் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கிச் இராமநாதன் அரசுத் தலைமை வழக்குரைஞராக (சொலிசிட்டர் ஜெனரல்) 1892 சேர் பொன்னம்பலம் பதவியேற்றமையால் அவர் வகித்து வந்த சட்டசபை உறுப்பினர் பதவி வெற்றிடமாது. அவருடைய இடத்தில் அவருடைய சகோதரர் பொன் குமாரசுவாமி பரிந்துரைக்கப்பட்டு 4-2-1893 அன்று உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதியாகச் சட்டசபையில் நியமனம் பெற்றார். இந்த நியமனம் ஆர்தர் ஏலிபேங் ஹெவ்லொக் (*Arthur Elibank Havelock*) அவர்களால் வழங்கப்பட்டது. அவரையடுத்து பின்னர் ஆளுநராக வந்தவர் தான் ரிஜ்வே.

---

*3. K. M. Desilva, Universal Franchise, 1931-1981 The Sri Lankan Experience, Department of Information Ministry of State Democratic Socialist Republic of Sri Lanka, July, 1981*



ரொக்வூட்

### யார் இந்த ரிஜ்வே?

ஆளுநர் ஆதர் ஹவலொக் (*Governor Sir Joseph West Ridgeway*) அவர்களுக்குப் பின் இலங்கைக்கு ஆளுநராக வந்தவர் சேர் ஜோசப் வெஸ்ற் றிஜ்வே. இவர் இராணுவத்தில் பணியாற்றியதோடு ரசியாவில் பீற்றர்ஸ் பேக் அரண்மனையில் ஜார் மன்னன் காலத்தில் பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்று உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஒருவர். ஆபிரிக்காவில் மொறக்கோவிலே சுல்தானின் அரண்மனையில் ஸ்தானிகராகவும் பணியாற்றிய அனுபவமுடையவர். இலங்கைக்கான ஆளுநர் பதவியை விரும்பிக் கேட்டுப் பெற்று இலங்கை வந்தவர். அதற்கு முன்னர் இந்தியாவில் அவர் பணியாற்றிய காலத்தில் இலங்கையைப்பற்றி அவர் அறிந்திருந்தார். இலங்கையை விட்டுப்போன பழைய ஆளுநர்களிடமும் இலங்கையைப் பற்றிய பல தகவல்களைக் கேட்டு முன்னறிவு பெற்று இலங்கை வந்தார்.

ரிஜ்வே 1895 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு வந்து இலங்கையைச் சுற்றிப் பார்த்து இங்குள்ளவர்களோடு மிக நெருங்கி உரையாடி நேரனுபவத்தைப் பெற்றார். இவர் காய்தல் உவத்தல் இன்றி இலங்கை வாழ்மக்களை இன மத மொழி வேறுபாடு கருதாமல் இயங்கினார் என்பார்கள். இவருக்கு முன்னிருந்த ஆளுநர் நிதி நிலைமையை நல்லமுறையில் விட்டுச் சென்றமையால் இலங்கையின் பல அபிவிருத்தி வேலைகளை இவரால் ஆரம்பிக்கக் கூடியதாயிருந்தது. தேயிலைச் செய்கை, புகையிரதப் பாதை, வீதிகளை அமைத்தல், சுகாதார சேவை புனரமைப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன் குமாரசுவாமி



சர் முத்துகுமாரசுவாமி

கல்வி, அளவையாளர் அலுவலகப் புனரமைப்பு என்பன சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன.

எண்ணற்ற பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்ட காலம் அது. கனிப்பொருளாராய்ச்சித் துறையின் மேலதிகாரியாக ஆனந்த குமாரசுவாமியின் அரியசேவை இலங்கைக்குக் கிடைத்த காலமும் இதுவேயாகும்.

கொழும்புத் துறைமுக அபிவிருத்தி மேற்கொள்ளும் போது அதற்காக பிரித்தானிய அரசாங்கமும் அதன் செலவில் அரைப் பங்கை செலவிட உடன்பட்டது. றிஜ்வே காலத்தில் போக்குவரத்துத் துறையில் துரித முன்னேற்றங்கள் நடைபெற்றன. மின்சாரத்தில் ஓடிய 'ட்ராம் வண்டி' போக்குவரத்து சேவை இவர் காலத்திலேதான் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் முதன் முதலாக மோட்டார் வண்டி இவர் காலத்திலேயே இறக்குமதியாயிற்று.

இலங்கைப் பிரதமராயிருந்த S. W. R. D அவர்கள் பிறந்த காலமும் இதுவே. அக்காலத்திலே முதலியார் உத்தியோகம் வகித்த பண்டாரநாயக்கவின் தந்தையார் தம்முடைய பிள்ளைக்குப் பெயரிட்டபோது ஆளுனரை அவர்களைக் கௌரவிக்குமுகமாகத் தன் மகனின் பெயரில் றிஜ்வேயின் பெயரையும் சேர்த்தே சொலமன் வெஸ்ற் றிச்வே டயஸ் பண்டாரநாயக்க என பெயர் சூட்டினார்.[4]

இன்று இலங்கைப் பிரதமரின் உத்தியோக வாசஸ்தலமாக விளங்கும் அலரி மாளிகை கட்டடமும் றிஜ்வே காலத்திலே தான் அரசாங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டது.

அன்று பொதுக்காணிகள் பலதனவந்தர்களாலும், அதிகாரிகளாலும் கள்ளத் தனமாகக் காடு வெட்டுதலும், காட்டு நிலத்தைச் சுவீகரித்தலும் பல காலமாக நடைபெற்று வந்தன. ஆகவே 1840 ஆம் ஆண்டில் காடுகளும், வெறும் தரைகளும், ஐந்து ஆண்டுகளுக்குக் குறைந்த ஆளுரிமை நிலங்களும் அரசாங்க நிலமாகக் கணிக்கப்படும் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன் பிரகாரம் ஒரு விசேட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு அவர் முன்னிலையில் காணிகளின் உரிமை பதிவு செய்யப்படல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது. உள் நாட்டில் சுதேசிய நிலங்களை பிரித்தானிய காலனித்துவம் சுவீகரித்துக் கொண்டதாகவே பிரச்சாரப்படுத்தப்பட்டதுடன் இதற்கு எதிராக சுதேசிய கிளர்ச்சிகளும் எழுந்தன. பிரித்தானிய பாராளுமன்றத்திலும் இது குறித்த விவாதங்கள் நிகழ்ந்தன.

ஆனால் ஆளுநர் றிஜ்வே பின்வாங்கவில்லை "இச்சட்டம் இலங்கை வாழ் மக்களின் சுபீட்சத்துக்காகவே இயற்றப்பட்டது. எதிர்கால சந்ததியினரே இதனால் பயன்பெறுவர் என்றார். இக்காணிகளில் உரிமை கொண்டாடுவோர் ஏதேனும் ஒரு ஆவணத்தையேனும் காட்டி உண்மையை நிலைநாட்டுங்கள் அப்படியானால் காணி உங்களுடையதே என்று நிலைமையைத் தெளிவுபடுத்தினார். இன்னொரு வகையில் இச்சட்டத்தின் மூலம் பல நிலங்களை கோப்பிப் பயிற்செய்கைக்காக ஒதுக்க முடிந்ததுடன் இங்கு பணியாற்ற வந்த இந்தியத்தமிழர்கள் குடியிருப்பதற்கும் வழிவகுத்தது. இதனால் இந்தியத் தமிழர்களுக்கு நிலங்களை தாரைவார்த்தவர் றிஜ்வே என்கிற குற்றச்சாட்டு சிங்களவர் மத்தியில் தோன்றியதையும் நாம் காண முடிகிறது.

ஆளுனர் றிஜ்வேக்கு எதிரான சுதேசிய எதிர்ப்புகள் வலுக்கத் தொடங்கிய காலத்தில் அவரின் நிர்வாக போக்கை எதிர்த்து முரண்பட்டவர்களில் பொன் குமாரசுவாமியும் ஒருவர். ஆளுநரின் போக்கை வழிப்பறிக்காரனின் போக்கு எனக் கூறிக் கண்டித்தார். இந்த நிலைமையின் காரணமாக பொன் குமாரசுவாமியின் பதவிக்காலம் முடிந்து பதவி நீடிப்பு செய்வதற்கான காலம் வந்த போது குமாரசுவாமியை மறுமுறை நியமிப்பதில்லை என்கிற முடிவுக்கு வந்திருந்தார் ஆளுநர்.

ஆனால் தமிழர் பிரதிநிதியாக பொன் குமாரசுவாமியையே மறுபடியும் ஆளுநர் நியமிக்க வேண்டும் எனக்கோரி றொக்வுட் தலைமையில் மாபெருங் கூட்டங் கூட்டப்பட்டது. ஒரு சிலர் பிறிட்டோவின் மருமகனான சுவாமிநாதனையே நியமித்தல் வேண்டும் எனக்கோரினர்.

4 க. சி. குலரத்தினம், நோத் முதல் கோபல்லவா வரை – இலங்கையின் அண்மைக் கால (1798-1962) அரசியல் வரலாறு, முதலாம் பாகம் (1798-1947), ஆசீர்வாதம் அச்சகம் – புத்தகசாலை. யாழ்ப்பாணம். 1966.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிறிட்டோ x இராமநாதன் போட்டியில் ஆறுமுக நாவலர்

இராமநாதன் முதற்தடைவையாக 1879இல் சட்டசபைக்கு நியமனம் பெற்ற சந்தர்ப்பத்தில் அந்த ஆசனத்துக்காகப் போட்டியிட்டவர் தான் பிறிட்டோ. செல்வாக்குள்ள பிறிட்டோவை யாழ் - தமிழ் - கிறிஸ்தவ - செட்டி சமூகத்தை சேர்ந்த பிறிட்டோவை தோற்கடித்து அந்த இடத்துக்கு யாழ் - தமிழ் - சைவ - வேளாள பின்னணியைக் கொண்டபொன்னம்பலம் இராமநாதனை கொண்டுவருவதற்காக கடும் பாடு பட்டவர் ஆறுமுக நாவலர். இத்தனைக்கும் யாழ் மானிப்பாயைச் சேர்ந்த பெரும் செல்வந்தரான ஈ.நன்னித்தம்பியின் மகள்களைத் தான் இராமநாதனும் பிறிற்ரோவும் திருமணம் முடித்தார்கள்.

பிரபாகரனின் கொள்ளுப்பாட்டன் வல்வெட்டித்துறை திருமேனியார் வெங்கடாசலம்பிள்ளை பிறிற்ரோவை அரசியலுக்கு வருவதை ஆதரித்தார். அதைத் தோற்கடித்து ஒரு சைவ வெள்ளாளனைத் தான் கொண்டுவரவேண்டும் என்று ஆறுமுக நாவலர் தன் முழு முயற்சியுடன் இராமநாதனை அரசியலுக்கு கொண்டுவந்தார். இந்த நிகழ்ச்சி நிகழாமல் இருந்திருந்தால் இலங்கையின் வரலாறு வேறொரு அரசியல் பக்கத்தை திரும்பியிருக்கக் கூடும்.[5]

### சாதிய ஏகபோக பிரதிநிதித்துவத்தை முடிவுக்கு கொண்டு வந்த ரிஜ்வே

இறுதியில் 1898 ஆம் ஆண்டு முற்பகுதியில் ஆளுநர் ரிஜ்வே றொக்வுட்டை இரகசியமாகத் தன் அலுவலகத்துக்கு அழைத்து அவர் மனதை மாற்றி அவரையே தமிழர் பிரதிநிதியாக நியமித்தார்.

முதலியார் பொன் குமாரசுவாமி 1898 வரை தமிழ்ப் பிரதிநிதியாக பதவி வகித்து வந்த நிலையில் அந்த இடத்துக்கு 1898 மார்ச் 14 அன்று[6] அன்றைய பிரித்தானிய ஆளுநர் சேர் ஜோசெப் வெஸ்ட் ரிஜ்வே ரொக்வூட் அவர்களை இலங்கைச்



Sir Joseph West Ridgeway



சர் பொன் ராமநாதன்

சட்டசபையில் தமிழர் பிரதிநிதியாக 13-3-1898 முதல் 13-3-1903 வரை ஐந்து வருடங்களுக்கு நியமித்தார். இதன் மூலம் குடும்ப - ஆதிக்க சாதிய ஏகபோக நிலைமையை முடிவுக்கு கொண்டுவந்தார் ஆளுநர் ரிஜ்வே.[7] பின்னர் 15-3-1903 இல் ரொக்வூட் மறுபடியும் நியமனம் பெற்றார்.

### பொன் இராமனாதன் என்ன சொல்கிறார்?

மூத்த சகோதரனுக்கு ஊடாக தனது சட்டசபை உறுப்பினர் பதவி பேணப்பட்டுக்கொண்டிருப்பதாக திருப்திபட்டுக்கொண்டிருந்த இராமநாதனுக்கு ரொக்வூட்டின் நியமனம் ஏமாற்றத்தையே கொடுத்திருந்தது. பிற் காலத்தில் பொன்னம்பலம் இராமநாதனின் சுயசரிதை நூலை எழுதிய எம். வைத்திலிங்கம் தனது நூலில் இதைப் பற்றி பதிவு செய்திருக்கிறார். முதலியார் குமாரசுவாமியின் பதவியை நீடிப்பதற்குப் பதிலாக ரொக்வூட்டை ஆளுநர் நியமித்தது பற்றி இராமநாதன் எந்தளவு விசனப்பட்டார் என்பதை இப்படிப் பதிவு செய்கிறார்.

'நாட்டில் அனைத்து தமிழ் பேசும் மக்களின் பேராதரவு தமக்கு இருந்தபோதிலும், தனது சகோதரர் குமாரசுவாமி இரண்டாவது முறையாக சட்டவாக்க சபையில் உறுப்பினராவதற்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்ட கதையை இராமநாதன் இவ்வாறு விவரிக்கிறார்.'

- தொடரும்

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

5 என்.சரவணன், இராமநாதனை நாவலர் அரசியலுக்கு கொண்டுவந்த கதை, காக்கைச் சிறகினிலே, ஏப்ரல், 2020

6 *John H. Martyn, Martyn's Notes on Jaffna: Chronological, Historical, Biographical, Asian Educational Services, 2003*

7 *Roland Wenzlhuemer, From Coffee to Tea Cultivation in Ceylon, 1880–1900 An Economic and Social History Leiden • Boston, Martinus Nijhoff Publishers and VSP 2008.*

**Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street, Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: சுப. உதயகுமாரன்



# கன்னியாகுமரி முதல் பழவேற்காடு வரை கடலை, கடற்கரையை, கடலோடிகளை, கடல் உணவை, இழக்கப் போகிறோம்!

இந்தியாவின் 7,500 கி.மீ. நீளமுள்ள கடற்கரையில் வாழும் மீனவர்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொள்வது நல்லது. தமிழ்நாட்டின் பழவேற்காடு முதல், நீரோடி வரை 1,050 கி.மீ. நீளமுள்ள கடற்கரையில் அமைந்திருக்கும் அறுநூறுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வாழ்ந்து, நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பையும், ஊட்டச்சத்துப் பாதுகாப்பையும் உறுதிசெய்து கொண்டிருக்கும் தமிழக மீனவ மக்கள் மாநில அளவில் தங்களை ஒருங்கிணைக்காத பட்சத்தில் கடற்கரையையும், கடலையும், மீன்பிடித் தொழிலையும் இழக்க நேரிடலாம்.

நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் மோடி மீண்டும் வெற்றி பெற்றால், இந்தியாவின் கடற்கரை அதானிக்கு தாரை வார்க்கப்படும். அவர் தாதுமணற் கொள்ளையில் ஈடுபட்டு, கார்னெட், இல்மனைட், சிலிக்கானைட், மோனோசைட், தோரியம் உள்ளிட்ட கனிமவளங்களை அள்ளித்தோண்டி எடுத்து, ஆயிரமாயிரம் கோடிகள் சம்பாதிப்பார்.

அணுமின் நிலையங்கள், அனல்மின் நிலையங்கள், கப்பல் உடைக்கும் தளங்கள், உண்டுறை விடுதிகள், உல்லாச விடுதிகள் போன்றவை கடற்கரை முழுவதும் முளைத்துக் கொண்டிருக்கின்றன. சாகர்மாலா, பாரத்மாலா என்கிற பெயர்களில் சிறு, குறு துறைமுகங்களும், தொழிற்பேட்டைகளும், இவற்றை இணைக்கும் சாலைகளும், தொடர்வண்டித் தடங்களும் அமைக்கத் திட்டமிடுகிறார்கள். மேலும், கடலில் காற்றாலைகள் அமைக்கும் திட்டங்களும், ஹைட்ரோகார்பன் திட்டங்களும் தீட்டப்படுகின்றன.

அண்மையில் இந்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் கடலிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பதற்கு ஹட்ரோகார்பன் அகழ்வு மற்றும் உரிமம் கொள்கையின்கீழ் (Hydrocarbon Exploration & Licensing Policy--HELP) விருப்ப மனுக்களைக் (Notice Inviting Offers--NIO) கோரியுள்ளது. இவற்றுள் மூன்று தொகுதிகள் (Blocks ) குமரி முனைக்குத் தெற்கே அமைந்திருக்கின்றன. அவற்றின் மொத்தப் பரப்பளவு 27,154 சதுர கி.மீ. ஆகும்.

இந்த பெரும் கடற்பரப்பின் நடுவே "வாட்ஜ் பேங்க்" (Wadge Bank) எனும் "படுகைக் கரை" ஒன்று அமைந்திருக்கிறது. உலகம் முழுவதும் வெகுசில படுகைக் கரைகளே உள்ள நிலையில், அவற்றுள் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ளது. சற்றொப்ப 10,000 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட இந்தப் படுகைக் கரை இந்தியாவின் மாபெரும் மீன்வளச் சுரங்கமாகத் திகழ்ந்து வருகிறது. இங்கே பலமான நீரோட்டங்களோ, அலைகளோ, வெள்ளப்பெருக்கோ ஏற்படுவதில்லை என்பதால், மீன்களுக்குத் தேவையான உணவுகள் உற்பத்தி ஆகின்றன. ஏராளமான பவளப் பாறைகள் படிந்திருக்கும் இப்பகுதியில் இருநூறுக்கும் மேற்பட்ட மீன் வகைகளும், அறுபதுக்கும் மேலான கடல்வாழ் உயிரினங்களும் வாழ்கின்றன. மீன்களும், பிற கடல்வாழ் உயிரினங்களும் இனப்பெருக்கம் செய்யும் தலமாகவும் இது விளங்குகிறது.

தென் மாவட்டங்களைச் சார்ந்த லட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரமாகவும், கோடிக்கணக்கான மக்களின் உணவுப் பெட்டகமாகவும் இந்தப் பகுதி அமைந்திருக்கிறது. இங்கே எண்ணெய் எடுப்பது மேற்படிச் சூழலை முற்றிலுமாக அழித்தொழித்து, மீனவக் குடும்பங்களை ஏழ்மைக்குள்ளும், வறுமைக்குள்ளும் தள்ளிவிடும். அதேபோல, எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைச் செயல்பாடுகளும், அதனால் ஏற்படும் மாசுபாடும், கடல் சூழலை முற்றிலுமாக அழித்துவிடும்.

தமிழக மீனவர்கள் உடனடியாக ஒன்றுகூடி, மேற்படித் திட்டங்கள் குறித்து விரிவாக விவாதித்து, கடலையும், கடற்கரையையும், தங்களின் நலன்களையும் காத்துக்கொள்ளவில்லை என்றால், அவர்கள் மாபெரும் அழிவைச் சந்திக்க நேரிடலாம்.

இது மீனவர்கள் பிரச்சினை என்று கருதிக்கொண்டு, மற்றவர்கள் வெறுமனே வேடிக்கைப் பார்த்தால், நம்மனைவரின் உணவுப் பாதுகாப்பும், ஊட்டச்சத்துப் பாதுகாப்பும் தகர்க்கப்படும். பெருமளவில் பாதிக்கப்படுவோம்.

•

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2023-2025 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2023-2025
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel,Egmore. between 29th-4th of every month






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org